
www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




ஆசிரியர் பெற்றோர் மாணவர் என அனைவரின் மனம் கவர்ந்த உரைநூல். பள்ளித் தேர்வையும் அரசுத் தேர்வையும் அச்சமின்றி சந்திக்க உதவும் அறிவுக் களஞ்சியம். இனிய எளிய மொழிநடையில் சுருக்கமான விடைகளின் பெட்டகம். கற்பித்தலில் நீண்ட நெடிய அனுபவமிக்க ஆசிரியர்களைக் குழுவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட உன்னதமான உரைநூல். அரசுப் பொதுத்தேர்வில் உயர் மதிப்பெண் பெற்றிட இன்றே வாங்கிடுவீர் கவிமணி இன்பத்தமிழ்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# கவிமணி
# இன்பத்தமிழ்

## பத்தாம் வகுப்பு

இவ்வுரை நூலில் ...

- கவிதைப்பேழை (செய்யுள்) : வினா – விடை
- உரைநடை : வினா – விடை
- விரிவானம் (துணைப்பாடம்) : வினா – விடை
- இனிக்கும் இலக்கணம் : வினா – விடை
- கற்பவை கற்றபின், செய்யுள்நயம் பாராட்டல்
- மொழியை ஆள்வோம், மொழியாக்கம்
- மொழியோடு விளையாடு, நிற்க அதற்குத் தக
- பலவுள் தெரிக, மொழிப்பயிற்சி (பாடநூல் வினாக்கள்)
- காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வு வினாத்தாள்கள்
- மாதிரி வினாத்தாள்கள், பொதுத்தேர்வு வினாத்தாள்கள்
- மனப்பாடப்பகுதி

ஆகிய அனைத்தும் இடம்பெற்றுள்ளன.

உருவாக்கம் :

பதிப்பகப் புலவர்குழு

மெர்சி பப்ளிகேஷன்ஸ்

கல்விநூல் வெளியீட்டாளர்

43, பந்தர் தெரு, சென்னை – 600 001.

கைப்பேசி : 97100 02490 / 70102 31425 / 99415 16187

விலை ரூ.250.00

www.Padasalai.Net

# பதிப்புரை

அன்புநிறை மாணவச் செல்வங்களே!

பத்தாம் வகுப்பு மொழிப்பாடத்தில் நீங்கள் உயர்மதிப்பெண் பெறவேண்டும் என்கிற உயர்நோக்கில், '**கவிமணி இன்பத்தமிழ்**' என்னும் இவ்வுரைநூலைத் தெளிவான மொழிநடையில், புலமைமிகு புலவர்குழு அமைத்த சுருக்கமான விடைகளைக் கொண்டதாகச் சிறப்பாக உருவாக்கியுள்ளோம்.

கவிதைப்பேழை, உரைநடை உலகம், விரிவானம், கற்கண்டு (இலக்கணம்), மொழியை ஆள்வோம் என்னும் தலைப்புகளில் உள்ள வினா – விடைகள் அனைத்தும், தேவையான அளவிற்குப் பாடப்பொருள் விடுபடாத வகையில் சிறப்பாக முறைப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடநூல் வினாக்கள் அனைத்திற்கும் விடைகள் எளிமையாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் நீங்கள் நன்கு படித்துக்கொள்ள வேண்டும். நீங்கள் சந்திக்க இருக்கும் அனைத்துத் தேர்வுகளுக்கும் இவற்றில் இருந்தே அதிகமான வினாக்கள் கேட்கப்படும். அத்துடன், பாடநூலில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பாடங்களையும் நீங்கள் முறையாக, முழுமையாக அறிந்தும் புரிந்தும் படிப்பதற்கு உதவும் வகையில், தேவையான அளவிற்குக் கூடுதல் வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இடையிடையே அவற்றையும் படித்து, நன்கு பயிற்சி பெறுங்கள். அவற்றில் இருந்தும் தேர்வுக்கு வினாக்கள் கேட்கப்படலாம்.

ஒருமதிப்பெண் வினாக்கள் அனைத்தையும் நன்கு பயிலுங்கள். பாடநூல் பயிற்சி வினாக்கள் தவிர்த்து, தேர்வில் புதிதாகக் கேட்கப்படும் குறுவினா, சிறுவினாக்களுக்கும், நீங்கள் சிரமமின்றி எளிதில் விடையளிக்க, அவை உதவும். மேலும், உயர்மதிப்பெண் பெறும் உங்கள் கனவை நனவாக்கி, வெற்றிச் சிகரத்திற்கு இவ்வுரைநூல் உங்களை வழிநடத்திச் செல்லும். வாழ்க! வளர்க! வெல்க!

இந்நூலைப் பார்வையிட்டு, மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யுமாறு, ஆசிரியப் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

– பதிப்பாளர்

இவ்வுரைநூல் பற்றிய கருத்துகள், ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

தொடர்பு கொள்க : **744 92 000 92**

**Bank Details for Direct Deposit**

| | | |
|---|---|---|
| Account Name | : | **Mercy Publications** |
| Bank Name | : | Karur Vysya Bank |
| Branch | : | Godown Street, Chennai - 600 001 |
| Account Number | : | **1755135000013300** |
| IFSC | : | **KVBL0001755** |

**முதல் பதிப்பு** : ஜூன், 2019

**திருத்திய பதிப்பு** : ஜூன், 2020, 2021, 2022, 2023, 2024

**அச்சிட்டோர்** : ஸ்ரீ முருகன் பிரிண்டர்ஸ், சென்னை – 05.

| இயல் | பொருளடக்கம் | | பாடநூல் வினாக்கள் பக்கம் | கூடுதல் வினாக்கள் பக்கம் |
|---|---|---|---|---|
| | கவிதைப்பேழை | அன்னை மொழியே | 5 | 127 |
| 1. | உரைநடை உலகம் | தமிழ்ச்சொல் வளம் | | 130 |
| | கவிதைப்பேழை | இரட்டுற மொழிதல் | | 133 |
| | விரிவானம் | உரைநடையின் அணிநலன்கள் | | 134 |
| | கற்கண்டு | எழுத்து, சொல் | | 136 |
| 2. | உரைநடை உலகம் | கேட்கிறதா என்குரல்! | 19 | 140 |
| | கவிதைப்பேழை | காற்றே வா! | | 142 |
| | | முல்லைப்பாட்டு | | 145 |
| | விரிவானம் | புயலிலே ஒரு தோணி | | 148 |
| | கற்கண்டு | தொகைநிலைத் தொடர்கள் | | 150 |
| 3. | உரைநடை உலகம் | விருந்து போற்றுதும் | 31 | 154 |
| | கவிதைப்பேழை | காசிக்காண்டம் | | 157 |
| | | மலைபடுகடாம் | | 159 |
| | விரிவானம் | கோபல்லபுரத்து மக்கள் | | 161 |
| | கற்கண்டு | தொகாநிலைத் தொடர்கள் | | 162 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 43 | 165 |
| 4. | உரைநடை உலகம் | செயற்கை நுண்ணறிவு | 46 | 171 |
| | கவிதைப்பேழை | பெருமாள் திருமொழி | | 175 |
| | | பரிபாடல் | | 177 |
| | விரிவானம் | விண்ணைத் தாண்டிய நம்பிக்கை | | 178 |
| | கற்கண்டு | இலக்கணம் – பொது | | 182 |
| 5 | உரைநடை உலகம் | மொழிபெயர்ப்புக் கல்வி | 59 | 185 |
| | கவிதைப்பேழை | நீதிவெண்பா | | 190 |
| | | திருவிளையாடற் புராணம் | | 192 |
| | விரிவானம் | புதிய நம்பிக்கை | | 195 |
| | கற்கண்டு | வினாவிடை வகை, பொருள்கோள் | | 196 |


www.Padasalai.Net

| இயல் | பொருளடக்கம் | | பாடநூல் வினாக்கள் பக்கம் | கூடுதல் வினாக்கள் பக்கம் |
|---|---|---|---|---|
| 6 | உரைநடை உலகம் | பன்முகக் கலைஞர் | 70 | 200 |
| | கவிதைப்பேழை | பூத்தொடுத்தல் | | 207 |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | | 209 |
| | | கம்பராமாயணம் | | 211 |
| | விரிவானம் | பாய்ச்சல் | | 215 |
| | கற்கண்டு | அகப்பொருள் இலக்கணம் | | 218 |
| | வாழ்வியல் | திருக்குறள் | 83 | 222 |
| 7 | உரைநடை உலகம் | சிற்றகல்ஒளி (தன்வரலாறு) | 86 | 229 |
| | கவிதைப்பேழை | ஏர் புதிதா? | | 233 |
| | | மெய்க்கீர்த்தி | | 235 |
| | | சிலப்பதிகாரம் | | 238 |
| | விரிவானம் | மங்கையராகப் பிறப்பதற்கே... | | 242 |
| | கற்கண்டு | புறப்பொருள் இலக்கணம் | | 244 |
| 8 | உரைநடை உலகம் | சங்க இலக்கியத்தில் அறம் | 99 | 247 |
| | கவிதைப்பேழை | ஞானம் | | 252 |
| | | காலக்கணிதம் | | 253 |
| | விரிவானம் | இராமானுசர் (நாடகம்) | | 256 |
| | கற்கண்டு | பா - வகை, அலகிடுதல் | | 258 |
| 9 | உரைநடை உலகம் | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) | 113 | 266 |
| | கவிதைப்பேழை | சித்தாளு | | 270 |
| | | தேம்பாவணி | | 271 |
| | விரிவானம் | ஒருவன் இருக்கிறான் | | 275 |
| | கற்கண்டு | அணி | | 275 |
| | ➲ | பலவுள் தெரிக, மொழிப்பயிற்சி | 279 | |
| | ➲ | மாதிரி வினாத்தாள்கள் | | 295 |
| | ➲ | பொதுத்தேர்வு வினாத்தாள்கள் | | 320 |
| | ➲ | மனப்பாடப்பகுதி | 331 | |


www.Padasalai.Net

# இயல் – 1

# மொழி

# அமுதஊற்று

| | | |
|---|---|---|
| கவிதைப்பேழை | அன்னை மொழியே | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| உரைநடை | தமிழ்ச்சொல் வளம் | தேவநேயப் பாவாணர் |
| கவிதைப்பேழை | இரட்டுற மொழிதல் | சந்தக்கவிமணி தமிழழகனார் |
| துணைப்பாடம் | உரைநடையின் அணிநலன்கள் | எழில்முதல்வன் |
| இனிக்கும் இலக்கணம் | எழுத்து சொல் | |

## பாடநூல் வினா – விடை

### திறன் அறிவோம்

### பலவுள் தெரிக

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில், தமிழழகனார் குறிப்பிடுவது ______. (June-23)

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**விடை : அ) வணிகக் கப்பல்களும், ஐம்பெருங் காப்பியங்களும்**

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது ______. (Sep. -21,22, Mar.-23)

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**விடை : ஈ) சருகும் சண்டும்**

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும். (June-23)

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை : இ) எம் + தமிழ் + நா**

4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே – (PTA -3, Mar.-24)

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

**விடை : ஈ) பாடல்; கேட்டவர்**

5. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ______.

அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்துவகை ஈ) இலைவகை

**விடை : ஆ) மணிவகை** (PTA - 4, May - 22)

### குறுவினாக்கள்

1. **'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.** (PTA - 2, Mar.-24)

தனிமொழி : வேங்கை – ஒருவகை மரம்.

**தொடர்மொழி** : வேம் + கை – 'வேகும் கை'.

**பொதுமொழி** : வேங்கை என்னும் தனிமொழி பிரிந்து நின்று 'வேகும் + கை' என்றானது. ஒரு சொல் தனிமொழியாகவும் தொடர் மொழியாகவும் அமைவது, பொதுமொழியாகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. "மன்னும் சிலம்பே மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர, எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.** (Dept., May-22)

★ இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள இருகாப்பியங்களைத் தவிர, எஞ்சியுள்ள (ஐம்பெருங்) காப்பியங்கள் சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

**3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**– மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.** (Mar.-24)

**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர் :**

★ ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

★ ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன என்பதும் சரி.

**மேற்கண்ட தொடர்களில் தவறான தொடர் :**

★ ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன என்பது தவறு.

★ காரணம், பல பழங்கள் கொண்டதை சீப்பு என்றும், பல சீப்புகள் கொண்டதை ஒரு தாறு என்றும் சொல்வதுதான் மரபு. தாற்றில்தான் சீப்புகள் இருக்கும். "ஒரு சீப்பில் பலதாறு வாழைப்பழங்கள் உள்ளன" என்னும் தொடர் தவறானதாகும்.

**4. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.** (PTA -6, Sep.-22)

★ உடுப்பதூஉம், உண்பதூஉம். இவற்றில் இன்னிசை அளபெடை அமைந்துள்ளது. செய்யுளில் தளை தட்டாதபோதும், இனிய இசைக்காகக் குறில் நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசை அளபெடை.

★ 'உடுப்பது' என்னும் சொல், 'உடுப்பதூ' என நீண்டு, (த்+ஊ) இனக்குறிலைப் பெற்று, 'உடுப்பதூஉ' என அளபெடுத்துள்ளது; 'உண்பது' என்னும் சொல், 'உண்பதூ' என நீண்டு, (த்+ஊ) இனக்குறிலைப் பெற்று, 'உடுப்பதூஉ' என அளபெடுத்துள்ளது.

**5. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.** (Mar.-24)

★ தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதன், பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது, "இவர் பல்துறை வித்தகர்" என்று குறிப்பிட்டார்.

## சிறுவினாக்கள்

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?** (PTA-2,May-22)

★ அழகு நிறைந்த செழுந்தமிழ், அன்னை மொழியாகும்.

★ பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய்த் தோன்றிய நறுங்கனியாகும்.

★ கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து, மண்ணுலகை அரசாண்ட பேரரசியாகும்.

★ பாண்டியமன்னனின் மகளாக, திருக்குறளின் பெருமையாக, பத்துப்பாட்டாக, எட்டுத்தொகையாக, பதினெண் கீழ்க்கணக்காக, சிலப்பதிகாரமாக, மணிமேகலையாக, பல்வேறு இலக்கிய இலக்கணங் களாகச் சிறப்புக்கொண்டு விளங்குவதாகும்.

★ இவற்றையே, தமிழன்னையைத் தலைவணங்கி வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுகிறார்.

**2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.** (PTA -3, May - 22)

★ **கத்தரி** நாற்று நடவு செய்து ஒருமாதம் ஆகிறது.

★ **வாழைக்**குருத்தை அறுக்கக் கூடாது.

★ **தென்னம்பிள்ளை**யை மூன்றடிக்குப் பள்ளம் தோண்டி, மணல் கொட்டி நடவேண்டும்.

★ **பனைமடலி** வெளியே தெரிகிறது. **சோளப் பைங்கூழ்** மெல்லத் தலை காட்டுகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

3. ‘அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது’ இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் (அடிக்கோடிட்டவற்றில்) உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர் களாக மாற்றி எழுதுக. (Mar.-24)

**தொழிற்பெயர்கள் :** அறிதல், அறியாமை, புரிதல், புரியாமை, தெரிதல், தெரியாமை, பிறத்தல், பிறவாமை.

4. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக. (PTA -6, Mar.-23)

தமிழழகனார், தமிழையும் கடலையும் இரட்டுற மொழிந்து சிறப்பாகப் பாடியுள்ளார்.

| தமிழ் | கடல் |
|---|---|
| இயல், இசை, நாடகம் என முத்தமிழால் வளர்ந்தது. | அமிழ்ந்து எடுக்க, முத்தினைத் தருகிறது. |
| முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் எனும் மூன்று வகைச் சங்குகளைத் தருகிறது. |
| ஐம்பெருங்காப்பியங்களால் அணிசெய்யப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்களால் சூழப்பெற்றது. |
| சங்கப் பலகையில் புலவர்களால் காக்கப்பட்டது. | கடலலைகளால் சங்குகள் காக்கப்பட்டன. |

## நெடுவினாக்கள்

1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (PTA - 5, Dept., Sep.-22, June-23)

மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்து, விழா மேடைகளில் பாடுவதற்குரிய வகையில் அமைந்துள்ளது. அக்காலத்தில் நிலவிய சொல்வழக்குகள், நம்பிக்கைகள், வரலாறு, மொழிக்காப்பு உணர்வு ஆகியவைகளை உள்வாங்கிப் பாடியுள்ளார். தமிழன்னையைப் பலர் புகழ்ந்து பாடியுள்ளனர். அவருள் சுந்தரனாரும் பெருஞ்சித்திரனாரும் பாடிய செய்திகள் குறித்துக் காண்போம்.

சுந்தரனார், தாம் இயற்றிய மனோன்மணீயம் நாடகத்தில் தமிழ்த்தாயின் சிறப்பைப் போற்றி செயல் மறந்து வாழ்த்துகிறார். கடலை ஆடையாக உடுத்திய பூமித்தாயின் பாரத கண்டத்தை அழகிய முகமாகவும், தெக்கணத்தைப் பிறைபோன்ற நெற்றியாகவும், தமிழகத்தை அந்த நெற்றியில் வைத்த திலகமாகவும், தமிழை அந்தத் திலகத்தின் மணமாகவும் சுட்டிக்காட்டி உருவகப்படுத்திப் பாடியுள்ளார்.

இவ்வகையில், தமிழன்னை இன்றளவும் சுந்தரனார் கூறியதுபோல் எத்திசையும் புகழ்மணம் கமழ வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். தமிழின் இளமை குன்றாத சிறப்பைச் சுந்தரனார், ‘சீர் இளமைத் திறம்’ எனக் குறித்து வியந்து பாராட்டுவார்.

‘பாவலரேறு’ பெருஞ்சித்திரனார், இன்னொருவகையில் போற்றுகிறார். தமிழன்னையைக் கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நின்று நிலைத்து, மண்ணுலகம் போற்ற வாழும் பேரரசி என்கிறார். முன்னைக்கும் முன்னையாய் முகிழ்த்த தமிழ் என்கிறார். அத்துடன் அன்னைத் தமிழ் தன் படைப்புகள்மூலம், எத்திசையும் புகழ்மணக்க இருப்பதைப் போற்றுகிறார். தமிழ்த்தேனைச் சுவைத்துப் பல இடங்களிலும் அதன் பெருமையைப் பாடும் வண்டாகத் தாம் இருப்பதாகக் கூறுகிறார். தமிழின் சிறப்பை வியந்து, வெளிநாட்டவரும் போற்றுகின்றனர் என்பதைக் குறிப்பிடுகிறார்.

அன்னைத் தமிழின் சீரிளமைத் திறம் வியந்து வாழ்த்துவார் சுந்தரனார். பெருஞ்சித்திரனாரோ, முன்னும் நினைவால் முடி தாழ வணங்கி வாழ்த்துவதாகக் கூறுவார்.

தமிழ்த்தாயின் பெருமையைக் காலந்தோறும் உணர்ந்து இருவரும் போற்றியுள்ளனர். தமிழன்னைக்குத் தாங்களும் அணிகலன்களைப் பூட்டி அழகு பார்த்துள்ளனர். அவ்வகையில் சுந்தரனாரும் பெருஞ்சித்திரனாரும், தாங்கள் உணர்ந்ததை நாமும் உணர்ந்து இன்புற வழங்கிச் சிந்திக்க வைத்துள்ளனர். நம் அன்னைத் தமிழின் அருஞ்சிறப்புகளை அறிந்து போற்றுவது நம் கடமையாகும் என்று உணர்ந்து, தமிழின்மீதும் தமிழின் தொன்மைமீதும் கொண்ட பற்றுதலால், பொருத்தமான பாடல்களைப் பாடியுள்ளனர்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.** (PTA -2,3, Sep. -21, May - 22)

கால வெள்ளத்தில் கரைந்துபோன பல்வேறு மொழிகளுக்கு இடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். சொல்வளம் என்பது இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவெனினும், தமிழ்மட்டும் சொல்வளத்தில் தலைசிறந்ததாக விளங்குகிறது.

**பயிர்வகைச் சொற்கள் :**

தமிழ்மொழியின் சொல்வளத்தைப் பல்வேறு துறைகளிலும் காணலாம். ஆயினும், இங்குத் தாவரவகைச் சொற்கள் குறித்து மட்டும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. ஒரு தாவர வகைகளின் அடிப்பகுதியை அவ்வவற்றின் தரத்திற்கு ஏற்ப தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி எனப் பல சொற்களில் தமிழர்கள் வழங்குகின்றனர்.

தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளையும் அவற்றின் நிலைகளுக்கும் ஏற்ப கவை, கொப்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு எனப் பல சொற்களைப் பயன்படுத்தி அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டைச் சுட்டுகின்றனர். மொழிகளில் மூத்தது தமிழ் என்பதையே, இச் சொல்வளம் காட்டுகிறது.

**கிளை, இலை, கொழுந்துகளின் பெயர்கள் :**

காய்ந்த தாவரங்களைச் சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை என அழைக்கிறோம். தாவரங்களின் இலைகளை இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு எனப் பல சொற்களால் அழைக்கிறோம். தாவரத்தின் நுனிப் பகுதிகளைத் துளிர், முறி, குருத்து, கொழுந்தாடை எனப் பல சொற்களைப் பயன்படுத்தி வழங்கியவர்கள் தமிழர்களே!

**பூக்கள், பிஞ்சுகள், குலைகள் :**

பூவின் பல்வேறு நிலைகளை அரும்பு, போது, மலர், வீ, செம்மல் எனப் பிரித்து வகைப்படுத்தி வழங்கினர் தமிழர். தாவரத்தின் பிஞ்சு வகைகளைப் பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, முட்டுக் குரும்பை, இளநீர், நுழாய், கருக்கல், கச்சல் எனப் பெயரிட்டு அழைத்தது தமிழினம். தாவரங்களின் குலைவகைகளைக் குறிப்பதற்காகக் கொத்து, குலை, தாறு, கதிர், அலகு அல்லது குரல், சீப்பு என்ற சொற்களைக் கையாண்டது பழந்தமிழ். இன்றைய நிலை வேறாக உள்ளது. இதைத் தெளிந்து காலத்திற்கு ஏற்ப புதிய சொற்களை உருவாக்கித் தமிழை வளப்படுத்த வேண்டியது இன்றைய தமிழர் கடமையாகும்.

**காய்கனி, மணி, இளம்பயிர் வகைகள் :**

கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும்கூடத் தமிழர்கள், பல்வேறு சொற்களைப் பயன்படுத்தி வந்தனர். சூம்பல், சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல், சொண்டு எனப் பலவளமான சொற்கள் வழக்காற்றில் இருந்துள்ளன.

பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்கத் தொலி, தோல், தோடு, ஓடு, குடுக்கை, மட்டை, உமி, கொம்மை போன்ற சொற்களில் சில இன்றும் வழக்கத்தில் இருக்கின்றன. தானியங்களைக் குறிக்கக் கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை என்னும் சொற்களைப் பயன்படுத்துகிறோம்.

தாவரங்களின் இளம்பருவத்தினைக் குறிக்க நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, மடலி அல்லது வடலி, பைங்கூழ் முதலான சொற்களில் சிலவற்றைப் பயன்படுத்தி வருகிறோம்! இதனால், தமிழ்ச்சொல் வளமுடையது என்பதும், தமிழ்நாடு பொருள் வளமுடையது என்றும் தெளிவாக விளங்கும். பொருளைக் கூர்ந்துநோக்கி நுண்பாகுபாடு செய்து, அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக் கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்களுக்கே இயலும். இவ்வகையில் வளர்ந்து வரும் புதுப்புது துறைகளுக்குத் தேவையான கலைச்சொற்களை உருவாக்கி நம் தமிழ்மொழியின் சொல்வளத்தைப் பெருக்க வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

3. ஒருபக்க அளவில் உரையாடல் எழுதுக. (PTA -2)

சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேசமட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

**வரவேற்பில் மொழிச்சிறப்பு :**

கோடை விடுமுறையில் தன்னுடைய சொந்த ஊரான தம்பிபட்டி கிராமத்திற்கு வந்திருந்தாள் மாலா. அவள், ஆஸ்திரேலியாவில் பிறந்தவள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தன்னுடைய 13ஆவது வயதில் வந்ததற்குப்பின், இப்பொழுதுதான் கிராமத்துச் சூழலுக்கு வந்திருக்கிறாள். மாலாவின் அத்தைவீடு அங்குதான் உள்ளது. அவளின் வருகையை அறிந்த சரவணன், அவள் வீட்டிற்கு வந்திருந்தான். மாலாவின் அத்தை மகன்தான் சரவணன். “வா மாலா! எப்பொழுது வந்தாய்? பயணம் சிறப்பாக அமைந்ததா?” எனக் கேட்டான். “ஹேய், நீ சரவணன் இல்லே! ஹவ் ஆர் யு மேன்” எனக் கேட்டுக்கொண்டே கைகுலுக்கினாள். “நீ ஏதோ கேட்டேல்ல? பாதி அன்டர்ஸ்டேன்ட் ஆகல மேன்” என்றாள். “ஹவ் இஸ் யுவர் ஜெர்னி? என்பதைத்தான் தமிழில் கேட்டேன்” என்றான். “வாங்க, எப்படி இருக்கீங்க? என்று கேட்பதில் எவ்வளவு இனிமை இருக்கிறது” என்று சொன்னான்.

**உறவு முறையில் தனித்தன்மை :**

சரவணனும் மாலாவும் தனியாக அமர்ந்து உரையாடினர். “ஹேய் சரவணா! நான் உன்ன எப்படிச் சொல்றது?” என்று கேட்டாள்.

**சரவணன்** : சரவணா என்று சொல்.

**மாலா** : இல்ல மேன், உங்கப்பாவ ‘அங்கிள்’ அப்பிடின்னு சொல்றேன். உன்ன எப்படிச் சொல்றதுன்னு கேட்டேன்.

**சரவணன்** : ‘மாமா’ என்பதற்கும், ‘சித்தப்பா’ என்பதற்கும் ஆங்கிலத்தில் ‘அங்கிள்’ என்றே சொல்கிறீர்கள். இது சரியா?

**மாலா** : ஒ. கே. சரவணா, ரிலேசன்ஸ் பத்தி சொல்லேன். தமிழில் கூப்பிட ஆசையா இருக்கு.

**சரவணன்** : மகிழ்ச்சி மாலா! அப்பா, அம்மா யாரென்று தெரியும். அப்பாவோட அண்ணன் பெரியப்பா; / தம்பி சித்தப்பா. அப்பாவோடு பிறந்த தங்கையை, அக்காவை ‘அத்தை’ என்று அழைக்க வேண்டும். அம்மாவோடு பிறந்த அண்ணன், தம்பியை ‘மாமா’ என்றும், தங்கையைச் ‘சின்னம்மா’ என்றும், அக்காவைப் ‘பெரியம்மா’ என்றும் சொல்லி அழைக்க வேண்டும். ஆனால் நீங்கள், ஆங்கிலத்தில் ‘அங்கிள்’ ‘ஆன்ட்டி’ என்ற சொற்களால் எல்லோரையும் கூப்பிடுகிறீர்கள்!

**மாலா** : ஆமால்ல....! சரி. எனக்கு யாரை எப்படி அழைக்கணுங்குறத சொல்லிக்கொடு.

**சரவணன்** : சரி மாலா! நீ மீண்டும் ஆஸ்திரேலியா செல்வதற்குள், சொந்தக்காரர்களை எப்படி எப்படி அழைக்க வேண்டும் என்று சொல்லித் தருகிறேன்.

**பேச்சிலும் எழுத்திலும் உரைநடை :**

**மாலா** : சரவணா! நாம பேசற தமிழு எழுதும்போதும் அப்படித்தானா?

**சரவணன்** : இல்லை. பேசுவது ‘உரையாடல்’; எழுதுவது ‘உரைநடை. அதாவது, ‘சாப்பிட்டீங்களா’ என்று பேசும்போது பயன்படுத்தும் சொல், எழுதும்போது ‘சாப்பிட்டீர்களா’ என மாறும்.

**மாலா** : ‘குட் பை’, ‘பை’ என்று சொல்லிட்டுப்போறேமே, அத தமிழ்ல எப்படிச் சொல்லணும்?

**சரவணன்** : ‘போய்வரட்டுமா’ எனச் சொல்லணும்.

**மாலா** : என்ன சரவணா? போறவங்க எப்படி ‘வரட்டுமா’ன்னு சொல்லலாம்?’

**சரவணன்** : ‘போறேன்’ எனச் சொல்வதுதான் சரி. ஆனால் தமிழில் ‘போறேன்’ என்பதை அமங்கலச் சொல்லாகக் கருதி அப்படிச் சொல்லாமல், ‘போய்வரட்டுமா’ எனக் கேட்டு விடைபெறுவர். பேசும்போதும் எழுதும்போதும் பண்பாட்டை ஒட்டியே சொற்களைப் பயன்படுத்துவது தமிழர் மரபு.

**மாலா** : அப்ப! கவனமாகப் பேசவேண்டும் போல இருக்கு!

**சரவணன்** : எழுத்தில் (உரைநடையில்) ‘போய் வருகிறேன்’ என எழுத வேண்டும். இப்பொழுது போகிறேன். பின்பு வருவேன் என்பதுவே அதன் பொருள்,

**மாலா** : அப்பப்பா! கத்துக்கிட வேண்டியன நிறைய இருக்கும் போல....! எழுத்து நடைய எப்பதான் புரிஞ்சுக்கப் போறேனோ?

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**எளிமையும் இனிமையும் :**

**மாலா** : சரவணா! காலைல, ஈவினிங்கல பாக்குறப்ப 'வணக்கம்' அப்படின்னு ஒரு வார்த்தைய மட்டும் யூஸ் பண்றீங்களே, வேற வார்த்தை இல்லையா?

**சரவணன்** : அப்படியில்லை. காலந்தோறும் புதிய புதிய சொற்களைப் படைத்துக் கொள்வது தமிழ். அதனைக் கடனாகப் பெற்று வழங்குவது ஆங்கிலம். ஆங்கிலம் என்பது ஒரு தனிமொழி அன்று; அது ஓர் அவியல். பல மொழிகளின் கலப்பு ஆங்கிலம். 'குட்மார்னிங்' என்பதற்கு நேரடிப் பொருள் 'நல்ல காலை'. இப்படித்தான் மற்ற வணக்கச் சொற்களும். ஆனால், இருகை கூப்பி 'வணக்கம்' என்று சொல்வது, எளிமையாக இருக்கிறது. கேட்பவர்களுக்கும் இனிமையைத் தருகிறது.

**மாலா** : சரவணா! நான் தமிழைக் கட்டாயம் படிக்கவும், எழுதவும் முறையாகப் பேசவும் வேண்டும். அதற்கு என்ன செய்வது?

**சரவணன்** : நீ, தமிழ்நாட்டில் தொடர்ந்து வசித்து வருவாயானால், எளிதாக அது கைகூடும்.

**மாலா** : அப்பாவிடம் சொல்லித் தமிழ்நாட்டில் வந்து செட்டில் ஆக முயற்சி செய்கிறேன்.

**சரவணன்** : நல்லது மாலா, நானும் எப்பொழுதும் உனக்கு உதவி செய்யக் காத்திருக்கிறேன்.

## கற்பவை கற்றபின்

1. **தேன், நூல், பை, மலர், வா – இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழி களாக்குக.** (Sep.-21, Mar.-23)

**தேன்** – தேன் உண்ட வண்டு.

**நூல்** – நூல் பல கற்றான்.

**பை** – பையில் புத்தகம்.

**மலர்** – மலர் கொண்டு மாலை தொடு.

**வா** – வா போகலாம்.

2. **வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக. காண், சிரி, படி, தடு.**

எ – கா : (காண்) காட்சி, காணுதல், காணல், காணாமை.

**சிரி** – சிரிப்பு, சிரித்தல், சிரியாமை.

**படி** – படிப்பு, படித்தல், படியாமை.

**தடு** – தடுத்தல், தடுப்பு, தடுக்காமை.

3. **தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

**அண்ணன்** : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)

**தம்பி** : (தனிமொழி)

**அண்ணன்** : வாங்குகிறாய்? (தொடர்மொழி)

**தம்பி** : (தொடர்மொழி)

**அண்ணன்** : (தனிமொழி)

**தம்பி** : (தொடர்மொழி)

**அண்ணன்** : (தனிமொழி)

**தம்பி** : (தொடர்மொழி)

விடை : **அண்ணன்** : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)

**தம்பி** : உணவகம் (தனிமொழி)

**அண்ணன்** : அங்கேதான் சாப்பாடு வாங்குகிறாயா? (தொடர்மொழி)

**தம்பி** : காலையில் சாப்பாடா வாங்குவார்கள்? (தொடர்மொழி)

**அண்ணன்** : பின்னே (தனிமொழி)

**தம்பி** : காலைச் சிற்றுண்டி வாங்கச் செல்கிறேன். (தொடர்மொழி)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. 'மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும்.' இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.

**அழைக்கும்** – அழைத்தல் **ஏறுவேன்** – ஏறுதல்
**அமர்வேன்** – அமர்தல் **பார்ப்பேன்** – பார்த்தல்
**எய்தும்** – எய்துதல்

5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் – இத்தொழிற் பெயர்களை வகைப்படுத்துக.

**கட்டு, சொட்டு** – முதனிலைத் தொழிற்பெயர்கள்

**வழிபாடு, கேடு, கோறல்** – முதனிலை திரிந்த தொழிற் பெயர்கள்.

## கற்பவை கற்றபின்

1. "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை"

இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.

**நற்றிணை :**

எட்டுத்தொகை நூல்களில் முதலில் வைத்து எண்ணப்படுவது நற்றிணை. 'நல்' என்னும் அடைமொழியைப் பெற்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைப் பாடல்களைக் கொண்டது. இந்நூல், 9 அடிமுதல் 12 அடிகள்வரை அமைந்து, 400 பாடல்களைக் கொண்டது.

**குறுந்தொகை :**

எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுவது. இந்நூல், 'நல்ல' என்னும் அடைமொழியால் சிறப்பிக்கப்பெற்றுள்ளது. நான்கு அடிச் சிற்றெல்லையும் எட்டு அடிப் பேரெல்லையும் கொண்டதான குறுகிய அடி அளவைக் கொண்டதாக, நானூறு பாடல்களின் தொகுப்பாக இருப்பதால், இது குறுந்தொகை எனப்பட்டது.

**ஐங்குறுநூறு :**

மூன்று அடிச் சிற்றெல்லையும் ஆறுஅடிப் பேரெல்லையும் கொண்ட பாடல்களால் தொகுக்கப்பட்டது ஐங்குறுநூறு. ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்களாக, அகப்பொருள் சார்ந்த ஐந்து திணைகளுக்கும் ஐந்நூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றும் பத்துப் பத்துகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளன.

**பதிற்றுப்பத்து :**

சேரநாட்டின் பத்து மன்னர்கள் குறித்துப் பத்துப் பத்துப் பாடல்கள் வீதம் பாடப்பெற்ற நூல் ஆதலால், 'பதிற்றுப்பத்து' எனப்பெற்றது. இவற்றுள் முதல்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. இந்நூலின் ஒவ்வொரு பாடலும் சிறப்புத்தொடர் ஒன்றைப் பெயராகப் பெற்றிருக்கும். சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பத்துப் பத்தாகப் பாடிய பாடல்களின் தொகுப்பு.

**பரிபாடல் :**

'ஓங்கு' என்னும் அடைமொழி பெற்றது பரிபாடல். இதில் அமைந்த எழுபது பாடல்களுக்குள் இருபத்திரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. திருமால், முருகன், வைகை பற்றிய பாடல்களே கிடைத்துள்ளன. இந்நூல் குறித்துத் தொல்காப்பியர் "இது பா என்னும் இயல் நெறி இன்றிப் பொதுவாய் நிற்கும்" எனக் கூறுவார். இது அகம், புறம் சார்ந்த பொருள் பற்றிய பாடல்களைப் பெற்றிருப்பது என்பர்.

**கலித்தொகை :**

'கற்றறிந்தார் ஏத்தும்' என்னும் அடைமொழி பெற்ற தொகைநூல் கலித்தொகை. இந்நூல் துள்ளல் ஓசையுடைய கலிப்பாக்களைக் கொண்டது. பெருங்கடுங்கோ பாடிய பாலைத்திணை 35, கபிலர் பாடிய குறிஞ்சித்திணை 29, மருதன் இளநாகன் பாடிய மருதத்திணை 35, சோழன் நல்லுருத்திரன் பாடிய முல்லை 17, நல்லந்துவனார் பாடிய நெய்தல் 33, கடவுள் வாழ்த்து 1 ஆக 150 பாடல்கள் இந்நூலில் உள்ளன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அகநானூறு :**

பதின்மூன்று அடிச் சிற்றெல்லையும் முப்பத்தோர் அடிப் பேரெல்லையும் கொண்ட அகப்பொருள் குறித்த நானூறு பாடல்களைக் கொண்ட நூல் அகநானூறு. இதனை 'நெடுந்தொகை' எனவும் கூறுவர். இதனைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி; தொகுப்பித்தவர் உப்பூரி குடிகிழார். இதில் முதல் 120 பாடல்கள் 'களிற்றியானை நிரை' எனவும், அடுத்த 190 பாடல்கள் 'மணிமிடை பவளம்' எனவும், இறுதி 100 'நித்திலக்கோவை' எனவும் பிரித்து அழைக்கப்பெறுகின்றன.

**புறநானூறு :**

கடவுள் வாழ்த்துடன் புறப்பொருள் சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்ட நூல் புறநானூறு. இதனைப் 'புறப்பாட்டு' எனவும், 'புறம்' எனவும் கூறுவர். இது பண்டைத் தமிழக வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்கிறது. பண்டைய வேந்தர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் முதலானோர் குறித்த பாடல்களைப் பெற்றுள்ளது. பாடல்களுக்குத் திணை துறை பிரித்து உரைக்கப்பட்டுள்ளன.

**2. "எந்தமிழ்நா நின்பெருமை எடுத்தே உரைவிரிக்கும்" என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்துநிமிட உரை நிகழ்த்துக.**

அன்புடையீர் வணக்கம்!

தமிழ்! செந்தமிழ்! என் அன்னை கற்பித்தது! அதுவே என் தாய்மொழி! அதுதான் தமிழ்மொழி! அதை உயிர் வளர்த்த பால் என்பேனா? பசி ஆற்றிய கனி என்பேனா? அறிவு புகட்டிய அமிழ்து என்பேனா? என்னென்பேன்? கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடி மக்கள் பேசிய முதன்மை மொழி அது! உலக மொழிகளுக்கெல்லாம் தாயான மொழி, என் தமிழ்மொழி! என் அன்னைத் தமிழை தென்னன் மகளென்பர்! திருக்குறளுக்கு மாண்பளித்தவள் என்பர்! அவை மட்டுமா? அன்னையவள் பண்டைக் காலத்தே பத்துப்பாடலாய், எட்டுத்தொகையாய், பதினெண்கீழ்க்கணக்காய், பெருசிறு காப்பியங்களாய், சைவ வைணவ பக்திப் பாடல்களாய், மன்னர்களின் மெய்க்கீர்த்திகளாய், சித்தர்களின் வைத்திய நூல்களாய் உயிர்ப்பெடுத்தவள். பௌத்தரும், சமணரும், இஸ்லாமியரும், கிறிஸ்தவரும் தத்தம் சமய உண்மைகளைப் பொதிந்து வைக்க பொக்கிஷமாய்ப் பயன்பட்டவள்.

என் அன்னை மொழியின் பெருமை அளவிடற்கு அரியது! விரித்துரைக்கின் பெருகும்! அவள் முந்தைத் தனிப்புகழ் படைத்தவள்! முகிழ்த்த இலக்கியங்களைப் பெற்றவள்! எனினும் முதுமை அடையாக் கன்னி அவள்! அவள் தாமரைத் தடாகம்! அத்தடாகத்தில் தேனருந்தித் திளைத்த வண்டு நான். இன்னும் அவள் பெருமை கூறுகிறேன் கேளுங்கள்!

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் பாரதியார். "தமிழுக்கு அமுதென்று பேர்" என்றார் பாரதிதாசன். மொழி என்பது மக்கள் தங்கள் கருத்தை வெளியிடத் துணையாகும் கருவி என்பர். இன்று மக்களின் அறிவு வளர்ச்சிக்குக் காரணமாக இருப்பது மொழியாக உள்ளது. உலகில் முதலில் தோன்றியது சைகைமொழி என்பர். பின்னரே உணர்வுகளை வெளிப்படுத்தச் சிறுசிறு ஒலிகளைச் சொற்களாக்கிப் படிப்படியாக மொழி தோன்றி வளர்ந்தது என்பர்.

இன்று உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகள் மிகச்சிலவே. அப்படி ஆராய்ந்து பார்க்கின்றபோது பழமையான வளமுடைய, செம்மொழி என்று இலத்தீன், ஈபுரு, கிரேக்கம், சமஸ்கிருதம், சீனம், தமிழ் ஆகியவற்றைக் குறிப்பிடுவர். இவற்றில் இன்றளவும் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் உள்ளவை சீனமும் தமிழுமேயாகும்.

தமிழ் என்பது உலகில் முதல் மனிதன் பேசிய மொழி என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குமரிக் கண்டமும் லெமூரியாவும் தமிழ் வழங்கிய நிலங்களாக இருந்தன. அவை குமரி முனைக்குத் தெற்கே இருந்து கடல் கோளால் அழிந்தன என்று கூறுவர். எனினும் இன்றளவும் இலக்கிய இலக்கண வளத்தோடு மக்களின் பேச்சு மொழியாகவும் இருபத்தொன்றாம் நூற்றாண்டின் அறிவுக்கண் திறக்கும் மொழியாகவும் உள்ளது தமிழே எனக் கூறுதல் மிகை இல்லை. உலக மொழிகளில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை நீக்கினால், அவை வழக்கு அழிந்து ஒழியும். ஆனால், என் அன்னை மொழி அப்படிப்பட்டதன்று. தன்னுள் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை நீக்கினால் இன்னும் புத்திளமை பெற்று மறுமலர்ச்சி பெறும் வல்லமை உடையதே! அதனால்தான் தமிழ்மொழியை 'உயர்தனிச் செம்மொழி' என ஆய்வாளர்கள் போற்றுகின்றனர். பெயர் அறியமுடியாத புலவன் ஒருவன், "இருந்தமிழே உன்னால் இருந்தேன்! வானோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்று பாடியதுபோல, கற்பாரைத் தன்வசப்படுத்தும் வல்லமை பெற்றது என் அன்னைமொழி எனக்கூறி முடிக்கிறேன். வணக்கம்! நன்றி!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**
**தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்.**

**தரிசு** – பயிர் செய்யப்படாத நிலம்
**சிவல்** – செந்நிலம் (செம்மண் நிலம்)
**கரிசல்** – கரியநிலம் (கணிப்பு மிக்க கரியவகை நிலப்பகுதி)
**முரம்பு** – பருக்கைக் கல்லுள்ள மேட்டுநிலம்
**புறம்போக்கு** – ஊர்ப்புறத்தில் குடிகள் வாழ்தலில்லாத நிலப்பகுதி
**சுவல்** – மேடான நிலப்பகுதி
**அவல்** – பள்ளமான நிலப்பகுதி

**4. ஒருபொருள் தரும் பலசொற்களைப் பட்டியலிடுக.**

**எ – கா : சொல்லுதல் –** பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறுதல், இயம்புதல், மொழிதல்.
**அ) அணிதல்** – அலங்கரித்தல், சூடுதல், தரித்தல், புனைதல், பூணுதல், மிலைதல்.
**ஆ) ஆசிரியன்** – உபாத்தியாயன், ஆசான், தேசிகன், குரு, குரவன்.
**இ) அருள்** – இரக்கம், கருணை, தயவு, கிருபை, அபயம்.
**ஈ) அறிவு** – உணர்வு, உரம், ஞானம், மதி, மேதை, விவேகம்.

5. அ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ. “அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!” என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.

ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமர்சனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒருமுறை ஒரு பெரிய வித்துவானுடைய இசை நிகழ்ச்சியை விமர்சனம் செய்யும்போது அவர் குறிப்பிட்டது, “அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்”.

இ) தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது “இவர் பல்துறை வித்தகர்” என்று குறிப்பிட்டார்.

**– இவை போன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவற்றைத் தொகுத்துச் சொல்நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.**

அ) திருமுருக கிருபானந்த வாரியார் ஒரு மேடைச் சொற்பொழிவில், “அந்தக் காலத்தில் ‘பழங்கள்’ என்றால் விரும்பி உண்பார்கள். இப்போதெல்லாம், பழங் ‘கள்’ என்றால் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்” என்றார்.

ஆ) பத்திரிகை நிறுவனத்தினர் ரசிகமணி டி.கே.சி. அவர்களிடம் ஒரு கட்டுரை எழுதித் தருமாறும், மாதம் பத்து ரூபாய் சம்பளம் என்றும் கூறினர். பத்திரிகை நிறுவனத்தார் ரசிகமணியிடம் “உங்களுக்கு மாதம் பத்து ரூபாய் என்பதில் சம்மதம் தானே” என்று கேட்டதற்கு,
“உங்கள் பத்திரிகையின் தரம் மிகவும் உயர்ந்தது. நீங்கள் கொடுக்கும் மாசம் பத்து எனக்கு மா சம்பத்து” என்றார் ரசிகமணி.

**லோகவாணி** : வணக்கம் கவி, என்ன செய்கிறாய் ?
**கவிதர்ஷினி** : வணக்கம் லோகா. நான் தமிழ் இலக்கிய வரலாறு படிக்கிறேன்.
**லோகவாணி** : அப்படியா! அதில் ஏதாவது சிறப்புச் செய்தி இருக்கிறதா ?
**கவிதர்ஷினி** : ஆமாம்!
**லோகவாணி** : என்ன செய்தி கவி ?
**கவிதர்ஷினி** : நம்முடைய தமிழ்ப் பெருமக்களின் சொல் நயங்கள் பரவசமூட்டுகின்றன.
**லோகவாணி** : நிஜமாகவா?
**கவிதர்ஷினி** : ஆமாம் லோகா, திருமுருக கிருபானந்த வாரியார், அந்தக் காலத்தில் பழங்கள் உண்பர். இக்காலத்தவர் பழங் ‘கள்’ விரும்பி உண்பர் என்று சொன்னது சிந்தைக்கு விருந்து; ரசிக்கும்படி இருந்தது.
**லோகவாணி** : ஆமாம் கவி. ரசிகமணி டி. கே. சி. பேசியதைக்கூட என் அப்பா கூறினார். “நீங்க கொடுக்கும் மாசம் பத்து, எனக்கு மா சம்பத்து” என்றாராம்.
**கவிதர்ஷினி** : ஓ... நீயும் தமிழை ரசித்தாயா ?
**லோகவாணி** : ஆமாம், கவி!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**6. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம்பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.**

| இலக்கியத்தொடர் | நயம் |
|---|---|
| உள்ளங்கை நெல்லிக்கனிபோல | உவமை |
| கண்ணை இமை காப்பதுபோல | உவமை |
| அத்தி பூத்தாற்போல | உவமை |
| குன்றின் மேலிட்ட விளக்குபோல | உவமை |
| வாழையடி வாழையாக | சீர்மோனை |
| விளையும் பயிர் முளையிலே தெரியும் | சீர் எதுகை |
| முகநிலவில் வியர்வை முத்துகள் துளிர்த்தன | உருவகம் |

**7. கொடுத்த தலைப்பில் பேசுவோம்.**

**தலைப்பு** – நேரம் **தவிர்க்க வேண்டிய சொல்** – கடிகாரம்

**குறிப்பு :** ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஐந்து வினாடிகளுக்குமேல் இடைவெளி இருத்தல் கூடாது. இதுபோன்று வேறுவேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப் பழகுக.

**நேரம் :** வரலாற்று அடிப்படையில் நேரம் என்பதன் பொருள் தொடர்பாக இரண்டு விதமான கருத்துகள் உள்ளன. நேரம் என்பது அண்டத்தின் அடிப்படையான கூறு. மேலும், இதில் நிகழ்வுகள் ஒரு தொடராக நடைபெறுகின்றன. நேரம் என்பது அளக்கக் கூடிய ஒன்றாகும். இது ஐசக் நியூட்டன் போன்ற அறிவியல் அறிஞர்கள் கொண்டிருந்த இயற்பியல் பார்வை.

இதற்கு முரண்பாடான இன்னொரு கருத்துப்படி, நேரம் என்பது அறிவு சார்ந்த அமைப்பின் ஒரு கூறு. இந்த அமைப்பினுள்ளே மனிதர்கள், பல்வேறு நிகழ்வுகளைத் தொடராக்கம் செய்து கொள்கிறார்கள். நிகழ்வுகள் நடைபெறும் காலத்தையும் அவற்றுக்கு இடையேயான இடைக்காலத்தையும் அளந்து கொள்கிறார்கள். பொருள்களின் இயக்கங்களை ஒப்பிடலாம். மேலும், இக்கருத்துப்படி நேரம் பாய்ந்து செல்லும் ஒன்றோ, அதனூடாக வேறு பொருட்கள் செல்வதற்கான ஊடகமோ அல்லது நிகழ்வுகளைக் கொள்ளுகின்ற ஒரு தாங்கியோ அல்ல. கோட்பிரைட் லீப்னிஸ், இம்மானுவேல் கண்ட் போன்றவர்கள் இக்கருத்தைக் கொண்டிருந்தனர்.

பொதுவாக நேரம் என்பது காலத்தை அளக்கப் பயன்படும் ஓர் அளவை ஆகும். காலத்தை அளக்கப் பல வழிகள் உள்ளன. இதனை அளந்தறிவதற்குக் கால அளவியல் என்று பெயர்.

காலம் கண் போன்றது. போனால் திரும்ப வராது. அதனால் நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிக்கவும், எழுதவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நேரத்தை விரயம் செய்தால் உன் வாழ்க்கையை விரயம் செய்வது போன்றதாகும். நேரம் என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் படி. படித்துக்கொண்டே இரு! வெற்றிகள் எளிதாகும்.

## மொழியை ஆள்வோம்

**படித்துச் சுவைக்க : பாடலில் மரம் என்னும் சொல் இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.**



1 2
“**மரமது மரத்தில்** ஏறி
3
**மரமதைத்** தோளில் வைத்து

4 5
**மரமது மரத்தைக்** கண்டு
6 7
**மரத்தி னால் மரத்தைக்** குத்தி
8
**மரமது** வழியே சென்று
வளமனைக் கேகும் போது
9
**மரமது** கண்ட மாதர்
10 11
**மரமுடன் மரம்** எடுத்தார்”

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



தனிப்பாடல் திரட்டு – சுந்தரகவிராசர்

| 1 | 2 | 3 | 4, 9 | 5,7 | 6 | 8 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரசன் (அரசமரம்) | மா குதிரை (மாமரம்) | வேல் (கருவேலம்) | அரசன் | புலி (வேங்கை) | வேல் | காட்டு வழி | ஆல் (ஆல மரம்) | அத்தி (அத்தி மரம்) ஆல்+ அத்தி ஆரத்தி |

அரசன், குதிரைமீது ஏறி வேல் தாங்கிய தோளோடு வேட்டைக்குச் சென்று, வேங்கைப் புலியைக் கண்டு, வேலினால் குத்தினான். வேட்டை முடித்துத் திரும்பி, அரண்மனையை அடைந்தபோது, அங்கிருந்த பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள் என்பதனை நயம் தோன்றப் பாடிப் புலவர் சுந்தரகவிராசர் வியக்க வைக்கிறார். இப்பாடலைச் சிலேடை, மடக்கு, யமக அணிகளுக்குச் சான்றாகக் காட்டுவர்.

**மொழிபெயர்ப்பு**

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela. **(PTA- 2, Sep.-21)**

   நீங்கள் ஒருவரிடம் ஒரு மொழியில் பேசினால், அது அவரின் அறிவைச் சென்றடையும்போது அவர் புரிந்துகொள்கிறார். நீங்கள் அவருடைய சொந்த மொழியில் பேசினால், அது அவருடைய இதயத்தைத் தொடும். – நெல்சன் மண்டேலா.

2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown. **(Sep.-21)**

   மொழி என்பது, பண்பாட்டின் வழிகாட்டிப்படம். அது, மக்கள் எங்கே இருந்து வந்தார்கள், எங்கே செல்கிறார்கள் என்பதனைக் கூறும். – ரீட்டா மே பிரவுன்.

**சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.** **(May -22, June-23)**

"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஒதி யுனர்ந்தின் புருவோமே"
– கவிமணி தேசிக விநாயகனார்

**விடை :**

"தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் – சுவை
தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை
ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் – நிதம்
ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே"

**கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.** **(PTA- 4)**

| (குவியல், குலை, மந்தை, கட்டு) | **சொல்** | கல் | பழம் | புல் | ஆடு |
|---|---|---|---|---|---|
| | **கூட்டப்பெயர்** | குவியல் | குலை | கட்டு | மந்தை |

**வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

**எ – கா :** 1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.

2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
ஊட்டமிகு உணவு உண்டவர், நீண்ட வாழ்நாள் பெற்றார்.

3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
நேற்று என்னைச் சந்தித்தவர், என் நண்பர்.

4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர், போட்டித் தேர்வில் வென்றார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

1. **உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனி**யிருக்கக் காய் **புசித்**தலைப்போல, இன்சொல் இருக்க, வன்சொல் பேசி **இன்னற்**படுகின்றனர்.

   **புவியில்** வாழும் **மனிதர்களுள்** சிலர் **பழம்** இருக்கக் காய் **உண்ணுதலைப்**போல், இன்சொல் இருக்க, வன்சொல் பேசித் **துன்பப்**படுகின்றனர்.

2. வள்ளல் குமணன் **வறுமையால்** வாடிவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து**, மங்காப் **புகழ்** பெற்றான்.

   வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **கவிஞனுக்குத்** தனது தலையை **அளித்து**, மங்காப் **பெருமை** பெற்றான்.

3. நளனும் அவனது **துணைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை**முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.

   நளனும் அவனுடைய **மனைவியும்** நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை **மேகம்** கண்ட **மயில்**போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

4. **சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன. **(PTA -1)**

   **காவில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடித் **தேன்** உண்டன.

5. **பசு**போல் **சாந்தமும் புலி**போல் **தீரமும் யானை** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

   **ஆவினைப்**போல் **அமைதியும் வேங்கை**போல் **சீற்றமும், வேழம்போல்** உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**கட்டுரை எழுதுக.**

**குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திரு நாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு, 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக** **(PTA- 1)**

### சான்றோர் வளர்த்த தமிழ்

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' என்று, தொல்காப்பியர், தமிழகத்தின் நில எல்லையைக் குறிப்பிட்டுள்ளார். வேங்கட மலையையும் குமரி முனையையும் எல்லையாகக் கொண்ட தமிழ் நாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தமிழன்னையைச் சாரும்.

"தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் – இவள்
என்று பிறந்தவள் என்றுணராத
இயல்பினளாம் எங்கள் தாய்"

என்று, பாரதியார் பாடியதுபோல் தமிழன்னை அன்றும், இன்றும், என்றும் எழில்சேர் கன்னியாகவே திகழ்கிறாள்.

**சங்கம் வளர்த்த தமிழ் :**

மூவேந்தர்களுள் பாண்டியர்கள், முச்சங்கம் கண்டு தமிழை வளர்த்தனர். 'பாண்டிய நன் நாடுடைத்து நல்ல தமிழ்' என்று, நச்சினார்க்கினியர் கூறுவதுபோல, லெமூரியா தென்மதுரை, கபாடபுரம், இன்றைய மதுரை ஆகிய இடங்களில் முச்சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். அச்சங்கங்களில் எண்ணற்ற இலக்கியங்களும் அகத்தியம், தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல்களும் தோன்றின.

**தமிழின் சிறப்புகள் :**

தமிழ் இனிமையானமொழி; இலக்கிய வளம் நிறைந்த மொழி; சங்க காலத்தனவாகிய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கம் மருவிய காலத்தின் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் பிற்காலத்தில் உருவான ஐம்பெருங் காப்பியங்கள், சமய நூல்கள், உரைநடை நூல்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவை, காலந்தோறும் தோன்றிடத் தமிழ், வளர்ச்சி அடைந்தது. இக்காலத்தில் இராமலிங்க அடிகளார், பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் முதலான கவிஞர்களின் பாடல்கள், புதினங்கள், திறனாய்வு நூல்கள் தோன்றின. அண்மையில் கணினித் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, உலகம் எங்கும் தமிழ்மொழி இணையத்தில் பல்துறை கலைகளை உருவாக்கி உலா வருகின்றது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**நயம் பாராட்டுக.**

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!

– கா. நமச்சிவாயர்

**ஆசிரியர் குறிப்பு :** அந்நியர் ஆண்ட காலத்தில் தமிழை வளர்த்தெடுக்க அரும்பாடுபட்ட 'பைந்தமிழ் ஆசான்' எனப் புகழப்படும் கா. நமச்சிவாயர் இயற்றிய பாடல்களில் இதுவும் ஒன்று. இதில் அமைந்த நயம் காண்போம்.

**மையக்கருத்து :** ஊனினும் உணர்விலும் ஒன்றிய தமிழ்மொழி, தென்னாட்டு மக்களுக்கு இரு கண்களாக விளங்குவது. அம்மொழி மேலும் மேலும் சிறப்புற்று வளரவேண்டும் என்பதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**எதுகை :** அடிகளின் முதல் சீர்தோறும் முதல்எழுத்து மாத்திரை அளவு ஒத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது, அடிஎதுகைத் தொடையாகும்.
தே**னி**னும், ஊ**னி**னும், வா**னி**னும் – அடிஎதுகை

**மோனை :** அடிகளின், சீர்களில் முதலெழுத்து ஒன்றிவருவது சீர்மோனைத்தொடையாகும்.

**தே**னினும், **தெ**ன்னாடு
**ஊ**னினும், **உ**ணர்வினுக்கு
**வா**னினும், **வ**ண்டமிழ்
**தா**னணி, **த**ழைத்தினி
} சீர்மோனை

**இயைபுத்தொடை :** அடிதோறும், இறுதிச் சீர்களின் இறுதி எழுத்தோ, சொல்லோ, தொடரோ ஒன்றிவரத் தொடுப்பது, இயைபுத் தொடையாகும்.

செந்தமிழ் **மொழியே** தென்**மொழியே**
ஒண்டமிழ் **மொழியே** ஒளிர்தமிழ் **மொழியே**
வண்டமிழ் **மொழியே** வயங்குநன் **மொழியே**
தனித்தமிழ் **மொழியே** தண்டமிழ் **மொழியே**
} இயைபு

**அணி :** இப்பாடலில் 'மொழி' என்ற சொல் ஒரே பொருளில் பலமுறை வந்து '**சொற்பொருட் பின்வரு நிலையணி**' பயின்று வந்துள்ளது.

**சந்தம் :** இப்பாடலில் **எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** பயின்று வந்து, சுவைபடப் பாடுவதற்கு ஏற்ற சந்த நயத்தையும் பெற்றுள்ளது.

## மொழியோடு விளையாடு

**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.** (Sep.-21)

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ.

**எ – கா : பூமணி**

மணிமேகலை, செய்வான், பொன்செய், வான்மழை, மணிவிளக்கு, பொன்விலங்கு, பூவிலங்கு, தேன்மழை, பூமழை, பொன்மழை, பொன்மணி, விண்மணி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.**

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்.

**எ – கா :** குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?
சுவைக்காத இளநீரும் இளநீராகுமா? (Mar.-24)
காப்பியச் சுவையில்லாக் கதையும் உண்டோ?
மனிதகுல மேன்மையை அறியாத மனிதருமுண்டோ?
விடுமுறைநாள் இல்லாத வாரம்தான் உண்டோ? (Mar.-24)


**எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச, உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | க ೦ ೦ ೦ |

**அகராதியில் காண்க.**

**அடவி** – காடு
**அவல்** – பள்ளம், விளைநிலம், குளம்
**சுவல்** – மேட்டுநிலம், தோள், கழுத்து
**செறு** – வயல், பாத்தி, செய்.
**பழனம்** – பொய்கை, மருதநிலம், நீர்நிலச் சேறு, பொதுநிலம்
**புறவு** – காடு, முல்லைநிலம், புறம்பு, புறா, முல்லைக்கொடி

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



கண்களால் கண்டதைக்
கருத்தாய்த் தெரிவிக்க
வேண்டாம்என்றே
வாய்ப்பூட்டுப் போட்டாரோ?
இருவர் கட்டுப்பட்டாலும்
ஒருவர் மட்டுமாவது
தன்நிலைப் பாட்டில்
உறுதியாய் இருக்கிறாரே
உவகை அடைவோம்.

## நிற்க அதற்குத் தக

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**

★ இன்சொல் பேசுவதே எமது வழியாகும். இன்சொல் பேச முடியாதபோதும், வன்சொல் பேசிடாதே என நண்பருக்கு, வழிகாட்டுவேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| Vowel | – உயிரெழுத்து | Consonant | – மெய்யெழுத்து |
| Homograph | – ஒப்பெழுத்து | Monolingual | – ஒருமொழி |
| Conversation | – உரையாடல் | Discussion | – கலந்துரையாடல் |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 2

# இயற்கை, சுற்றுச்சூழல்

# உயிரின் ஓசை

| | | |
|---|---|---|
| உரைநடை | கேட்கிறதா என்குரல்! | |
| கவிதைப்பேழை | காற்றே வா! | பாரதியார் |
| | முல்லைப்பாட்டு | நப்பூதனார் |
| துணைப்பாடம் | புயலிலே ஒரு தோணி | ப. சிங்காரம் |
| இனிக்கும் இலக்கணம் | தொகைநிலைத் தொடர்கள் | |

## பாடநூல் வினா – விடை

### திறன் அறிவோம்

### பலவுள் தெரிக

1. 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் (Sep. -20)
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' – பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
**விடை : ஆ) மோனை, எதுகை**

2. **செய்தி 1 :** ஒவ்வோர் ஆண்டும் ஜூன் – 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
**செய்தி 2 :** காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே. (PTA - 5)
**செய்தி 3 :** காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து, அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி
**விடை : ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி**

3. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
**விடை : அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்**

4. '**பெரிய மீசை**' சிரித்தார் – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது? (Sep. -20,22)
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
**விடை : இ) அன்மொழித்தொகை**

5. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க. (PTA - 3)
அ) கொண்டல் – 1. மேற்கு
ஆ) கோடை – 2. தெற்கு
இ) வாடை – 3. கிழக்கு
ஈ) தென்றல் – 4. வடக்கு
அ) 1 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2
**விடை : ஆ) 3, 1, 4, 2**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. 'நமக்கு உயிர் காற்று (PTA - 1, June-23)
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை
வெட்டி எரியாமல் நட்டு வளர்ப்போம்'
– இதுபோன்று உலகக் காற்றுநாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

★ சமமாய் உலவும் மரங்களை வளர்த்தால் மருந்தாய் உதவும்!
★ தோட்டத்து மரங்களை வெட்டிவிட்டால் வியர்வைப் பூக்களாய் உடலில் பூத்திடும்!

2. வசன கவிதை – குறிப்பு வரைக. (Sep.- 21, May-22)

★ உரைநடையும் கவிதையும் இணைந்து, யாப்பு விதிகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவமே, வசன கவிதை எனப்படும். இதுவே, புதுக்கவிதை உருவாகக் காரணம்.

3. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க. (PTA - 4, Sep.- 20,22)

தண்ணீர் குடி – தண்ணீரைக்குடி
அவள், தண்ணீரைக் குடித்தாள்.
தயிர்க்குடம் – தயிரை உடைய குடம்
அவள், தயிரை உடைய குடத்தை எடுத்து வந்தாள்.

4. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக. (PTA - 4)

★ அழும் தம்பியைத் தேற்றி அன்பாகப் பேசுவேன். அவனுடன் சேர்ந்து அமர்ந்து விளையாடுவேன்.
★ "உனக்குப் பிடித்த சாக்லெட் போன்ற பொருட்கள் வாங்கி வருவார்கள் என்பேன். அதுவரை உடன்பிறந்த நான் இருக்கிறேன். உனக்கு என்ன தேவை? சொல். நான் உதவுகிறேன்" என்பேன்.

5. மாஅல் – பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

**மாஅல்** : பொருள்–திருமால்.
**மாஅல்** : இலக்கணக்குறிப்பு – செய்யுளிசை அளபெடை.

## சிறுவினாக்கள்

1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.....முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்.....உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.(PTA-6, Sep.-20)

### நீர் தன்னைப்பற்றிப் பேசினால்

★ வான்மழை நான்
★ நானின்றி உயிர்கள் வாழா
★ நானே உயிர்களின் தோற்றம்
★ வேளாண்மைக்கு நானே முதல்வன்
★ என் பெருமை பேசாத இலக்கியமில்லை
★ என் பண்புகளை வேறு எவையும் பெற முடியாது
★ என்னால் படைக்கவும் காக்கவும் அழிக்கவும் முடியும்.
★ விண்ணிலும் மண்ணிலும் நானே ஆட்சி செய்கிறேன்

மண்ணுக்கும் மரம் செடி கொடிகளுக்கும் உயிரினங்களுக்கும் நான் இன்றியமையாதவன். என் பெயர் நீர். தண்ணீர் என்றும் கூறுவர். நான் உயிர்வாழ்வுக்கு அவசியமானவன். எனக்கு நிறம், மணம், குணம் கிடையாது. ஆனால், எதனோடும் சேர்ந்து, அதன் பண்பை எனதாக்கிக் கொள்வேன். நான் இல்லையானால் உணவு இல்லை; தாகம் தீர்க்க வேறு திரவம் இல்லை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.** (PTA-2, Mar.-23)

**சோலைக்காற்று** : நிழல் தருகிற மரங்களும், பறவையினங்களும், நீர்நிலைகளும் இருக்கும் இடமே, எனது இருப்பிடமாகும்.

**மின்விசிறி** : இருள் சூழ்ந்த அறைகளும், தூசிகள் நிறைந்த அறைகளுமே, யான் வாழும் இடமாகும்.

**சோலைக்காற்று** : மாலைநேரங்களில் கலந்து உறவாட மக்களும், காதலர்களும் என் காற்றைப் பெற்று, மகிழ்ந்து விளையாடச் சிறுவர்களும் தேடி வருவர்.

**மின்விசிறி** : உழைத்துக் களைத்தவர்களும், பணியில் இருந்து திரும்பி வருபவர்களும், வீட்டுப் பணி செய்து களைத்துப் போனவர்களும் என்னை நாடி வருவர். அவர்களுக்காக வெப்பக்காற்றைக் குளிர்ந்த காற்றாக மாற்றித் தருவேன்.

**சோலைக்காற்று** : காதலர்களிடையே என்னைத் தூது விடுவதாகக் கவிஞர்கள் இனிய பாடலாகப் பாடி மகிழ்வர்.

**மின்விசிறி** : நான், வணிக ரீதியாகவும் பயன்படுத்தப் படுகிறேன்.

**சோலைக்காற்று** : பாடும் குயிலும், ஆடும் மயிலும் என்னை விரும்பி, என்னிடம் அடைக்கலமாய் வரும்.

**மின்விசிறி** : சில சமயம் தூசிகளும் மின்சாரமும் என் இயக்கத்தை முடக்கி விடும். நான் ஒரு கூண்டுக்கிளி. நீயோ உலாவரும் இனிய தென்றல்.

**3. தோட்டத்தில் மல்லிகைப்பூப் பறித்த பூங்கொடி வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுது.** (PTA-1,May-22,Mar.-23)

**மல்லிகைப்பூ** – இருபெயரொட்டுப் பண்புத் தொகை. மல்லிகை – சிறப்புப் பெயர், பூ– பொதுப்பெயர்

**பூப் பறித்த** – இரண்டாம் வேற்றுமைத்தொகை (பூவைப் பறித்த)

**பூங்கொடி** – உவமைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை (பூவைப் போன்ற கொடி எனப் பொருள் படும்)

**ஆடுமாடுகள்** – ஆடுகளும் மாடுகளும் – உம்மைத் தொகை.

**தண்ணீர்த்தொட்டி** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. (தண்ணீரை உடைய தொட்டி)

**குடிநீர்** – வினைத்தொகை – குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர் என விரியும்.

**நீர் நிரப்பினாள்** – இரண்டாம் வேற்றுமைத்தொகை (நீரை நிரப்பினாள்)

**சுவர்க்கடிகாரம்** – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை. சுவரில் மாட்டப்பட்ட கடிகாரம் என விரியும்.

**மணி பார்த்தாள்** – இரண்டாம் வேற்றுமைத் தொகை. (மணியைப் பார்த்தாள்).

**4. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.** (PTA- 4)

**குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர் – உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் – ஓடும் நீரில் காகிதக் கப்பல்.**

★ மழை நின்றவுடன் மெல்லிய காற்றின் குளிர்ச்சியை உணர்கிறேன்; ஜன்னல் வழியே தெரியும் மரக்கிளைகளின் இலைகளிலிருந்து சொட்டும் நீர்; அதனால் என் உடல் உணர்கிறது மெல்லிய குளிர்ச்சியை; மேலே பார்த்தால் மேகம் நிறைந்த நீலவானம்.

★ மழைநீர் தேங்கிய சிறுசிறு பள்ளங்களில் சிறுவர்கள் 'சளப் தளப்' எனக் குதித்து விளையாடும் சப்தங்கள்; மழையில் நனைந்த சின்னஞ்சிறு பறவைகளின் கிசுகிசுப்பு; கிராமியச் சூழல்; தெருவில் ஓடையாக ஓடும் நீரில் காகிதக் கப்பல் விட்டு மகிழ்தல். மழைச்சாரலோடு மண்வாசனை இத்தனைக் காட்சியும் இயற்கையின் கைவண்ணமே.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நெடுவினாக்கள்

**1. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.** (PTA - 2, Mar.-23)

அது கார்காலம். மழைமேகமானது கடல்நீரை முகந்து கொண்டு, விண்ணுக்கும் மண்ணுக்குமாகப் பேருருவம் கொண்ட, திருமால் போல எழுந்து, மலையை வலமாய்ச் சூழ்ந்து, பெருமழையைப் பொழிந்தது.

தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரத்தைப் போக்கக் கருதிய முதிய பெண்கள், மாலைப்பொழுதில் ஊரின் புறத்தே சென்று, முல்லைப்பூவுடன் நெல்லையும் சேர்த்துத் தூவித் தெய்வத்தைத் தொழுதனர். தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

அப்போது, ஆயர் இடைமகள் யாரோ ஒருத்தி, சிறு தாம்புக்கயிற்றால் கட்டப்பட்ட, பசியால் வாடிய இளங்கன்றின் வருத்தத்தைப் போக்க நினைத்தாள். "மிகுதியாகப் புல்லை மேய்ந்த உன் தாய்மாரை, வளைந்த கத்தியுடன் கூடிய கம்பைக் கையில் உடைய இடையர் ஓட்டி வர, இப்போது வந்துவிடுவாள் வருந்தாதே!" என்று கூறினாள்.

இதனை, நல்லசொல் எனக்கொண்ட முதுபெண்கள், தலைவியிடம் சென்று, "நற்சொல்லைக் கேட்டோம்; அதனால் உன் தலைவன் பகைவரை வென்று திறைப் பொருளோடு திரும்பி வருவது உறுதி. எனவே, உன் துயரத்தை விட்டுவிடுவாயாக" என்று ஆற்றுப்படுத்தினர்.

அதாவது, ஆறுதல் கூறி நெறிப்படுத்தினர். முல்லைத் திணை பற்றிப் பாடப்பட்ட முல்லைப்பாடலில், முல்லைநிலத் தெய்வமான திருமாலும், திணைக்குரிய பெரும்பொழுதாகிய மழை பொழியும் கார்காலமும், மாலை நேரத்தில் விருச்சி கேட்டதால் சிறுபொழுதான மாலைப் பொழுதும், இடையர், இடைச்சியர் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

**2. 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?**

**வருணனைக் காட்சியில் வானம் :** (PTA-1,2, Sep.-20, Mar.-23)

கொளுத்திக் கொண்டிருந்த வெயில், இமைப்பொழுதில் மறைந்துவிட்டது; புழுங்கிற்று. மேகப் பொதிகள் பரந்து திரண்டு, கும்மிருட்டாய் இறுகி நின்றன. கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள், வானைப் பிளந்தன. வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது. சூறாவளிக் காற்றும் மாரியும்கூடிக் கலந்து, ஆடிக் குதித்துக் கொண்டாட்டம் போட்டன. இந்தக் கொண்டாட்டத்தின் விளைவாகக் கடலும் வெறிக் கூத்தாடுகிறது. அப்படியெனில், கடல்மீது மிதந்து வரும் தோணி என்ன பாடுபட்டிருக்கும்?

**கலக்கும் காற்று கலங்கும் தோணி :**

மதிப்பிட முடியாத விரைவும் பளுவும் கொண்ட மோதல், தோணிக்கு ஏற்பட்டது. தோணியையும் அதிலிருந்து நடப்பன கிடப்பனவற்றையும் உலுக்கிற்று. வானுடன் கடல் கலந்துவிட்டது. மழை தெரியவில்லை – காற்றுடன் இணைந்துவிட்டது. தோணி அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து விழுந்து திணறுகிறது; தத்தளிக்கிறது; தள்ளாடுகிறது. அலைகள் – மலைத்தொடர் போன்ற அலைகள் தோணியை மோதித் தாக்குகின்றன.

**அடுக்குத் தொடரிலும் ஒலிக்குறிப்பிலும் தோணி நிலை :**

தோணி, தாவி விழுந்து சுழல்கிறது; மூழ்கி நீந்துகிறது; தாவி நீந்துகிறது. இருட்டு இருட்டு, கும்மிருட்டு, குருட்டு இருட்டு, சிலுசிலு மரமரப்பு. ஙொய்ங் புய்ங் ஙொய்ங் புய்ங் ஙொய்ங் புய்ங். இடிமுழக்கச் சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன. தோணி, குதித்து விழுந்து நொறு நொறு என்று நொறுங்குகிறது. சுழன்று கிறுகிறுத்துக் கூத்தாடுகிறது.

**புயலுக்குப்பின் அமைதி; துயருக்குப்பின் வரும் ஜோதி:**

சூரிய வெளிச்சம், தோணியில் நீர் நெளிகிறது, தெரிகிறது. தோணியின் இருபுறமும், பின்னேயும் தேயிலைப் பெட்டிகளும் புகையிலைச் சிப்பங்களும் மிதந்து தொடர்ந்து வருகின்றன. தோணி, தன்வசமின்றித் தடுமாறிச் செல்கிறது. கடற்கூத்தின்போது தோணியில் ஓட்டை ஏற்படுகிறது. மாலுமிகள் கடல்நீரை இறைத்து ஊற்றுவதற்காக ஓட்டையை அடைக்கின்றனர். தோணி, கடலின் இழுவைக்கு ஏற்றவாறு மிதந்து சென்றது. மறுநாள் காலையில் சூரியன் உதித்தான். பகல் இரவாகிப் பகலாகி இரவாகியது. பிறைமதி வெளிச்சம் தெரிந்தது. கடற்கூத்துக்குப்பின் ஐந்தாம் நாள் மாலையில், வானோடு வானமாய்க் கடலோடு கடலாய் மரப்பச்சை தெரிகிறது. ஆம். கரை! கரை! கரை!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே.

– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.

இப்பாடலில், இனிய தென்றல் காற்றானது மணம் மிக்க மலர்களில் உள்ள வாசனையை உட்கொண்டு உலாவருவதோடு, அண்ணன் தங்கைக்கு இடையே உள்ள அன்பை, பாசத்தை வெளிப்படுத்துகின்ற இனிய பாடலாகவும் உள்ளது.

இப்பாடலில் வரும் தென்றல் காற்று, மலர்களிலும் நதிகளிலும் உள்ள குளிர்ச்சியைப் பெற்று மகிழ்வைத் தருவதோடு, பொதிகைமலை, மதுரைநகர் எல்லாம் பொலியச் செய்கின்றது.

'கண்வளரும் தங்கையை அண்ணன் மலர்ந்தும் மலராத பாதி மலராகக் காண்கிறான்;' விடிந்தும் விடியாத காலைப்பொழுதாகக் காண்கிறான்; கலைஅன்னமாகக் காண்கிறான். தென்றலாகக் காணும் போது அது நதியில் விளையாடிவிட்டுக் கொடியில் தலைசீவி வருவதாகக் காண்கிறான். அதுமட்டுமா? தன் தங்கையைத் தமிழாக அதுவும் பொதிகைமலையில் தோன்றி, மதுரையில் வளர்ந்த தமிழாகக் காண்கிறான்.

பாசத்தின் வெளிப்பாடே இந்தக் கவிதையாய்ப் பிறந்துள்ளது.
பாசத்திற்கு ஏங்கும் அண்ணன், பரிதவித்து நிற்கும் தங்கை என்னும்
இருவரின் இணையிலா எண்ணங்களே இக்கவிதை.

## கற்பவை கற்றபின்

வண்ணமிட்ட தொகைச்சொற்களை வகைப்படுத்துக.

1. **அன்புச்செல்வன்**, திறன்பேசியின் **தொடுதிரை**யில் படித்துக்கொண்டிருந்தார். (Mar.-23)
அன்புச்செல்வன் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை; தொடுதிரை – வினைத்தொகை
2. அனைவருக்கும் **மோர்ப்பானை**யைத் திறந்து **மோர் கொடுக்கவும்.**
மோர்ப்பானை – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை;
மோர் கொடுக்கவும் – இரண்டாம் வேற்றுமைத்தொகை.
3. **வெண்டைக்காய்ப்** பொரியல் **மோர்க்குழம்புக்குப்** பொருத்தமாக இருக்கும்.
வெண்டைக்காய், மோர்க்குழம்பு – இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள்.
4. **தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டி**யில் விளையாடு கின்றன.
தங்கமீன்கள் – உவமைத்தொகை.
தண்ணீர்த்தொட்டி – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

## இலக்கணக்குறிப்பு

**மூதூர்** – பண்புத்தொகை
**உறுதுயர்** – வினைத்தொகை
**கைதொழுது** – மூன்றாம் வேற்றுமைத்தொகை
**தடக்கை** – உரிச்சொல் தொடர்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. பொறித்த – பொறி + த் + த் + அ
**பொறி** – பகுதி
**த்** – சந்தி
**த்** – இறந்தகால இடைநிலை
**அ** – பெயரெச்ச விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

**1. காற்று பேசியதைப் போல, நிலம் பேசுவதாக எண்ணிக்கொண்டு பேசுக.**

**நான் நிலம் பேசுகிறேன்...**

மனிதர்களாகிய உங்களின் நேரடியான அல்லது மறை முகமான செயல்பாடுகளால், எனது இயல்பு பாதிப்படைகிறது. நகர்ப்புறம் மற்றும் தொழில்துறை சார்ந்த திட மற்றும் திரவக் கழிவுகளை ஏடாகூடமாகக் கொட்டுவதால் நான் பதற்றமடைகிறேன். விவசாயத்தில் தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லிகளால், என்னை நஞ்சு ஆக்குகிறீர்கள். காடுகளை அழித்தல் போன்ற செயல்களால் என் உடலை நீங்கள் புண்ணாக்குகிறீர்கள்!

என்னை வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் என் ஆடைபோன்ற மரங்களை நீங்கள் வெட்டி வீழ்த்துகிறீர்கள். என்னுள் இருக்கிற கனிமங்களை வெட்டி எடுப்பதால், என் உடல் சீர்கேடு அடைகிறது. என்மீது செயற்கை இழைத்துணிகள், நெகிழிப் பொருள்கள், மரத்துண்டுகள், கண்ணாடி, காகிதம் போன்ற கழிவுகளைக் கொட்டி, என்னைச் சிதைக்கிறீர்கள்!

**2. 17–ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு, இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மஹால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும் தீர்வுகளையும் கலந்துரையாடுக.**

**எழிலன்** : தமிழன்பா, உலக அதிசயங்களுள் ஒன்றைச் சொல்.

**தமிழன்பன்** : தாஜ்மஹால்.

**எழிலன்** : தாஜ்மஹாலைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

**தமிழன்பன்** : அதற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துப் பற்றித் தெரியுமே.

**எழிலன்** : தாஜ்மஹாலுக்கு ஆபத்தா?

**தமிழன்பன்** : ஆமாம் எழிலா! ஒரு மாதத்திற்கும் மேலாக வட மாநிலங்களில் அடித்த புழுதிப்புயல், தாஜ்மஹாலில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாம்.

**எழிலன்** : என்ன பாதிப்பு?

**தமிழன்பன்** : அடைமழையுடன் கூடிய புயலில், தாஜ்மஹாலின் தெற்கு நுழைவுவாயிலில் உள்ள தூண்கள் சரிந்துவிட்டதாம். வடமேற்குக் கோபுரத்தில் உள்ள கதவும் விழுந்து விட்டதாம்.

**எழிலன்** : வேறு என்ன பாதிப்பு?

**தமிழன்பன்** : வெள்ளைச் சலவைக் கல்லால் கட்டப்பட்டி ருக்கும் தாஜ்மஹால், ஆங்காங்கே பச்சை நிறமாக மாறி வருகிறதாம்.

**எழிலன்** : அப்படியா? ஏன் அப்படி நிறம் மாறுகிறது?

**தமிழன்பன்** : யமுனா நதியில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரில் கிருமிகள் உருவாகி வருவதால், தாஜ்மஹால் பச்சை நிறமாக மாறுகிறது எனத் தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**எழிலன்** : தாஜ்மஹாலின் வெள்ளைநிறம் மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கிவிட்டது என முன்னர்க் கூறினார் களே!

**தமிழன்பன்** : ஆமாம்! அதற்காக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையா?

**எழிலன்** : இதைத் தடுக்க என்ன வழி?

**தமிழன்பன்** : தாஜ்மஹாலைச் சுற்றியுள்ள புகைவிடும் அனைத்துத் தொழிற்சாலைகளையும் உடனே மூடவேண்டும். ஆக்ராவிலிருக்கும் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வெளியேறும் புகையைத் தடுக்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறதா ? உங்களின் கருத்துகளைப் பதிவு செய்க.**

சங்க காலம் என்பது ஒரு பொற்காலம். காடு, மலை, வயல், கடல் என்னும் நில அமைப்பின் அடிப்படையில் சங்ககால மக்களின் வாழ்வியல் அமைந்திருந்தது. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்பட்டது. மரங்கள், காடுகள், ஆறுகள், பறவைகள், விலங்குகள் நிறைந்த நிலப்பகுதியாகும். ஆதியில் வேட்டையாடி உணவுகளைத் தேடி உண்டனர். பின்னர் ஆடுமாடுகளை மேய்த்தும், வேளாண்மைக்குப் பயன்படுத்தியும் வாழ்ந்துள்ளனர். இயற்கையான இன்பச்சூழலில் தேன், தினை, கிழங்கு போன்ற உணவுவகைகளையும் உண்டும், பிறரோடு அவற்றை அன்புடன் பகிர்ந்து உண்டும் வாழ்ந்தனர். சங்கடம் வந்தபோது விரிச்சி கேட்டு தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர்.

**4. குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை / நிகழ்வை எழுதுக.**

அமைதி – வனம் – மனத்தைத் தொட்டது – கொஞ்சம் அச்சம் – ஆனால் பிடித்திருந்தது – இரவில் வீட்டின் அமைதியை விட – வனத்தின் அமைதி – புதுமை – கால்கள் தரையில் – இலைகளின் சலசலப்பு – பறவைகளின் மரங்களின் மேல் – சிறகடிப்பு அருகில் திரும்பியவுடன் – திடீரென ஆரவார ஓசை – தண்ணீரின் ஓட்டம் – அழகான ஆறு – உருண்ட சிறுகூழாங்கற்கள் – இயற்கையின் கண்காட்சி.

காயத்ரி ஒருநாள் அதிகாலை வேளையில் இயற்கையை ரசித்தபடி தனது பண்ணை வீட்டில் நடந்து கொண்டிருந்தாள். அவள் நடந்து சென்ற வழி மரங்கள் அடர்ந்த சோலை; எங்கும் அமைதி. வானத்தைப் பார்த்தாள். இருள் கலைந்தும் கலையாமலும் இருந்தது வானம். வானின் அழகும் பறவைகளின் இரைச்சலும் அவள் மனதைத் தொட்டன. இருப்பினும் தனியாக நடப்பதில் அவளுக்குக் கொஞ்சம் அச்சம் இருந்தது.

சில்லென்ற புத்தம் புதிய காலை வேளை அவளுக்குப் பிடித்திருந்தது. இரவு நேரத்தில் வீட்டைச் சுற்றி ஓர் அமைதி இருந்தது. அதைவிட அந்தச் சூழ்நிலை ஒரு பரவசம் கலந்த அமைதி அளித்தது. அவள் நடந்த சோலையில் வெளிச்சம் சற்றுக் குறைவாக இருந்தது.

காலில் பட்ட சருகுகள் சலசலத்தன. பறவைகளின் ஆரவார ஒலியும், அவைகளின் சிறகடிப்பும் ஆனந்தம் அளிப்பதாக இருந்தது. அருகில் ஓடும் ஆற்று நீரின் சலசலப்பு திடீர் ஆரவார ஓசையாக இருந்தது. ஆற்றின் நீரோட்டத்தில் வானத்தின் காட்சி அழகாய் இருந்தது. ஆற்று நீரில் கால் வைத்தாள் காயத்ரி. கூழாங்கற்கள் இருந்ததை உணர்ந்தாள். இயற்கையின் மடியில் சிறிது நேரம் தன்னை மறந்தாள் காயத்ரி.

**5. கடலில் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்படுத்த அடுக்குத் தொடர்களும் வருணனைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன என்பது குறித்து வகுப்பில் பேசுக.**

**புயலின் ஆரம்ப நிலை :**

மேகப் பொதிகள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன. அலைகள் எண்ணெய் பூசியவைபோல் மொழுமொழுவென நெளிந்தன. காற்றையே காணோம். ஒரே இறுக்கம். மாலுமிகள் திடுமெனப் பாய்மரத்தை நோக்கி ஓடிச்சென்று கட்டுக் கயிறுகளை இறுக்குகிறார்கள். எல்லோரும் எழுந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து மிரண்டு விழித்தனர்.

**புயலும் வெள்ளமும் :**

கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன. வானம் உடைந்து கொட்டு கொட்டென்று வெள்ளம் கொட்டியது. சூறாவளி மாரியும் காற்றும் கூடிக் கலந்து ஆடிக் குதித்துக் கொந்தளித்தன. அலையோட்டம் தெரியவில்லை. வானுடன் கடல் கலந்து விட்டது. வளியுடன் இணைந்து விட்டது.

**வானும் கடலும் :**

வானும், கடலும், வளியும், மழையும் மீண்டும் ஒன்று கூடிக் கொந்தளிக்கின்றன. வானம் பிளந்து தீ கக்கியது. மழை வெள்ளம் கொட்டுகிறது. வளி முட்டிப் புரட்டுகிறது. கடல், வெறிக் கூத்தாடுகிறது. தொங்கன் (கப்பல்) நடுநடுங்கித் தாவித் தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறுநொறு நொறுங்குகிறது.

**புயலுக்குப் பின் :**

பகல் இரவாகி இரவு பகலாகியது. பிறைமதி வெளிச்சம் சிந்திற்று. கருநீலவானில் விண்மீன்கள் வெகு ஒளியுடன் கண் சிமிட்டி நின்றன. உப்புக் காற்று உடலை வருடியது. அவுலியா மீன்கள் கூட்டம் கூட்டமாய், கண்மாயில் முதுகு தெரிய மூழ்கி நீந்தும் எருமைகளாய் முனகல் ஒலியோடு பின் தொடர்ந்தன. அலைகள் நெளிந்தோடின. இவ்வாறு ஆசிரியர் கடலில் புயலின் கோரத்தாண்டவத்தை வருணனைகளாலும், சொற்களைப் பதற்றமான அடுக்குத் தொடர்களாலும் அமைத்து கடல், புயல், மழை, காற்று இவற்றின் செயல்களைக் கூறியிருப்பது சிறப்பாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக. (மழை, வெள்ளம், புயல், வறட்சி)

**வெள்ளம்**

எனக்கு மட்டுமல்ல சென்னை வாசிகள் பலருக்கும் பயமான சூழ்நிலையைத் தொடங்கி வைத்த நாள் அது. தீபாவளியின்போதும், அதன் பின்னரும் மழை கொட்டத் தொடங்கியது. முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்று வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு, குண்டும் குழியுமான சாலைகளைக் கடந்து, கழிவுநீர் துவாரங்களிலிருந்து தப்பி வீடு வந்து சேர்வது சென்னைவாசிகளுக்குப் பழகிப்போன ஒன்றாகி விட்டது.

சாதாரண மழையாகத்தான் இருக்கும் என்று நினைத்து சென்றது பிழையாகிவிட்டது. சென்னையின் மையப்பகுதியில் வசித்ததால் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட்டதே இல்லை. வழக்கமான அன்றைய பணிகளை முடித்துவிட்டு, தொலைக்காட்சியில் கண்களை ஓட்டினேன். மழைச் செய்திகளாக வந்து கொண்டிருந்தன. புறநகர் பகுதிகளில் மழைநீர் தேங்கியதால் ஏற்பட்ட சேதச் செய்திகளைப் பார்த்தேன். உறங்கிவிட்டேன்.

காலை ஆறு மணி. தூக்கம் கலையாத அந்த நேரத்தில் திடீரென அப்பா கூப்பிடும் சத்தம். கூடவே, வெளியில் சாலையில் சைரன் வாகனங்களின் சத்தம். "தண்ணீ.... தண்ணீ..." என்று சத்தமிட்டனர். அப்போது, "வீட்டுக்குள் தண்ணி வந்திடுச்சு..." என்கிற அப்பாவின் பதட்டமான குரலைக் கேட்டு அவசரமாக எழுந்து வெளியே வந்து பார்த்தால் எங்கள் வீட்டை ஒட்டிய சாலைக்குள் திபு திபு வென வெள்ளம்போல தண்ணீர் வந்தது. அப்போது மழை எதுவும் இல்லாததால், எங்கிருந்து இவ்வளவு தண்ணீர் வருகிறது என்ற குழப்பத்தில் சாலைக்கு ஓடினேன். முழங்கால் அளவுக்குத் தண்ணீர். என்னைப்போலப் பலர் அங்கே பக்கத்துச் சாலைகளில் இருந்து வரும் தண்ணீரைப் பார்த்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். மளமளவென எங்கள் வீட்டிற்குள் தண்ணீர் வராமல் இருக்க தடுப்புகள் வைத்தோம்.

ஆற்றிலிருந்து வெகுதூரத்தில் நாங்கள் இருந்தாலும் முதல்முறையாக எங்களையும் புறநகர் வாசிகளாக்கியது வெள்ளம் எனப் புரிந்து கொண்டேன். உடனடியாக மின்சாரம் நிறுத்தப்பட்டது. பின்னர், தொலைபேசி இணைப்புகளும் ஒன்றன்பின் ஒன்றாக செயல் இழந்தன. உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் தவித்தோம். ஆனால், பல நல்ல உள்ளங்களால் உயிர் பிழைத்து உயிர் வாழ்ந்தோம் என்பது குறிப்பிடத்தக்கது.

## மொழியை ஆள்வோம்

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fill the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant. **(PTA - 1, May - 22)**

தங்கச் சூரியன், அதிகாலையில் தோன்றிப் பிரகாசமான கதிர்களைக் கொண்டு, உலக இருளைப் போக்குகிறது. பால் வெண்மேகங்கள் அலையத் தொடங்குகின்றன. வண்ணமயமான பறவைகள், தங்கள் காலை இசையால் மகிழ்ச்சி வழங்குகின்றன. அழகிய பட்டாம்பூச்சிகள், மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன. மலர்களின் மென்மையான வாசனை, தென்றல் காற்றை நிரப்புகின்றது. மென்காற்று, எல்லா இடங்களிலும் வீசி அனைத்திற்கும் மகிழ்ச்சியூட்டுகிறது.

**சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்.

**எ – கா : இன்சொல்** – பண்புத்தொகை – **இனிமையான சொல்** கூறுதல் சான்றோர்க்கு அழகு.

**எழுகதிர்** – வினைத்தொகை

வைகறையில் எழுகதிர் ஒளியால், சோலையில்பூக்கள் பூத்துக் குலுங்கின.

**கீரிபாம்பு** – உம்மைத்தொகை – கீரியும் பாம்பும்

பணியாளர் இருவர் எப்போதும் கீரியும் பாம்பும்போலப் பகைமை பாராட்டிக் கொண்டிருந்தனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பூங்குழல் வந்தாள்** – இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.
அன்னை அழைத்தபோது பூங்குழல் கூந்தலாள் வந்தாள்.

**மலைவாழ்வார்** – ஏழாம் வேற்றுமைத்தொகை.
மலையின்கண் வாழ்வாரை மலையாளிகள் என்பர்.

**முத்துப்பல்** – உவமைத்தொகை
சிலரின் சிரிப்பில் முத்துப்போன்ற பல்வரிசை தெரியும். (PTA-2)

**செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்.**

பூ உண்டு. ஆனால், கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் – ஆலமலர்; பலாமலர்.

மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் – கள்ளிமலர், பாங்கர்மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து, அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் – அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம் மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு, மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன : நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப்பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இலுப்பைப் பூக்கள், இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி, அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ, குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி, அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். அது, மூங்கில் அரிசி எனப்படும்.

– கோவை. இளஞ்சேரன்

1. **மலர் உண்டு; பெயரும் உண்டு – இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.** (PTA - 2)
   மலருக்குப் பெயரும் உண்டு.
2. **அரும்பாகி மொட்டாகிப் பூவாகி.... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.**
   காய்தோன்றிக் கனியாகி, அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும்.
3. **நீங்கள் அறிந்த இருபூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.**
   முருங்கை – இரத்தசோகை நீங்கி, உடலுக்கு வலிமை தரும்; சிறுநீரகம் பலப்படும்; இரும்பு, சுண்ணாம்புச் சத்து உள்ளது.
   அத்தி – வைட்டமின் ‘பி’ உள்ளது. தூக்கமின்மை நீங்கும்; மூச்சுக்குழாய் அழற்சியைச் சரிசெய்யும்; மலச் சிக்கலைக் குணமாக்கும்; சிறுநீர்ப்பை கற்களைக் கரைக்கும்.
4. **<u>அரிய</u> மலர் – இலக்கணக் குறிப்புத் தருக.**
   குறிப்புப் பெயரெச்சம்
5. **தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக.** (PTA - 2)
   இலுப்பைப் பூக்கள், இனிப்பானவை. கரடிகள் **மறத்தின்** மீதேறி அவற்றைப் **பரித்து** உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் **மனத்தை** ஏற்றும்.
   இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் **மரத்தின்** மீதேறி, அவற்றைப் **பறித்து** உண்ணும். பாதிரிப் பூ, குடிநீருக்குத் தன் **மணத்தை** ஏற்றும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வாழ்த்துமடல் எழுதுக :**

**மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (PTA - 4, June-23)**

மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பில் கட்டுரை எழுதி, முதற்பரிசு பெற்ற நண்பனைப் பாராட்டிப் படித்தளிக்கும் வாழ்த்து மடல்.

**எழுத்தாற்றல் மிக்க ஏந்தலே!**

பள்ளியில் நடைபெறுகின்ற அனைத்துப் போட்டிகளிலும் முதன்மை பெறும் தோழனே! இனிமையாய்ப் பேசுவது மட்டு மன்று; எந்தத் தலைப்பு கொடுத்தாலும், அந்தத் தலைப்பாகவே மாறிப் பேசும், எழுதும் வல்லமை பெற்றவன் நீயே! வியந்து பாராட்டுகின்றோம்.

**தமிழ்த்தாயின் தனிப்பெருஞ் செல்வனே!**

இனிய தமிழ்மொழியாகட்டும், உலகையே ஆளும் ஆங்கிலமாகட்டும் இருமொழிகளிலும் ஓவியம் வரைந்தது போல் எழுதுகின்ற உன் ஆற்றலே ஆற்றல்! எனப் போற்றி மகிழ்கின்றோம்.

**மரம் வளர்த்த மாமணியே!**

நீ பாசம் வைத்தால், வாழ்வே இனிமையாகும். நீ பாதம் வைத்தால், அவ்விடம் பசுமையாகும். உன் நாற்றங்காலில் மரம், செடி, கொடிகூட இனிய பூஞ்சோலையாய் மாறும். நீ "மரம் இயற்கையின் வரம்" என்று எழுதிய கட்டுரைக்கு மாநில அளவில் முதல் பரிசு பெற்றமை கண்டு, நான் மட்டுமன்று; நம் பள்ளியே பெருமையடைகிறது. மேன்மேலும் பரிசுகள் பல பெற வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்
மயிலை, மாணவர் இலக்கிய மன்றம்,
அரசு மேல்நிலைப்பள்ளி.
20.3.2023.

**பாரதியின் வசனநடை – சிட்டுக்குருவி**

சிறியதானியம் போன்ற மூக்கு; சின்ன கண்கள்; சின்ன தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்துகொண்டு, என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண்; மற்றொன்று பெண்.

**– இதுபோன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.**

**வசனநடையில் மயில்**

அழகிய தோற்றம்; பார்க்கச் சலிப்புத் தட்டாத வண்ணக் கலவை; பார்க்கப் பார்க்கத் திகட்டாத அழகு; அதன் சாயல் அழகு அனைவரையும் மயக்கும்; நீண்ட அகவல் ஒலி எழுப்பும்; வண்ண மயமான தோகையை விரித்திட்டாலோ, பச்சை, நீலம், மஞ்சள், கருநீலம் கலந்த ஓர் அழகிய இயற்கை ஓவியமே காட்சி அளிக்கும்; காண்பார் நெஞ்சங்களுக்கு மகிழ்வளிக்கும்; மயிலின் அழகே அழகுதான்!

## மொழியோடு விளையாடு

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க. (காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)**

1. முதல் இரண்டை நீக்கினாலும், வாசனை தரும் – நீக்காவிட்டாலும் வாசனை தரும்.

   **விடை : நறுமணம்**

2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும்.

   **விடை : புதுமை**

3. இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை.

   **விடை : காற்று**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச் செல்லும்.

**விடை : விண்மீன்**

5. ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்.

**விடை : காடு**

**நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு)

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது; வானம் இருண்டது; வாடைக்காற்று வீசியது.

**விடை : காற்றின் பாடல்**

2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள், தலையாட்டி மகிழ்கின்றன.

**விடை : மொட்டின் வருகை**

3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள், அதன் வருகையை உணர்ந்து, நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று, மலர்களில் அமர்கின்றன.

**விடை : மிதக்கும் வாசம்**

4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி, வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள்.

**விடை : உயிர்ப்பின் ஏக்கம்**

5. நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.

**விடை : நீரின் சிலிர்ப்பு**

6. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும்; இலைகளின் அசைவுகள்; சூறைக்காற்றின் ஆலோலம். **(Sep. - 20)**

**விடை : வனத்தின் நடனம்**

**அகராதியில் காண்க.**

**அகன்சுடர்** – உயர்ந்த தீபம்

**ஆர்கலி** – கடல், மழை, பறவை

**கட்புள்** – விழித்திருக்கும் பறவை

**கொடுவாய்** – வளைந்த வாய்

**திருவில்** – வானவில்

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(PTA - 5)**



சுற்றுச்சூழல்கள் கெட்டுப் போனதால்
தூய காற்றைத் தேடி அலைந்தவன்
மட்பாண் டத்துள்ளே மரஞ்செடி வளர்த்து
உயிர்வளி பெற்று உலா வந்து
உயிர் வாழ்கின்ற காலமும் வருமோ
நாளைய உலகில்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## நிற்க அதற்குத் தக

**வானொலி அறிவிப்பு : 'ஜல் புயல்' சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

**புயலின்போது**

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்ல வேண்டாம். | வெளியேற நேர்ந்தால், ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும். | காற்று அடிப்பது நின்றாலும், எதிர்த்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்கவேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால், கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர்வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும், வாகனத்தின் உள்ளேயே தங்கி யிருக்கவும். |

**மேற்கொண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

1. வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றச் செய்வேன்.
2. புயலின்போது வெளியே செல்வதைத் தவிர்ப்பேன்.
3. தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தடுப்பேன்.
4. மீனவ நண்பர்களைக் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கச் செய்வேன்.
5. மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தரைப்பகுதியிலேயே தங்கச் செய்வேன்.
6. வாகனத்தை ஓட்ட நேர்ந்தால், கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிகள் உள்ள பாதைகள், நீர்வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும், வாகனங்களைச் செலுத்தச் செய்வேன்.
7. காற்று அடிப்பது நின்றாலும், மறுபடி எதிர்த்திசையி லிருந்து வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்து விட்டதாக நினைக்கவேண்டாம் என அறிவுறுத்துவேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

Storm – புயல்
Land Breeze – நிலக்காற்று
Tornado – சூறாவளி
Sea Breeze – கடற்காற்று
Tempest – பெருங்காற்று
Whirlwind – சுழல்காற்று

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 3

# பண்பாடு

# கூட்டாஞ்சோறு

| | | |
|---|---|---|
| உரைநடை | விருந்து போற்றுதும்! | |
| கவிதைப்பேழை | காசிக்காண்டம் | அதிவீரராம பாண்டியர் |
| | மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் |
| துணைப்பாடம் | கோபல்லபுரத்து மக்கள் | கி. ராஜநாராயணன் |
| இனிக்கும் இலக்கணம் | தொகாநிலைத் தொடர்கள் | |
| வாழ்வியல் | திருக்குறள் | திருவள்ளுவர் |

## பாடநூல் வினா – விடை

### திறன் அறிவோம்

### பலவுள் தெரிக

1. பின்வருவனவற்றுள் முறையான தொடர் – (PTA -4, June-23)

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**விடை : இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

2. ‘சிலம்பு அடைத்திருந்த பாக்கம் எய்தி’ என்னும் அடியில், பாக்கம் என்பது ______.

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

**விடை : ஈ) சிற்றூர்**

3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர் களில், பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ______. (May -22, June-23)

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

**விடை : அ) வேற்றுமை உருபு**

4. காசிக்காண்டம் என்பது ______. (Mar.-24)

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**விடை : இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**

5. ‘விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு’. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லலிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

**விடை : ஆ) இன்மையிலும் விருந்து**

### குறுவினாக்கள்

1. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.** (June-23)

★ வாருங்கள்... வாருங்கள்... உங்களைக் கண்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. உட்காருங்கள்! முதலில் சிறிது நீர் பருகுங்கள். நீங்கள் எங்கள் இல்லத்திற்கு வந்தது, நாங்கள் செய்த பெரும்பேறு.

★ கண்டிப்பாக உணவு உண்டுவிட்டே நீங்கள் செல்ல வேண்டும்; உங்களைச் சந்திக்க, நான் வெகு ஆவலாக இருந்தேன்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.**

★ வீட்டிற்கு விருந்தினராக வந்தவருக்கு, வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்து அளித்து மகிழ்ந்த செய்தி புறநானூற்றால் அறிய முடிகிறது.

★ விருந்தினர்க்கு விருந்து படைக்கச் செல்வம் தேவையில்லை; நல்ல மனம் இருந்தால் போதும். தம்மிடம் உள்ளது கொண்டு, விருந்தினருக்குச் சிறந்த விருந்தளிக்க முடியும் என்பது புலப்படும்.

**3. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினாள்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்?**

★ 'சிரித்துப் பேசினாள்' என்பது, 'சிரித்துச் சிரித்து'ப் பேசினாள் என அடுக்குத் தொடராகும்.

**4. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக. (June-23)**

இறடி – தினை; பொம்மல் – சோறு.

★ 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' என்பது, தினைச்சோற்றைப் பெறுவீர்கள் எனப் பொருள்படும்.

**5. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை? (Sep.-22, June-23)**

★ 'பாரதியார் கவிஞர்' என்ற தொடரில், பாரதியார் என்ற எழுவாயுடன், கவிஞர் என்ற பெயர்ப் பயனிலை சேர்ந்து (எழுவாய்த் தொடராக)வந்துள்ளது.

★ 'நூலகம் சென்றார்' என்ற தொடரில், 'நூலகம்' என்ற எழுவாயுடன், 'சென்றார்' என்ற வினை தொடர்ந்து, எழுவாய்த் தொடர் ஆயிற்று.

★ 'அவர் யார்' என்ற தொடரில், 'அவர்' என்னும் எழுவாயுடன், 'யார்' என்ற வினா தொடர்ந்து, எழுவாய்த் தொடர் ஆயிற்று.

## சிறுவினாக்கள்

**1. 'கண்ணே கண்ணுறங்கு! (PTA - 2, Sep.-21)**
**காலையில் நீயெழும்பு!**
**மாமழை பெய்கையிலே**
**மாம்பூவே கண்ணுறங்கு!**
**பாடினேன் தாலாட்டு!**
**ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!' – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

| | | |
|---|---|---|
| **கண்ணே! கண்ணுறங்கு** | – | விளித்தொடர் |
| **காலையிலே நீ எழும்பு** | – | வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |
| **மாமழை பொய்கையிலே** | – | உரிச்சொல் தொடர் |
| **மாம்பூவே! கண்ணுறங்கு** | – | விளித்தொடர் |
| **பாடினேன் தாலாட்டு** | – | வினைமுற்றுத் தொடர் |
| **ஆடி ஆடி** | – | அடுக்குத்தொடர் |
| **ஓய்ந்து உறங்கு** | – | வினையெச்சத் தொடர் |

**2. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" – வினவுவது ஏன்?**

★ இல்லத்தின் பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், புதியவர் (விருந்தினர்) எவரேனும் உளரா என அறிய "உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா?" என்று கேட்கும் வழக்கம், பழந்தமிழரிடையே இருந்ததைக் குறுந்தொகை கூறுகிறது.

★ அமுதமே கிடைத்தாலும் அதனைத் தாம் மட்டுமே தனித்து உண்ணாமல், பிறருடன் பகிர்ந்து உண்பதைப் பண்பாடாகக் கொண்ட தமிழர், பசித்தவர் முகம் கண்டு புதிதாக வந்தவருக்கும் உணவிட்டு மகிழ்ந்தனர்.

★ நம் முன்னோர்களோ, தங்கள் வீடுதேடி வந்தவர்கள், புதியவராயினும், பசித்து வந்தவருக்கு உணவும் தங்கிச் செல்ல இடமும் கொடுத்து உபசரிப்பதைச் சிறப்பாகக் கருதினர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர். திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது. – இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக. (PTA - 3)**

★ காலமாற்றத்தால் தமிழர் விருந்தோம்பல் முறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை; அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை. இருப்பினும் திருவிழாக் காலங்களில் சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்று உபசரிக்கின்றனர்.

★ காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள், திருமணக் கூடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளன. பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும்வரை, 'திருமண ஏற்பாட்டாளர்களே' செய்யும் விருந்தோம்பல்முறை தற்சமயம் நடைபெறுகிறது.

**4. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது? (PTA -1)**

★ பரிசில் பெற்ற கூத்தன், பரிசில் பெறப்போகும் கூத்தனை அழைத்து, "நெருப்பைப் போன்ற சிவந்த செங்காந்தள் மலர்க்கொத்தினை அணிந்து கொண்டு, அசோக மரங்கள் நிறைந்த வழியாகச் சென்று, மூங்கில்கள் அசைவதால் எழுகின்ற ஓசையுடைய மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

★ போர் செய்யும் முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தன் என்று சொல்லுங்கள். உம் வீடுபோல் அவர்களுடைய வீட்டிற்குள் நுழையுங்கள்.

★ உங்களை உரிமையுடன் வரவேற்று, உறவினர்போல் பழகுவர். உமது வருத்தம் நீங்கும்படியாக நெய்யில் வெந்த மாமிசப் பொரியலுடன் தினைச்சோற்றையும் விருந்தாகப் பெறுவீர்கள்" எனக் கூறி, ஆற்றுப் படுத்தியமையைக் கூத்தராற்றுப்படை காட்டுகிறது.

## நெடுவினாக்கள்

**1. ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறி யிருப்பதை விளக்குக. (PTA -3)**

**முன்னுரை :**

தமிழரின் தொன்மை, வீரம், கொடை முதலான பண்புகளுள் விருந்தோம்பலும் ஒன்றாகும். விருந்தோம்பல், நமது பண்பாட்டின் அடையாளமாகும். கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் இல்லறத்தில் ஆற்ற வேண்டிய கடமையாக, அறமாக விருந்தோம்பல் பண்டைக் காலத்தில் கருதப்பட்டது.

**இலக்கியத்தில் விருந்தோம்பல் :**

விருந்து + ஓம்பல் – விருந்தோம்பல். அது விருந்தினர்களை உபசரித்துப் பாதுகாத்தல் எனப் பொருள்படும். போக்குவரத்துக் குறைந்திருந்த அக்காலத்தில், வணிகமுறையாக வருபவர்களுக்கும் பசியை நீக்க உணவு கொடுத்து உபசரிப்பதுவே விருந்தோம்பலாகும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலங்களுக்கே உரிய உணவுமுறைகளும், உபசரிப்பு முறைகளும் இக்காலத்தில் மாற்றம் பெற்றுள்ளன.

புதியவர்களுக்கு உணவு வழங்குவதை நம் முன்னோர் கொள்கையாகக் கொண்டிருந்தனர். வள்ளுவரும், இன்முகத்தோடு பரிமாற வேண்டும் என்பார். மணிமேகலையும், அறத்திற்கு எல்லாம் அறமாவது விருந்தோம்பல் என்கிறது. பத்துப்பாட்டில் 81 இடங்களில் விருந்து பற்றிப் பேசப்படுகிறது.

**விருந்தோம்பும் முறைகள் :**

விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்றல், உபசரித்தல், வாயில்வரை சென்று அனுப்புதல்வரை பல்வேறு நெறிமுறைகளைக் கடைப்பிடித்துள்ளனர். வள்ளல்கள் தம்மை நாடி வருவோரைத் தெய்வமாகக் கருதி இக்கடமைகளைச் செய்திருக்கிறார்கள். முரசுகட்டிலில் தூங்கிய மோசிகீரனாரைத் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, கவரி வீசிப் பணிவிடை செய்துள்ளான். அதியமான் நெடுமானஞ்சி, ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்து, நெடுநாள் பாதுகாத்துள்ளான். பண்டை அரசர்கள், வள்ளல்கள் மட்டுமல்லாமல், மக்களும் விருந்தினரைப் போற்றிப் பாராட்டியுள்ளனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இன்றைய நிலையில் விருந்தோம்பல் :**

தற்போதும் தம்மை நாடி வருபவர்களுக்கும், திருவிழாக் காலங்களில் வருகின்ற புதியவர்களுக்கும் பசியைப் போக்க, உணவு அளித்துப் போற்றுகின்றனர். வணிகம் கருதியோ, பல்வேறு பணிகள் கருதியோ வெளியிடங்களுக்கோ, வெளிநாட்டிற்கோ செல்பவர்களுக்கு உணவகங்கள், தங்கும் இடங்கள், சுற்றுலா விடுதிகள் போன்றவை இருப்பதால், பிறரைத் தேடிச் செல்ல வேண்டிய சூழல் இன்று இல்லை.

**முடிவுரை :**

போக்குவரத்துச் சாதனங்கள் அதிகமாக இருப்பதாலும், தங்கும் விடுதிகள் இருப்பதாலும், விருந்தினராகச் செல்வதும், விருந்தினரை வரவேற்பதும் குறைந்துள்ளன. உறவு முறையினர் வந்து செல்வதும், மிக அருகிவிட்டது எனலாம்.

2. **அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.** (PTA - 4, Sep. -21, May - 22, June-23)

**அன்னமய்யாவின் கண்களில் அந்த வாலிபன் :**

தற்செயலாக அந்தப் பக்கம் வந்த அன்னமய்யாவின் கண்ணில் பட்டது அந்தக் காட்சி. அருகில் போய்ப் பார்த்த பிறகுதான் தெரிந்தது, அவன் ஒரு வாலிபன் என்று. கால்களை நீட்டி, புளிய மரத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அவனை, அன்னமய்யா நெருங்கிப் போய்ப் பார்த்தான். பசியால் வாடிப்போன அந்த முகத்தில் தெரிந்த கண்களின் ஏக்கப் பார்வை, கவனிக்கக் கூடியதாய் இருந்தது. அன்னமய்யாவைப் பார்த்ததும், அவன் ஒரு சிறு புன்னகை காட்டினான். தன்னைப் பார்த்து ஒரு நேசப் புன்னகை காட்டிய அந்த வாலிப மனிதனிடம் போய், அருகில் நின்று பார்த்துக்கொண்டே இருந்தான் அன்னமய்யா, வாய் திறக்காமல்.

**மயக்கம் தெளிவித்த மனித நேயம் :**

அலுப்புத் தீர்ந்த வாலிபன், "குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?" என்று, அன்னமய்யாவைப் பார்த்துக் கேட்டான். ஒரு வேப்பமரத்தின் அடியில் மண் கலயங்கள் இருந்தன. அந்தக் கறுப்புக் கலயங்களில் கஞ்சி நிரப்பப்பட்டிருந்தது. அன்னமய்யா, ஒரு கலயத்தின்மேல் வைக்கப்பட்ட கல்லை அகற்றினான். ஒரு சிரட்டையில் துவையலும் ஊறுகாயும் இருந்தன. மற்றொரு சிரட்டையில் மோர் மிளகாய் இருந்தது. அன்னமய்யா ஊற்றிக் கொடுத்த கஞ்சியை உறிஞ்சிக் குடித்தான் வாலிபன். கண்கள் சொருகின. தொண்டை வழியாகக் கஞ்சி இறங்குவதன் சுகத்தை முகம் சொல்லியது. கலயத்திலிருந்து சிரட்டைமூலம் மடக்கு மடக்காய் உறிஞ்சிக் குடித்தான். அவனுள் உயிர்ஊற்று, பொங்கி நிறைந்தது. உண்ட களைப்பில் அப்படியே அந்த வேப்பமரத்து நிழலிலேயே தூங்கிவிட்டான். உண்ட அலுப்பு, தென்றல் காற்று தூங்கச் செய்தது.

**கண் விழிக்கக் காத்திருந்த அன்னமய்யா :**

நீச்சுத் தண்ணீர் குடித்த மனநிறைவோடு, மரத்து நிழலில் தூங்கிப் போய்விட்டான் வாலிபன். வந்தவனுக்கு எப்படி ஒரு நிறைவு ஏற்பட்டதோ, அதைவிட மேலான ஒரு நிறைவு, அன்னமய்யாவுக்கு ஏற்பட்டது. மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும்போதே வயிறு நிறைந்ததும் அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் பார்ப்பதுபோல, அவனை ஒரு பிரியத்தோடு பார்த்துக் காத்திருந்தான் அன்னமய்யா. சிறிது நேரத்திற்குப்பின் விழித்தான் வாலிபன். அவனிடமிருந்து நன்றி கலந்த புன்னகை வெளிப்பட்டது.

**அன்னம் வழங்கிய அன்னமய்யா :**

வாலிபனை அழைத்துக்கொண்டு, தன்னுடைய நண்பன் சுப்பையாவின் புன்செய் நிலத்துக்குச் சென்றான். அங்கு அறுகு எடுத்துக் கொண்டிருந்தார்கள். மணி என்கிற அந்த வாலிபனை வரவேற்று அமரச் செய்தார். எல்லோரும் சாப்பிடுவதற்குத் தயாரானார்கள். வாலிபனின் கையில் ஒரு கால்உருண்டை கம்மஞ்சோற்றை வைத்தனர். துவையலோடு சேர்த்துக் கடுமையான பசிக்கு ஓர் அரை உருண்டைவரை சாப்பிட்டு முடித்தான். அனைவரும் ஓய்வெடுத்தவாறு ஊர்க்கதைகளைப் பேச, மணி என்ற அந்த வாலிபனோ, திரும்பவும் படுத்து அமைதியாகக் கண்களை மூடித் தூங்கினான்.

**அன்னமய்யா பெயர்ப் பொருத்தம் :**

கோபல்லபுரத்துப் புன்செய் நிலம், சாலையோரமாக இருந்தது. தாடியும் அழுக்கு ஆடையும் ஒருவிதத் தள்ளாட்டமும் கொண்ட, பார்வைக்கு வயோதிகனாகவும், சாமியாரைப் போலவும் எண்ணத்தக்க நிலையில் ஒரு வாலிபன் வந்துகொண்டிருந்தான். வருவோர் போவோர் இருந்திருக்கக் கூடும். ஆனால், அவர்களில் அன்னமய்யா என்ற இளைஞன் மட்டுமே இவனைப் பார்த்து இரக்கப்படுகிறான்; களைப்பைப் போக்குகிறான்; கடும் பசிக்குக் கம்மஞ்சோறு அளித்து உயிர்கொடுக்கிறான். வாலிபன் அன்னமய்யாவின் பெயரைக் கேட்டுத் தெரிந்துகொள்கிறான். அந்தப் பெயரை மனத்திற்குள் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக்கொண்டான். அன்னமிட்ட கைகளுக்குச் சொந்தக்காரனின் பெயர் 'அன்னமய்யா'. என்ன பொருத்தமானது! என நினைத்துக் கொண்டான்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**3. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.** (Mar.-23)

தமிழரின் விருந்து போற்றுதல், தமிழர் மரபில் உணவோடு உணர்வையும் குழைத்துச் செய்த சமையலில் விருந்தாகிறது. எனது சித்தப்பாவை எங்கள் வீட்டிற்கு வந்து பத்து நாள்கள் தங்க வேண்டும் எனத் தொலைபேசியில் அழைத்தேன். என் சித்தப்பா கல்லூரிப் பேராசிரியர். யாருடனும் சண்டை போடமாட்டார்.

அவருக்குச் சிரித்த முகம். மற்றவர் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். எனவே, அவரைச் சுற்றி எப்போதும் பத்துபேர் இருப்பார்கள். அவரைப் பார்க்க எனக்கு ஆசை. எனவே, அவரை வரச்சொன்னேன்.

அவர் வரும் நாளன்று காலையில் விரைவாகவே எழுந்துவிட்டேன். என் சித்தப்பா காலை எட்டுமணிப் பேருந்தில் வந்து இறங்கினார். பேருந்து நிறுத்தத்திற்கே சென்று, அவரை வரவேற்று அழைத்து வந்தேன்.

சித்தப்பாவுக்கு வெந்நீரில் குளிக்க ஆசை என்பதால், நான் வெந்நீர் போட்டுக் கொடுத்தேன். அவருக்குப் பிடித்த வெண்பொங்கல் சமைக்குமாறு அம்மாவிடம் சொன்னேன். நானும் என் அப்பாவும் சித்தப்பாவோடு அமர்ந்து காலைச் சிற்றுண்டி சாப்பிட்டோம்.

அவரோடு எங்கள் வாழைத்தோட்டத்திற்கும், தென்னந் தோப்பிற்கும் சென்றோம். நிறைய இளநீர் குடித்தோம். காடு கரைகளெல்லாம் சுற்றித் திரிந்தோம். மதிய உணவிற்கு மூன்று மணிக்குத்தான் வந்தோம். அம்மா அறுசுவை உணவைத் தலைவாழையிலையில் பரிமாறினார்.

இப்படி நான்கு நாள்கள் எங்களோடு தங்கிவிட்டு என் சித்தப்பா விடைபெறும்போது, என் அப்பா அவரைக் கட்டித் தழுவினார். விழாக்காலங்களில் மட்டுமன்றி மற்ற நாள்களிலும் விருந்தினரை – உறவினரைச் சந்தித்து மகிழ்வது, இன்றைய காலகட்டத்தில் எல்லா ஊர்களிலும் நடைபெறுகிறது. உறவினர்கள் விருந்தினராகவாவது வந்துபோனால்தான் உறவுகள் நிலைக்கும்.

## கற்பவை கற்றபின்

**1. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

மாடியிலிருந்து **இறங்கினார் முகம்மது. அவர் பாடகர்.** பாடல்களைப் **பாடுவதும் கேட்பதும்** அவருக்குப் பொழுதுபோக்கு. அவரது அறையில் **கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்** கொண்ட குறுந் தகடுகளை **அடுக்கடுக்காக** வைத்திருப்பார்.

| | |
|---|---|
| **மாடியிலிருந்து இறங்கினார்** | வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் |
| **இறங்கினார் முகமது** | வினைமுற்றுத் தொடர் |
| **அவர் பாடகர்** | எழுவாய்த் தொடர் |
| **பாடல்களைப் பாடுவதும்** | வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் |
| **பாடுவதும் கேட்பதும்** | இடைச்சொல் தொடர் |
| **அவருக்குப் பொழுதுபோக்கு** | வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் |
| **அவரது அறையில்** | வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் |
| **கேட்ட பாடல்** | பெயரெச்சத்தொடர் |
| **கேட்காத பாடல்** | எதிர்மறைப் பெயரெச்சத்தொடர் |
| **குறுந்தகடுகளை வைத்திருப்பார்** | வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் |
| **அடுக்கடுக்காக வைத்திருப்பார்** | அடுக்குத்தொடர் |

**2. வண்ணச் சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.**

| | |
|---|---|
| **பழகப் பழகப்** பாலும் புளிக்கும் | அடுக்குத் தொடர் |
| **வடித்த கஞ்சியில்** சேலையை அலசினேன் | பெயரெச்சத் தொடர் |
| மேடையில் **நன்றாகப் பேசினான்** | வினையெச்சத் தொடர் |
| **வந்தார் அண்ணன்** | வினைமுற்றுத் தொடர் |
| அரிய **கவிதைகளின் தொகுப்பு** இது | வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இலக்கணக்குறிப்பு

**நன்மொழி** – பண்புத்தொகைகள்

**வியத்தல், நோக்கல், எழுதுதல், உரைத்தல், செப்பல், இழுத்தல், வழங்கல்** – தொழிற்பெயர்கள்

**அசைஇ, கெழீஇ** – சொல்லிசை அளபெடைகள்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **உரைத்த – உரை + த் + த் + அ**

   **உரை** – பகுதி

   **த்** – சந்தி

   **த்** – இறந்தகால இடைநிலை

   **அ** – பெயரெச்ச விகுதி

2. **வருக – வா (வரு) + க**

   **வா** – பகுதி, 'வரு' ஆனது விகாரம்

   **க** – வியங்கோள் வினைமுற்று விகுதி

3. **மலைந்து – மலை + த் (ந்) + த் + உ**

   **மலை** – பகுதி

   **த்** – சந்தி 'ந்' ஆனது விகாரம்

   **த்** – இறந்தகால இடைநிலை

   **உ** – வினையெச்ச விகுதி.

4. **பொழிந்த – பொழி + த் (ந்) + த் + அ**

   **பொழி** – பகுதி

   **த்** – சந்தி 'ந்' ஆனது விகாரம்

   **த்** – இறந்தகால இடைநிலை

   **அ** – பெயரெச்ச விகுதி.

## கற்பவை கற்றபின்

1. **நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக எழுதிப் படித்துக் காட்டுக.** (Mar.-24)

நான் கடைத்தெருவில் நடந்து கொண்டிருந்தபோது, என் எதிரில் எதிர்பாராத விதமாக எனக்கு மிகவும் பிடித்த மாமா வந்து கொண்டிருந்தார். ஓடிப்போய் அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன். "என்ன மாமா திடுதிப்புன்னு வந்திருக்கீங்க? ஒரு போன்கூட பண்ணல. போங்க மாமா" என்று, அவரை அன்போடு கோபித்துக்கொண்டு வீட்டிற்கு அழைத்து வந்தேன். உட்கார வைத்து அவருக்குக் குடிக்கத் தண்ணீர் தந்தேன். ஓடிப்போய்ப் பக்கத்துக் கடையிலிருந்து அவருக்குப் பிடித்தமான குளிர்பானம் வாங்கி வந்து கொடுத்தேன்.

என் அப்பாவும் அம்மாவும் மாமாவோடு பேசிக் கொண்டிருந்தார்கள். அதற்குள் குளியலறையில் அவர் குளிக்கக் குளியல் கட்டியும், துவட்டத் துண்டும் எடுத்து வைத்தேன். அவர் குளிக்கச் சென்றவுடன், அவர் அணிந்து வந்து கழற்றி வைத்த துணிகளைத் துவைத்துக் காயப்போட்டேன். குளித்தபின் அவர் அணியப் புதுத் துணிமணி கொடுத்தேன்.

அத்தை, அத்தைப் பெண் ஆகியோரைப் பற்றி அவரிடம் நலம் விசாரித்தேன். 'குறைந்தது ஒருவாரம் தங்க வேண்டும் மாமா' என அவரிடம் வாஞ்சையுடன் சொன்னேன். அம்மா தயாரித்த உணவை மாமாவுக்குப் பரிமாற, தலைவாழை இலை விரித்துப் பருக நீரும் வைத்தேன். என் மாமாவுக்கு உணவை நானே பரிமாறினேன். அவர் சுவைத்துச் சாப்பிட்டதை ஆவலோடு கண்டேன். அவர் விரும்பி உண்டவற்றை அடுத்தடுத்துப் பரிமாறினேன். உண்டு முடித்ததும் கை கழுவக் குவளையில் தண்ணீர் கொடுத்தேன். கை துடைக்கச் சிறு துண்டும் கொடுத்தேன்.

உண்டு களைத்த அவர், சிறிது நேரம் ஓய்வெடுக்க உதவினேன். எனக்காக என் மாமா நான்கு நாட்கள் தங்கி இருந்தார். அவர் ஊருக்குக் கிளம்பும்போது, நானும் என் அப்பாவும் பேருந்து நிறுத்தம்வரை சென்று வழியனுப்பி வைத்தோம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. உணவு, விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி, அவை சார்ந்த நிகழ்வுகளை எடுத்துரைக்க.**

**எ–கா : 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை'**

**அ) உப்பிட்டவரை உள்ளளவும் நினை :**

அவர் பெயர் ராஜன். தற்போது ராஜஸ்தான் மாநிலத்தில் அவர் ஒரு மாவட்டத்தின் ஆட்சியர். ஆனால், இளமையில் அப்பா, அம்மாவை இழந்து அனாதையான அவரை ஒரு மாடு மேய்க்கும் தொழிலாளி எடுத்து வளர்த்தார்; படிக்க வைத்தார்; கலெக்டர் ஆக்கினார். அந்த நன்றிக்காக திரு. ராஜன் அவர்கள் தனது வளர்ப்புப் பெற்றோரைத் தன் மாளிகையிலே தங்க வைத்துப் போற்றிப் பாதுகாக்கிறார். **'உப்பிட்டவரை உள்ளளவும் நினை'** என்ற பழமொழிக்குச் சான்றாக வாழ்கிறார் திரு. ராஜன்.

**ஆ) கொட்டிய பாலை நினைத்துக் குமுறி அழாதே :**

36 விழுக்காடு வட்டி தருவதாகக் கூறிய ஒரு தனியார் நிறுவனத்தில், முருகேசன் ஒரு தொகையை வைப்புத்தொகையாக முதலீடு செய்தான். மூன்று வருடங்களாகப் பொதுமக்களிடம் கோடிக்கணக்கில் வைப்புத்தொகை சேகரித்த அந்த நிறுவனம் திடீரென காணவில்லை. என்னவாயிற்று என எவருக்கும் தெரியவில்லை. பணத்தை அந்த நிறுவனத்தில் அதிக வட்டிக்காகச் சேமித்த முருகேசனும் மற்றவர்களும் கதறி அழுதனர். **கொட்டிய பாலை நினைத்துக் குமுறி அழாதே** என்ற பழமொழியை அவர்களுக்கு யார் சொல்வது?

**இ) விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு :**

வசதியான வீடு, நல்ல மனிதர்கள், நல்ல உபசரிப்பு என்பதற்காக ஒருவருடைய வீட்டிற்கு அடிக்கடி செல்லக்கூடாது. அப்படி செல்வது நாகரிகமில்லை. அப்படி அடிக்கடி சென்றால் அவமானப்பட நேரிடும். நோய்க்காகச் சாப்பிடும் மருந்தினால் அந்த நோய் மூன்று நாட்களில் சரியாக வேண்டும். இல்லையெனில் அந்த மருந்தால் பயனில்லை.

**3. பத்தியைப் படித்து, வார இதழ் ஒன்றிற்கு அனுப்பும் வகையில் சமையல் குறிப்பாக மாற்றுக.**

**கம்மங்கூழ்**

பொசுக்குகிறது வெயில். ஒரு துளி மழை பட்டால் வறுத்த உளுந்தின் வாசம் பரப்பும் வறண்ட மண். வெடித்த நிலம். செழித்து விளைகிறது கம்மம் பயிர். உரலில் குத்தி, சுளகில் புடைக்க அதன் உமி நீங்கும். நீர் தெளித்துத் தெளித்து, மீண்டும் உரலில் இடிக்க, அது ஒன்றுடன் ஒன்று ஒட்டி மாவாகும். உப்புகலந்து, உலையில் ஏற்றி, கொதிக்கும் நீரில் கரையவிட்டுக் கிண்ட, கட்டியாகி அது சோறாகும். கம்மஞ் சோற்றை உருட்டி வைத்து, பின் மோர் விட்டுக் கரைத்தால், அது கம்மங்கஞ்சி அல்லது கம்மங்கூழ். மோர்மிளகாய் வற்றல், உப்பில் தோய்த்த பச்சை மிளகாய் அல்லது சின்ன வெங்காயம் கடித்துக் கஞ்சியைக் குடித்தால், உச்சி தொட்டு உள்ளங்கால்வரை தேகம் குளிர்ந்து போகும்; அனல் அடங்கும்; உயிர் வரும். கம்பு – கறுப்பு நிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம்.

கம்பு என்பது புன்செய் தானிய வகை. இதில் நல்ல ஊட்டச்சத்து அமைந்துள்ளது. இதை நீரில் கரைத்துப் புளிக்க வைத்தால் கூழாகும். கம்பிலிருந்து சோறும் செய்யலாம். கம்பு மாவு நல்ல ஊட்டச்சத்தாக உதவும். உடல் வலிமை குறைந்தவர்கள் இதை அடையாகவும் இட்டலியாகவும், தோசையாகவும் செய்து உண்ணலாம். இதனை ஏழை மக்களின் உணவு என எண்ணக்கூடாது. இதை உண்பவர்கள் கடினமாக உழைக்கும் ஆற்றல் பெறுவர். வாரத்தில் இரண்டு மூன்று நாளாவது கம்பில் தயாரித்த உணவை உண்பது எல்லாருக்கும் நலம் பயக்கும்.

**4. பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயலையும் விருந்தினருக்கு உணவிடுதல் என்ற பண்பாட்டுச் செயலையும் ஒப்பிட்டுப் பேசுக.**

பசித்தவருக்கு உணவிடுதல் என்பது, மனிதன் தனக்குள் உருவாக்கிக் கொண்ட செயல்முறைகளில் ஒன்றாகும். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடினார் வள்ளலார். மக்களின் மிகுந்த துயரங்களில் ஒன்றான பசியைப் போக்குவது அறச்செயல்களில் சிறந்ததாகும். பசித்தவர்களுக்கு வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும். இல்லம் நாடி வந்தவர்க்கு இல்லை என்னாமல் கொடுப்பதே விருந்தாகும். இருப்பதைப் பகிர்ந்து உபசரித்தல், விருந்து என்னும் பண்பாடாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5. உங்கள் கற்பனையை இணைத்து நிகழ்வைக் கதையாக்குக.**

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே சின்னஞ்சிறு சச்சரவுகள் ஏற்பட்டு, இரண்டு பேருமே முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு, ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்திருக்கும்போது, விருந்தினர் வருகை, அவர்களை அன்பான கணவன் மனைவியராக மாற்றிவிடும். அம்மாவின் கெடுபிடியும் அப்பாவின் கீழ்ப்படிதலும் ஆச்சரியமாக இருக்கும். விருந்தாளிகள் அடிக்கடி வரமாட்டார்களா என்று இருக்கும்.

**விருந்தினர்தினம் என்பது எப்படி விடியும் தெரியுமா?**

காலையிலிருந்தே வீட்டுக்குள்ளிருந்து வாசலுக்கு வந்து வந்து எட்டிப் பார்த்துச் செல்வாள் அம்மா. திண்ணையில் செய்தித்தாள் படித்துக் கொண்டிருக்கும் அப்பா கேட்பார். "என்ன விஷயம், இன்னிக்கு யாராவது விருந்தாளி வரப்போறாங்களா என்ன?" "ஏங்க... காலையிலிருந்தே வேப்ப மரத்துல காக்கா விடாம கத்திக்கிட்டே இருக்கே பார்க்கலியோ? நிச்சயம் யாரோ விருந்தாளி வரப்போறாங்க பாருங்க." "அடடே, ஆமாம்; காக்கா கத்துது. யாரு வரப்போறா? இது பலாப்பழ சீசன் ஆச்சே..... உன் தம்பிதான் வருவான், பலாப்பழத்தைத் தூக்கிக்கிட்டு" – நாங்கள் ஓடிப்போய் தெருவில் பார்ப்போம். அப்பா சொன்னதும் சரி, காக்கா கத்தியதும் சரி. தூரத்தில் தெரு முனையில் அறந்தாங்கி மாமா, தலையில் பலாப்பழத்துடன் வந்து கொண்டிருப்பார். அம்மாவுக்குக் காக்கை மொழி தெரியும்!

– தஞ்சாவூர்க் கவிராயர்

## மொழியை ஆள்வோம்

**மொழி பெயர்க்க.** (PTA - 5)

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே! என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பு படித்து வருகிறேன். நான் நமது தமிழ்ப் பண்பாடு குறித்து, சில வார்த்தைகள் சொல்ல வந்துள்ளேன். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழர்கள் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்தவர்கள் என்று, சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. மொழிக்கு இலக்கணத்தை வரையறுத்த தமிழர்கள், வாழ்க்கையின் இலக்கணத்தையும் வரையறுத்திருக்கின்றனர். தமிழ்ப் பண்பாடு, இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து என, உலகளாவிய நிலையில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறையில் வேரூன்றி உள்ளது. நமது பண்பாடு, மிகவும் பழமையானது. எனினும், ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. நமது பண்பாடு குறித்துப் பெருமைப்படுவோமாக. அனைவருக்கும் நன்றி!

**பழமொழிகளை நிறைவு செய்க.**

1. உப்பில்லாப் பண்டம் ______. (PTA -5, Sep.-22)

   **விடை : உப்பில்லாப் பண்டம் குப்பையிலே**

2. ஒருபானை ______. (PTA -5, Sep.-22, Mar.-23)

   **விடை : ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம்**

3. உப்பிட்டவரை ______.

   **விடை : உப்பிட்டவரை உள்ளளவும் நினை**

4. விருந்தும் ______.

   **விடை: விருந்தும் மருந்தும் மூன்று நாள்களுக்கு மட்டுமே**

5. அளவுக்கு ______. (Sep.-21, Mar.-23)

   **விடை : அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பத்தியைப் படித்துக் கருத்தைச் சுருக்கி எழுதுக.**

**பழையசோறு**

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுவதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாக்குமுன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து, நீராகாரம்போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்ந்து கொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்டவைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம்! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு – அது கிராமத்து உன்னதம்.

“மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து” .....முக்கூடற்பள்ளு

கண்ணன், பிரசாந்தி சேகரம் – அடிசில் 2017

**பழையசோறு**

பச்சை நெல்லைச் சுமந்துசென்று, நீராவியில் அவித்து, காயவைத்துக் குத்திய புழுங்கல் அரிசியைத் தின்றவள் சொல்கிறேன். பகல், இரவு உணவு உண்டபின் மீதமுள்ள சோற்றுடன் நீர் சேர்த்து வைப்பர். அது பழைய சோறாகும். காலையில் சின்ன வெங்காயம், பச்சை மிளகாயுடன் பழைய சோற்றை நீராகாரம்போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் சோற்றைப் பிழிந்து போட்டு, வடுமாங்காய், உப்பு நாரத்தங்காயுடன் உண்பதும், சுண்ட வைத்த முதல்நாள் குழம்புடன் உண்பதும் மற்றொரு வகையாகும். இது கிராமத்து வழக்கமாகும்.

**கதையாக்குக.**

**மனித வாழ்வில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம்; புதுப்புதுச் செய்திகள் கிட்டும்! கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக... இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.**

அது ஒரு நெசவாளர் குடும்பம். அக்குடும்பத்தில் மகன்கள் மூவர் இருந்தனர். மூத்த இருவரும் வீட்டிலேயே தறி நெய்து, வாழ்வை நடத்திக் கழித்தனர். கூரைவீடு ஒன்றைத் தவிர, வேறு சொத்து எதுவும் இல்லை. இரண்டு தறியில் வரும் வருமானம், குடும்பம் நடத்தப் போதுமானதாக இல்லை. எனவே, மூன்றாவது மகனையாவது படிக்க வைத்து, ஆசிரியராக்கிவிட வேண்டும் என்று, அந்த நெசவாளர் எண்ணினார்.

நெசவாளர், பக்கத்து ஊரில் நடைபெற்ற திருவிழாவிற்குச் சென்றார். அங்குச் சொற்பொழிவு நிகழ்த்தியவர், ஏழை எளிய மாணவர்களுக்குப் படிக்க உதவி செய்வதாகக் கூறினார். சொற்பொழிவு முடிந்தவுடன் ஓய்வு அறைக்குச் சென்று, அவரைச் சந்தித்துத் தம் குடும்பச் சூழ்நிலையைக் கூறினார். சொற்பொழிவாளரும் வள்ளல் புண்ணியகோடியிடம் சொல்லி, நெசவாளியின் மகனுக்கு உதவச் செய்தார். நெசவாளியின் மூன்றாவது மகனும் படித்துப் பட்டதாரி ஆகி, உள்ளூர்ப் பள்ளியிலேயே ஆசிரியராகப் பணியாற்றினார்.

**கடிதம் எழுதுக. : உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு, தரமற்றதாகவும், விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

**(PTA - 1, Sep. - 21,22)**

அனுப்புநர்

க. புகழேந்தி,
19, தெற்கு மாடவீதி,
சிதம்பரம்,
கடலூர் மாவட்டம்.

பெறுநர்

ஆணையர்,
உணவுப் பாதுகாப்புக் கழகம்,
அண்ணாசாலை,
சென்னை – 600002.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஐயா,

**பொருள்:** தரமற்ற உணவு வழங்கும் விடுதி தொடர்பாக.

வணக்கம். சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், செங்கல்பட்டுச் சாலையில் உள்ள உணவு விடுதிக்கு நேற்று சென்றிருந்தேன். அந்த உணவகம், புதிய சரவண பவன், உயர்தர உணவகம் என்று, விளம்பரப் பலகையுடன் இருந்தது. அங்கு நான் சாப்பிட்ட இட்லி, மிகவும் புளிப்பாக இருந்தது. அதற்குக் கொடுக்கப்பட்ட சட்டினியும் சாம்பாரும் முந்தையநாள் தயாரிக்கப்பட்டு மீதம் இருந்தவையாகும். அவற்றிலும் சுவையேதும் இல்லை. பின்னர்த் தேநீர் அருந்தினேன். எனக்குக் கொடுக்கப்பட்ட, கட்டண இரசீதில், இரண்டு இட்லிக்கு ரூ. 44.00உம், தேநீர் ஒன்றிற்கு ரூ. 17உம் என இருந்தன. ஜி. எஸ். டி. ரூ. 11ம் சேர்த்து ரூ. 72 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தரமற்ற உணவு வழங்கியதோடல்லாமல், விலையும் மிகவும் கூடுதலாக உள்ளது. தாங்கள் ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுத்து, மக்களின் நலம் காக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு
உங்கள் உண்மையுள்ள,
க. புகழேந்தி.

இணைப்பு :
4.3.2022
தேதியிடப்பட்ட கட்டண இரசீது

**நயம் பாராட்டுக.**

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்".

**– காளமேகப் புலவர்**

**ஆசிரியர் குறிப்பு** : திருவானைக்கா கோவிலில் வாழ்ந்த காளமேகப்புலவர், சைவ சமயம் சார்ந்த பாடல்களையும் சில பழக்கவழக்கங்களைப் பழித்துக் கேலிக்கு உள்ளாக்கிப் பழித்துப்பாடும் 'அங்கதம்' என்னும் நகைச்சுவைப் பாடல்களையும், சிலேடைப் பாடல்களையும் ஆசுகவிகளையும் பாடுவதிலும் வல்லவர்.

**திரண்ட கருத்து** : "நாகப்பட்டினத்தில் உள்ள காத்தான் சத்திரத்தில், வந்தவர்க்கு எல்லாம் சோறு போடுவார்கள். எப்படி? பொழுது சாயும் நேரத்தில் சத்திரத்திற்கு சமைக்க அரிசி வரும். அதனைக் குத்தித் தீட்டி உலையில் போடும்போது, ஊரே அடங்கிப் போகும். ஓர் அகப்பை உணவை இலையில் போடும்போது, விடிவெள்ளி முளைத்துவிடும்" என்பது பாடலின் திரண்ட செய்தி.

**மையக்கருத்து** : காளமேகப் புலவர் தம் பாடலில் 'நாகப்பட்டினத்திலுள்ள காத்தான் சத்திரத்தில் இலைபோட்டு உணவு பரிமாறும்முறை இருந்ததையும், உணவிடப்பட்ட முறையையும்' மையக்கருத்தாக வைத்துள்ளார்.

**மோனை** : அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து ஒன்றிவருவது மோனை.

**க**த்துகடல், **கா**த்தான்தன்
**அ**த்தமிக்கும், **அ**ரிசிவரும்
**உ**லையிலிட, **ஊ**ரடங்கும்
} சீர்மோனை

**எதுகை** : செய்யுள் அடிகளின் முதல் சீர்களின் முதலெழுத்து அளவு ஒத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது அடிஎதுகைத் தொடையாகும்.

கத்துகடல், அத்தமிக்கும்
உ**லை**யிலிட, இ**லை**யிலிட
} அடிஎதுகை

க**த்**துகடல், கா**த்**தான்தன்
அ**த்**தமிக்கும், கு**த்**தி
} சீர்எதுகை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அணிநயம்** : இப்பாடலில் நகைச்சுவையாகச் சமுதாயக் குறையைச் சுட்டிக்காட்டுவதனால் **அங்கதம்** பயின்று வந்துள்ளது.

**பாவகை** : இருவிகற்பம், **நேரிசை வெண்பா**வாக அமைந்து அங்கதச் சுவையைப் புலப்படுத்தும் செப்பலோசைச் செய்யுளாகும்.

**சுவை** : காத்தான் சத்திரத்தில் உணவு சமைத்தல், உணவு பரிமாறுதல் என்னும் செயல்களை **'எள்ளல் சுவை'** (அங்கதச் சுவை) தோன்றக் காளமேகப் புலவர் கூறுகிறார்.

## மொழியோடு விளையாடு

**விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.**

| | | | |
|---|---|---|---|
| ம ___ | (அறிவின் மறுபெயர்) | – | ம**தி** |
| கு ___ தி | (சிவப்பு நிறத்தில் இருக்கும்) | – | கு**ரு**தி |
| அ ___ கா | (தங்கைக்கு மூத்தவள்) | – | அ**க்**கா |
| பட ___ | (நீரில் செல்வது) | – | பட**கு** |
| இ ___ கு | (பறவையிடம் இருப்பது) | – | இ**ற**கு |
| வா ___ | (மன்னரிடம் இருப்பது) | – | வா**ள்** |

**ஒளிந்துள்ள நூலின் பெயர்** – திருக்குறள்.

**இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

சிலை – சீலை, தொடு – தோடு, மடு – மாடு, மலை – மாலை, வளி – வாளி, விடு – வீடு.

**எ–கா : சிலை**யைச் **சீலை**யால் மறைத்திருக்கிறார்கள். **(PTA - 1)**

**தொடு**சிகிச்சை செய்யக் காதிலிருந்த **தோடு** நீக்கப்பட்டது.

வயல்ஓரத்தில் இருந்த **மடு**வில் **மாடு** விழுந்தது.

**மலை** ஏற, **மாலை** நேரம் சிறந்தது. **(PTA - 1)**

**வளி** மண்டலத்தில், **வாளி**போல மேகம் திரண்டு தோன்றியது.

தீய பழக்கங்களை விட்டு **விடு; வீடு**பேறு அடைவாய்.

**அகராதியில் கண்டு பொருள் எழுதுக.**

அ) ஊண் – உணவு
ஊன் – இறைச்சி, உடம்பு

ஆ) திணை – ஒழுக்கம், பிரிவு
தினை – ஒருவகைச் சிறுதானியம்

இ) அண்ணம் – மேல்வாயின் உட்புறம்
அன்னம் – சோறு, பறவை

ஈ) வெல்லம் – இனிப்புப் பொருள்
வெள்ளம் – நீர்ப்பெருக்கு

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(Sep. - 22)**



கனிவான பார்வை
கைநிறைய சோறு
சரியான நோக்கம்
தெளிவான முடிவு
நெறியான வாழ்க்கை
அழியாத மகிழ்ச்சி
அதுவேநல் வாழ்க்கை!

## செயல்திட்டம்

**உணவு, விருந்து சார்ந்த பழமொழிகளையும் விழிப்புணர்வுத் தொடர்களையும் திரட்டி, அகரவரிசைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**எ – கா :** நொறுங்கத் தின்றால், நூறு வயது.

அன்னம் அடங்கினால் ஐந்தும் அடங்கும்.

ஆறிய உணவு, மூட்டுவலி உண்டாக்கும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.
ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்.
ஏழைக்கேற்ற எள்ளுருண்டை.
கூழானாலும் குளித்துக் குடி.
சுக்குக்கு மிஞ்சிய மருந்து இல்லை.
மக்களைக் காக்கும் மணத்தக்காளி.
சுட்ட எண்ணெயைத் தொடாதே.
பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்.
பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து.
பலா உத்தமம், மா மத்திமம், பாதிரி அதமம்.
விருந்தும் மருந்தும் மூன்று நாள்கள்.
வறுத்த பருப்பை விடாதே.
வெந்தயம் போடாத கறியும் கறியன்று.

**கலைச்சொல் அறிவோம்.**

| | |
|---|---|
| செவ்விலக்கியம் | – classical literature |
| வட்டார இலக்கியம் | – Regional literature |
| காப்பிய இலக்கியம் | – Epic literature |
| நாட்டுப்புற இலக்கியம் | – Folk literature |
| பக்தி இலக்கியம் | – Devotional literature |
| நவீன இலக்கியம் | – Modern literature |
| பண்டைய இலக்கியம் | – Ancient literature |

## நிற்க அதற்குத் தக

| | |
|---|---|
| "தம்பி உனக்குப் பிடிச்ச காய் சொல்லு?" | – "கேரட்" |
| "பிடிச்ச பழம்?" | – "ஆப்பிள்" |
| "பிடிச்ச காலை உணவு?" | – "நூடுல்ஸ்" |
| "மத்தியானத்துக்கு" | – "ஃப்ரைடு ரைஸ்" |
| "ராத்திரி...?" | – "பீட்ஸா அல்லது பாஸ்தா" |

இவை, எதோ ஆங்கிலப் படத்தின் வசனம் அல்ல. "சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று, என்னிடம் அழைத்துவரப்பட்ட ஒரு சிறுவனுடனான உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும், பாரம்பரிய உணவை விட்டுவிட்டு, வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும், சாம்பார் சாதமும் கத்தரிக்காய்ப் பொரியலும் இனிக் காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில், 'ஆம்; காணாமல் போய்விடும்!' என்பதுதான். உங்கள் குழந்தைகள், "ஆடு மாடுகளைத் தவிர, மனுஷங்ககூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்!"

**மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?**

நோய்கள் வராமல் இருக்க, இயற்கையாக அமைந்த நமது பாரம்பரிய உணவுகளை உண்ணுங்கள். சிறுவயதில் நோய்படக் காரணம், பீட்ஸா போன்ற உணவுகளே! நமது பாரம்பரிய உணவான கடலை மிட்டாய், கம்பு, கேழ்வரகு, பழங்கள், கொட்டையுள்ள திராட்சை, மா, பலா, வாழை, கொய்யா, இட்லி போன்றவற்றைச் சாப்பிடலாம். கம்பு, கேழ்வரகை முளைகட்டி, உணவாகத் தயாரிக்கலாம். வீட்டுத் தோட்டத்தில் விளையும் கீரைகள், காய்கறிகள், தக்காளி, மிளகாய் போன்றவை, நமது உணவாக இருக்கவேண்டும். காலை, இரவு ஆகிய இருவேளைச் சிற்றுண்டியும், மதியம் ஒருவேளை மட்டும் முழுமையான உணவும் போதுமானது. இரவு அல்லது காலையில் சமைத்த உணவும், இயற்கையில் விளைந்த சமைக்காத உணவும் மிகவும் நல்லது. எதற்காகவும் காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. சிறுதானியப் பயறுவகைகள், பழங்கள், அளவாகச் சாப்பிட வேண்டும். இயற்கை உணவே இனிய வாழ்வு!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# வாழ்வியல்

# திருக்குறள்

## குறுவினாக்கள்

1. 'நச்சப் படாதவன்' செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட (அடிக்கோடிட்ட) சொல்லுக்குப் பொருள் தருக.

★ நச்சப் படாதவன் – பிறருக்கு உதவாதவன் (பிறருக்கு உதவாதவனை எவரும் விரும்பார். எனவே, 'நச்சப் படாதவன்' என்றார். நச்சு – விருப்பு)

2. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். – இத்திருக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக. (PTA - 5)

★ கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் – இன்னிசை அளபெடைகள்

3. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும். | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | உயிரினும் ஓம்பப் படும். |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர். | நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று. |

| | | |
|---|---|---|
| **விடை :** | உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும். | உயிரினும் ஓம்பப் படும். |
| | ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது. | நடுவூருள் நச்சுமரம் பழுத்தற்று. |
| | ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர். | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை. |

4. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது? (PTA - 1, Sep.-22)

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

விடை : அ) கூவிளம் தேமா மலர்

## சிறுவினாக்கள்

1. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும் (Mar.-23)
கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

இக்குறளில், **உவமையணி** பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம்** : ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது, உவமை அணி ஆகும். உவமை அணியில் உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமையும். இடையில் உவமஉருபும் இடம்பெறும்.
வேலொடு நின்றான் இடு என்றது – உவமானம் (உவமை);
கோலொடு நின்றான் இரவு – உவமேயம் (பொருள்);
போலும் – உவமஉருபு.

**விளக்கம்** : வேலைக் கையில் ஏந்தி நின்று வழிப்பறி செய்யும் கள்வனைப்போல், ஆட்சியாம் கொடுங்கோலைக் கையில் ஏந்தி வரிவிதித்துக் குடிமக்களிடம் 'பொருளைத் தா' என, அச்சுறுத்தி வசூலிக்கும் செயல் நலம் செய்யாது.

2. கவிதையைத் தொடர்க.



**தண்ணீர் நிறைந்த குளம்**
**தவித்தபடி வெளிநீட்டும் கை**
**கரையில் கைப்பேசி படமெடுத்தபடி**
உதவாக் கரைகள் நிற்பதுபோல்
நாமும் இருக்க வேண்டாம்
ஆய்ந்து ஆபத்தில் கைகொடுப்போம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

1. படங்கள் உணர்த்தும் குறளின் கருத்தினை மையமிட்டு வகுப்பில் கலந்துரையாடுக.



முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.



பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் ; கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்.

### படம் – 1

**முகிலன்** : நண்பா, நீ முதல்படத்தில் என்ன காண்கிறாய்?

**வேலன்** : முதல்படத்தில் இரண்டு படங்கள் உள்ளனவே! இவற்றில், நீ எதைக் கேட்கிறாய்?

**முகிலன்** : இரண்டைப் பற்றியுமே சொல்லேன்!

**வேலன்** : ஒன்றில் காளைகள் பூட்டிய வண்டியை ஒருவன் ஓட்டிச் செல்கிறான். அதில் மூட்டைகள் அடுக்கப் பட்டு உள்ளன.

**முகிலன்** : அந்த மூட்டைகள் எப்படி வந்திருக்கும்?

**வேலன்** : அவன் கடினமாக வயல் காட்டில் உழைத்தி ருக்கலாம். அதனால் வந்திருக்கலாம்.

**முகிலன்** : ஏன், அவன் ஒரு வணிகனாக, வெளியூரில் இருந்து வாங்கி வந்திருக்கலாம் அல்லவா?

**வேலன்** : இருக்கலாம். எப்படி இருந்தாலும் அவன் கடினமான உழைப்பாளியாக இருக்கவேண்டும் என்பதே என் முடிவு.

**முகிலன்** : இன்னொரு படத்தில் என்ன காண்கிறாய்?

**வேலன்** : கட்டிலில் ஒருவன் படுத்திருக்கிறான். அவன் மனைவி ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கிறாள். பூனை ஏதோ கிண்ணத்தைப் பார்த்துக் கொண்டி ருக்கிறது.

**முகிலன்** : இதனால் என்ன உணர முடிகிறது?

**வேலன்** : என்ன! இவன் சோம்பேறிபோல் தெரிகிறான். அவன் மனைவியும் அப்படியே.

**முகிலன்** : இந்த இரு படங்களையும் பார்க்கும்போது, எனக்கு ஒருகுறள் நினைவுக்கு வருகிறது.

**வேலன்** : என்ன குறள் அது?

**முகிலன்** : “முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்” என்பது தான்!

**வேலன்** : உண்மைதானே, சரியாகத்தான் சொல்லி இருக்கிறாய்! பாராட்டுகள்!

### படம் – 2

**மாலதி** : என் அருமைத் தோழியே, நான் ஒருபடம் கொண்டு வந்துள்ளேன் பார்!

**செல்வி** : ஒன்றில் இரண்டு காட்சி. நீ என்ன சொல்ல வருகிறாய்?

**மாலதி** : அதை நீயே முடிவு செய்.

**செல்வி** : முதல் பகுதியில் ஓர் ஆண் உட்கார்ந்து, எதையோ தின்று கொண்டிருக்கிறான். எதிரில் இரண்டு சிறுவர்கள் கை ஏந்தி நிற்கிறார்கள்.

**மாலதி** : இதில் உனக்கு எதுவும் புரியவில்லையா?

**செல்வி** : பெரிய ஆளாக இருந்தும்கூடச் சிறுவர்களுக்குக் கொடுத்து உண்ணவேண்டும் என்கிற எண்ணம் இல்லாத பலர் உலகில் உள்ளனர் என்பது புரிகிறது. வேறு எதுவும் தெரியவில்லையா?

**மாலதி** : அந்த ஆள் இரக்கம் இல்லாதவன், கருணை இல்லாதவன், கண் இருந்தும் காண விரும்பாதவன் என்பன புரியவில்லையா?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**செல்வி** : சரி சரி; இரண்டாம் படம் என்ன சொல்கிறது?

**மாலதி** : என்ன சொல்கிறது. நீயே கண்டுபிடி அல்லது காண்பதைக் கூறு.

**செல்வி** : மேடையில் ஒருபெண் கச்சேரி செய்கிறாள். எதிரில் இரண்டு பேர் மட்டுமே உள்ளனர்.

**மாலதி** : வேறு எதுவும் தெரியவில்லையா?

**செல்வி** : இன்னும் சிலர் வெளியில் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாலதி** : ஏன் இப்படி நடக்கிறது?

**செல்வி** : தெரியவில்லையே!

**மாலதி** : என்ன தெரியவில்லை. ஒருபெண் பாடுகிறாள். கேட்க வந்த கூட்டம், அதைக் கேட்காமல் தனியே வெளியில் சென்று பேசிக் கொண்டிருக்கிறதே! ஏன்?

**செல்வி** : எனக்குத் தெரியவில்லை! நீயே சொல்!

**மாலதி** : அவள் பாடுவது தெளிவான ராகத்தோடு பொருந்த வில்லைபோல் உள்ளது. அதனால் கேட்க விரும்பாமல் கூட்டம் போட்டுப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

**செல்வி** : இதனால் என்ன சொல்ல வருகிறாய்?

**மாலதி** : வள்ளுவர் குறள் ஒன்றைத்தான்.

**செல்வி** : எந்தக் குறள்?

**மாலதி** : பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

**செல்வி** : உண்மைதான்! இப்போது தெளிவாகப் புரிகிறது.

**2. கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.**

“சின்ன சாமி.....யாரோ மரத்தோரமா நிற்கிறாங்க.....யாராய் இருக்கும்.....” மாட்டு வண்டிய ஓட்டிக்கிட்டே அப்பா கேட்டார்.

“தெரியலப்பா....”

“இறங்கி யாருன்னு பாரு....”

வாட்ட சாட்டமாய், கண்ணாடியும் அலைபேசியும் கையுமாய் சாலையோரத்தில் வண்டியுடன் ஒருவர் நின்றிருந்தார்.

“ஐயா.. நீங்க...”

“வெளியூரப்பா.... வண்டி நின்னு போச்சு....!”

“அப்படியா... வண்டியத் தூக்கி மாட்டு வண்டியில வச்சுட்டு வாங்க. மழை வர்ற மாதிரியிருக்கு... ஊரு ரொம்ப தூரம்...வேற வண்டியும் வராது....”

அவர் உடையையும், உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து வரலைன்னுட்டார். மூன்று நான்கு பேர்தான் வண்டியில இருந்தோம்... சிறிது தூரம் போறதுக்குள்ள மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டிருச்சு.. நாங்க வீட்டுக்குப் போயிட்டோம்.

இரவுல தூங்கப் போறப்ப.... அப்பா சொன்னார். “தம்பி.... அந்தச் சூட்டுக்காரர், மழை தாங்காம நடந்திருக்காரு. தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சு.... வேற யாரோ தூக்கிட்டு வந்திருக்காங்க. நம்ம ஊரு ஆசுபத்திரியில... கட்டுப் போட்டுக்கிட்டு இருந்தாங்க... பாவம் படிச்சவரா இருக்காரு.... சூழ்நிலை புரியாம... வரமாட்டேன்னு சொன்னாரு, இப்ப வேதனைப்படறாரே.....”

அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

ஆ) பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

இ) ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்.

**விடை : அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.**

சூட்டுக்காரர் நாகரிக உடை அணிந்திருந்தார். படித்தவர். இருந்தும் என்ன பயன்? பட்டறிவு கொண்டு வாழ்வு நடத்தும் உழைப்பாளியின் அறிவுரையைக் கேட்காததால், துன்பத்துக்கு உள்ளானார். உலகநடைமுறை அறியாது துன்புற்றார். எனவே, இக்குறளுக்கு அவர் செயல் மிகவும் பொருத்தமாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 6

# கலை, அழகியல், புதுமைகள்

## நிலா முற்றம்

| | | |
|---|---|---|
| உரைநடை | பன்முகக் கலைஞர் | |
| கவிதைப்பேழை | பூத்தொடுத்தல் | உமா மகேஸ்வரி |
| | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| | கம்பராமாயணம் | கம்பர் |
| துணைப்பாடம் | பாய்ச்சல் | சா. கந்தசாமி |
| இனிக்கும் இலக்கணம் | அகப்பொருள் இலக்கணம் | |
| வாழ்வியல் | திருக்குறள் | |

### பாடநூல் வினா – விடை

### திறன் அறிவோம்

### பலவுள் தெரிக

1. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ______. (PTA - 3)

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம் நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

விடை : இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

2. கூற்று 1 : போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.

கூற்று 2 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு

இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

விடை : ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

3. மலர்கள் தரையில் நழுவும் – எப்போது? (PTA - 1)

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

விடை : ஆ) தளரப் பிணைத்தால்

4. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது – இத்தொடருக்கான வினா எது?

அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?

ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?

ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

விடை : ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன? (PTA - 4, Sep.-21,22, Mar.-23)

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

விடை : ஈ) அங்கு வறுமை இல்லாததால்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. **காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.** (PTA - 2)

**முதற்பொருள் :**

நிலம் – காடும் காடுசார்ந்த இடமும் – முல்லை

பெரும்பொழுது – மழைக்காலம், கார்காலம்

சிறுபொழுது – மாலைப்பொழுது

**கருப்பொருள்:** உணவு–வரகு.(வரகில் சமைத்த உணவு)

2. **“கலைஞர், பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்” – பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.**

★ கலைஞரைப் பேராசிரியர் அன்பழகனார், பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர் என்றும் படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர் என்றும் பாராட்டியுள்ளார்.

3. **உறங்குகின்ற கும்பகன்ன ‘எழுந்திராய் எழுந்திராய்’**
**கால தூதர் கையிலே ‘உறங்குவாய் உறங்குவாய்’**
**– கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?** (PTA -6, Sep. -20)

★ உறங்குகின்ற கும்பகன்னனே! பொய்யான மாய வாழ்க்கை எல்லாம் வீழ்ச்சி அடையத் தொடங்குகிற இன்றே, அதனைக் காண எழுந்திருப்பாயாக” என்று எழுப்புகின்றனர்.

★ “காற்றாடிபோல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்து எமதூதர்களின் கையில் கிடந்து இனி நிரந்தரமாக உறங்குவாயாக” எனச் சொல்கிறார்கள்.

4. **சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்**
**சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.** (PTA - 3)

★ ஒல்லியான தண்டில், மிக மென்மையான மலர் இருப்பது இயற்கையின் விந்தை.

★ அதாவது, தாங்குகிற தண்டைவிட மலர் பெரியது. அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவைபோல் தோன்றினாலும் உலக இயற்கை அது. மென்மையான அன்புதான் இந்த அகிலத்தைக் காக்கிறது.

★ இவ்வரிகளில் வாழ்வின் அழகியலை கவிஞர் விவரிக்கிறார்.

5. **கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

உழவர்கள், மலையில் உழுதனர்.

★ உழவர்கள், மருதத்தில் உழுதனர்.

முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே, பரதவர் கடலுக்குச் சென்றனர்.

★ தாழை மடலைப் பார்த்தவாறே, பரதவர் கடலுக்குச் சென்றனர்.

## சிறுவினாக்கள்

1. **வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.** (PTA - 2)

★ வைத்தியநாதபுரி முருகன், குழந்தையாகச் செங்கீரை ஆடியபோது, அவன் திருவடிகளில் அணிந்த செம்பொன்னாலாகிய சிறு கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின; இடையில் அணிந்த மணிகளால் ஆகிய அரைஞாணுடன், ஒளி வீசுகின்ற அரைவடங்களும் ஆடின.

★ பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறும் சரிந்து ஆடியது; பட்டம் கட்டிய நெற்றியில் விளங்கும் பொட்டுடன், வட்ட வடிவான சுட்டியும், காதின் குழையோடு குண்டலங்களும் அசைந்து ஆடின; உச்சிக் கொண்டையில் சுற்றிக் கட்டிய முத்துகள் ஆடின.

★ இறைவன் முத்துக்குமாரசாமி, குழந்தையாய்ச் செங்கீரை ஆடியபோது அவன் அணிந்த அணிகலன்கள் ஒலியெழுப்பும் வண்ணம் அசைந்து அசைந்து ஆடினான். அழகிய பவழம் போன்ற சிவந்த திருமேனி ஆடச் செங்கீரை ஆடி அருளினான் எனக் குமரகுருபரர் வருணித்துள்ளார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக. (PTA - 5)**

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்,<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்,<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்,<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்?<br>**– நவீன கவிதை.** | கையாலே பூவெடுத்தா – மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்.<br>**– நாட்டுப்புறப்பாடல்.** |

**நவீன கவிதை :**

★ மலர்களை இறுக்கி முடிந்தால், காம்புகளின் கழுத்து முறியும்; தளரப் பிணைத்தால், தரையில் நழுவும்.; மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரித்திடும்.

**நாட்டுப்புறப்பாடல் :**

★ மாரிக்கு மாலை கட்டப் பூக்களைக் கையால் பறித்தால், காம்பு அழுகிவிடும்; விரலாலே எடுத்தால், வெம்பி விழுந்துவிடும்; ஆகவே, தங்கத் துரட்டிகொண்டு தாங்கி மலரெடுத்தார்.

★ நவீன கவிதையில் பூத்தொடுக்கும் மனத்தின் நுண்ணிய மென்மை தெரிகிறது. நாட்டுப்புறப் பாடலில் மாரிக்குப் பக்தியோடு மலர் பறித்தாலும், கையாள வேண்டிய மென்மை புலப்படுகிறது.

**3. 'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதி களில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.' – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக. (PTA - 3)**

★ காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை மறுக்கமுடியாது. கடற்கரைகளில் ஓய்வு விடுதிகள் பெருகியுள்ளன. எனினும், மீன்பிடித்தல், உப்புக் காய்ச்சுதல் தொழில்களும் நடைபெறுகின்றன. மலைப்பகுதிகளில் ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ காப்பி, தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. எனினும், நம் முன்னோர் செய்த மலைநிலப்பயிர்களும் விளைவிக்கப் பெறுகின்றன. நிலப்பகுதிகளில் வணிகம், தொழில் தொடர்பான பண்டகசாலைகள் பெருகியுள்ளன. எனினும். உழவுத்தொழிலும் செய்யப்பெறுகிறது. காலம் எவ்வளவுதான் மாற்றத்தை ஏற்படுத்தினாலும், தமிழரின் திணைநிலைத் தொழில்களும் ஆங்காங்கே இன்றளவும் தொடர்ந்து செய்யப்பட்டே வருகின்றன.

**4. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.**

★ கல்வித் துறையைப் பள்ளிக்கல்வி, உயர்கல்வி என இரண்டாகப் பிரித்ததோடு, 'தமிழ் வளர்ச்சித்துறை' எனப் புதிதாக ஒரு துறையை உருவாக்கினார். மனோன்மணீயம் சுந்தரனாரின் "நீராருங் கடலுடுத்த" பாடலை அனைத்து அரசு விழாக்களிலும் தொடக்கப் பாடலாகப் பாட விதி வகுத்தார்.

★ 2010ஆம் ஆண்டு கோவையில் 'உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை' நடத்தித் தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்தார். தமிழ்மொழியின் பெருமிதங்களை விளக்கிச் "செம்மொழியான தமிழ்மொழியாம்" எனத் தொடங்கும் பாடலை இயற்றி, பலவேறு இசைவடிவங்களை ஒன்றிணைத்து, மூன்று தலைமுறையினரை அந்த இசைக்கோவையில் பங்கேற்கச் செய்து பெரும்பணி யாற்றினார்.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## நெடுவினாக்கள்

**1. நெகிழிப்பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப் படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.**

கலைகள், மக்களுக்கு இன்பமூட்டிப் பொழுதுபோக்கப் பயன்படுகின்றன. பள்ளி விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொம்மலாட்டம் என்பது, மிகச்சிறந்த விழிப்புணர்வை மாணவர்களிடையேயும் பெற்றோர்களிடையேயும் ஏற்படுத்தியுள்ளது. கலை என்பது, நல்லபல செய்திகளை எடுத்துக் கூறவும் பயன்படும் என்பது உண்மை.

இன்று நம் நாட்டில் மட்டுமன்றி, உலகு முழுவதிலும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருப்பது நெகிழிப் பொருள்கள். இதனைப் பொம்மலாட்டக் கலைமூலம் தெளிவுபட எடுத்துரைக்க முடியும் என்பதனைப் பள்ளி ஆண்டுவிழாக் கலைநிகழ்ச்சியில் காண முடிந்தது. நெகிழிப்பைகள் அரக்கர்களைவிடக் கொடியவை. அவை நமக்கு மிகவும் பயனுள்ளவை போன்ற தோற்றத்தைக் காட்டி, அனைத்தையும் அழிக்கும் வல்லமை கொண்டவையாக உள்ளதைப் பாடல்களின் மூலமும், உரையாடல்களின் மூலமும், பலகுரல் பேச்சின் மூலமும் உணர்த்தியமை, மக்களிடம் விழிப்புணர்வை நிச்சயம் ஏற்படுத்தும்.

பள்ளியில் நடத்தப்பட்ட பொம்மலாட்ட நிகழ்வு, நெகிழிக் குப்பைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட பெருந்தாக்குதல். இத்தகைய நிகழ்ச்சிகளை அனைத்துப் பள்ளிகளிலும், அனைத்து நாடுகளிலும் தொடர்ந்து நடத்தவேண்டும். அதன்மூலம் உலகு முழுவதற்குமான விழிப்புணர்வு ஏற்படும். கூட்டத்தின் மூலமாக ஒழிக்க முடியாததைக்கூட, இவைபோன்ற கலைநிகழ்ச்சிகளின்மூலம் ஒழித்துக்கட்ட முடியும்.

புயல், மழை, வறட்சி எனப் பல்வேறு இயற்கைச் சீற்றங்களின் பாதிப்பை எளிதில் சரிசெய்துவிட முடியும். ஆனால், நெகிழிப்பொருள்களால் ஏற்படும் பாதிப்பு, இந்த உலகில் உள்ள அனைத்து உயிரினங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கும் தன்மை கொண்டது. இதனைப் பொம்மலாட்டக் கலைஞர்கள் தெளிவுபட எடுத்துரைத்துள்ளனர்.

இந்தக் கலையை மட்டுமல்ல, கரகாட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம் போன்றவற்றின் மூலமாகவும் தெருப்பிரச்சாரம் செய்வதுபோல் நடத்தி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த அரசும், அரசு சார்ந்த துறைகளும் தக்க செயல்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

**2. போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் – நாடகக் கலைஞர் – திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.**

**முன்னுரை :**

அரசியல் வானில் ஒளிவீசி, பல்கலைத் துறைகளில் கால் பதித்துத் தமக்கு ஈடுஇணை எவரும் இல்லை என்னும் வகையில் நிகரற்றவராகத் திகழ்ந்தவர் ஒருவர் உண்டென்றால், அவர் கலைஞரே எனக் கூறலாம். அவர் கலைத்துறைக்கும் தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஆற்றிய பணி குறித்துக் காண்போம்.

**போராட்டக் கலைஞர் :**

திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது, துணைப்பாட நூலாகச் சென்னை மாகாணத்தின் நீதிக் கட்சி சார்பான முதலமைச்சராக இருந்த 'பனகல் அரசரின் சாதனைகளைக் கூறும் நூலைப் படித்தார். அந்நூல் அவருக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்தது. பதினான்கு வயதில், பள்ளி முடிந்த மாலை வேளைகளில், இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட மாணவர்களைத் திரட்டிக்கொண்டு திருவாரூர் வீதிகளில், தாம் எழுதிய "வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்" எனத் தொடங்கும் பாடலைப் பாடிக்கொண்டு ஊர்வலம் நடத்தினார். அவர் கடைப்பிடித்த போராட்டப் பண்பே அவருக்குள் இருந்த கலைத் தன்மையை வளர்த்தது.

**பேச்சுக் கலைஞர் :**

இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட கலைஞரை, பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றல் கவர்ந்தது. கிராமத்து இளைஞராக இருந்தும் மேடைப்பேச்சில் பெருவிருப்பம் கொண்டு 'நட்பு' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவைப் பலரும் பாராட்டினர். சக மாணவர்களுக்கும் பேச்சுப் பயிற்சி அளிப்பதற்காகச் 'சிறுவர் சீர்திருத்தச் சங்க'த்தையும், மாணவரிடையே ஒற்றுமையை வளர்த்தெடுக்க, 'தமிழ்நாடு மாணவர் மன்றம்' என்னும் அமைப்பையும் தொடங்கினார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**நாடகக் கலைஞர் :**

தமக்கே உரிய தனி நடையைப் பயன்படுத்தித் தமிழ் மக்களைக் கலைஞர் மேடை நாடகங்களின் பக்கம் ஈர்த்தார். 1944இல் ‘பழநியப்பன்’ என்னும் முதல் நாடகத்தை எழுதி அரங்கேற்றினார். தொடர்ந்து சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப்பூ, தூக்குமேடை முதலிய நாடகங்களை எழுதினார். எம். ஆர். இராதாவின் வேண்டுதலை ஏற்றுத் ‘தூக்குமேடை’ நாடகத்தில் மாணவர் தலைவராக நடித்தவருக்குப் பாராட்டு விழாவில், மக்கள் பின்னாளில் அன்போடு அழைத்த ‘கலைஞர்’ என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது.

**திரைக் கலைஞர் :**

திரை உலகில் வெற்றிக்கொடி நாட்டிய, ‘ராஜகுமாரி’ படத்தின் மூலம் இயக்குநர் ஏ. எஸ். ஏ. சாமி, எம். ஜி. ஆரை நடிகராகவும், மு. கருணாநிதியை வசன எழுத்தாளராகவும் அறிமுகப்படுத்தினார். திரை உலகில் இரு பெரு நட்சத்திரங்கள் உதித்தன. ‘சொல் புதிது! சுவை புதிது!’ என வியக்கும் வகையில் அமைந்த கலைஞரின் கதை வசனத்தில், எம். ஜி. ஆர். நடிப்பில் மருதநாட்டு இளவரசி, நாம், மந்திரிகுமாரி, மலைக்கள்ளன் எனப் பல படங்கள் வெளிவர, இருவர் கலை உறவு நீண்டகாலம் தொடர்ந்தது. எம். ஜி. ஆர். உச்ச நட்சத்திரமானார். கலைஞர் கதை வசன கர்த்தாவாக உச்சாணிக் கொம்புக்கு உயர்ந்தார். பாவலர் பாலசுந்தரத்தின் ‘பராசக்தி’ கதைக்குத் திரைக்கதை வசனம் எழுதிக் கலைஞர், தாம் ஏற்கெனவே ஏறிய புகழ்மலையின் சிகரம் தொட்டார். தம் முதல் படத்திலேயே புகழின் உச்சம் தொட்ட சிவாஜிகணேசன், கலைஞரின் கருத்தாழமும், கலைநயமுமிக்க வசனங்களுக்குத் தம் நடிப்பாலும் உச்சரிப்பாலும் உயிர் கொடுத்தார். தொடர்ந்து திரும்பிப் பார், மனோகரா, ராஜாராணி, ரங்கோன் ராதா எனப் பல படங்களில் இருவரும் இணைந்து வெற்றிப் படங்களைத் தந்தனர். மந்திரிகுமாரி தொடங்கிச் சில படங்களில் கலைஞர், பாடல்களும் எழுதினார். அடுக்கு மொழியாக மட்டுமன்றிக் கேட்போருக்கு மொழி இன்பத்தையும் முற்போக்குச் சிந்தனையையும் தூண்டும், இளைஞரை வசீகரிக்கும் வசனங்களையும் எழுதினார்.

**இயற்றமிழ்க் கலைஞர் :**

இருபத்திரண்டு வயதில், இந்திய தேசிய இராணுவ வீரர் மலேசிய மண்ணில் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டதை எதிர்த்து, ‘கயிற்றில் தொங்கிய கணபதி’ என்ற நூலை எழுதினார். தமிழ்மீது தீராக் காதல் கொண்ட கலைஞர் நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக் கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில்குஞ்சு முதலிய சிறுகதைகளையும், ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், ஒரே ரத்தம் உள்ளிட்ட புதினங்களையும், ஆறு பாகங்களாக ‘நெஞ்சுக்கு நீதி’ எனத் தம் வாழ்க்கை வரலாற்றையும், தொல்காப்பியப் பூங்கா, சங்கத்தமிழ், குறளோவியம் முதலிய பழந்தமிழ் இலக்கியம் சார்ந்த நூல்களையும் எழுதித் தம் இயற்றமிழாற்றலை வெளிப்படுத்தினார்.

**முடிவுரை :**

அரசியலில் மட்டுமன்றி, கலைத்துறையின் பல பிரிவுகளிலும் தம் ஆற்றலையும் அறிவுத் திறனையும் புலப்படுத்தும் வகையில் செயலாற்றியதோடு பேச்சுக்கலை, பட்டிமன்றம், கவியரங்கம் எனப் பிற துறைகளிலும் தம் ஈடுபாட்டைக் காட்டிக் கலைஞர், பல்துறை வித்தகராக விளங்கினார் எனலாம்.

கலைகளை வளர்ப்போம்! பழம்பெருமையைக் கட்டிக் காத்துப் பண்பாட்டில் நிலைத்திருப்போம்!

**3. ‘சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்’ என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.** (Sep. -20)

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி, தண்டலை மயில்கள் ஆட....

**இவ்வுரையைத் தொடர்க!**

தாமரை விளக்கம் தாங்க, கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண்விழித்து நோக்க, தெண்டிரை எழினி காட்ட, தேம்பிழி மகரயாழின் வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ!” என்பதாகும்.

மருதநிலம் கொலுவீற்றிருப்பதாகப் பாட வந்த கம்பர், அங்கே ஓர் ஆடரங்கைக் காட்டுகிறார். அதில் மயில்கள் தோகை விரித்து நாடகக் கணிகை போல் ஆடவும், தாமரை மலர்கள் நிமிர்ந்து விளக்கின் ஒளிதரவும், திரண்ட மேகம் மத்தள ஒலி எழுப்பவும், குவளை மலர்கள் மலர்ந்து கண்விழித்துப் பார்க்கவும், பரவிய நீர்த்திரைகள் எழில்மிகு திரைபோல் காட்சி அளிக்கவும், வண்டுகள் இனிது பாடவும், இசையும் கூத்தும் அரங்கத்தில் பொலிய, அங்கே மருதம் என்னும் மன்னன் தன் வீறு தோன்ற அமர்ந்த காட்சியே காட்சி எனக் காட்டுவது, கம்பனின் கவித்திறனுக்குச் சான்றாகும்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கம்பனின் கவிதைகளில் சந்தத்திற்குக் குறை ஏதும் இல்லை. கவிதை என்றால் இயற்கையைப் பாடாமலும் இருக்கமுடியாது. சரயுநதி பரவிப் பாய்வதைப் பாடும்போதும், ஓசை நயம் அமையச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

கோசல நாட்டின் வளத்தைப் பாடும்போது, 'இல்லை', 'இன்மையால்' என்னும் சொற்களைப் பலமுறை பயன்படுத்திச் சொல்லவந்த செய்தியை ஓசைநயத்தோடு பாடுகிறார். இராமனின் மேனி அழகை வருணிக்கும்போது, "மையோ? மரகதமோ? மறிகடலோ? மழைமுகிலோ?" எனப் பல வினாக்களை எழுப்பி, "ஐயோ!" என்னும் சொல்லைப் பயன்படுத்தி, அதன் வாயிலாக "இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்" என முடிக்கும்போதும் சந்த நயத்தைக் கையாளுகிறார்.

கங்கைக் கரை நோக்கி இராமனைக் காணப் பரதன் பெரும்படை பரிவாரங்களோடு வருகிறான். அதை மறுகரையிலிருந்து காண்கின்ற குகனின் வாய்மொழியாக வெளிப்படும், கம்பன் கவிதையில் சந்த நயம் சொட்டுவதைக் காணலாம். "ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ? வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ? 'தோழமை' என்றவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ? 'ஏழைமை வேடன் இறந்திலன்' என்றெனை ஏசாரோ!" என்னும் தொடர்களை உணர்ந்து படித்தால், சந்த இன்பத்தை, நயத்தை அனுபவிக்க முடிகிறதன்றோ?

இதுமட்டுமா, கும்பகருணனைத் துயில் எழுப்புகின்ற பாடலில் இல்லாத சந்த நயமா? எழுப்புகின்றவர்களின் வார்த்தைகளைப் படிக்கின்றபோதே, உலக்கையால் மாறிமாறி இடிக்கின்ற ஓசை கேட்கிறதன்றோ? கம்பன் சந்த நயத்திற்காகக் கையாளும் சொற்களே, நிகழ்ச்சியை நம்முன் காட்சிப்படுத்துகின்றன அல்லவா? இவற்றினும் சந்த நயத்திற்கு வேறு சான்றுகள் வேண்டுமா எனக் கேட்டு, என் உரையை முடிக்கிறேன்.

### இலக்கணக்குறிப்பு

குண்டல**மும்** குழைகா**தும்** – எண்ணும்மை

**ஆடுக** – வியங்கோள் வினைமுற்று

### பகுபத உறுப்பிலக்கணம்

1. **பதிந்து – பதி + த் (ந்) + த் + உ**

**பதி** – பகுதி

**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்

**த்** – இறந்தகால இடைநிலை

**உ** – வினையெச்ச விகுதி

### கற்பவை கற்றபின்

1. **பன்முகக்கலைஞரின் கலைப்பண்புகளுள் உங்களுக்குப் பிடித்த கலைப்பண்பு குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

எழிலன் : இன்று நாம், புகழுடம்பு எய்திய கலைஞரின் பன்முகத்தன்மை குறித்துப் பேசுவோமா? நான் அவர் மேடைப் பேச்சுகளைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். இடையிடையே அவர் பேசும் வேடிக்கையான துணுக்குச் செய்திகள் கூடக் கேட்போர் சிந்தனையைத் தூண்டும்.

முகிலன் : உண்மைதான்! நான் தொலைக்காட்சித் தொடரில் 'இராமானுசர்' என்னும் தொடரை விடாது பார்ப்பேன். அதில் அவரது தமிழும் பேசும் வசனமும் சுவையூட்டுவனவாகவும் சிந்தனையைத் தூண்டுவனவாகவும் இருக்கும்.

ஆனந்தன் : என் தந்தை, எனக்குக் கலைஞரின் சிறுகதைத் தொகுப்புகளை வாங்கிக் கொடுத்துப் படிக்கச் சொல்வார். அவருடைய எழுத்து, பேச்சு நடையில் சுவையூட்டுவதாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் இருக்கும்.

வேலவன் : நான் கலைஞர் எழுதிய திரைப்படங்கள் தொலைக்காட்சியில் ஒலிஒளி பரப்பினால், மற்ற வேலைகளை எல்லாம் விட்டுவிட்டுத் தொடர்ந்து பார்ப்பேன். அவை பொருள் நிறைந்த வசனங்களாக, சிந்திக்கத் தூண்டும் உரையாடல்களாக இருக்கும். ஒரு படம் பார்த்தால் ஒரு நீதியைக் கற்கலாம்.

வேந்தன் : நான், என் தந்தையோடு கலைஞர் தலைமை ஏற்று நடத்தும் கவியரங்கங்களுக்குச் சென்றிருக்கிறேன். அவர் உரை செவிக்குச் செல்வமாக அமையும்! கருத்துச் செறிவும் நகைச்சுவையும் உள்ளதாக இருக்கும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இனியன் : நான் வேறு ஒன்றைச் சொல்கிறேன்! சென்னை நுங்கம்பாக்கத்தில் அவர் அமைத்த வள்ளுவர் கோட்டத்திற்கு ஒருமுறை சென்றேன். அங்கே ஒரு அரங்கம் முழுவதும் சுவரில் குறள்களாகச் செதுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதன்பின்னால் அமைக்கப்பட்டிருந்த திருவாரூர்த் தேர் வடிவிலான கோட்டத்தில், கலை அழகைக் கண்களால் பருகினேன். அருமையான பணி!

வேந்தன் : நான் ஒருமுறை கன்னியாகுமரி சென்றேன். அங்கே கடற்கரையில் பல நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டு வியந்தேன். அவற்றில் நெடிது உயர்ந்து நின்ற வள்ளுவர் சிலை, கலைஞரால் அமைக்கப்பட்டது என்பதை அறிந்தபோது அவர் வள்ளுவரிடமும் திருக்குறளினிடமும் கொண்டிருந்த ஈடுபாட்டை எண்ணி வியந்தேன்.

முருகன் : பூம்புகார் கலைக் கூடத்தைக் காண என் தந்தையார் என்னை அழைத்துச் சென்றார். கடல்கோளால் அழிந்துபோன பூம்புகாரை அதே பொலிவுடன் காண்பதுபோல, கண்ணகி வாழ்ந்த ஊரில் 'பூம்புகார்க் கலைக்கூடத்தைக் கலைஞர் உருவாக்கியுள்ளார். அவை சிலப்பதிகாரக் காட்சிகளைக் கண்முன் நிற்கச் செய்கின்றன.

பூபாலன் : தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் கலைஞர் ஆற்றிய பணிகள் பலவாகும். அவற்றில் சிகரம் வைத்ததுபோல அமைந்து உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை நடத்தியதைக் குறிப்பிடலாம். அவர் பணி, உலகு உள்ளளவும் அவர் புகழ் பாடும்.

**2. ஒவ்வொரு நாளும் நீங்கள் பார்க்கும் காட்சிகளின் / எதிர்கொள்ளும் நிகழ்வுகளில் கண்டுணரும் அழகை மூன்று நிமிடங்கள் சொற்களில் விவரிக்க.**

**சூரியனிடம் உணர்ந்தது :**

எந்தச் சூழ்நிலையிலும் எல்லா நாள்களிலும் தவறாது சரியான நேரத்தில் உதிக்கிறது சூரியன். இந்த நிகழ்வு மூலம் நேரம் தவறாமையை உணர்ந்து கொண்டேன். காலையில் சூரியன் உதிக்கும்போது அதன் முழு வடிவத்தையும் கண்ணால் காண்பது அழகு. நல்லவன், கெட்டவன் என்றோ ஏழை, பணக்காரன் என்றோ பாராமல் தன் ஒளியை அனைவருக்கும் ஒரே மாதிரியாக வாரி வழங்கும் கதிரவன், ஏற்றத்தாழ்வு பார்க்கக் கூடாது என்ற கருத்தை நமக்குக் கூறாமல் கூறுகிறது.

**பள்ளிக்கூடத்து சிறுவனிடம் கண்டுணர்ந்தது :**

அது ஒரு குறும்படம். சிறுவன் ஒருவன் பள்ளி நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். வழியில் ஒருவர் அவனிடம் பிச்சை கேட்கிறார். அவனிடம் பணம் காசு இல்லை. ஆனால், உதவும் எண்ணம் உள்ளது. அந்தப் பிச்சைக்காரருக்கு உதவ முடிவு செய்தான் சிறுவன். அருகிலிருந்த மகிழுந்து உரிமையாளரைச் சந்தித்து, மகிழுந்தைச் சுத்தம் செய்ய அனுமதி கேட்டான். அவரும் சம்மதித்தார். மகிழுந்தை மிக நேர்த்தியாகத் துடைத்தான். அதன் உரிமையாளர் அந்தச் சிறுவனுக்கு ஐம்பது ரூபாய் பணம் கொடுத்தார். நன்றி சொல்லிய சிறுவன், அந்தப் பணத்தைப் பிச்சைக்காரருக்குக் கொடுத்து மகிழ்ந்தான்.

இந்தக் குறும்படம் இரண்டு நிகழ்ச்சிகளை சொல்கிறது. ஒன்று, 'பிச்சையெடுத்தாவது உதவி செய்' என நமக்குக் கூறுகிறது. 'சம்பாதிக்கும் வழி ஒரு சிறுவனுக்குத் தெரிந்திருக்கிறது, உனக்கு ஏன் தெரியவில்லை' எனப் பிச்சைக்காரனுக்குக் கூறுகிறது. எனவே, இக்குறும்படம் என் மனதை விட்டு அகலவில்லை.

**3. கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து வகுப்பில் உரையாற்றுக.**

கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் ஒருவன் இலக்குவன். இராமனின் இளைய சகோதரன். இராமனின் மாறா அன்பினைப் பெற்றவன். இராமன் மீதும் சீதை மீதும் பக்தி கொண்டவன் இலக்குவன். தனது தாயின் மீதும் தந்தை மீதும் அளவற்ற பக்தி கொண்டவன். நாட்டில் மட்டுமல்ல காட்டிலும் இராமனுக்கு பாதுகாவலனாய் இருந்து தொண்டாற்றியவன் இலக்குவன். திருமணமான இலக்குவன், இராமனுக்குத் தொண்டாற்றப் பதினான்கு ஆண்டுகள் தனது மனைவியைப் பிரிந்து இராமனுக்குப் பாதுகாப்புக் கவசமாய் இருந்தான். உறங்கும்போதும் இலக்குவன் விழித்திருந்து இராமனைப் பாதுகாத்தான். "அம்மா! அண்ணன் இராமனோடு காட்டிற்குச் சென்று வருகிறேன்" என்று தனது தாய் சுமித்திரையிடம் இலக்குவன் கூறியபோது, "அண்ணனுக்கு ஏதேனும் குறை என்றால், கானகத்தில் முதலில் நீ இறந்த செய்திதான் என் காதில் விழ வேண்டும்" என்று விடை கொடுத்தாள் இலக்குவனின் தாயார். எப்படிப்பட்ட தியாகம் அது! இத்தகைய தியாகத்திற்காகவும் தொண்டிற்காகவும் நான் இலக்குவனைப் பெரிதும் மதிக்கிறேன்; விரும்புகிறேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து வகுப்பறையில் விவாதிக்க.**

**ஆசிரியர்** : மாணவர்களே! மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.

**மாணவர்கள்** : நிகழ்ச்சிகள் நடக்கும் ஊர்களுக்கு அடிக்கடி செல்வதால், தங்கள் குடும்பத்தைக் கவனிக்க இயலாது. உடல்நிலை சரியில்லாத காலத்தில் வருமானம் இருக்காது.

**மாணவிகள்** : இரவில் கண் விழித்து நடிப்பதால், பகல் நேரத்தில் ஆழ்ந்து உறங்குவார்கள். எனவே, இவர்கள் வேறு வேலைக்குச் செல்ல இயலாது. பொருளாதார நெருக்கடிகள் இருக்கும்.

**ஆசிரியர்** : நிகழ்ச்சி நடத்த பல ஊர்களுக்கும் செல்வதால், எளிதில் நோய்த் தொற்றுக்கு ஆளாவார்கள். மருத்துவ செலவு இவர்களை அச்சுறுத்தும். சமுதாயத்தில் இவர்களுக்கு பெரிய மரியாதை ஒன்றும் இருக்காது. கூத்தாடிகள் என்றே அழைக்கப்படுவார்கள்.

**5. பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக்கருத்தை அறிக.**

காலங்கள் கடந்தாலும் தெய்வபக்தி மாறவில்லை. அதே சமயம் கடவுள் மறுப்புக் கோட்பாடு வலுவடைந்து வருகிறது. பண்டைய சாதி முறைகள் மெல்ல அழிந்து, அனைவரும் சமம் என்னும் கோட்பாடு உருவாகியுள்ளது.

சமுதாயத்தில் குற்றங்கள் பெருகியுள்ளன. எனவே, காவல் நிலையங்களும் நீதிமன்றங்களும் அதிகரித்துள்ளன. இருந்தும் பெரும்பாலான மக்களுக்கு நீதி கிட்டவில்லை.

கல்வி பெருகியுள்ளது. குறிப்பாகக் கல்வி கற்கும் பெண்களின் எண்ணிக்கை கூடியுள்ளது. பெண் வேலைக்குச் செல்வதால் சுதந்திரமாக நடமாடுகிறாள்.

நோய்கள் பெருகியுள்ளன. எனவே, மருத்துவர்களின் தேவை அதிகரித்துள்ளது. இருப்பினும் மருத்துவம் பார்க்க வசதி இல்லாத நிலை மக்களிடத்தில் உள்ளது.

உணவு தானியம் முன்புபோல பயன்படவில்லை. விரைவு உணவகங்களில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. தொழில்நுட்ப வசதி பெருகியுள்ளது. வறுமை நிலையில் இருந்து மக்கள் மெல்ல முன்னேற்றமடைந்துள்ளனர்.

## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க.**

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.

கலைஞர் கருணாநிதி தமிழ் இலக்கியத்திற்குப் பெருங்பங்களித்தவர் என்பது அறிந்த செய்தி. கவிதைகள், கடிதங்கள், திரைக்கதை வசனங்கள், புதினங்கள், வாழ்க்கை வரலாறுகள், வரலாற்றுப் புதினங்கள், நீண்ட நாடகங்கள், திரைப்படப் பாடல்கள் எனப் பல்துறை சார்பாக அவர் பங்களிப்பு குறிப்பிடத் தக்கவையாகும். திருக்குறள் சார்ந்து குறளோவியமும், தொல்காப்பியப் பூங்கா, பலவகைச் செய்யுள்கள், கட்டுரைகள் எனப் பல நூல்களை அவர் எழுதியுள்ளார். இலக்கியம் சார்ந்து மட்டுமல்லாமல் தமிழ்மொழிக்கும் கட்டடக் கலைச்சார்ந்தும் கலைஞர் பெரும் பங்களிப்பு வழங்கியுள்ளார். குறளோவியத்தில் திருக்குறள் சார்ந்து எழுதியதுபோல சென்னையில் கலைஞர் வள்ளுவர் கோட்டம் என்னும் கட்டடக் கலைக்கூடத்தை உருவாக்கித் திருக்குறளுக்குச் சிறப்புச் சேர்த்துள்ளார். திருவள்ளுவருக்குப் பெருமையும் சிறப்பும் சேர்க்கும் வகையில் கலைஞர் கன்னியாகுமரியில் நூற்று முப்பது மூன்றடி உயர வள்ளுவர் சிலையை நிறுவியுள்ளார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்.

அ) **தனிச்சொற்றொடர் :**

ஓர் எழுவாயோ, பல எழுவாய்களோ இருந்து, ஒரு பயனிலை பெற்று முடிவது (தனிச்சொற்றொடர் ஆகும்.)

**எ – கா :**

i. மேரி, பேருந்திற்காகக் காத்திருந்தார்.
(ஓர் எழுவாய் – மேரி) (ஒரு பயனிலை – காத்திருந்தார்) – தனிச்சொற்றொடர்.

ii. மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.
(பல எழுவாய்கள் – மேரி / கனகா) (ஒரு பயனிலை – ஏறினர்) – தனிச்சொற்றொடர்.

ஆ) **தொடர்சொற்றொடர் :**

ஓர் எழுவாய், ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளைப் பெற்று அமைவது (தொடர்சொற்றொடர் ஆகும்)

**எ – கா :**

i. இனிய நிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.
(ஓர் எழுவாய் – இனியநிலா) (பல பயனிலை கள் – பங்கேற்றார், வெற்றிபெற்றார், தட்டிச் சென்றார்) – தொடர்சொற்றொடர்.

ii. அன்வர் அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்.
(ஓர் எழுவாய் – அன்வர்) (பல பயனிலைகள் – வந்து, பார்த்து, அடைந்தார். – (தொடர் சொற்றொடர்)

இ) **கலவைச்சொற்றொடர் :**

கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும், கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வருவது (கலவைத்தொடர் ஆகும்)

**எ – கா :** மழை கொட்டிக் கொண்டிருந்தாலும், பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்.

‘பகலவன் பள்ளிக்கு நடந்து வந்தான்’ என்பது முதன்மைத்தொடர்.

‘மழை கொட்டிக் கொண்டிருந்தாலும்’ என்பது துணைத் தொடர். எனவே, கலவைச்சொற்றொடர்.

தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.

**எ – கா :** அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார். (PTA - 5)

(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)

அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

1. இன்னாசிரியார், புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார்; புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.(தொடர்சொற்றொடராக மாற்றுக)

   **விடை :** இன்னாசிரியார், புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்து, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

2. கலைஞர் எழுத்தைத் தமது ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்தார். கலைஞர், எழுத்துவழியாகத் தமது எண்ணங்களைக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.
(கலவைச் சொற்றொடராக மாற்றுக)

   **விடை :** எழுத்தை ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்த கலைஞர், தமது எண்ணங்களை எழுத்து வழியாகக் கடைக்கோடித் தமிழனுக்கும் கொண்டு சென்றார்.

3. முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி வார இதழாக்கி, நாளேடாக்கினார் கலைஞர்.
(தனிச்சொற்றொடர்களாக மாற்றுக)

   **விடை :** கலைஞர் முரசொலி ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கினார்.
   கலைஞர் முரசொலி ஏட்டை வார இதழாக்கினார்.
   கலைஞர் முரசொலி ஏட்டை நாளேடாக்கினார்

4. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.
(தனிச்சொற்றொடர்களாக மாற்றுக) (PTA - 5)

   **விடை :** ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சுத் தடைப்பட்டது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக. (PTA - 6)

**புதிர் :** உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி, வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

**விடை :** தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட், ஒரு பக்கத் தராசுத் தட்டு உயர்ந்தால், அதில் உள்ள மூன்று பிஸ்கட்டுகளில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்துவைத்துக் கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒவ்வொரு பிஸ்கட்டைப் போட்டு, இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து, ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

| பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| கோல்டு பிஸ்கட் | தங்கக் கட்டி | எக்ஸ்பெரிமெண்ட் | சோதனை |
| ஈக்வல் | சமமாக | ரிப்பீட் | திரும்பவும் |
| வெயிட் | எடை | ஆன்சர் | விடை |
| யூஸ் | பயன்படுத்தி | ஆல் தி பெஸ்ட் | வாழ்த்துகள் |

பத்தியைப் படித்து வினாவிற்கு விடையளிக்க. பத்தி : காண்க பாடநூல், பக்கம் எண் : 150

வினாக்கள் :

அ) நிகழ்த்துக் கலைகள் எத்தகைய சிறப்புகளைக் கொண்டவை ?

நிகழ்த்துக் கலைகள், கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் கலைத்திறனோடு வழங்கும் சிறப்பினைக் கொண்டவையாகும்.

ஆ) மரபார்ந்த கலைவடிவங்கள் எவை ?

கரகாட்டமும், காவடியாட்டமும் மரபார்ந்த கலைவடிவங்களாகும்.

இ) நிகழ்த்துக் கலைகளில் முத்தமிழும் உள்ளடங்கி உள்ளன – கருத்தை விளக்குக.

நிகழ்த்துக் கலைகளில் இசை, வசனம், ஆடல், பாடல் எல்லாம் கலந்து இருப்பதால் முத்தமிழும் உள்ளடங்கியுள்ளமையை அறியலாம்.

ஈ) பத்தியில் இருந்து இரண்டு வினாக்களை உருவாக்குக.

1. வேடம் கட்டி ஆடப்படும் நிகழ்த்துக் கலைகள் எவை?
2. கரகாட்டம் எவ்வாறு ஆடப்படுகிறது?
3. காண்பாருக்கு உற்சாகம் தரக்கூடிய நிகழ்த்துக் கலைகள் எவை?
4. கிராமியக் கலைஞர்களால் நிகழ்த்தப்படும் கலைவடிவம் எவை?
5. தோற்பாவைக் கூத்து என்பது எது?

உ) நிகழ்த்துக் கலைகளைப் பாதுகாக்க நம்மால் செய்ய இயலும் எவையேனும் இரண்டு செயல்பாடுகளைக் குறிப்பிடுக.

உழைக்கும் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் கலைகளாகையால் அவற்றை அவர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டும் வகையில் நடத்த உதவி செய்யலாம். மரபார்ந்த கலைகள் அழிந்துவிடாமலிருக்க இளைய தலைமுறையினருக்குப் பொழுதுபோக்குகள் கற்பிக்கலாம்.

நாட்டுப்புறப் பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.

பாடல் :

ஆத்துக்கு அந்தண்டையே அண்ணன் வச்ச தென்னம் புள்ள
அண்ணன் புள்ள வாடினாலும் யம்மாடி! யம்மாடி!
தென்னம்புள்ள வாடலாமோ? யம்மாடி! யம்மாடி!
வாய்க்காலுக்கு மேற்குப்புறம் வஞ்சி வெச்ச வாழைமரம்
வஞ்சி மனம் வாடினாலும் யம்மாடி! யம்மாடி!
வாழைமரம் வாடலாமோ யம்மாடி! யம்மாடி!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடல் எழுந்த சூழல் :**

அண்ணன் நட்டு வைத்த தென்னம் பிள்ளைக்கு நீர் பாய்ச்சத் தோப்புக்கு வரும் பெண்ணொருத்தி, குழந்தையை இடுப்பிலிருந்து இறக்கி விடுகிறாள். தென்னம்பிள்ளைக்கு நீரூற்றுகிறாள்; குழந்தை அழுகிறது; பாடலைப் பாடியவாறே, குழந்தையின் அழுகையை நிறுத்தி, நீரூற்றுதலைத் தொடர்கிறாள்.

| பாடல் : | பாடல் எழுந்த சூழல் : |
|---|---|
| பாடறியேன் படிப்பறியேன் – நான்தான்<br>பள்ளிக்கூடம் தானறியேன்<br>ஏடறியேன் எழுத்தறியேன் – நான்தான்<br>எழுத்துவகை தானறியேன்<br>படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>பங்காளிய ஏன் தேடுறேன்<br>எழுத நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>எதிராளிய ஏன் தேடுறேன்<br>நாலெழுத்துப் படிச்சிருந்தா – நான்தான்<br>நாலு தேசம் போய்வருவேன்<br>நாலு பக்கம் வரப்புக்குள்ளே – தெனமும்<br>நான் பாடுறேன் தெம்மாங்குதான். | பாடல் என்பது உள்ளத்தினைப் பாதிக்கும் செயலால் உருவானது. படிப்பறிவைப் பெறாமைக்குத் தான் பள்ளி செல்லாததுதான் காரணம் என உணர்ந்த ஒருவன், அதனால் விளைந்த கேடுகளை எண்ணிப் பார்க்கிறான். ஏடும் எழுத்தும் அறியாததால், படிப்பைப் பற்றித் தெரிய வில்லை என வருந்துகிறான். எதற்கெடுத்தாலும் பங்காளி களான உறவினரை எதிர்பார்க்க வேண்டியுள்ள மைக்கு வருந்துகிறான். எழுத்து வாசனை அறிந்தி ருந்தால், வேறு ஆள்களைத் தேட வேண்டிய நிலை உருவாகி இருக்காது என எண்ணுகிறான். படிப்பு பல இடங்களுக்குச் சென்று பிழைக்க உதவி இருக்கும் என எண்ணுகிறான். அப்படி எதுவும் இல்லாததால், நாலு வரப்புக்குள் அடங்கி உழைக்க வேண்டியுள்ள நிலையை எண்ணிக் கண்ணீர் சிந்துகிறான். இத்தகைய சூழலே இப்பாடல் உருவாகக் காரணமாகிறது. |

**மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.**

**வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்**
**பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!**
**பூச்சியைக் கவரும் வண்ணங்களில்**
**பூக்களிடம் விழுவது மனிதர்களே!**
பூவையர் நெஞ்சைக் கவர்வதனால்
பூவெனப் பெயரை வைத்தாரோ?

**கட்டுரை எழுதுக.**

**உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரை யாக்குக.** **(PTA - 2,5)**

**முன்னுரை :**

கண்ணால் காண்பவை மனத்தில் ஆழமாகப் பதிந்து, நெடுங்காலம் நிலைத்திருக்கும். அதனால்தான் பள்ளிகளில் சுற்றுலா அழைத்துச் செல்கின்றனர். இந்தவகையில் பொருட்காட்சிகள்கூட மக்கள் அறிவை வளர்க்கப் பெரிதும் துணைபுரிகின்றன. நான் அண்மையில் என் நண்பர்களுடன் சென்னையில் நடைபெற்ற சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிக்குச் சென்று வந்தேன். அது குறித்துச் சில செய்திகளை முன்வைப்பது, உனக்கும் பயனுள்ளதாக இருக்கும் என எண்ணுகிறேன்.

**பொருட்காட்சி :**

சென்னை தீவுத்திடலில், தலைமைச் செயலகம் அமைந்துள்ள பகுதிக்கு அருகில், இப்பொருட்காட்சியை அரசு விரிவாக நடத்த ஏற்பாடு செய்திருந்தது. பொருட்காட்சியைக் காண மக்கள் வெள்ளம், நாள்தோறும் திரண்டு வருவதைக் காண முடிந்தது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்ட மக்களும் அப்பொருட்காட்சிக்கு வந்து சென்றதைக் கண்டு வியப்படைந்தேன். அது பொருள்களைக் காண்பதற்கு மட்டும் வாய்ப்பளிக்காமல், நம் அறிவை விரிவுபடுத்திக் கொள்வதற்கும் உதவியாக இருந்ததை எண்ணி வியப்படைந்தேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பல்துறை அரங்குகள் :**

உள்ளே நுழைந்ததும் அரசு சார்புடைய காவல்துறை, சுற்றுலாத்துறை, பொதுப்பணித்துறை, அறநிலையத்துறை, வனத்துறை, தீயணைப்புத்துறை, விளம்பரத்துறை, போக்குவரத்துத்துறை, மின்துறை, அறிவியல்துறை எனப் பலதுறை சார்ந்த அரங்குகள் அமைக்கப் பெற்றிருந்தன. விவசாயம், கைத்தறி, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு முதலான துறைசார்ந்த அரங்குகளும் இருந்தன. அவற்றில் நமக்குத் தேவையான விளக்கம் அளிக்கப் பொறுமையுடன் பலர் காத்திருந்தது சிறப்பாக இருந்தது. நான் பல வினாக்களை வினவி, என் ஐயங்களைப் போக்கிக்கொண்டேன்.

**கேளிக்கை அரங்குகள் :**

மக்கள் பொழுதுபோக்க வருவதனால் பலவகை விளையாட்டுகள் விளையாடுவதற்குரிய அரங்குகளையும் அமைத்திருந்தார்கள். காவல்துறை சார்ந்த நாய்கள் பல, அருஞ்சாதனைகளைச் செய்ததைக் காணமுடிந்தது. சிறியவர்களும், பெரியவர்களும் ஊஞ்சல், ராட்டினம், விளையாட்டு மின்தொடர்வண்டி, இராட்சத ராட்டினம் முதலானவற்றில் விளையாடி மகிழ்வதைக் காண முடிந்தது.

**உணவு அரங்குகள் :**

குடும்பம் குடும்பமாக வந்திருந்த சிலர், அங்கே அமைக்கப்பட்டிருந்த பல்வேறு உணவு அரங்கங்களில் கூடிநின்று, பல்வேறு சுவையான தின்பண்டங்களை வாங்கி உண்டு மகிழ்ந்தனர். அங்குக் குடிப்பதற்குப் பல்வேறு வகையான சாறுகள் வழங்கப்பட்டன. ஐஸ்கிரீம் வகைகள் எல்லாரையும் கவர்ந்தன. ‘ஆவின்’பால் நிறுவனம் அமைத்திருந்த அரங்கில், எண்ணற்ற மக்கள் அவரவர் விருப்பத்திற்கு ஏற்பச் சுவையுடைய பண்டங்களை வாங்கிச் சுவைத்ததைக் கண்டேன். பால் ஒன்று மட்டுமே விற்பதாக எண்ணி இருந்த எனக்கு, அந்த அரங்கம் திகைப்பை உண்டாக்கியது.

**முடிவுரை :**

பொருட்காட்சி என்பது, வெறும் பொருள்களைமட்டும் காண உதவவில்லை. அது பல்வேறு துறை சார்ந்த அறிவை நாம் பெற உதவுவதாக அமைந்துள்ளது. எனவே, அடுத்தமுறை நண்பர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு செல்ல வேண்டுமென்ற முடிவுடன் வீடு திரும்பினேன்.

## மொழியோடு விளையாடு

**தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் **கருக்கத்** தொடங்கியது; மழை வரும்போலிருக்கிறது. (PTA - 3)
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ______. (PTA - 3)

   **விடை : சிவந்தது**
3. ______ மனம் உள்ளவரை, அப்பாவி என்கிறோம்.

   **விடை : வெள்ளை**
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ______ புல்வெளிகளில், கதிரவனின் ______ வெயில் பரவிக் கிடக்கிறது. (PTA - 3)

   **விடை : பச்சைப், மஞ்சள்**
5. வெயிலில் அலையாதே; உடல் ______.

   **விடை : கறுத்துவிடும்**

**பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம் வீடு.

   வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவை தரும் ______.

   **விடை : மரவீடு**
2. காலை ஒளியினில் மலரிதழ் ______.

   சோலைப் பூவினில் வண்டினம் ______.

   **விடை : அவிழும், கவிழும்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. மலைமுகட்டில் மேகம் ______ ; அதைப்
பார்க்கும் மனங்கள் செல்லத் ______.
**விடை : தங்கும், தயங்கும்**

4. வாழ்க்கையில் ______ மீண்டும் வெல்வர் – இதைத்
தத்துவமாய்ப் ______ முயற்சி மேற்கொள்வர்.
**விடை : தோற்பவர், பார்ப்பவர்**

5. கைதட்டலே கவிஞர்க்கு ______ – அவையோரின்
ஆர்வமே அவருக்கு ______.
**விடை : விருந்து, விருது**

**அகராதியில் காண்க.**

**தால்** – நாக்கு
**உழுவை** – புலி
**ஏந்தெழில்** – மிகுந்த அழகு
**அகவுதல்** – அழைத்தல், ஒலித்தல், பாடுதல்
**அணிமை** – அண்மை, அருகு, பக்கம்.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



பாழும் வயிறு வளர்த்திடவே,
பாடுகள் பட்டு ஆடிடுவர்;
வாழும் வகையற்றுத் திரிந்தாலும்,
வாஞ்சை யுடனாடி மகிழ்ந்திடுவர்.
மேளத்தைப் போலத்தான் வயிற்றைத்
தட்டியே ராகம் எழுப்புகிறார்;
வாளில் நடப்பதுபோல வீரத்துடன்
ஆடிப்பாடி மகிழ்விப்பார்.

## நிற்க அதற்குத் தக

தமிழர், தமிழர், தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர். அவர் எழுதியது தமிழின் சுவையை; அவர் எண்ணியது தமிழரின் உயர்வை; அவர் உயர்த்தியது தமிழ்நாட்டின் கலைகளை! நீங்கள் படித்துமுடித்தப்பின் உங்கள் துறையின் அறிவைக்கொண்டு தமிழுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

1. என் துறையில் வல்லுநரானபின், அத்துறையினைப் பற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வேன்.
2. என் துறையில் இருக்கும் கலைச்சொற்களைத் தமிழில் மாற்றி மக்களின் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவேன்.
3. பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் அறிவியல் சார்ந்த நூல்களை எழுதுவேன்.
4. மாணவர்களுக்குப் பலதுரறை அறிவை வளர்க்க எளிய நடையில் கவிதைகளையும் கதைகளையும் மேடை நாடகங்களையும் எழுதுவேன்.
5. புத்தகப் படிப்போடு செயல்முறைப் படிப்பையும் வலியுறுத்துவேன்.

**கலைச்சொல் அறிவோம்**

Playwright – நாடக ஆசிரியர்
Screenplay – திரைக்கதை
Storyteller – கதை சொல்லி
Aesthetics – அழகியல், முருகியல்

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# PTA, அரசுத்தேர்வு மற்றும் கூடுதல் வினா-விடைகள்

# இயல் – 1

# கவிதைப்பேழை

## 1. அன்னை மொழியே

### பலவுள் தெரிக

1. ‘சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்’’ – என்று கூறியவர் (Sep. - 22)
அ) திரு.வி.க. ஆ) க. சச்சிதானந்தன்
இ) நம்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்
**விடை : ஆ) க. சச்சிதானந்தன்**

2. ‘தென்னன் மகளே’ – இத்தொடரில் ‘தென்னன்’ எனக் குறிப்பிடப்பட்டது ______.
அ) சேரனை ஆ) சோழனை இ) பாண்டியனை ஈ) பல்லவனை
**விடை : இ) பாண்டியனை**

3. ‘இன்னறும் பாப்பத்தே’ எனக் குறிப்பிடப்பட்டது ______.
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) பெருங்காப்பியம்
**விடை : ஆ) பத்துப்பாட்டு**

4. ‘கடல் கொண்ட நாடு’ எனக் குறிப்பிடப்பட்டது ______.
அ) கன்னியாகுமரி ஆ) குமரிக்கண்டம் இ) பாண்டியநாடு ஈ) தென்னாடு
**விடை : ஆ) குமரிக்கண்டம்**

5. ‘முகிழ்த்த இலக்கியமும்’ என்பதில் ‘முகிழ்த்த’ என்பது ______.
அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
**விடை : இ) பெயரெச்சம்**

6. தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ள பெருஞ்சித்திரனாரின் நூல் ______.
அ) அன்னை மொழியே ஆ) செப்பரிய நின் பெருமை
இ) அழகார்ந்த செந்தமிழே ஈ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
**விடை : ஈ) திருக்குறள் மெய்ப்பொருளுரை**

7. ‘வேறார் புகழுரையும்’ – இத்தொடரில் ‘வேறார்’ என்பது ______.
அ) வெறுக்க மாட்டார் ஆ) வேற்று நாட்டவர் இ) வேறு ஒரு ஆள் ஈ) வேரானவர்
**விடை : ஆ) வேற்று நாட்டவர்**

8. ‘தென்னன் மகளே!’ எனப் பெருஞ்சித்திரனார் பாராட்டியது ______.
அ) சின்னக் குழந்தையை ஆ) பழுத்த பட்டறிவை
இ) அன்னை மொழியை ஈ) அழகு நிலவை
**விடை : இ) அன்னை மொழியை**

9. ‘பாவலரேறு’ எனச் சிறப்பிக்கப்படுபவர் ______.
அ) திரு. வி. கலியாண சுந்தரனார் ஆ) பெருஞ்சித்திரனார்
இ) வாணிதாசன் ஈ) தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்
**விடை : ஆ) பெருஞ்சித்திரனார்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. 'அன்னை மொழியே' என்ற பெருஞ்சித்திரனாரின் பாடல் இடம்பெற்ற நூல் ______.
அ) பள்ளிப் பறவைகள் ஆ) பாவியக் கொத்து
இ) கனிச்சாறு ஈ) நூறாசிரியம்
**விடை : இ) கனிச்சாறு**

11. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் ______.
அ) பழ. முத்தையா ஆ) துரை. மாணிக்கம்
இ) இரா. கிருஷ்ணமூர்த்தி ஈ) சொ. விருத்தாசலம்
**விடை : ஆ) துரை. மாணிக்கம்**

12. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர் ______.
அ) சொ. விருத்தாசலம் ஆ) பழ. முத்தையா
இ) இரா. கிருஷ்ணமூர்த்தி ஈ) துரை. மாணிக்கம்
**விடை : ஈ) துரை. மாணிக்கம்**

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** (Sep.- 21)

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்".

அ) எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும் :
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
**விடை : இ) எம் + தமிழ் + நா**

ஆ) செந்தமிழ் என்பது :
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
**விடை : அ) பண்புத்தொகை**

இ) உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை
**விடை : ஆ) தமிழ் மொழியை**

ஈ) வேறார் புகழுரையும் – இத்தொடரில் 'வேறார்' என்பது:
அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்
**விடை : இ) வேற்றுமொழியினர்**

## குறுவினாக்கள்

**1. பெருஞ்சித்திரனார் தமிழின் தொன்மையை எவ்வாறு போற்றுகிறார்?**

➤ (முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனி) "பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங் கனியே!" என தமிழின் தொன்மையைப் பெருஞ்சித்திரனார் புகழ்ந்து போற்றுகிறார்.

**2. பெருஞ்சித்திரனார் படைத்த நூல்கள் யாவை?**

➤ உலகியல் நூறு, பாவியக் கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் ஆகியவை, பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களாகும்.

**3. "இன்னறும் பாப்பத்தே" என்னும் தொடரில் குறிப்பிடப் படும் நூல்கள் எவை?**

➤ திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை, மலைபடுகடாம், மதுரைக்காஞ்சி என்னும் பத்தும் "இன்னறும் பாப்பத்து" ஆகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

4. **"எண்தொகையே" எனப் பெருஞ்சித்திரனார் குறிப்பிட்ட நூல்கள் எவை?**

- நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டையும் பெருஞ்சித்திரனார் "எண்தொகை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

5. **பெருஞ்சித்திரனார் தமிழின் பெருமையை எவ்வாறு முழங்குவதாகக் கூறுகிறார்?**

- செப்பரிய செந்தமிழின் பெருமையைத் தம் நா எவ்வாறு விரித்துரைக்கும் என வியந்த பெருஞ் சித்திரனார், "செந்தாமரையின் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடும் வண்டுபோல் யாம் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்" எனக் கூறுகிறார்.

## சிறுவினாக்கள்

1. **பெருஞ்சித்திரனார் தமிழின் செப்பரிய, பெருமையை யாண்டும் முந்துற்று முழங்குவது ஏன்?**

- செழுமை மிக்க தமிழை உயிராகப் போற்றுகிறார் பெருஞ்சித்திரனார்.
- தம்முடைய நாக்கு தமிழின் பெருமையை விரித்துரைப்பதை எண்ணி வியக்கிறார். பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் உடையது தமிழ் என வியந்து புகழ்கிறார்.
- வேற்றுமொழியார் எல்லாம் தமிழின் பெருமையைப் புகழ்வது கண்டே, தமக்குத் தமிழின்மீது பற்றுணர்வு எழுவதாகக் குறிப்பிடுகிறார்.
- தேனைக் குடித்த வண்டு சிறகடித்துப் பாடுவதுபோலத் தமிழைச் சுவைத்து அதன் பெருமையை எங்கும் முழங்குவதற்கு முந்தவேண்டும் என்று பெருஞ்சித்திரனார் கூறுகின்றார்.

2. **'நற்கணக்கு' நூல்கள் எவை?**

- நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி, முதுமொழிக் காஞ்சி, திருக்குறள், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது, களவழி நாற்பது என்பது 'நற்கணக்கு' நூல்களாகும்.

## இலக்கணக்குறிப்பு

**செந்தமிழ், நறுங்கனி, செந்தாமரை, பேரரசு, நெடு நிலைப்பு, இன்னறும்பா, நற்கணக்கு** – பண்புத் தொகைகள்

**ஆர்ந்த, முகிழ்த்த, கொண்ட** – பெயரெச்சங்கள்

**கன்னிக்குமரி, மண்ணுலகம்** – உருவகங்கள்

**தென்னன் மகள்** – நான்காம் வேற்றுமைத் தொகை

**நின் பெருமை** – ஆறாம் வேற்றுமைத்தொகை

**குடித்து, பாடி, முழங்க, எழுப்ப, தாழ, உந்தி** – வினை யெச்சங்கள்

**வாழ்த்துவமே** – தன்மைப் பன்மை வினைமுற்று

முந்துற்**றோம்**, யாண்**டும்** – முற்றும்மைகள்

**உள்ளக்கனல்** – ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **முகிழ்த்த – முகிழ் + த் + த் + அ**

**முகிழ்** – பகுதி

**த்** – சந்தி

**த்** – இறந்தகால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

2. **வாழ்த்துவம் – வாழ்த்து + வ் + அம்**

**வாழ்த்து** – பகுதி

**வ்** – எதிர்கால இடைநிலை

**அம்** – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

3. **உற்றோம் – உறு (உற்று) + ஓம்**

**உறு** – பகுதி, 'உற்று' என ஒற்ற இரட்டித்து இறந்தகாலம் காட்டியது

**ஓம்** – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

# உரைநடை உலகம்

# 2. தமிழ்ச்சொல் வளம்

## பலவுள் தெரிக

1. 'மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்? (Sep.-22)
அ) தமிழழகனார் ஆ) கம்பர்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து
**விடை : இ) தேவநேயப் பாவாணர்**

2. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு : (Mar.-24)
அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) இந்தியா ஈ) இலங்கை
**விடை : ஆ) மலேசியா**

3. "சொல்லாய்வுக் கட்டுரைகள்" என்னும் நூலின் ஆசிரியர் ______.
அ) இளங்குமரனார் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) தமிழன்பன் ஈ) அறவாணன்
**விடை : ஆ) தேவநேயப் பாவாணர்**

4. வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய தானிய வகைகளை, ______ என அழைப்பர்.
அ) தானியம் ஆ) சிறுகூலங்கள் இ) சம்பா ஈ) கார்நெல்
**விடை : ஆ) சிறுகூலங்கள்**

5. இலக்கியச் செம்மொழிகளுக்கு எல்லாம் பொதுவானது ______.
அ) சிறுகதை வளம் ஆ) கவிதை வளம் இ) சொல்வளம் ஈ) இலக்கண வளம்
**விடை : இ) சொல்வளம்**

6. தாவர வகையில் குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடிப்பகுதியை ______ எனக் குறித்தனர்.
அ) தாள் ஆ) தண்டு இ) தட்டை ஈ) தூறு
**விடை : ஈ) தூறு**

7. தாவரத்தின் காய்ந்த குச்சு என்பது ______ என வழங்கப்பட்டது.
அ) வெங்கழி ஆ) விறகு இ) கட்டை ஈ) சுள்ளி
**விடை : ஈ) சுள்ளி**

8. பூவோடு கூடிய இளம்பிஞ்சு ______ என வழங்கப் பெறுகிறது.
அ) கச்சல் ஆ) முட்டுக்குடும்பை இ) மூசு ஈ) பூம்பிஞ்சு
**விடை : ஈ) பூம்பிஞ்சு**

9. தென்னையின் இளம்பருவத்தை ______ என அழைப்பர்.
அ) தென்னைமரம் ஆ) தென்னை நெற்று
இ) தென்னங்கன்று ஈ) தென்னம்பிள்ளை
**விடை : ஈ) தென்னம்பிள்ளை**

10. "தமிழ்நாட்டு நெல்லிலோ செந்நெல், வெண்ணெல், கார்நெல், ஆனைக்கொம்பன் எனப் பலவகை உண்டு" – இவற்றில் பண்புத்தொகையாய் அமைந்தவை ______.
அ) செந்நெல், ஆனைக்கொம்பன் ஆ) ஆனைக்கொம்பன், செந்நெல்
இ) செந்நெல், வெண்ணெல் ஈ) வெண்ணெல், கார்நெல்
**விடை : இ) செந்நெல், வெண்ணெல்**

11. தமிழ்நாட்டில் விளையும் வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலியவை ______ வகையைச் சார்ந்தவை.
அ) பெருங்கடல் ஆ) அனுகூல இ) சிறுகூல ஈ) எதுவுமில்லை
**விடை : இ) சிறுகூல**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக. (May -22)
   - நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, மடலி, பைங்கூழ் ஆகியவை தாவரங்களின் இளம்பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்கள் ஆகும்.
2. பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக. (Sep. - 22)
   - அரும்பு, போது, மலர் (அலர்), வீ, செம்மல், ஆகியன, பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்.
3. தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக. (Mar. -23)
   - வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி ஆகியவை தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களாகும்.
4. ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் நான்கினை எழுதுக.
   - தாவரங்களுள், நெல், கேழ்வரகு, முதலியவற்றின் அடி **'தாள்'** எனவும்,
   - கீரை, வாழை முதலியவற்றின் அடி **'தண்டு'** எனவும்,
   - நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி **'கோல்'** எனவும்,
   - குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி **'தூறு'** எனவும் குறிக்கப்பெறும்.
5. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.
   - கவை, கொம்பு அல்லது கொப்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு என்பன, தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களாகும்.
6. காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.
   - தாவரத்தின் காய்ந்த குச்சி **'சுள்ளி'** எனவும், காய்ந்த சிறுகிளை **'விறகு'** எனவும், காய்ந்த கழி **'வெங்கழி'** எனவும், காய்ந்த கொம்பும் கவையும் அடியும் **'கட்டை'** எனவும் வழங்கப்படும்.
7. தாவரங்களின் இலைவகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
   - இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு முதலியன, தாவரங்களின் இலைவகைகளைக் குறிக்கும் சொற்கள்.
8. தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
   - துளிர் அல்லது தளிர், முறி அல்லது கொழுந்து, குருத்து, கொழுந்தாடை ஆகியன, தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்.
9. தாவரத்தின் பிஞ்சுவகைகளை எச்சொற்களால் குறிப்பிடுகிறோம்?
   - பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, முட்டுக்குரும்பை, இளநீர், நுழாய், கருக்கல், கச்சல் ஆகிய சொற்களால், தாவரத்தின் பிஞ்சுவகைகளைக் குறிப்பிடுகிறோம்.
10. பண்டைத் தமிழ்மக்களின் நாகரிகத் தனிப்பெருமையை எவ்வாறு அறியமுடிகிறது?
    - ஒரு நாட்டு வளத்திற்குத் தகுந்தபடியே அந்நாட்டு மக்களின் அறிவு ஒழுக்கங்களும் அமைந்திருக்கும். தமிழ்நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தைப் பெற்றவர்களாக இருந்திருக்கலாம் என அறியமுடிகிறது.

## சிறுவினா

1. தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக. (PTA - 1)
   - தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல், "தமிழில்மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்கு உரியனவாய்க் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன" என்று குறிப்பிடுகிறார்.
   - "தமிழ் அல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழில் உள்ள 'ஒரு பொருள் குறித்த பல சொல்' வரிசைகள் அவற்றில் இல்லாத குறை எந்த தமிழ் ஆய்வறிஞருக்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.
   - அத்துடன், தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்கு உரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன" என்று கூறுவதன்மூலம் தமிழ்மொழியின் சிறப்பை டாக்டர். கால்டுவெல் தெளிவுபடுத்துகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2. இளங்குமரனார் – சிறு குறிப்பு வரைக.**

- தமிழாசிரியர், நூலாக்கல் பணிகளை விரும்பிச் செய்பவர்; சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில், திருவள்ளுவர் தவச்சாலை ஒன்றை அமைத்திருப்பவர்.
- தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவு களை வழங்கி வருபவர். தமிழ்வழித் திருமணங் களை நடத்தி வருபவர். திரு. வி. க. போல, இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கைக்கொண்டவர். பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர். இவரை 'உலகப் பெருந்தமிழர்' எனப் போற்றினர்.

**3. 'மணிவகை'த் தானியங்களுக்குத் தமிழகத்தில் வழங்கும் சொற்கள் குறித்து விளக்குக.**

- தமிழகத்தில் 'மணிவகை'த் தானியங்களான நெல், புல் (கம்பு) முதலியன 'கூலம்' எனவும்,
- அவரை, உளுந்து முதலியன 'பயறு' எனவும், வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை 'கடலை' எனவும்,
- கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து 'விதை' எனவும், வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து 'முத்து' எனவும்,
- மா, பனை முதலியவற்றின் வித்து 'கொட்டை' எனவும், தென்னையின் வித்து 'தேங்காய்' எனவும், அவரை, துவரை முதலிய பயறுகள் 'முதிரை' எனவும் வழங்கப் பெறுகின்றன.

**4. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தமிழகத்தில் வழங்கப்படும் சொற்கள் குறித்து விளக்குக.**

- தமிழகத்தில் கெட்டுப்போன காய்கனிகளுள் நுனியில் சுருங்கிய காய் 'சூம்பல்' எனவும்,
- சுருங்கிய பழம் 'சிவியல்' எனவும், புழு பூச்சி அரித்த காய் அல்லது கனி 'சொத்தை' எனவும்,
- சூட்டினால் பழுத்த பிஞ்சு 'வெம்பல்' எனவும்,
- குளுகுளுத்த பழம் 'அளியல்' எனவும்,
- குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய் 'அழுகல்' எனவும்,
- பதராய்ப் போன மிளகாய் 'சொண்டு' எனவும்,
- கோட்டான் உட்கார்ந்ததனால் கெட்டுப்போன காய் 'கோட்டான்(கூகைக்)காய் எனவும்,
- தேரை அமர்ந்ததினால் கெட்ட காய் 'தேரைக்காய்' எனவும்,
- தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய் 'அல்லிக்காய்' எனவும்,
- தென்னையில் கெட்ட காய் 'ஒல்லிக்காய்' எனவும் வழங்கப்பெற்றன.

**5. திருந்திய மக்களின் நாகரிகமும் பண்பாடும் குறித்து அறிய வழி யாது?**

- பிற உயிரினங்களினின்று திருந்திய மக்களைப் பிரித்துக் காட்டுவது மொழியாகும். மொழியே ஒரு நாட்டவரின், இனத்தவரின் நாகரிகத்தை அளந்து அறிவதற்குச் சிறந்த வழியாகும்.
- உலகிலுள்ள பொருள்களைக் கூர்ந்து நோக்கி, அவற்றின் நுண் பாகுபாடுகளைப் பிரித்து நோக்கி, அவற்றிற்கு ஏற்பப் பருப்பொருள் சொற்களையும் நுண்பொருட்களுக்குரிய சொற்களையும் அமைத்துக் கொள்வது சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்களுக்கே இயலும்.
- இத்தகைய தனிப்பெரும் வளத்தினால் பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தைப் பெற்றவர்களாக இருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.** (PTA - 3)

அ) ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.
நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள், எதற்குத் தக்கபடி அமைந்திருக்கும்?

ஆ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா. (Sep.- 21)
உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

# கவிதைப்பேழை

# 3. இரட்டுற மொழிதல்

### பலவுள் தெரிக

1. செய்யுளிலும் உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் ______ பயன்படுத்தப்படுகின்றன.

அ) நகைச்சுவைகள் ஆ) சிலேடைகள் இ) தத்துவங்கள் ஈ) பண்பாடுகள்

**விடை : ஆ) சிலேடைகள்**

2. 'முத்தமிழ்' என்பது ______ எனப் பிரிவது சரி.

அ) முத் + தமிழ் ஆ) முத்து + அமிழ் இ) முத்த் + தமிழ் ஈ) மூன்று + தமிழ்

**விடை : ஈ) மூன்று + தமிழ்**

3. 'முச்சங்கம்' என்பது ______ எனப் பிரியும்.

அ) மு + சங்கம் ஆ) முச் + சங்கம் இ) முச்சு + அங்கம் ஈ) மூன்று + சங்கம்

**விடை : ஈ) மூன்று + சங்கம்**

4. 'சங்கத்தவர் காக்க ஆழிக்கு இணை கிடந்த' இத்தொடரில் 'ஆழி' என்பதன் பொருள் ______.

அ) அலை ஆ) நீர்ப்பெருக்கு இ) கடல் ஈ) சக்கரம்

**விடை : இ) கடல்**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** (PTA - 5)

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்,

அ) தனிப்பாடல் திரட்டு ஆ) பழமொழி நானூறு
இ) ஆசாரக் கோவை ஈ) திரிகடுகம்

**விடை : அ) தனிப்பாடல் திரட்டு**

2. பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி

அ) இரட்டுறமொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி

**விடை : அ) இரட்டுறமொழிதல் அணி**

3. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது,

அ) சங்கப்பலகை ஆ) கடல் இ) அணிகலன் ஈ) புலவர்கள்

**விடை : ஆ) கடல்**

4. தொழிற்பெயர் அல்லாத சொல்,

அ) துய்ப்பதால் ஆ) மேவலால் இ) அணிகலன் ஈ) கண்டதால்

**விடை : இ) அணிகலன்**

5. முச்சங்கம் கண்டதால் என்பதன் சிலேடை,

அ) மூன்று சங்கங்களும், முத்தமிழும் ஆ) மூன்று சங்கங்கள், மூன்று சங்குகள்
இ) முச்சங்கும், முத்தமிழும் ஈ) முத்தமிழும், முத்தும் சங்கும்

**விடை : ஆ) மூன்று சங்கங்கள், மூன்று சங்குகள்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### குறுவினாக்கள்

1. **தமிழ் எவற்றோடெல்லாம் இணைத்துப் பேசப்படுகிறது?**
   - ➤ விண்ணோடும் முகிலோடும் உடுக்களோடும் கதிரவனோடும் கடலோடும், தமிழ் இணைத்துப் பேசப்படுகிறது.
2. **தமிழ் எவ்வாறு வளர்க்கப்பட்டது?**
   - ➤ முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என, முச்சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்க்கப் பட்டது.
3. **இரட்டுற மொழிதல் என்றால் என்ன?**
   - ➤ ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள் படுமாறு அமைக்கப்பெறுவது இரட்டுற மொழிதல் எனப்படும். இதனைச் ‘சிலேடை’ என்றும் அழைப்பர்.
4. **சங்கின் வகைகள் யாவை?**
   - ➤ வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் என்பன சங்கின் வகைகள்.
5. **‘தனிப்பாடல் திரட்டு’ என்பது யாது?**
   - ➤ ப;ஹ்வேறு புலவர்கள்பாடிய பாடல்களின் தொகுப்பு ‘தனிப்பாடல் திரட்டு’ என வழங்கப்பெறுகிறது.

### சிறுவினா

1. **தமிழழகனார் குறித்து அறிவன யாவை?**
   - ➤ பாடமாக அமைந்த இரட்டுற மொழிதலைப் பாடியவர் தமிழழகனார்.
   - ➤ இவரது இயற்பெயர் சண்முக சுந்தரம்.
   - ➤ இவர் ‘சந்தக் கவிமணி’ என அழைக்கப்பெற்றார்.
   - ➤ இலக்கணப் புலமையும் இளம் வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றவர். இவர் பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

### இலக்கணக்குறிப்பு

**முத்தமிழ், முச்சங்கம்** – பண்புத்தொகைகள்

**காக்க** – வியங்கோள் வினைமுற்று

**கிடந்த** – பெயரெச்சம்

**அணைகிடந்து** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

### பகுபத உறுப்பிலக்கணம்

1. **காக்க – கா + க் + க**

   **கா** – பகுதி

   **க்** – சந்தி

   **க** – வியங்கோள் வினைமுற்று விகுதி.

# விரிவானம்

# 4. உரைநடையின் அணிநலன்கள்

**(எழில்முதல்வன்)**

### பலவுள் தெரிக

1. முதல் தமிழ்க்கணினி உருவாக்கப்பட்ட ஆண்டு,

   அ) 1983 ஆ) 1938 இ) 1893 ஈ) 1980

   **விடை : அ) 1983**

2. முதல் தமிழ்க் கணினிக்குச் சூட்டப்பட்ட பெயர்,

   அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர் இ) அகத்தியர் ஈ) கம்பர்

   **விடை : அ) திருவள்ளுவர்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. புதிய உரைநடை என்னும் நூலினை எழுதியவர்,

அ) க. அப்பாதுரை ஆ) எழில் முதல்வன் இ) பாவாணர் ஈ) இளங்குமரனார்

**விடை : ஆ) எழில் முதல்வன்**

4. எழில்முதல்வனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்,

அ) புதிய உரைநடை ஆ) இனிக்கும் நினைவுகள்

இ) யாதுமாகி நின்றாய் ஈ) எங்கெங்கு காணினும்

**விடை : அ) புதிய உரைநடை**

5. 'பாட்டும் தொகையும்' எனக் குறிப்பிடப்பெறுபவை ______.

அ) காப்பியங்கள் ஆ) சிற்றிலக்கியங்கள் இ) அறஇலக்கியங்கள் ஈ) சங்கப்பாடல்கள்

**விடை : ஈ) சங்கப்பாடல்கள்**

6. செய்யுளில் இனிய ஓசை இன்பத்தை விளைவிக்க வருவன ______.

அ) மோனையும் சந்தமும் ஆ) எதுகையும் இயைபும்

இ) மோனையும் எதுகையும் ஈ) மோனையும் இயைபும்

**விடை : இ) மோனையும் எதுகையும்**

7. படிப்பவருக்கு முரண்படுவதுபோல இருக்கும்; உண்மையில் முரண்படாத மெய்ம்மையைச் சொல்வது ______.

அ) எதிரிணை இசைவு ஆ) முரண்படு மெய்ம்மை

இ) உச்சநிலை ஈ) இணையொப்பு

**விடை : ஆ) முரண்படு மெய்ம்மை**

8. உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுவது ______.

அ) உவமையைவிட உருவகமே ஆ) உருவகத்தைவிட உவமையே

இ) எதுகையைவிட மோனையே ஈ) கேள்வியிலே பதில் இருப்பதுபோல

**விடை : அ) உவமையைவிட உருவகமே**

9. 'Analogy' என்பதன் தமிழ்ச்சொல் யாது ?

அ) உவமை ஆ) உருவகம் இ) இணையொப்பு ஈ) இயல்பு நவிற்சி

**விடை : இ) இணையொப்பு**

10. 'Paradox' என்பதன் தமிழ்ச்சொல் யாது ?

அ) முரண்படு மெய்ம்மை ஆ) சொல் முரண்

இ) எதிரிணை இசைவு ஈ) இணை ஒப்பு

**விடை : அ) முரண்படு மெய்ம்மை**

## நெடுவினா

1. **'உரைநடையின் அணிகலன்கள்' என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள நயமான உரைநடைச் சான்றுகளை எடுத்தாள்க.**

**உரைநடையிலும் உவமை உருவகம் :**

உவமை, உருவகம், அணிநலன் போன்றவை, பொதுவாகச் செய்யுளில் மட்டுமே இடம்பெறுவதுண்டு. ஆனால், உரைநடையிலும் உவமை, உருவகம் இடம்பெற்றுத் தமிழுக்குச் சிறப்புச் செய்கின்றன. குறிஞ்சி மலர் என்னும் நூலில் நா. பார்த்தசாரதி, உவமையைக் கையாளுகிறார். "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே, இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப்போல், வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்" என்று எழுதியிருக்கிறார். மேலும், உரைநடையில் உவமையைவிட உருவகமே உணர்வுகளைத் தூண்டும் என்பது உண்மை. "களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது; உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று" என்று, அறிஞர் அண்ணா தம் தம்பிக்கு வரையும் மடலில் உணர்வைத் தூண்டியிருக்கிறார்.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அஃறிணை உயர்திணையால் உலா வருதல் :**

அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கருதிக் கற்பனை செய்து, உரைநடையில் இடம்பெறச் செய்வது சிறப்பு. உரைநடை எழுத்தாகட்டும், உரைநடைப் பேச்சாகட்டும், இரண்டிலும் புகழ்பெற்றுத் திகழ்ந்தவர் தமிழ்த்தென்றல் திரு. வி. க. "சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும்; ஆலமர நிழலில் அமர்வேன்; ஆல், 'என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா?' என்னும். அரசு கண்ணிற்படும். 'யான் விழுதின்றி வானுற ஓங்கி நிற்கிறேன். என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள், காண்' என்னும்." இப்படி மரங்களும் மலையும் பேசுவதாகக் கற்பனை செய்து பார்க்கிறார் திரு. வி. கலியாணசுந்தரனார்.

**எதுகையும் மோனையும் இழையோடிய உரைநடை :**

எதுகையும் மோனையும் செய்யுளில் இடம்பெறுபவை. இனிய ஓசையின்பத்தை விளைவிப்பவை. உரைநடையிலும் எதுகை மோனையை இடம்பெறச் செய்து, இனிமையாக்கிய உரைநடைச் சான்று ஒன்றைக் குறிப்பிடலாம். "தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; குரவமும் முல்லையும் நறுமணங் கமழும்!" இப்படித் 'தமிழின்பம்' என்னும் நூலில் எழுதுகிறார், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை.

**சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நடை :**

உணர்வு வெளிப்பாட்டிற்குச் சொல்லப்படும் கருத்திற்கு அழுத்தம் தரவும், சொல்லையோ, கருத்தையோ திரும்பத் திரும்பச் சொல்வதுண்டு! சொற்களை அளவாகப் பயன்படுத்தி, உரைநடையை அழகு செய்கிறார் டாக்டர் மு. வ. "வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள்கள் பல வேண்டும். அரிசி, காய், கனி முதலியவை வேண்டும். உடை, வீடு முதலியவை வேண்டும். காசும், காகித நோட்டும் வேண்டும். இன்னும் பல வேண்டும். இவற்றை ஆளும் அறிவும் வேண்டும்" என்று, எழுதியிருக்கிறார்.

**சொல்முரணிலும் மெய்ம்மையைக் காட்டும் நடை :**

படிப்பவருக்கு முரண்படுவதுபோல் சொற்கள் இருக்கும்; உண்மையில் முரண்படாத – மெய்ம்மையைச் சொல்வதுதான் அவை. 'முரண்படு மெய்ம்மை' என்பது, அதற்குப் பெயர். "குடிசைகள் ஒருபக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்! பசித்த வயிறுகள் ஒருபக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்! மெலிந்த எலும்புக்கூடுகள் ஒருபக்கம்; பருத்த தொந்திகள் மறுபக்கம்! இந்தச் சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே, சிந்தியுங்கள்!" என்று, தோழர் ப. ஜீவானந்தம் எழுதியிருப்பது, இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

# கற்கண்டு

# 5. எழுத்து, சொல்

## பலவுள் தெரிக

1. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது (PTA -1)

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**விடை : ஈ) வினையாலணையும் பெயர்**

2. வெஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ – இச்சொற்களில் உள்ள அளபெடைகள் (PTA -6)

ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை ஆ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

**விடை : ஆ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை**

3. மலர்விழி பாடினாள் – இத்தொடர் : (May - 22)

அ) பொதுமொழி ஆ) தனிமொழி இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

**விடை : இ) தொடர்மொழி**

4. சார்பெழுத்துகள், ______ வகைப்படும்.

அ) மூன்று ஆ) நான்கு இ) ஆறு ஈ) பத்து

**விடை : ஈ) பத்து**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. ‘துன்புறூஉம் – இன்புறூஉம்‘ – இவற்றில் எவ்வகை அளபெடை அமைந்துள்ளது.
அ) சொல்லிசை ஆ) செய்யுளிசை இ) இன்னிசை ஈ) இசைநிறை
**விடை : இ) இன்னிசை**

6. செய்யுளிசை அளபெடையை, ____எனவும் வழங்குவர்.
அ) சொல்லிசை அளபெடை ஆ) இசைநிறை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) தாப்பிசை அளபெடை
**விடை : ஆ) இசைநிறை அளபெடை**

7. ‘கோள்’ என்னும் சொல், ______ எனப்படும்.
அ) தொழிற்பெயர் ஆ) முதனிலைத் தொழிற்பெயர்
இ) முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்
**விடை : இ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

8. கீழ்வருவனவற்றுள் பெயரெச்சத்தொடரை எடுத்து எழுதுக.
அ) சென்று கேட்டான் ஆ) படித்த கயல்விழி
இ) ஆடினான் பாடினான் ஈ) அவன் பேசினான்
**விடை : ஆ) படித்த கயல்விழி**

9. கீழ்வருவனவற்றுள் பெயரெச்சம் பயின்று வந்துள்ள சொற்றொடர்
அ) அவன் நல்லவன் ஆ) சென்ற கோதை இ) படித்து வந்தான் ஈ) போய் வருகிறான்
**விடை : ஆ) சென்ற கோதை**

10. நிகழ்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்து எழுதுக.
அ) வந்தான் ஆ) வருவான் இ) வருகிறான் ஈ) வருகின்றவன்
**விடை : இ) வருகிறான்.**

11. பொதுமொழியைத் தேர்ந்தெழுதுக.
அ) கண் ஆ) கடல் இ) தாமரை ஈ) கண்ணாடி
**விடை : இ) தாமரை**

## குறுவினாக்கள்

**1. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- சார்பெழுத்துகள், பத்து வகைப்படும்.
- **அவை** : உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகியன.

**2. அளபெடை என்றால் என்ன?**

- செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவு செய்வதற்காகச் சில எழுத்துகள் நீண்டு ஒலிப்பதை, அளபெடை என்று கூறுவர்.

**3. உயிரளபெடை என்றால் என்ன?**

- செய்யுளில் ஓசை குறையும்போது, மொழிக்கு முதல், இடை, கடை என மூன்று நிலைகளிலும் உயிர் நெட்டெழுத்துகள் ஏழும், தத்தம் அளவில் நீண்டு ஒலிப்பதை, உயிரளபெடை என்பர்.
- அளபெடுக்கும் நெட்டெழுத்தின் இனமான உயிர்க் குற்றெழுத்து, அதனை அடுத்து அடையாளமாக எழுதப்படும்.

**4. உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- உயிரளபெடை, மூன்று வகைப்படும்.அவை செய்யுளிசையளபெடை அல்லது இசைநிறையளபெடை, இன்னிசையளபெடை, சொல்லிசையளபெடை.

**5. தொடர்மொழி என்றால் என்ன?**

- இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து நின்று, பொருள்களைத் தருவது தொடர்மொழியாகும்.
  **எ – கா** : கண்ணன் வந்தான். மலர் வீட்டிற்குச் சென்றாள்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. **தொழிற்பெயர் என்றால் என்ன?**

- ஒரு தொழிலைக் (செயலைக்) குறிக்கும் பெயர், தொழிற்பெயர் எனப்படும்.
- எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாது பொதுவாக வரும்.

  **எ – கா :** உண்ணல், கற்றல், ஈதல், கல்வி, கேள்வி.

7. **எதிர்மறைத் தொழிற்பெயர் என்றால் என்ன?**

- தொழிற்பெயர், எதிர்மறைப் பொருளில் வருவது, எதிர்மறைத் தொழிற்பெயராகும்.

  **எ – கா :** நடவாமை, கொல்லாமை.

## சிறுவினாக்கள்

1. **செய்யுளிசையளபெடை என்றால் என்ன?**

- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் ‘செய்யுளிசை அளபெடை’ என்பர்.

  **எ – கா :** ஓஒதல் வேண்டும்...

- இக்குறளில் ‘ஒதல் வேண்டும்’ என அமைந்தால், ‘மாமுன்நேர்’ எனத் தளை தட்டும். ஆதலால், ‘ஓஒதல் வேண்டும்’ என நெட்டெழுத்தை நீட்டி ஒலித்து, ‘விளம்முன்நேர்’ எனத் தளை தட்டாமல் அமைந்தது.

2. **இன்னிசையளபெடை என்றால் என்ன?**

- செய்யுளில் ஓசை குறையாத (தளை தட்டாத) இடத்தும், இனிய ஓசைக்காக (குறில் நெடிலாகி) அளபெடுப்பது இன்னிசையளபெடை ஆகும்.

  **எ – கா :** கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
  எடுப்பதூஉம் எல்லாம் மழை

- கெடுப்பதும் என்பது கெடுப்பதூஉம்... எனவும், எடுப்பதும் என்பது எடுப்பதூஉம்... எனவும் வந்துள்ளமை இன்னிசை அளபெடையாகும்.

3. **சொல்லிசையளபெடை என்றால் என்ன?**

- செய்யுளில் பெயர்ச்சொல்லானது வினையெச்சமாகமாறி அளபெடுப்பது, சொல்லிசையளபெடை ஆகும்.

  **எ – கா :** ‘உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
  வரனசைஇ இன்னும் உளேன்’.

- ‘விருப்பம்’ எனப் பெயர்ப்பொருள் தரும் ‘நசை’, ‘விரும்பி’ என்னும் (வினையெச்சப்) பொருள் தருவதற்காக ‘நசைஇ’ என அளபெடுத்ததால், சொல்லிசை அளபெடை ஆயிற்று.

4. **ஒற்றளபெடை என்றால் என்ன?**

- செய்யுளில் மெய்யெழுத்துகளின் ஓசை குறையும்போது, அதனை நிறைவு செய்ய ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆய்தம் (ஃ) ஆகிய எழுத்துகள் அளபெடுப்பது, ஒற்றளபெடை எனப்படும்.

  **எ – கா :** கலங்ங்கு நெஞ்சமில்லை
  எஃஃகிலங்கிய

- ஒற்றெழுத்து அளபெடுத்துள்ளதைக் காட்ட, அளபெடுத்த அவ்வெழுத்தே அடுத்து எழுதப்பெறும்.

5. **பொதுமொழி என்றால் என்ன?**

- ஒரு சொல், தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே, பிரிந்துநின்று, தொடர்மொழியாகி வேறு பொருளையும் தருவது பொதுமொழியாகும்.

  **எ – கா :** தாமரை (தனிமொழி) – தாமரைப்பூவைக் குறிக்கும்.
  தா + மரை (தொடர்மொழி) – தாவுகின்ற மானைக் குறிக்கும்.

- இவ்வாறு ஒருசொல், தனிமொழியாகவும் தொடர்மொழியாகவும் வெவ்வேறு பொருள் தருவது பொதுமொழியாகும்.

6. **விகுதிபெற்ற தொழிற்பெயர்கள் என்றால் என்ன?**

- தொழிற்பெயர்கள், விகுதிகளைப் பெற்று வருவன, விகுதிபெற்ற தொழிற்பெயர்களாகும். அவை தல், அல், அம், வை, கை, உ, சி என வரும். வினைமுற்றுச் சொற்களின் பகுதிகளோடு விகுதிகளைச் சேர்ப்பதால் தொழிற்பெயராகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



| | | | | |
|---|---|---|---|---|
| எ – கா : | கூறுதல் – கூறு + தல் | | ஆளல் – ஆள் + அல் |
| | நாட்டம் – நாடு + அம் | | பறவை – பற + வை |
| | வாழ்க்கை – வாழ் + கை | | செலவு – செல் + உ |
| | ஆட்சி – ஆள் + சி | | |

**7. முதனிலைத் தொழிற்பெயர் என்பது யாது?**

➤ விகுதி பெறாமல், வினைப்பகுதி மட்டுமே தொழிற்பெயராக அமைவது, முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

எ – கா : அவன் அடிபட்டான் – அடி
அவள் உரைத்தாள் – உரை

➤ இத்தொடரில் அடி, உரை என்பன, முதல் நிலைகளாகும். அடித்தல், உரைத்தல் எனும் தொழிற்பெயர்கள், 'தல்' விகுதி பெறாமல் அடி, உரை என்னும் பகுதிகள்மட்டும் தொழிலை ஆற்றுவதால், முதல்நிலைத் தொழிற்பெயர்கள் ஆகும்.

**8. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன?**

➤ முதனிலைத் தொழிற்பெயர், சில இடங்களில் திரிந்து வரும். அதனை முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்பர்.

எ – கா : **குறிக்கோள்** இலாது கெட்டேன். கொள் எனும் வினைப்பகுதி (முதனிலை), கோள் எனத் திரிந்து தொழிற்பெயராக நின்றது.

➤ கேடு நினைத்தான் – கெடு என்பது, கேடு எனத் திரிந்து தொழிற்பெயர் ஆனது.

➤ கோள், கேடு என்பன, முதனிலை திரிந்த தொழிற்பெயர்களாகும்.

**9. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?**

➤ ஒரு வினைமுற்றுச்சொல், பெயர்த்தன்மை பெற்று, அவ்வினையைச் செய்தவனையோ, பொருளையோ குறிக்கும் சொல்லாக வருவது, வினையாலணையும் பெயராகும்.

எ – கா : **வந்தவர்** அவர்தாம். **படித்தவர்,** தேர்வில் வெற்றி பெற்றார்.
படித்தவர், வந்தவர் – வினையாலணையும் பெயர்களான.
படி – வினைப்பகுதி; படித்தல் – தொழிற்பெயர்; படித்தார் – வினைமுற்று;
படித்தவர் – வினையாலணையும் பெயர்.

**10. முதனிலைத் தொழிற்பெயருக்கும், முதனிலை திரிந்த தொழிற்பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

**தொழிற்பெயர் :** வினைப்பகுதியோடு விகுதி சேர்ந்து வரும். – கெடு + தல்

**முதனிலைத் தொழிற்பெயர் :** பகுதி மட்டுமே வரும். – கெடு

**முதனிலை திரிந்த தொழிற்பெயர் :** பகுதி திரிந்து வரும். – கேடு

**11. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

**தொழிற்பெயர் :**

1. தொழிலைக் குறிக்கும். நடத்தல்
2. காலம் காட்டாது. – வருதல்
3. படர்க்கை இடத்திற்கு உரியது. – உண்ணல்

**வினையாலணையும் பெயர் :**

1. தொழில் செய்த கருத்தாவைக் குறிக்கும். நடந்தவர்
2. காலம் காட்டும். வந்தவர் (இறந்தகாலம்)
3. மூவிடத்திற்கும் உரியது. உண்டேனை (தன்மை), உண்டாங்கு (முன்னிலை) உண்டானை (படர்க்கை

**இன்சொற்களைப் பேசுவதால் விளையும் நன்மைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.** (June-23)

பிறர் மனம் மகிழும், அறம் வளரும், புகழ் பெருகும், நல்ல நண்பர்கள் சேருவர், அன்பு நிறையும்)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் - 2

## உரைநடை உலகம்

## 1. கேட்கிறதா என் குரல்!

### பலவுள் தெரிக

1. பொருத்துக. (PTA - 3)

அ) குடக்கு - 1. வடக்கு
ஆ) ஊதைக்காற்று - 2. கிழக்கு
இ) குணக்கு - 3. மேற்கு
ஈ) பூங்காற்று - 4. தெற்கு

அ) 3 4 1 2 ஆ) 1 3 4 2 இ) 3 1 2 4 ஈ) 4 3 1 2

**விடை : இ) 3 1 2 4**

2. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" – இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள் (PTA - 6)

அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டு விடும்
ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்
இ) உரிய காலத்தில் காற்றைவிட வேகமாகச் செயல் பட வேண்டும்
ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேட வேண்டும்.

**விடை : ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்**

3. உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்றவர் ______.

அ) தொல்காப்பியர் ஆ) கம்பர் இ) திருவள்ளுவர் ஈ) காந்தியடிகள்

**விடை : அ) தொல்காப்பியர்**

4. உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா, ______ இடம் பெற்றுள்ளது.

அ) முதலாம் ஆ) ஐந்தாம் இ) ஆறாம் ஈ) இரண்டாம்

**விடை : ஆ) ஐந்தாம்**

5. பருவக்காற்றின் பயனை உலகுக்கு உணர்த்திய கிரேக்க அறிஞர் ______

அ) மெர்சிஸ் ஆ) ஹிப்போ இ) ஹிப்பாலஸ் ஈ) ஈனிட்

**விடை : இ) ஹிப்பாலஸ்**

6. இந்தியக் காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் வகிக்கும் இடம் ______.

அ) முதலாவது ஆ) இரண்டாவது இ) மூன்றாவது ஈ) ஐந்தாவது

**விடை : அ) முதலாவது**

7. "மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும்" எனக் கூறியவர் ______.

அ) திருவள்ளுவர் ஆ) திருமூலர் இ) ஔவையார் ஈ) ஐயூர் முடவனார்

**விடை : ஆ) திருமூலர்**

8. வறண்ட நிலப்பகுதியிலிருந்து அதிக வலிமையோடு வீசுவது ______.

அ) கடல்காற்று ஆ) ஊதைக்காற்று இ) மழைக்காற்று ஈ) வெப்பக்காற்று

**விடை : ஈ) வெப்பக்காற்று**

9. பனிப் பகுதியிலிருந்து குளிர்ச்சியாக வீசுவதால் ______ என அழைக்கின்றனர்.

அ) கழைக்காற்று ஆ) மென்காற்று இ) ஊதைக்காற்று ஈ) பருவக்காற்று

**விடை : இ) ஊதைக்காற்று**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவது ______.

அ) கொண்டல் ஆ) கோடை இ) வாடை ஈ) தென்றல்

**விடை : ஈ) தென்றல்**

11. "மலர்களின் நறுமணத்தோடு வண்டுகளையும் அழைத்துவருகிறது தென்றல்!" எனப் பாடியவர் ______.

அ) ஔவையார் ஆ) பொன்முடியார் இ) இளங்கோவடிகள் ஈ) சாத்தனார்

**விடை : இ) இளங்கோவடிகள்**

12. காற்றின் மேலடுக்கில் உள்ள ஓசோன் படலம் கதிரவனிடமிருந்து வெளிவரும் ______ தடுக்கிறது.

அ) குளோரோ புளோரோ கார்பனை ஆ) ஹைட்ரோகார்பனை

இ) புறஊதாக் கதிர்களை ஈ) கந்தக டை ஆக்சைடை

**விடை : இ) புறஊதாக் கதிர்களை**

## குறுவினா

**1. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறித்து எழுதுக.** (PTA - 5)

- முதலாம் நூற்றாண்டில், பருவக்காற்றின்மூலம் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தவர் ஹிப்பாலஸ் என்னும் கிரேக்க மாலுமி.
- அதனால், யவனர்கள் அவர் பெயரையே அந்தப் பருவகாற்றுக்குச் சூட்டியதால், 'ஹிப்பாலஸ் பருவக்காற்று' என அழைக்கப்படுகிறது.

**2. வாடைக்காற்று வீசும் திசை பெயர்க் காரணம் கூறுக.**

- 'வடக்கு' என்பதற்கு 'வாடை' என்ற பெயரும் உண்டு. வடக்கிலிருந்து வீசுவதால் 'வாடைக் காற்று' எனப்படுகிறது. பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான 'ஊதைக்காற்று' எனவும் அழைக்கப்படுகிறது.

**3. 'தென்றல் காற்று' – விவரி.**

- தெற்கிலிருந்து வீசுவதனால் 'தென்றல் காற்று' எனப்படுகிறது. மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான இயல்போடு வீசுவதால் 'மென்தென்றல்' என வழங்கப்பெறுகிறது.

**4. காற்றினால் விளையும் பயன்களைக் குறிப்பிடுக.**

- வாழும் எல்லா உயிர்களின் உயிர்மூச்சு காற்றுதான். காற்றினைக் கண்களால் காணமுடியாது.
- மெய்யால் உணர முடியும். காற்றினால் மழை பொழிகிறது; பருவமாற்றம் உண்டாகிறது.
- இசையும் இலக்கியமும்கூடக் காற்றின் பயன்களே!

**5. காற்று இல்லையெனில் மனிதனின் நிலை என்ன?**

- மனிதன், உணவு இல்லாமல் ஐந்து வாரம் உயிர் வாழமுடியும்.
- நீர் இல்லாமல் ஐந்து நாள் உயிர் வாழமுடியும்.
- ஆனால், காற்று இல்லாமல் ஐந்து நிமிடம்கூட உயிர்வாழ முடியாது.

**6. காற்று மாசடைவதால் மனிதர்களுக்கு ஏற்படும் உடல் பாதிப்புகள் யாவை?**

- காற்று மாசடைவதால், கண்எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல், நுரையீரல்புற்றுநோய், இளைப்புநோய் எனப் பல நோய்களால் மனிதர்கள் துன்பமடைவார்கள்.

**7. காற்று எவ்வாறு புவியைக் காக்கிறது?**

- காற்றின் மேலடுக்கில் உள்ள ஓசோன் படலத்தின்மூலம் கதிரவனிடமிருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கும் அரணாக விளங்குகிறது. காற்றானது புவியை ஒரு போர்வைபோலச் சுற்றிக் கிடந்து பரிதியின் கதிர்ச் சூட்டைக் குறைத்துப் பாதுகாக்கிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. மரங்களை ஏன் வளர்க்க வேண்டும்?**

- இம்மண்ணுலகில் வாழும் உயிரினங்கள் மூச்சுக்காற்றாக வெளிவிடும் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு, உயிரினங்களின் நுரையீரலுக்குத் தேவையான உயிர்வளியை (ஆக்சிஜனை) கைமாறு கருதாமல் தரும் தோழர்களாக மரங்கள் உள்ளன.
- எனவே, இதை மக்கள் மனத்தில் கொண்டு மரங்களை வளர்க்க வேண்டும்.

**9. காற்றின் ஆற்றல்களாக அறியப்படுவன யாவை?**

- காற்றானது, உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது. தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகிறது; விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகிறது.
- மலர், தேன், கனி, தாவரங்கள், உயிரினங்கள் ஆகியவற்றின் மணத்தைச் சுமந்து இப்புவியில் உயிர்ச்சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது.
- நவீன தொலைத்தொடர்புக்கு மையமாகவும் உள்ளது. மின்னாற்றலை உருவாக்க உதவுகிறது.

## சிறுவினாக்கள்

**1. நான்கு திசைகளில் இருந்தும் வீசுகின்ற காற்றின் பெயர்களையும் அதன் தன்மைகளையும் எழுதுக.**

- கிழக்கில் இருந்து வீசும் ‘கொண்டல்’ காற்று குளிர்ச்சியானது. இது மழையைத் தரும். கடல் பகுதிக்கு மேலுள்ள மழை மேகங்களைச் சுமந்து வருவதால், இது ‘மழைக்காற்று’ எனப்படும்.
- மேற்கிலிருந்து வீசும் ‘கோடைக்’காற்று அதிக வலிமையோடு வீசும். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால், இது ‘வெப்பக்காற்று’ எனப்படுகிறது.
- வடக்கிலிருந்து வீசும் ‘வாடைக்’காற்று, பனிப் பகுதியிலிருந்து வீசுவதால், குளிர்ச்சியான ‘ஊதைக்காற்று’ என அழைக்கப்படுகிறது.
- தெற்கிலிருந்து வீசும் ‘தென்றல்’காற்றானது மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால், வேகம் குறைந்து, இதமான இயல்பு கொள்கிறது.

**2. காற்று எவ்வாறெல்லாம் மாசடைகின்றது?**

- காற்று இல்லாமல் உயிர் வாழமுடியாது என்பதை உணர்ந்திருந்தும் மக்கள் காற்றை ஒவ்வொரு விநாடியும் மாசுபடுத்துகின்றனர்.
- குப்பைகள், நெகிழிப் பைகள், மெது உருளைகள் (Tyres) போன்றவற்றை எரிப்பதாலும், குளிர் சாதனப்பெட்டி, குளிரூட்டப்பட்ட அறை ஆகியவற்றை மிகுதியாகப் பயன்படுத்துவதாலும், மிகுதியாகப் பட்டாசுகளை வெடிப்பதாலும், புகை வடிகட்டிகள் இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குவதாலும் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தாது, தனி மனித ஊர்திகளைப் பயன்படுத்துவதாலும், வானூர்திகள் வெளிவிடும் புகையாலும் ஒவ்வொரு வினாடியும் காற்று மாசடைந்து பாழாகிறது.

# கவிதைப்பேழை

# 2. காற்றே வா!

## பலவுள் தெரிக

1. பாரதியார், காற்றை ‘மயலுறுத்து’ அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் ______. (PTA - 4)

அ) மணம் வீசும் காற்றாய் நீ வா

ஆ) மனத்தை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா

இ) மயிலாடும் காற்றாய் நீ வா

ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

**விடை : ஆ) மனத்தை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா**

2. ‘நல்லொளி’ என்பது _______ எனப் பிரிவது சரி.

அ) நல் + லொளி ஆ) நல் + ஒளி இ) நன்மை + ஒளி ஈ) நல்ல + ஒளி

**விடை : இ) நன்மை + ஒளி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. நெடுங்காலம் என்பதை ______ எனப் பிரிப்பதே சரி.

அ) நெடு + காலம் ஆ) நெடிய + காலம் இ) நெடும் + காலம் ஈ) நெடுமை + காலம்

**விடை : ஈ) நெடுமை + காலம்**

4. பாரதியார் படைத்த காவியம் ______.

அ) புதிய ஆத்திசூடி ஆ) கண்ணன் பாட்டு இ) பாப்பா பாட்டு ஈ) குயில் பாட்டு

**விடை : ஈ) குயில் பாட்டு**

5. புதுக்கவிதை தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது. – எவ்வகைத் தொடர்?

அ) தன்வினைத்தொடர் ஆ) பிறவினைத்தொடர்

இ) செய்வினைத்தொடர் ஈ) செயப்பாட்டு வினைத்தொடர்

**விடை : ஈ) செயப்பாட்டு வினைத்தொடர்**

## குறுவினாக்கள்

**1. காற்று எதனைக் கொண்டுவரப் பாரதியார் பாடுகிறார்?**

➤ காற்று, மனத்தை மயக்கும் இனிய வாசனையுடன் இலைகளின்மீதும், நீர் அலைகளின்மீதும் உராய்ந்து, பிராண சக்தியைக் கொண்டுவரப் பாரதியார் பாடுகிறார்.

**2. காற்று எத்தகைய வாசனையுடன் வரவேண்டும் எனப் பாரதியார் பாடுகிறார்?**

➤ மலர்களில் உள்ள வாசனைமிக்க மகரந்தத்தூளைக் காற்று சுமந்து கொண்டுவந்து, மனத்தை மயக்க வேண்டும் எனப் பாரதியார் பாடுகிறார்.

**3. பாரதி எவ்வாறெல்லாம் பாராட்டப் பெறுகிறார்?**

➤ தேசியக்கவி, மகாகவி, பாட்டுக்கொரு புலவன் பாரதி, நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, சிந்துக்குத் தந்தை என்றெல்லாம் பாரதி பாராட்டப் பெறுகிறார்.

**4. பாரதி 'ஒரு பன்முகத் திறனாளர்' – எவ்வாறு?**

➤ கவிஞர், கட்டுரையாளர், இதழாசிரியர், சிறுகதை ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், சமுதாய முற்போக்குச் சிந்தனையாளர் எனப் பல்வேறு திறன்களைப் பெற்றவராதலால், பாரதி ஒரு பன்முகத் திறனாளர் ஆவார்.

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** **(Sep.-22)**

"காற்றே வா"
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன்வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு"

1. மயலுறுத்து' என்பதன் பொருள் :

அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய் இ) அடங்கச் செய் ஈ) சீராக

**விடை : ஆ) மயங்கச் செய்**

2. ப்ராண ரஸம் – பொருள் தருக.

அ) உயிர் வளி ஆ) கார்பன்–டை–ஆக்ஸைடு

இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக – டை – ஆக்ஸைடு

**விடை : அ) உயிர் வளி**

3. 'மிகுந்த' – இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம் இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை

**விடை : இ) பெயரெச்சம்**

4. நீரலைகளின் – பிரித்தெழுதுக.

அ) நீர் + அலைகளின் ஆ) நீரின் + அலைகளின்

இ) நீரலை + களின் ஈ) நீர + அலைகளின்

**விடை : அ) நீர் + அலைகளின்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** **(June.-23)**

“சக்தி குறைந்துபோய், அதனை அவித்துவிடாதே.
பேய்போல வீசி அதனை மடித்துவிடாதே.
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்
நின்று வீசிக் கொண்டிரு.
உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்”

1. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ‘லயத்துடன்’ என்ற சொல்லின் பொருள் :

அ) கழலாக ஆ) கடுமையாக இ) சீராக ஈ) வேகமாக

**விடை : இ) சீராக**

2. பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களை தேர்க.

அ) அவித்து விடாதே, நெடுங்காலம் ஆ) மடித்து விடாதே, பாடுகிறோம்
இ) மெதுவாக லயத்துடன் ஈ) பாடுகிறோம், கூறுகிறோம்

**விடை : ஈ) பாடுகிறோம், கூறுகிறோம்**

3. இக்கவிதையை இயற்றியவர்

அ) திரு.வி.க. ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) மு. மேத்தா

**விடை : ஆ) பாரதியார்**

4. ‘நெடுங்காலம்’ என்ற சொல்லைப் பிரித்தால் கிடைப்பது ______.

அ) நெடுமை + காலம் ஆ) நெடிய + காலம் இ) நெடு + காலம் ஈ) நெடுங் + காலம்

**விடை : அ) நெடுமை + காலம்**

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** **(Sep. - 20, 22)**

“காற்றே, வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன்வா
இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ரரண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு”.

1. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும் இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம் :

அ) மொட்டின் வருகை ஆ) வனத்தின் நடனம் இ) உயிர்ப்பின் ஏக்கம் ஈ) நீரின் சிலிர்ப்பு

**விடை : ஆ) வனத்தின் நடனம்**

2. ‘நல்லொளி’ என்பது ______ எனப் பிரிவது சரி.

அ) நல் + லொளி ஆ) நல் + ஒளி இ) நன்மை + ஒளி ஈ) நல்ல + ஒளி

**விடை : இ) நன்மை + ஒளி**

3. நெடுங்காலம் என்பதை ______ எனப் பிரிப்பதே சரி.

அ) நெடு + காலம் ஆ) நெடிய + காலம் இ) நெடும் + காலம் ஈ) நெடுமை + காலம்

**விடை : ஈ) நெடுமை + காலம்**

4. பாரதியார் படைத்த காவியம் ______.

அ) புதிய ஆத்திசூடி ஆ) கண்ணன் பாட்டு இ) பாப்பா பாட்டு ஈ) குயில் பாட்டு

**விடை : ஈ) குயில் பாட்டு**

5. புதுக்கவிதை தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப் பட்டது. – எவ்வகைத் தொடர்?

அ) தன்வினைத்தொடர் ஆ) பிறவினைத்தொடர்
இ) செய்வினைத்தொடர் ஈ) செயப்பாட்டு வினைத்தொடர்

**விடை : ஈ) செயப்பாட்டு வினைத்தொடர்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# கவிதைப்பேழை

# 3. முல்லைப்பாட்டு

## பலவுள் தெரிக

1. தலைவன் வருகைக்காக முதுபெண்டிர், தெய்வத்தின்முன் ______ கேட்டு நின்றனர்.

அ) வனப்பு ஆ) ஏறுதழுவுதல் இ) பொருள் ஈ) விரிச்சி

**விடை : ஈ) விரிச்சி**

2. முல்லைப்பாட்டு, ______ நூல்களுள் ஒன்று.

அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை இ) பதிற்றுப்பத்து ஈ) ஐந்திணை

**விடை : அ) பத்துப்பாட்டு**

3. முல்லைத்திணைக்குரிய உரிப்பொருள் ______.

அ) புணர்தல் புணர்தல் நிமித்தம் ஆ) இருத்தல் இருத்தல் நிமித்தம்

இ) பிரிதல் பிரிதல் நிமித்தம் ஈ) இரங்கல் இரங்கல் நிமித்தம்

**விடை : ஆ) இருத்தல் இருத்தல் நிமித்தம்**

4. "சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்" என்பதில் 'இளமை' எனப் பொருள் தரும் சொல் ______.

அ) சிறுதாம்பு ஆ) தொடுத்த இ) பசலை ஈ) கன்று

**விடை : இ) பசலை**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** **(PTA - 1, Mar.-24)**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி,வலன் ஏர்பு,
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலைத் தேர்க.

அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல் இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

**விடை : இ) முல்லைப்பாட்டு**

2. 'நனந்தலை உலகம்' என்பதன் சரியான பொருளைத் தேர்க.

அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம் இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

**விடை : ஈ) அகன்ற உலகம்**

3. 'தடக்கை' – இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.

அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத்தொகை

இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத்தொடர்

**விடை : அ) உரிச்சொல் தொடர்**

4. பாடலின் ஆசிரியரைத் தேர்க.

அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார்

இ) கீரந்தையார் ஈ) இளங்கோவடிகள்

**விடை : ஆ) நப்பூதனார்**

5. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.

அ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஆ) கோடுகொண்டு, பெரும்பெயல்

இ) நனந்தலை, வலம்புரி ஈ) பொறித்த, பொழிந்த

**விடை : அ) பாடுஇமிழ், கோடுகொண்டு**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## குறுவினாக்கள்

1. **மேகம் எவ்வாறு மழையைப் பொழிந்தது?**

   - ஒலிக்கும் குளிர் கடல்நீரைப் பருகிய மேகம், விரைவாக உயர்ந்து எழுந்து, திருமாலைப்போல பெருந்தோற்றம் கொண்டு, வேகத்துடன் வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து விரைவான பெருமழையைப் பொழிந்தது.

2. **முல்லைத்திணைக்குரிய முதல் பொருளாவன யாவை?**

   **முல்லைத்திணைக்குரிய முதல் பொருளுள், நிலம் :** காடும் காடு சார்ந்த இடமும்.

   **பொழுதுகள் :** பெரும்பொழுது – கார்காலம்; சிறுபொழுது – மாலை.

3. **ஓர் இடைமகள் கண்ட இளங்கன்றின் துயரினைக் கூறுக.**

   - இடைமகள் ஒருத்தி கண்ட இளங்கன்று, ஒரு சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்டிருந்தது.
   - பால் உண்ணாமையால், பசியால் வாடிக் கொண்டிருந்தது.

4. **இடையர்மகள் கன்றுக்குக் கூறிய நன்மொழி யாது?**

   - இடையர்மகள், பசியால் வாடிய கன்றைப் பார்த்து, “வளைந்த கத்தியை உடைய கம்பைக் கையில் கொண்ட இடையர் ஓட்டிவர, புல்லை மேய்ந்த உன் தாய்மார் இப்போது வந்துவிடுவர்! வருந்தாதே” என்று, நன்மொழி கூறினாள்.

5. **முதுபெண்டிர் தலைவியிடம் யாது கூறினர்?**

   - “உன் தாய்மார் இப்போதே வந்துவிடுவர் என, இடைமகள் கூறிய நற்சொல்லை நாங்கள் கேட்டோம்.
   - நீ வருந்தாதே” எனத் தலைவியிடம் முதுபெண்டிர் கூறினர்.

6. **முதுபெண்டிர் பிரிவுத்துயரில் வருந்திய தலைவியை எவ்வாறு ஆற்றுப்படுத்தினர்?**

   - விரிச்சி கேட்ட முதுபெண்டிர், பிரிவுத்துயரில் வருந்திய தலைவியை நோக்கி, “தெய்வம் தொழுது நற்சொல் கேட்டோம்.
   - நின் தலைவன் பகைவரை வென்று திரைப் பொருளோடு வருவது உறுதி. மனத்தடுமாற்றம் கொள்ளாதே” எனக் கூறி ஆற்றுப்படுத்தினர்.

7. **கார்காலத்தில் வானில் எழுந்த மேகத்தை முல்லைப்பாட்டு எவ்வாறு குறிக்கிறது?**

   - அகன்ற உலகத்தை வளைத்துப் பெய்த கார்கால மேகமானது வலம்புரிச் சங்கும் சக்கரமும் வானில் எழுந்து கொண்ட, குறுகிய வடிவம் கொண்ட திருமால், மாவலி நிர் வார்த்தபோது மண்ணுக்கும் விண்ணுக்குமாய்ப் பேருருக் கொண்டு உயர்ந்து நின்றது போலிருந்தது என முல்லைப்பாட்டு வருணித்துள்ளது.

## இலக்கணக்குறிப்பு

**வளைஇ** – சொல்லிசை அளபெடை

**மாஅல்** – செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை

**தூஉம்** – இன்னிசை அளபெடை

**கொடுங்கோல், கொடுஞ்செலவு, பெரும்பெயல், சிறுபுன்மாலை, அருங்கடி, நறுவீ, பெருமுது பெண்டிர், சிறுதாம்பு, நன்மொழி** – பண்புத் தொகைகள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## பகுபத உறுப்பிலக்கணம்

1. பொழிந்த – பொழி + த் (ந்) + த் + அ
   பொழி – பகுதி
   த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
   த் – இறந்தகால இடைநிலை
   அ–பெயரெச்ச விகுதி
2. எழுந்த – எழு + த் (ந்) + த் + அ
   எழு–பகுதி
   த்–சந்தி, 'ந்' ஆனது விகாரம்
   த்–இறந்தகால இடைநிலை
   அ–பெயரெச்ச விகுதி.
3. நிமிர்ந்த – நிமிர் + த் (ந்) + த் + அ
   நிமிர் – பகுதி
   த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
   த் – இறந்தகால இடைநிலை
   அ – பெயரெச்ச விகுதி.
4. அசைத்த – அசை + த் + த் + அ
   அசை – பகுதி
   த் – சந்தி
   த் – இறந்தகால இடைநிலை
   அ – பெயரெச்ச விகுதி
5. தொடுத்த – தொடு + த் + த் + அ
   தொடு – பகுதி
   த் – சந்தி
   த் – இறந்தகால இடைநிலை
   அ – பெயரெச்ச விகுதி
6. வருகுவர் – வா (வரு) + கு + வ் + அர்
   வா – பகுதி, 'வரு' எனத் திரிந்தது விகாரம்
   கு – சாரியை
   வ் – எதிர்கால இடைநிலை
   அர் – பலர்பால் வினைமுற்று விகுதி
7. பருகி – பருகு + இ
   பருகு – பகுதி
   இ – வினையெச்ச விகுதி.
8. போகி – போகு + இ
   போகு – பகுதி
   இ – வினையெச்ச விகுதி.
9. தொழுது – தொழு + த் + உ
   தொழு – பகுதி
   த் – இறந்தகால இடைநிலை
   உ – வினையெச்ச விகுதி.

www.Padasalai.Net

# விரிவானம்

# 4. புயலிலே ஒரு தோணி

## பலவுள் தெரிக

1. 'புயலிலே ஒரு தோணி' என்ற புதினத்தின் ஆசிரியர் புலம் பெயர்ந்து ______ நாட்டிற்குச் சென்றார்.
அ) மலேசியா ஆ) சிங்கப்பூர் இ) இந்தோனேசியா ஈ) தாய்லாந்து
**விடை : இ) இந்தோனேசியா**

2. 'கஜா' புயலின் பெயரை வழங்கிய நாடு ______.
அ) இந்தியா ஆ) இலங்கை இ) தாய்லாந்து ஈ) மியான்மர்
**விடை : ஆ) இலங்கை**

3. 'பெய்ட்டி' புயலின் பெயரை வழங்கிய நாடு எது ______.
அ) வங்கதேசம் ஆ) மாலத்தீவுகள் இ) தாய்லாந்து ஈ) பாகிஸ்தான்
**விடை : இ) தாய்லாந்து**

4. 'புயலிலே ஒரு தோணி' என்னும் புதினத்தின் ஆசிரியர்,
அ) ப. சிங்காரம் ஆ) மு.வ. இ) திரு. வி. க. ஈ) அகிலன்
**விடை : அ) ப. சிங்காரம்**

5. தென்கிழக்கிந்திய போர் மூண்டதில் மலேசியா, இந்தோனேசியா பகுதிகளில் நிகழ்வதாக உள்ள கற்பனைப் படைப்பு,
அ) ஆறாம் திணை ஆ) புயலிலே ஒரு தோணி
இ) பால் மரக்காட்டினிலே ஈ) எதுவுமில்லை
**விடை : ஆ) புயலிலே ஒரு தோணி**

6. 'பல் பழுப் பலவின் பயங்கெழு கொல்லி' என்று குறிப்பிடும் நூல்,
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) கலித்தொகை ஈ) நாலடியார்
**விடை : ஆ) அகநானூறு**

## நெடுவினாக்கள்

1. **'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.** (PTA - 3)

**குறிப்புகள் : முன்னுரை – இயற்கையோடு இயைந்து வாழ்வோம் – வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் – மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் – முடிவுரை.**

### விசும்பின் துளியும் பசும்புல் தலையும்

**முன்னுரை :**

'நீரின்றி அமையாது உலகு' என்பார் வள்ளுவர். உலகின் பெரும்பகுதி, கடல்நீரால் சூழப்பட்டுள்ளது. அந்த நீரை நாம் குடிக்கவோ, சமைக்கவோ, குளிக்கவோ பயன்படுத்த முடியுமா? அதனால்தான் ஈயாதார் செல்வத்திற்குக் கடல்நீர் உவமையாகச் சொல்லப்பட்டது. தாகம் தீர்க்க, உணவு சமைக்க, விவசாயம் செய்ய நல்ல நீர் தேவை. நல்லநீர் மழையால் கிடைக்கிறது. அதனை விசும்பின் துளி என்றனர். இனி விசும்பின் துளி குறித்துக் காண்போம்.

**இயற்கையோடு இயைந்து வாழ்வோம் :**

இயற்கைதான் நாம் வாழும் மண் உலகையும், அது தன்னிலிருந்து தாவர வகைகளையும், விலங்கினங்களையும் தோற்றுவித்தது. இதனை இயற்கைப் பரிணாமம் என்பர். அதாவது ஒன்றிலிருந்து இன்னொன்று தோன்றி வளர்வது. இயற்கையோடு அதில் தோன்றிய உயிரினங்கள் பொருந்தி, இயைந்து வாழ்ந்து வந்ததால்தான் மனிதன் தோன்றினான். அந்த மனிதன் இன்று தன்னிலை மறந்து செயல்படுவதால், பருவநிலை மாற்றங்களும் பேரிடர்களும் தோன்றி, உலக உயிரின வாழ்வை சிதைத்து வருகின்றன. எனவே, இயற்கையோடு இயைந்து வாழவேண்டும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் :**

மழை, நீரைப் பெருக்கி மண்ணை வளப்படுத்தத் துணைபுரிகிறது. மழை பெய்யவில்லையானால், இம்மண்ணில் பசும்புல்லும் தலையைக்காட்டாது என, வள்ளுவர் கூறியுள்ளார். மண்ணுலகிலுள்ள உயிரினங்கள் வாழ்வுக்குத் தண்ணீர் இன்றியமையாதது. அந்தத் தண்ணீரைச் சேமிக்க வேண்டியது இன்றியமையாததாகும். அதனால்தான் நம் முன்னோர் குளங்களை வெட்டினர்; ஏரிகளை அமைத்தனர்; அணைக்கட்டுகளைக் கட்டினர். மழைநீரைத் தேக்கினால்தான் பூமியையும், பூமியில் வாழும் உயிரினங்களையும் காப்பாற்ற முடியும். பெய்யும் மழை வழிந்தோடிக் கடலில் கலந்துவிட்டால், குடிதண்ணீருக்கு என்ன செய்ய முடியும்? எனவே, கிடைக்கும்போது நல்லநீரைச் சேமித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

**மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் :**

மழைநீருக்கு ஆதாரமானவை தாவர வகைகள். மழையைப் பெறப் பெருங்காடுகள் துணைபுரிகின்றன. மரங்களே, மழையை அழைக்கும் பண்புள்ளவை. அவை தாம் மண்ணுக்குள் மழைநீரைத் தேக்கும் ஆற்றல் உள்ளவை. அவை நமக்குத் தூய்மையான காற்றை வழங்குபவை. வாகனப் புகை, தொழிற்சாலைப் புகை போன்றவற்றிலிருந்து நம்மைக் காப்பவை. இதனைத் தெளிவாக உணர்ந்து, மரங்களை வளர்க்க வேண்டும். மழை பெறுவதற்கு மட்டுமன்று, நம் உயிர் வாழ்க்கைக்கும் இன்றியமையாதவை மரங்கள். அதனால் மரங்களைப் பேணி வளர்க்க வேண்டும்.

**முடிவுரை :**

மழை பொழியவில்லையானால், கடலும் தன் வளத்தில் குறையும் என, வள்ளுவர் கூறுகிறார். கடலே வளம் குறையுமானால், மண்ணும் மண்ணில் வாழும் உயிரினங்களும் வளம்பெற வாழமுடியுமா? ஒன்றையொன்று சார்ந்து வாழும் உயிரினங்களின் துணையின்றி மனிதர்களாகிய நாமும் வாழமுடியாது. ஆறறிவு பெற்ற மனிதர்கள் மட்டுமல்லர், உலகில் பரவிக் கிடக்கிற எண்ணற்ற உயிரினங்களும் வாழ, விசும்பின் துளி மிகமிக இன்றியமையாதது. எனவே, உலகில் பசுமை தழைக்க, மழை பொழிய மரங்களை வளர்த்தல் என்னும் உயரிய பணியைச் செய்வோமாக.

2. **முன்னுரை – விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரம் நமக்கு வரம் – மழைநீர் உயிர் நீர் – முடிவுரை. – இக்குறிப்புகளைப் பயன்படுத்தி, 'இயற்கையைக் காப்போம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.** **(PTA - 6)**

**இயற்கையைக் காப்போம்**

**முன்னுரை :**

நாம் வாழும் உலகம் 'பசுமைக்கோளம்' எனப் போற்றப்படுகிறது. அண்டவெளியில் எண்ணற்ற கோளங்கள் சுழன்று கொண்டிருந்தாலும், நாம் வாழும் கோளம்மட்டுமே உயிரினங்கள் வாழும் பசுமைக் கோளமாக இருக்கிறது என, அறிவியல் அறிஞர்கள் தெளிவாக ஆராய்ந்து கூறியுள்ளனர். இதற்கு முழுமுதல் காரணம், தண்ணீர் என்றால் மிகையாகாது!

**விசும்பின்துளி பசும்புல்தலை :**

இயற்கையில், தண்ணீரே நாம் வாழும் மண்ணுலகைப் பசுமைக்கோளமாக்கியுள்ளது. மண்ணுலகில் வாழும் அனைத்து உயிர்களும், தண்ணீரை நம்பியே வாழ்கின்றன. விசும்பின் துளியான மழை விழுந்ததும், மண்ணில் முதலில் பசும்புல்லே தலை தூக்குகிறது. செடி, கொடி, மரம் என்னும் தாவர வகைகள் நிமிர்ந்து நிற்கின்றன. அனைத்து உயிரினங்களும் மகிழ்கின்றன.

**காற்றுமாசு :**

உயிரினங்கள் அனைத்தும் சுவாசித்து உயிர் வாழக் காற்றின் ஒரு பகுதியான உயிர்வளி துணைபுரிகிறது. ஆனால், மனிதன் தொழிற்சாலைகளை அமைத்ததாலும், ஊர்தி வகைகளை அதிகமாகப் பயன்படுத்துவதாலும், கரித்துகள் நிறைந்த புகை அதிகரித்துக் காற்றில் கலந்து, காற்றை மாசுபடுத்துகிறது. குவிக்கப்படும் குப்பைக் கழிவுகள், நீரையும் நிலத்தையும் மாசுபடுத்துகின்றன. மக்களால் தூக்கி வீசப்படும் நெகிழிப் பொருள்கள் மண்ணுக்குள் நீர் புகாமல் தடுக்கின்றன.

**பசுமையைக் காப்போம் :**

காற்றிலுள்ள கரித்துகள்கள் கலந்த காற்றை (கரியமில வாயுவை) மரங்கள், தாவர வகைகள் உட்கொண்டு, உயிர்வளியை வெளிவிடுகின்றன. அதனால் காற்றின் மாசு நீக்கப்பட்டுத் தூய்மைப்படுகிறது. எனவே, காடுகளைப் பாதுகாக்க வேண்டும். அத்துடன் மக்கள் வாழும் இடங்களில் மரங்களை நட்டுப் பாதுகாக்க வேண்டும். அவை நிழலைத் தருவதுடன், காற்றுமாசு போக்கிடவும் துணைபுரிகின்றன.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மரம் நமக்கு வரம் :**

மரங்கள் கரியமில வாயுவை உறிஞ்சி உட்கொண்டு, உயிர்வளியை வெளியிடும் என்பதை நாம் அறிவோம். அண்மையில் அமேசான், ஆப்பிரிக்கக் காடுகளில் அறிவியல் அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வில், காடுகள் கரியமில வாயுவை உட்கொள்ளும் ஆற்றல் 1990இல் இருந்ததைவிட 2010இல் குறைந்துள்ளது எனக் கண்டறிந்துள்ளனர். மழையைத் தருபவை காடுகளே என்பதை மறந்துவிடாமல், 'மரமே நமக்கு வரம்' என எண்ணிப் பாதுகாக்கச் செயல்பட வேண்டும்.

**மழைநீர் உயிர்நீர் :**

மழை பெய்து பெருகும் நீரே, உலகில் வாழ்கிற ஓரறிவு உயிர்முதல், ஆறறிவு உயிர்வரை அனைத்து உயிர்களையும் பாதுகாக்கிறது. "பெரிய நீர்ப்பரப்பைப் பெற்றுள்ள கடல்கூட, மழை பெய்யவில்லையானால் தன் வளத்தில் குறையும்" என்று, வள்ளுவர் கூறியுள்ளதை நினைவில் கொள்ளவேண்டும். மண், வளம் பெறுவது மட்டுமன்றிக் கடலும் வளம் பெறுவதற்கு மழைநீர் தேவை என்பதைத் தெளிவாக அறியவேண்டும். அதனால் தாவர வகைகள் தழைத்து வளரும். காற்றில் கலந்துள்ள புகைமாசைப் போக்கும். மழைநீரே உயிர் நீராகும்.

**முடிவுரை :**

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உருவானது இயற்கை. இவற்றுள் எதன் ஆற்றல் குறைந்தாலும் அதிகரித்தாலும், இயற்கை தன் இயல்பில் சிதையும். இயற்கை அழிந்தால், பருவ மாறுதல்கள் ஏற்படும். பேரழிவுகள் விளையும். எனவே, எப்போதும் இயற்கையைத் தன் நிலை சிதையாமல் பாதுகாக்க வேண்டும். எதையும் மாற்றி அமைக்கும் ஆற்றல் உடையவனாயினும் மனிதன், இயற்கையோடு இயைந்து வாழப் பழகவேண்டும்.

# கற்கண்டு

# 5. தொகைநிலைத் தொடர்கள்

## பலவுள் தெரிக

1. 'காலம் கரந்த பெயரெச்சம்' என்பது ______. (PTA - 1)

அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

**விடை : அ) வினைத்தொகை**

2. தமிழ்த்தொண்டு என்னும் தொடர் ______. (PTA - 5)

அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை
இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை ஈ) வேற்றுமைத்தொகை

**விடை : இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை**

3. கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க. (PTA - 1)
(மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)

அ) மலைமீது மழை பெய்து, ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.
ஆ) கருத்த மேகம், மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின.
இ) திரண்ட மேகங்கள், மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களை நிறைத்தன.
ஈ) மலைமீது மழைபொழிய ஏரி, குளங்கள் நிறைந்து, பின் கடலில் சென்று கலந்தது.

**விடை : ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின.**

4. '**சிவப்புச் சட்டை**' பேசினார் – அடிக்கோடிட்ட சொல்லுக் கான தொகையின் வகை எது? (PTA-2, Sep.-21)

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை : இ) அன்மொழித்தொகை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. தேர்ப்பாகன் – இத்தொடரில் அமைந்துள்ள தொகையைத் தெரிவு செய்க. (Mar.-23)
அ) வினைத்தொகை ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை
இ) பண்புத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
விடை : ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

6. 'செங்காந்தள்' – என்ற சொல்லில் அமைந்துள்ள தொகையைத் தேர்க. (June-23)
அ) உவமைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை
விடை : ஆ) பண்புத்தொகை

7. 'மலர்க்கை' – தொகையின் வகையைத் தேர்க. (Mar.-24)
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத்தொகை

8. 'கரும்பு தின்றான்' இத்தொடரில் தொக்கியது ______.
அ) மூன்றன் உருபு ஆ) இரண்டன் உருபு இ) நான்கன் உருபு ஈ) ஏழன் உருபு
விடை : ஆ) இரண்டன் உருபு

9. 'மதுரை சென்றார்' என்னும் தொடரில் தொக்கியது ______ உருபு.
அ) ஐ ஆ) ஆல் இ) ஒடு ஈ) கு
விடை : ஈ) கு

10. 'தமிழ்த்தொண்டு' என்பது ______ என விரிவு பெறும்.
அ) தமிழைத்தொண்டு ஆ) தமிழ்க்கண்தொண்டு
இ) தமிழுக்குச் செய்யும் தொண்டு ஈ) தமிழைக் கொண்டு தொண்டு
விடை : இ) தமிழுக்குச் செய்யும் தொண்டு

## குறுவினாக்கள்

1. **சொற்றொடரின் இலக்கணம் யாது?**
   ➤ சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது, 'சொற்றொடர்' எனப்படும். இதனைத் 'தொடர்' எனவும் கூறுவர்.
   **எ – கா** : பாடம் படித்தான்.

2. **தொகைநிலைத்தொடர் என்றால் என்ன?**
   ➤ இரண்டு சொற்கள் ஒருசொல் போல் தொடர்ந்து நின்று பொருள் தரும்போது, இடையில் வேற்றுமை, வினை, பண்பு முதலிய உருபுகள் மறைந்துவரும் தொடர், தொகைநிலைத்தொடர் ஆகும்.
   **எ – கா** : தலை வணங்கினான். ('ஆல்' – மூன்றாம் வேற்றுமை உருபு தொக்கி வந்துள்ளது)

3. **தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   ➤ தொகை நிலைத்தொடர், ஆறு வகைப்படும். அவை, வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை என்பன ஆகும்.

4. **வேற்றுமைத்தொகை என்றால் என்ன?**
   ➤ ஒரு தொடரில், வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், கு, இன், அது, கண் ஆகியன) மறைந்து வரும் தொடர், வேற்றுமைத்தொகையாகும்.
   **எ – கா**: வயல் உழுதான் – இரண்டாம் வேற்றுமைத்தொகை; வய**லை** உழுதான்.
   ('ஐ'– இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்துள்ளது)

5. **வினைத்தொகை என்றால் என்ன?**
   ➤ காலம் கரந்த (மறைந்துள்ள) பெயரெச்சமே வினைத்தொகையாகும்.
   **எ – கா** : எழுஞாயிறு (எழுந்த ஞாயிறு, எழுகின்ற ஞாயிறு, எழும் ஞாயிறு என முக்காலங்களுக்கும் பொருந்தும்படி விரிந்து பொருள் தரும்)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. **வினைத்தொகை எவ்வாறு அமையும்?**
   - சுடுசோறு – இத்தொடர் சுட்ட சோறு, சுடுகின்ற சோறு, சுடும் சோறு என, மூன்று காலங்களுக்கும் பொருந்திவரும்.
   - அதாவது, வினைப்பகுதி ஒரு பெயர்ச்சொல்லால் தழுவப்பெறுவது வினைத்தொகை. வினைப்பகுதி – சுடு; பெயர்ச்சொல் – சோறு.

7. **பண்புத்தொகை என்றால் என்ன?**
   - சொற்றொடரில் பண்புப் பெயருக்கும், அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில், ‘மை’ என்னும் பண்பு விகுதியும் ‘ஆகிய’, ‘ஆன’ என்னும் பண்பு உருபுகளும் மறைந்து நின்று பொருள் தருவது, பண்புத்தொகை ஆகும்.
     **எ – கா :** செந்தாமரை – செம்மையாகிய தாமரை

8. **உம்மைத்தொகை என்றால் என்ன?**
   - சொற்றொடரில் இரு சொற்களுக்கு இடையிலும் இறுதியிலும் ‘உம்’ என்னும் இடைச்சொல் மறைந்துவருவது, உம்மைத்தொகையாகும்.
     **எ – கா :** கபில பரணர், (கபிலரும் பரணரும்)

9. **இருபெயரொட்டுப் பண்புத்தொகை எவ்வாறு வரும்?**
   - சொற்றொடரில் சிறப்புப்பெயர் முன்னும், பொதுப் பெயர் பின்னும் நின்று, இடையில் ‘ஆகிய’ என்னும் பண்பு உருபு தொக்கி வருவது, இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.
     **எ – கா :** மாமரம், மா – சிறப்புப்பெயர்; மரம் – பொதுப்பெயர்.

10. **உவமைத்தொகை என்றால் என்ன?**
   - உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவமஉருபு மறைந்து வருவது, உவமைத்தொகை எனப்படும். (உவமையை ‘உவமானம்’ எனவும், பொருளை ‘உவமேயம்’ எனவும் கூறுவர்.)
     **எ – கா :** பிறைநெற்றி – பிறை போன்ற நெற்றி. பிறை – உவமை; நெற்றி – பொருள்.

11. **உவமானம், உவமேயம் – விளக்குக.**
   - உவமைத்தொகையில் முதலில் நிற்பது உவமானம். அடுத்து நிற்கும் சொல் உவமேயம்.
     **எ – கா :** கயல்விழி – கயல் போன்ற விழி.
   - கயல் – உவமானம்; விழி – உவமேயம்; போன்ற – என்னும் உவமஉருபு தொக்கி (மறைந்து) நின்றது.

## சிறுவினாக்கள்

1. **உருபும் பயனும் உடன்தொக்கதொகையை விவரி.**
   - ஒரு தொடரில் வேற்றுமை உருபும், அதன் பொருளை விளக்கும் பயனும் மறைந்து வருவது உருபும் பயனும் உடன்தொக்கதொகை எனப்படும்.

   **எ – கா :**

   i. தமிழ்த்தொண்டு (தமிழுக்குச் செய்யும் தொண்டு)
   இத்தொடரில் நான்காம் வேற்றுமை உருபு ‘கு’வும், அதன் பொருளை விளக்கும் ‘செய்யும்’ என்னும் பயனும் உடன்தொக்கி (மறைந்து) வந்துள்ளமை அறிக.

   ii. தேர்ப்பாகன் (தேரை ஓட்டும் பாகன்)
   இத்தொடரில் இரண்டாம் வேற்றுமை உருபு ‘ஐ’யும், அதன் பொருளை விளக்கும் ‘ஓட்டும்’ என்னும் பயனும் உடன்தொக்கி (மறைந்து) வந்துள்ளது.

2. **அன்மொழித்தொகை என்றால் என்ன?**
   - வேற்றுமை வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களில், உருபுகளும், அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து நின்று பொருள் தருவது, அன்மொழித்தொகையாகும். (அன்மொழித்தொகை – அல் + மொழி + தொகை)
     **எ – கா :** பொற்றொடி வந்தாள். (பொற்றொடி – பொன்னால் செய்யப்பெற்ற வளையல் – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. ‘வந்தாள்’ என்ற வினைமுற்றால், பொன்னால் செய்யப்பெற்ற வளையலை அணிந்த ‘பெண்’ வந்தாள் என விரியும். எனவே, அன்மொழித்தொகை)

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3. கீழ்க்காணும் தொடர்களுக்குத் தொடர் இலக்கணம் கூறி விரித்தெழுதுக.**

நீர் பருகினான், வெண்சங்கு, சங்கு ஊதினான், கரும்பு தின்றான், மதுரை சென்றான், வீசுதென்றல், கொல்களிறு, செங்காந்தள், வட்டத்தொட்டி, இன்மொழி, மார்கழித் திங்கள், சாரைப் பாம்பு, மலர்க்கை.

| | | |
|---|---|---|
| நீர் பருகினான் | – | இரண்டாம் வேற்றுமைத்தொகை (நீரைப் பருகினான். 'ஐ' இரண்டாம் வேற்றுமை உருபு) |
| வெண்சங்கு | – | பண்புத்தொகை. வெண்மையான சங்கு. ('மை' பண்பு உருபு) |
| சங்கு ஊதினான் | – | இரண்டாம் வேற்றுமைத்தொகை (சங்கை ஊதினான்) |
| கரும்பு தின்றான் | – | இரண்டாம் வேற்றுமைத்தொகை (கரும்பைத் தின்றான்) |
| மதுரை சென்றான் | – | நான்காம் வேற்றுமைத்தொகை (மதுரைக்குச் சென்றான்) |
| வீசுதென்றல் | – | வினைத்தொகை. (வீசிய தென்றல்,வீசுகிற தென்றல், வீசும் தென்றல்) |
| வீசு | – | வினைப்பகுதி, |
| தென்றல் | – | பெயர்ச்சொல் |
| கொல் களிறு | – | வினைத்தொகை (கொன்ற களிறு, கொல்கிற களிறு, கொல்லும் களிறு) |
| கொல் | – | வினைப்பகுதி, |
| களிறு | – | பெயர்ச்சொல் |
| செங்காந்தள் | – | பண்புத்தொகை செம்மையாகிய காந்தள்) செம்மை – பண்புப்பெயர், காந்தள் – பெயர்ச்சொல் |
| வட்டத்தொட்டை | – | பண்புத்தொகை (வட்டமாகிய தொட்டி) வட்டம் – பண்புப்பெயர், தொட்டி – பெயர்ச்சொல் |
| இன்மொழி | – | பண்புத்தொகை (இனிமையாகிய மொழி) இனிமை – பண்புச்சொல், மொழி – பெயர்ச்சொல் |
| மார்கழித் திங்கள் | – | இருபெயரொட்டுப் பண்புத்தொகை (மார்கழியாகிய திங்கள்) மார்கழி – சிறப்புப்பெயர், திங்கள் – பொதுப்பெயர் |
| சாரைப்பாம்பு | – | இருபெயரொட்டுப் பண்புத்தொகை (சாரையாகிய பாம்பு) சாரை – சிறப்புப் பெயர், பாம்பு – பொதுப்பெயர் |
| மலர்க்கை | – | உவமைத்தொகை (மலர் போன்ற கை) மலர் – உவமை,கை – பொருள்பெயர், போன்ற – உவமை உருபு |
| அண்ணன் தம்பி | – | உம்மைத்தொகை (அண்ணனும் தம்பியும்) உம் – இடைச்சொல் |
| தாய் சேய் | – | உம்மைத்தொகை (தாயும் சேயும்) உம் – இடைச்சொல். |

## மொழியை ஆள்வோம்

### பலவுள் தெரிக

1. 'ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்' – என்ற புதிருக்கான விடையைத் தேர்க.(May-22)

அ) காடு ஆ) நாடு இ) வீடு ஈ) தோடு

**விடை : அ) காடு**

2. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது – என்ற நயமிகு தொடருக்கு ஏற்ற தலைப்பு : (May - 22)

அ) வனத்தின் நடனம் ஆ) மிதக்கும் வாசம்

இ) மொட்டின் வருகை ஈ) காற்றின் பாடல்

**விடை : ஈ) காற்றின் பாடல்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் - 3

## உரைநடை உலகம்

## 1. விருந்து போற்றுதும்!

### பலவுள் தெரிக

1. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக. (PTA -4)

பச்சரிசியைக் கொண்டு ______ செய்து, பாசிப் பருப்பினை வறுத்து ______ பிடித்து, கேரட்டைத் துருவி நெய்யிட்டு ______ செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக்கிழங்கைச் ______ செய்து, அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.

அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா ஆ) சீவல், உருண்டை, அல்வா, சீவல்

இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல் ஈ) உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்

**விடை : இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்**

2. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்னும் தொடர் இடம் பெற்ற நூல், (PTA -1)

அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை

இ) திருக்குறள் ஈ) நற்றிணை

**விடை : அ) கொன்றை வேந்தன்**

3. விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியிருப்பவர் ______.

அ) செயங்கொண்டார் ஆ) இளங்கோவடிகள் இ) திருவள்ளுவர் ஈ) கம்பர்

**விடை : அ) செயங்கொண்டார்**

4. ______, தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.

அ) இன்மையிலும் விருந்தோம்பல் ஆ) தனித்து உண்ணாமை

இ) அல்லல் ஆயினும் ஈ) நிலத்திற்கேற்ற விருந்து

**விடை : ஆ) தனித்து உண்ணாமை**

5. "விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப் பட்டதால், இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்" என்று கூறிய நூல் ______,,

அ) கலிங்கத்துப்பரணி ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) நற்றிணை

**விடை : ஆ) புறநானூறு**

6. "உண்டால் அம்ம, இவ்வுலகம்" எனப் பாடியவர் ______.

அ) தொல்காப்பியர் ஆ) இளங்கோவடிகள் இ) இளம்பெருவழுதி ஈ) செயங்கொண்டார்

**விடை : இ) இளம்பெருவழுதி**

7. விருந்தினரை ஏழுஅடி நடந்து சென்று வழியனுப்பியதைக் கூறுவது ______.

அ) புறநானூறு ஆ) சிலப்பதிகாரம்

இ) சிறுபாணாற்றுப்படை ஈ) பொருநராற்றுப்படை

**விடை : ஈ) பொருநராற்றுப்படை**

8. விதைக்காக வைத்திருந்த தினையைக் குத்தி விருந்திட்டதைக் கூறும் நூல் ______.

அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பொருநராற்றுப்படை

இ) நற்றிணை ஈ) புறநானூறு

**விடை : ஈ) புறநானூறு**

9. விருந்தளிக்க விதைத்த நெல்லை அரித்தெடுத்து வந்ததைக் கூறுவது ______.

அ) சிறுபாணாற்றுப்படை ஆ) நற்றிணை

இ) பொருநராற்றுப்படை ஈ) பெரியபுராணம்

**விடை : ஈ) பெரியபுராணம்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. “உணவு உண்ண வேண்டியவர் எவரேனும் உள்ளீரோ” எனக் கேட்கும் வழக்கத்தைக் குறிப்பிடுவது ______.

அ) நற்றிணை ஆ) புறநானூறு

இ) குறுந்தொகை ஈ) சிறுபாணாற்றுப்படை

**விடை : இ) குறுந்தொகை**

11. வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதைப் பாடியவர் ______.

அ) தொல்காப்பியர் ஆ) வள்ளுவர் இ) இளம்பெருவழுதி ஈ) ஔவையார்

**விடை : ஈ) ஔவையார்**

12. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் நற்பண்பு ______.

அ) விருந்தோம்பல் ஆ) உதவி செய்தல்

இ) மருத்துவம் செய்தல் ஈ) மதித்தல்

**விடை : அ) விருந்தோம்பல்**

## குறுவினா

**1. உணவளிப்பது சிறந்த அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?** (PTA - 2)

➤ ‘பூதன்’ என்பான் உணவு அளித்த சிறப்பை, “வரகு அரிசி சோற்றை வழுதுணங்காய் வாட்டலொடு புளித்த மோரும் சிறப்பான விருந்தாக அமையும் வகையில் புள்வேளூர் பூதன் என்பான் பரிவுடன் அளித்தான். அதற்கு அனைத்து உலகும் ஈடாகாது” என்று பாடி விருந்தோம்பல் பாங்கை ஔவையார் பாராட்டியுள்ளார்.

**2. விருந்தோம்பல் என்றால் என்ன?**

➤ வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று, உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து, அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். இது தமிழகத்தில் இல்லறத்தார் கடமையாக இருந்தது.

**3. விருந்தோம்பல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?**

➤ வள்ளுவர், இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்; முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்கிறார்.

➤ இதனை இல்லறவியலில் ‘விருந்தோம்பல்’ என்னும் அதிகாரத்தை அமைத்து வலியுறுத்துகிறார்.

**4. விருந்தோம்பல் குறித்துக் கம்பரும் செயங்கொண்டாரும் குறிப்பிடுவன யாவை?**

➤ பொருந்திய கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், நாள்தோறும் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். கலிங்கத்துப் பரணி பாடிய செயங்கொண்டார், விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை மேலோரின் முகமலர்ச்சிக்கு உவமையாக்கியுள்ளார்.

**5. விருந்தோம்பல் குறித்துப் புறநானூறு கூறுவன யாவை?**

➤ தனித்து உண்ணாமை என்பது, தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.

➤ அமிழ்தமே கிடைத்தாலும், தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்.

➤ அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்று, புறநானூறு விருந்தோம்பலின் மேன்மையைக் குறிப்பிடுகிறது.

**6. விருந்தோம்பல் குறித்து நற்றிணை குறிப்பிடுவது யாது?**

➤ விருந்தோம்பல் என்பது, பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

➤ நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு, குடும்பத் தலைவிக்கு உண்டு என்று, நற்றிணை குறிப்பிடுகிறது.

**7. விருந்தோம்பல் குறித்துச் சிறுபாணாற்றுப்படை தெரிவிக்கும் செய்தி என்ன?**

➤ நெய்தல் நிலத்தவர், பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்து விருந்தோம்பினர் என்கிறது சிறுபாணாற்றுப்படை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்துக் குறுந்தொகை கூறுவன யாவை?**

➤ இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், "உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் வெளியில் உள்ளீர்களா?" என்று கேட்கும் வழக்கம் இருந்ததாகக் குறுந்தொகை கூறுவதிலிருந்து பண்டைத் தமிழர் விருந்தை எதிர்கொண்டு உபசரித்தமையை அறியமுடிகிறது.

**9. விருந்தினர் என்பவர் யார்?**

➤ இக்காலத்தில் உறவினரை விருந்தினர் எனக் கருதுகின்றனர். விருந்தினர் என்பவர் முன்பின் அறியாத புதியவர்களாகவே இருத்தல் வேண்டும். இதற்குத் தொல்காப்பியர் "விருந்தே புதுமை" என்று குறிப்பிட்டுள்ளதை நினைவில் கொள்ள வேண்டும்.

## சிறுவினா

**1. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக. (PTA -5)**

➤ தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனி இடமிருந்தது. தமிழர், வாழை இலையின் மருத்துவப் பண்பையும் அறிந்திருந்தனர். வலக்கையால் உணவு உண்ணும் பழக்கமுள்ளவர் தமிழர். எனவே, வாழை இலையின் குறுகலான பகுதி உண்பவரின் இடப்பக்கமும், விரிந்த பகுதி வலப்பக்கமும் இருக்குமாறு விரித்தனர்.

➤ விருந்தினர் எடுத்து உண்பதற்கு வசதியாக அளவில் குறைவாகப் பரிமாறப்படும் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலானவற்றை இலையின் இடப்பக்க ஓரத்திலும், பரிமாறுவனவற்றுள் அதிகமானவையான காய்கறி, கீரை, கூட்டு போன்றவற்றை வலப்பக்க ஓரத்திலும், சோற்றை இலையின் நடுவிலும் வைத்தனர். உண்பவர் மனம் அறிந்து, அவர் விரும்பி உண்ணும் உணவு வகைகளைப் பரிவுடன் உடனுக்குடன் பரிமாறினர்.

**2. நாடு பெயர்ந்தாலும் பண்பாடு மாறாதவர் தமிழர் என்பதை எவ்வாறு அறியமுடிகிறது?**

➤ அமெரிக்காவின் மினசோட்டா மாநிலத்தில் வாழும் தமிழர், சங்கம் அமைத்துத் தம் பண்பாட்டைக் காத்து வருகின்றனர். அங்கு வாழை இலை விருந்து ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழை இலையில் விருந்து வைக்கின்றனர்.

➤ முருங்கைக்காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப்பாயசம், அப்பளம் எனச் சுவையாக விருந்து படைக்கின்றனர். அங்கு வாழும் தமிழர் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

## நெடுவினா

**1. விருந்தினரைப் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல் போன்ற தமிழர் பண்பாடு, இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலையும், பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும். (PTA - 1, Sep. -20)**

வைகறைப் பொழுதில் வீட்டு வாசலில் மகிழ்வுந்து வந்து நின்றது. விரைந்து சென்ற என் தந்தை, அதில் வந்தோரை வாருங்கள் வாருங்கள் என, மலர்முகத்தோடு வரவேற்றார். அவர்களுடைய பொருள்களையும் பெட்டியையும் எடுத்துக்கொண்டு, அவர்களை வீட்டினுள் அழைத்து வந்தார். வீட்டில் இருந்த என் அம்மா, தங்கை, நான் என அனைவரும் வந்து "வாருங்கள்" என்று கூறி நலம் விசாரித்தோம்.

அவர்கள், காலைக்கடனை முடிக்க நான் உதவி செய்தேன். முகமலர்ச்சியோடு முன்அறையில் கூடத்தில் அமர்ந்தோம். அம்மா தேநீர் கொடுத்து உபசரித்தார். சிறிது நேரம் கிராமத்து நிகழ்வுகள், உறவுகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

கோடை காலமாதலால், குளிர்ந்த நீரில் குளிப்பதற்குத் தேவையானவற்றைக் கொடுத்து, நீராடச் செய்தோம். காலைச் சிற்றுண்டி தயார் ஆனது. பூப்போன்ற இட்லி, சட்னி, சாம்பார், பூரி, கிழங்கு ஆகியவற்றை அவர்களின் தேவையறிந்து பரிமாறி மகிழ்ந்தோம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்த்துக்கொண்டே, ஓய்வெடுக்க வைத்தோம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அறுசுவை உணவு தயாரானது. மிக எளிமையாகவே இருந்தது. மதிய உணவு – வாழையிலை – முதல் இனிப்பு வெள்ளைச் சர்க்கரை, பொரியல், கூட்டு, கீரைவடை, மாங்காய்ப் பச்சடி, வடை, பாயசத்தோடு விருந்து; விருந்தினர் தேவை அறிந்து உபசரித்தோம். உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு அல்லவா! ஆதலால் சிறிது நேரம் ஓய்வெடுத்துத் தூங்கினர். அவர்கள் எழுந்தவுடன், மாலைச் சிற்றுண்டி கொடுத்து, மகிழுந்தில் அடுத்த வேலைக்கு அனுப்பி வைத்தோம்.

புதியவராயினும் பசித்து வந்தவருக்கு உணவும் தங்கிச் செல்ல இடமும் கொடுத்து உபசரிப்பதைத் தமிழர் சிறப்பாகக் கருதினர். இதனை விருந்தோம்பல் எனப் போற்றினர்.

அமுதமே கிடைத்தாலும் தனித்து உண்ணாமல் விருந்தினருடன் பகிர்ந்து உண்பதைப் பண்பாடாகக் கொண்ட தமிழர், பசித்தவர் முகம் கண்டு உணவிட்டு மகிழ்ந்தனர்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தைத் தலையாய அறமாகக் கருதினர். இன்றைக்கும் பசியால் வாடுபவரைக் கண்டால் கேட்காமலே பசிபோக்கும் எண்ணம் தமிழனாகிய என்னிடம் உள்ளது. நேற்றுக்கூட பசியோடு வாடிய ஒருவருக்குக் காலைச் சிற்றுண்டி வாங்கிக் கொடுத்து உண்ணச் செய்தேன். அவர் பசி நீங்கி முகம் மலர்ந்ததைக் கண்டு, நானும் மகிழ்ச்சி அடைந்தேன்.

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்களை வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

i) **தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு ?**
வாழை இலைக்கு.

ii) **யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது ?**
விருந்தினருக்கு.

iii) **நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர் ?**
மருத்துவப் பயன்களை

iv) **உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர் ?**
மனமறிந்து

v) **இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.**
தமிழர் வாழ்வில் வாழை.

# கவிதைப்பேழை

# 2. காசிக்காண்டம்

## பலவுள் தெரிக

1. விருந்தோம்பும் நெறிகளை வரிசைப்படுத்திப் பாடிய நூல் ______.

அ) நளவெண்பா ஆ) குசேலபாக்கியானம் இ) காசிக்காண்டம் ஈ) விவேக சிந்தாமணி

**விடை : இ) காசிக்காண்டம்**

2. அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல் ______.

அ) ஆத்திசூடி ஆ) கொன்றைவேந்தன்
இ) நீதிநெறி விளக்கம் ஈ) வெற்றிவேற்கை

**விடை : ஈ) வெற்றிவேற்கை**

3. ‘உப்பில்லாக் கூழ் இட்டாலும்
உண்பதே அமிர்தம் ஆகும்‘ இப்பாடல்வரி இடம்பெற்ற நூல் ______.

அ) காசிக்காண்டம் ஆ) வெற்றி வேற்கை
இ) சீவகசிந்தாமணி ஈ) விவேக சிந்தாமணி

**விடை : ஈ) விவேக சிந்தாமணி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. பின்வரும் வாக்கியங்களைக் கவனிக்க.

i) பழந்தமிழர், புதியவர்களுக்கு உணவு வழங்கு வதையே கொள்கையாகக் கொண்டிருந்தனர்.

ii) விருந்தினரை வாயில்வரை பின்தொடர்ந்து சென்று வழியனுப்புவர்.

மேற்கண்ட வாக்கியங்களில் சரியானதைத் தேர்ந்தெடுக்க.

அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் சரியில்லை

**விடை : இ) இரண்டும் சரி**

5. 'வெற்றி வேற்கை' என்பது ______ எனவும் வழங்கப்பெறுகிறது.

அ) ஆத்திசூடி ஆ) நல்வழி இ) குறுந்தொகை ஈ) நறுந்தொகை

**விடை : ஈ) நறுந்தொகை**

## குறுவினாக்கள்

**1. இல்லத்திற்கு விருந்தினர் வந்தபோது முதலில் செய்ய வேண்டுவன யாவை?**

- இல்லத்திற்கு விருந்தினர் வந்தபோது, வியந்து உரைத்தல், இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியோடு பார்த்தல் ஆகியன செய்யவேண்டும்.

**2. விருந்தினரை இல்லத்தில் எவ்வாறு நடத்துதல் வேண்டும்?**

- விருந்தினர் வந்தபோது வரவேற்றல்; அவருடன் அமர்ந்து கொள்ளுதல்; அவர் மனம் மகிழுமாறு பேசுதல் ஆகியன செய்தல் வேண்டும்.

**3. விருந்தினரை எவ்வாறு உபசரித்தல் வேண்டும்?**

- நம்மிடம் உள்ள பொருள்களைப் பரிமாறும்போது, இன்முகத்துடன் உபசரித்தல் வேண்டும். உப்பில்லாக் கூழானாலும் இன்முகத்துடன் உபசரிப்பதே, மேலானதாக இருத்தல்வேண்டும்.

**4. விருந்தினரை எவ்வாறு வழியனுப்ப வேண்டும்?**

- நமது இல்லத்திற்கு வந்து திரும்பும் விருந்தினரை, இனிய புகழ்மொழிகளைக் கூறி, வா யிற்படிவரை சென்று, வழியனுப்ப வேண்டும்.

**5. 'உண்பதே அமிர்தம் ஆகும்' என விவேக சிந்தாமணி கூறுவது யாது?**

- விருந்தினரை முகமலர்ச்சியோடு உபசரித்து, இனிய மொழிகளைப் பேசி, உப்பில்லாத கூழைக் கொடுத்தாலும், அது உண்பவர்க்கு அமிர்தம் ஆகும் என, விவேக சிந்தாமணி கூறுகிறது.

**6. காசிக்காண்டம் எனும் நூலை இயற்றியவர் யார்?**

- காசிக்காண்டம் எனும் நூலை இயற்றியவர், அரசர் அதிவீரராம பாண்டியர் ஆவார்.

**7. அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல்களைக் கூறுக.**

- நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகியன, அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல்களாகும்.

## சிறுவினா

**இல்லறத்தில் விருந்தோம்பல் செய்யும் முறைகளைக் கூறுக.** (Sep.-20)

- வீட்டிற்கு விருந்தினர் வந்தால், அவரைப் பாராட்டிப் பேசுதல், முகமலர்ச்சியோடு வரவேற்றல், வீட்டிற்குள் அழைத்துச் செல்லுதல், அவரை அருகில் அமரவைத்தல், அவர் மனம் மகிழும்படி பேசுதல், முகமலர்ச்சியோடு பசி ஆற்றுவித்தல், விடைபெற்றுச் செல்லும்போது வாயில்வரை தொடர்ந்து செல்லுதல், புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்பி வைத்தல் ஆகிய ஒன்பதும், இல்லறத்தில் விருந்தோம்பல் செய்யும் முறைகளாகும்.

## இலக்கணக்குறிப்பு

**வருக** – வியங்கோள் வினைமுற்று

**நன்முகமன்** – பண்புத்தொகைகள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### பகுபத உறுப்பிலக்கணம்

1. வந்து – வா (வ) + த் (ந்) + த் + உ
   வா – பகுதி, 'வ' எனக் குறுகியது விகாரம்
   த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
   த் – இறந்தகால இடைநிலை
   உ – வினையெச்ச விகுதி.
2. எழுதல் – எழு + தல்
   எழு – பகுதி
   தல் – தொழிற்பெயர் விகுதி.
3. பரிந்து – பரி + த் (ந்) + த் + உ
   பரி – பகுதி
   த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
   த் – இறந்தகால இடைநிலை
   உ – வினையெச்ச விகுதி.

# கவிதைப்பேழை

# 3. மலைபடுகடாம்

### பலவுள் தெரிக

1. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" – இப்பழமொழி உணர்த்தும் பொருள், (PTA -6)
   அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.
   ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
   இ) காலம் வரும்வரை முயன்றுகொண்டே இருக்க வேண்டும்.
   ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும்.
   **விடை : ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமை யாகச் செய்துவிட வேண்டும்.**
2. நன்னன் குடிமக்கள், கூத்தர்க்கு அளித்த விருந்து ______.
   அ) தினைச்சோறு விருந்து ஆ) கறிச்சோறு விருந்து
   இ) மான்சோறு விருந்து ஈ) பாற்சோறு விருந்து
   **விடை : அ) தினைச்சோறு விருந்து**
3. 'கழை' என்ற சொல்லின் பொருள் ______.
   அ) கரும்பு ஆ) சுற்றம் இ) நெருப்பு ஈ) மூங்கில்
   **விடை : ஈ) மூங்கில்**
4. மலைபடுகடாம் என்ற நூலின் ஆசிரியர் ______.
   அ) கொற்றங் கொற்றனார் ஆ) பெருங்கௌசிகனார்
   இ) கூடலூர்கிழார் ஈ) குன்றம் பூதனார்
   **விடை : ஆ) பெருங்கௌசிகனார்**
5. மலைபடுகடாமின் பாட்டுடைத் தலைவன் ______.
   அ) பழையன் ஆ) குமணன் இ) பிட்டங்கொற்றன் ஈ) நன்னன்
   **விடை : ஈ) நன்னன்**
6. 'கன்று எரிஒள்இணர் கடும்பொடு மலைந்து' இவ்வடியின் 'கடும்பு' என்பதன் பொருள் ______.
   அ) உறவினர் ஆ) சுற்றம் இ) பகைவர் ஈ) நண்பர்
   **விடை : ஆ) சுற்றம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

7. ‘அலங்கு கழை நரலும் ஆரிப் படுகர்’ – இதில் ‘ஒலிக்கும்’ எனப் பொருள்படும் சொல் ______.

அ) அலங்கு ஆ) கழை இ) நரலும் ஈ) ஆரிப்படுகர்

**விடை : இ) நரலும்**

8. “மான விறல்வேள் வயிரியம் எனினே” இத்தொடரில் வந்துள்ள ‘கூத்த’ரைக் குறிக்கும் சொல் ______.

அ) மான ஆ) விறல்வேல் இ) வயிரியம் ஈ) எனினே

**விடை : இ) வயிரியம்**

9. ஊர்ஊராகச் சென்று, மக்களை மகிழ்வித்தவர்கள் ______.

அ) கூத்தர், பாரணர், விறலியர். ஆ) கூத்தர், பொருநர், கானவர்.

இ) பாணர், வேடுவர், பயோனியர். ஈ) புலவர், பாணர், நடிகர்.

**விடை : அ) கூத்தர், பாணர், விறலியர்.**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.** **(PTA -3)**

“அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்றுஎரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்குகழை நரலும் ஆரிப் படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே”

1. ‘**அசைஇ**’ – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு,

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை

**விடை : இ) சொல்லிசை அளபெடை**

2. ‘சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி’ – இவ்வடிகளில் ‘**பாக்கம்**’ என்னும் சொல்லின் பொருள்,

அ) சிற்றூர் ஆ) பேரூர் இ) கடற்கரை ஈ) மூதூர்

**விடை : அ) சிற்றூர்**

3. பாடல் பகுதி இடம்பெற்ற நூல்,

அ) சிலப்பதிகாரம் ஆ) மலைபடுகடாம் இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம்

**விடை : ஆ) மலைபடுகடாம்**

4. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்,

அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு ஆ) அன்று, அவண், அசைஇ, அல்கி

இ) சேந்த, செயலை, செப்பம், சிலம்பு ஈ) அல்கி, எய்தி, போகி, எனினே

**விடை : அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு**

## குறுவினாக்கள்

**1. தினைச்சோறு விருந்து என்றால் என்ன?**

➤ நன்னனிடம் பரிசுபெறச் சென்ற கூத்தர், வழிஇடையில் சிற்றூர்களில் தங்கினர். அங்கு வாழ்ந்தோர், அவர்களுக்குத் தினைச்சோறு விருந்து அளித்தனர்.

**2. பரிசில் பெற்ற கூத்தர் மற்றொரு கூத்தரை எவ்வாறு ஆற்றுப்படுத்துவார்?**

➤ நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம்நிறை ஊர்களில் தங்கி, உணவு பெறுவதற்கும், நன்னனிடம் செல்வதற்கும் வழிப்படுத்துவர்.

**3. நன்னன் எத்தகைய வெற்றிச் சிறப்புடையவன்?**

➤ பகைவரை எதிர்த்துப் போரிடாமலே, வெற்றி பெறுவதற்குக் காரணமான வலிய முயற்சியையும், மானத்தையும், வெற்றியையும் உடைய சிறப்புக்குரியவன் நன்னன்.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**4. நன்னனின் கூத்தர்கள் கானவர் இல்லத்திற்குள் எவ்வாறு செல்வர்?**

➤ நன்னனின் கூத்தர்கள், தங்கள் இல்லத்தில் புகுவது போன்று, தடையில்லாமல் உள்ளே புகுவர். உறவினர் போன்று, கேண்மை கொண்டு இன்மொழி கூறுவர்.

**5. மலைபடுகடாம் – சிறுகுறிப்பு வரைக.**

➤ மலைபடுகடாம், பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. 583 அடிகளைக் கொண்டது. நன்னன் எனும் குறுநில மன்னனின் புகழ் பேசுவது. இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியுள்ளது.

**6. ஆற்றுப்படை என்றால் என்ன?**

➤ வள்ளலிடம் பரிசு பெற்றவன், பரிசு பெறவிரும்பி எதிரில் வருபவனை அழைத்து, 'யாம் இவ்விடத்தே சென்று, இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம்; நீயும் அந்த வள்ளலிடம் சென்று, பரிசு பெற்று வாழ்வாயாக!' என்று கூறி நெறிப்படுத்துதல் 'ஆற்றுப்படை' எனப்படும்.

**7. 'மலைபடுகடாம்' என்னும் பெயரில் அமைந்த நயத்தை விவரி.**

➤ மலையை யானையாக உருவகம் செய்ததோடு, மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதனால் பெருங்கௌசிகனார் தாம் பாடிய நூலுக்கு 'மலைபடுகடாம்' எனக் கற்பனை நயம் வாய்ந்த பெயரைச் சூட்டியமை அறிந்து இன்புறத்தக்கதாகும்.

### சிறுவினா

**1. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?**

(PTA- 3,6)

➤ இயற்கையாய் விளையும் வரகு, தினை, சாமை, முதிரை மற்றும் நெய், பால் போன்றவை முல்லை நிலத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களாகும்.

➤ வயலும் வயல் சார்ந்த இடங்களில் விளைகின்ற செந்நெல், வெண்ணெல் போன்றவை மருத நிலத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களாகும்.

# விரிவானம்

# 4. கோபல்லபுரத்து மக்கள்

### பலவுள் தெரிக

1. கி. ராஜநாராயணனின் எந்தப் படைப்பு சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றது ?

அ) கோபல்ல கிராமம் ஆ) கோபல்லபுரத்து மக்கள்

இ) கரிசல் காட்டு கடுதாசி ஈ) கரிசல் வட்டார சொல்லகராதி

**விடை : ஆ) கோபல்லபுரத்து மக்கள்**

2. கரிசல் இலக்கியம் என்பது ______ வட்டாரப் பகுதியைச் சார்ந்ததாகும்.

அ) கோவில்பட்டி ஆ) மதுரை இ) திருச்சி ஈ) தஞ்சாவூர்

**விடை : அ) கோவில்பட்டி**

3. கரிசல் வட்டாரச் சொல்லகராதியை உருவாக்கிய கரிசல் எழுத்தாளர் ______,

அ) அழகிரிசாமி ஆ) பா. செயப்பிரகாசம் இ) ராஜநாராயணன் ஈ) பூமணி

**விடை : இ) ராஜநாராயணன்**

4. கோபல்லபுரத்து மக்கள் என்ற நூல் ______ போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது.

அ) இந்திய விடுதலை ஆ) விவசாயிகளின்

இ) தொழிலாளர்களின் ஈ) சிறுபான்மை மக்களின்

**விடை : அ) இந்திய விடுதலை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. கோபல்லபுரத்து மக்கள் என்னும் கதையின் ஆசிரியர்,
அ) கி. ராஜநாராயணன் ஆ) இந்திரா பார்த்தசாரதி
இ) ஜெயமோகன் ஈ) ஜெயகாந்தன்
**விடை : அ) கி. ராஜநாராயணன்**

6. 'கறங்கு இசை விழாவின் உறந்தை' என்று குறிப்பிடும் நூல்,
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) கலித்தொகை ஈ) நளவெண்பா
**விடை : ஆ) அகநானூறு**

7. இடைசெவல் மக்களின் வாழ்வியல் காட்சிகளுடன் கற்பனையும் புகுத்தி எழுதப்பட்டுள்ள நூல் ______,
அ) கோபல்லபுரத்து மக்கள் ஆ) பால்மரக் காட்டினிலே
இ) சட்டை ஈ) சித்தன் போக்கு
**விடை : அ) கோபல்லபுரத்து மக்கள்**

8. வட்டார மரபு, வாய்மொழிப் புனை கதைகள் ______ என்று அழைக்கப்படுகின்றன?
அ) நாஞ்சில் இலக்கியம் ஆ) கொங்கு இலக்கியம்
இ) கரிசல் இலக்கியம் ஈ) நெய்தல் இலக்கியம்
**விடை : இ) கரிசல் இலக்கியம்**

9. வட்டார மரபு வாய்மொழிப் புனை கதைகளைத் தொடங்கியவர் ______,
அ) அகிலன் ஆ) இந்திரா பார்த்தசாரதி
இ) நாஞ்சில் நாடன் ஈ) கி. ராஜநாராயணன்
**விடை : ஈ) கி. ராஜநாராயணன்**

10. கி. ராஜநாராயணனுக்கு முன் எழுதத் தொடங்கிய கரிசல் மண்ணின் படைப்பாளி,
அ) கு. அழகிரிசாமி ஆ) பூமணி இ) சோ.தர்மன் ஈ) பா.செயப்பிரகாசம்
**விடை : அ) கு. அழகிரிசாமி**

## கற்கண்டு

# 5. தொகாநிலைத் தொடர்கள்

### பலவுள் தெரிக

1. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ______, (PTA -6)
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
**விடை : அ) வேற்றுமை உருபு**

2. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார் – இத்தொடரில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபுகள் : (Sep. - 21)
அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு இ) ஐ, கு ஈ) இன், கு
**விடை : இ) ஐ, கு**

3. பாடி மகிழ்ந்தனர் – எவ்வகைத் தொடர் என்பதைத் தேர்ந்தெடுக்கவும். (Mar. - 23)
அ) பெயரெச்சத்தொடர் ஆ) வினையெச்சத்தொடர்
இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர்
**விடை : ஆ) வினையெச்சத்தொடர்**

4. 'குழந்தை வந்தது' என்ற எழுவாய்த் தொடரின் விளித் தொடரைத் தேர்க. (Mar.-24)
அ) குழந்தையுடன் வா ஆ) வந்த குழந்தை
இ) குழந்தையே வா! ஈ) குழந்தை வந்தது
**விடை : இ) குழந்தையே வா!**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. வினைமுற்றுடன் பெயர் தொடர்ந்து வருவது, ______ எனப்படும்.

அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினையெச்சத் தொடர்

இ) வினைமுற்றுத் தொடர் ஈ) வேற்றுமைத் தொடர்

**விடை : இ) வினைமுற்றுத் தொடர்**

6. "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" – இப்பழமொழியில் உள்ள தொடர்வகை யாது?

அ) பெயரெச்சத் தொடர் ஆ) வினையெச்சத் தொடர்

இ) உரிச்சொல் தொடர் ஈ) அடுக்குத்தொடர்

**விடை : ஈ) அடுக்குத்தொடர்**

## குறுவினாக்கள்

**1. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன?**

➤ ஒரு தொடர்மொழியில் இருசொற்கள் நின்று, அவற்றின் இடையில், சொல்லோ உருபோ மறைந்து வராமல், வெளிப்படையாகப் பொருளை உணர்த்துவது, தொகாநிலைத் தொடர் எனப்படும்.

**எ – கா :** கண்ணன் வந்தான், மயில் ஆடியது.

**2. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

➤ தொகாநிலைத் தொடர், ஒன்பது வகைப்படும். அவை எழுவாய்த் தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், வினையெச்சத் தொடர், பெயரெச்சத் தொடர், வினைமுற்றுத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத் தொடர் என்பனவாகும்.

**3. எழுவாய்த் தொடர் எவ்வாறு அமையும்?**

➤ எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகளில் ஒன்று தொடர்வது, எழுவாய்த் தொடராகும்.

**எ – கா :** கயல்விழி வந்தாள்.

**4. விளித்தொடர் என்றால் என்ன?**

➤ விளியுடன் வினை தொடர்வது விளித்தொடராகும்.

**எ – கா :** நிலவே காய்ந்தது.

**5. வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் என்றால் என்ன?**

➤ வேற்றுமை உருபு வெளிப்படையாய் அமையும் தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் ஆகும்.

**எ – கா :** விழியால் பேசினாள்.

**6. வினைமுற்றுத் தொடர் என்றால் என்ன?**

➤ வினைமுற்றுடன் பெயர் தொடர்வது, வினைமுற்றுத் தொடராகும்.

**எ – கா :** ஓடினான் கண்ணன்.

**7. பெயரெச்சத் தொடர் என்றால் என்ன?**

➤ முற்றுப்பெறாத வினை, பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது, பெயரெச்சத் தொடர் எனப்படும்.

**எ – கா :** தெரிந்த இடம்.

**8. வினையெச்சத் தொடர் என்றால் என்ன?**

➤ முற்றுப்பெறாத வினை, வினைச்சொல்லைக் கொண்டு முடிவது, வினையெச்சத் தொடர் எனப்படும்.

**எ – கா :** உண்டு களித்தனர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**9. இடைச்சொல் தொடர் என்றால் என்ன?**

➤ இடைச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது, இடைச்சொல் தொடராகும்.

**எ – கா :** மற்றொன்று. அம்ம வாழி.

**10. உரிச்சொல் தொடர் என்றால் என்ன?**

➤ உரிச்சொல்லுடன் பெயரோ வினையோ தொடர்வது, உரிச்சொல் தொடராகும்.

**எ – கா :** கடிமணம், சாலச்சிறந்தது.

**11. அடுக்குத் தொடர் எவ்வாறு வரும்?**

➤ ஒரு சொல்லே, இரண்டு, மூன்று, நான்கு முறைகள் அடுக்கி வருவது, அடுக்குத் தொடராகும்.

**எ – கா :** வருக! வருக! வா! வா! வா! போ! போ! போ! போ!

## மொழியை ஆள்வோம்

**பழமொழிகளை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| 1 | சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் ______. | சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும். |
| 2 | கூடிவாழ்ந்தால் ______. | கூடிவாழ்ந்தால் கோடி நன்மை. |
| 3 | யானைக்கும் ______. | யானைக்கும் அடிசறுக்கும். |
| 4 | காக்கைக்கும் தன்குஞ்சு ______. | காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு. |
| 5 | ஐந்தில் வளையாதது ______. | ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. |
| 6 | தன் கையே ______. | தன் கையே தனக்குதவி. |
| 7 | நுணலும் தன் வாயால் ______. | நுணலும் தன் வாயால் கெடும். |
| 8 | சிறுதுளி ______. | சிறுதுளி பெருவெள்ளம். |
| 9 | தான் ஆடாவிட்டாலும் ______. | தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும். |
| 10 | வாய்மையே ______. | வாய்மையே வெல்லும். |
| 11 | செய்யும் தொழிலே ______. | செய்யும் தொழிலே தெய்வம். |
| 12 | இனம் இனத்தோடு ______. | இனம் இனத்தோடு சேரும். |
| 13 | எரிகிற நெருப்பில் எண்ணெய் ______. | எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே. |
| 14 | பழகப் பழக பாலும் ______. | பழகப் பழக பாலும் புளிக்கும். |
| 15 | நோயற்ற வாழ்வே குறைவற்ற ______ . | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். |
| 16 | காற்றுள்ளபோதே ______. | காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். |
| 17 | அகத்தின் அழகு முகத்தில் ______. | அகத்தின் அழகு முகத்தில் தெரியும். |
| 18 | அரைகுறை அறிவு ______. | அரைகுறை அறிவு ஆபத்து. |
| 19 | பதறிய காரியம் ______. | பதறிய காரியம் சிதறும். |
| 20 | சித்திரமும் ______. | சித்திரமும் கைப்பழக்கம். |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# வாழ்வியல்

# 6. திருக்குறள்

## பலவுள் தெரிக

1. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே (Mar.-24)
வேளாண்மை என்னும் செருக்கு. – இக்குறட்பாவில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களைத் தேர்க.
அ) தாளாண்மை – தகைமைக்கண் ஆ) தாளாண்மை – வேளாண்மை
இ) தகைமைக்கண் – தங்கிற்றே ஈ) வேளாண்மை – செருக்கு
**விடை : ஆ) தாளாண்மை – வேளாண்மை**

2. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லாதவர் _____.
அ) ஒழுக்கமில்லாதவர் ஆ) இழுக்கமுடையவர் இ) அறிவிலாதார் ஈ) நடத்தைஇலார்
**விடை : இ) அறிவிலாதார்**

3. இன்மை புகுத்தி விடுவது _____.
அ) முயற்சி ஆ) வேளாண்மை இ) முயற்றின்மை ஈ) தாளாண்மை
**விடை : இ) முயற்றின்மை**

4. யார்க்கும் பழியாவது அறிவறிந்து _____.
அ) பொறி இன்மை ஆ) முயற்சி இன்மை
இ) செல்வம் இன்மை ஈ) ஆள்விமை இன்மை
**விடை : ஈ) ஆள்விமை இன்மை**

5. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் _____.
அ) நால்வர் நான்மணிமாலை ஆ) திருவள்ளுவமாலை
இ) இரட்டை மணிமாலை ஈ) திருக்குறள் அமுதம்
**விடை : ஆ) திருவள்ளுவமாலை**

6. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர் ______.
அ) பாரதியார் ஆ) சுரதா இ) பாரதிதாசன் ஈ) கண்ணதாசன்
**விடை : இ) பாரதிதாசன்**

7. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர்______.
அ) பாரதிதாசன் ஆ) கவிமணி இ) பாரதியார் ஈ) கம்பதாசன்
**விடை : அ) பாரதிதாசன்**

8. "அறிவு" என்பது ______.
அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் ஆ) பல கற்றல்
இ) மெய்ப்பொருள் காண்பது ஈ) கல்லார் அறிவிலா தார்
**விடை : இ) மெய்ப்பொருள் காண்பது**

9. ஏமரா மன்னன் ______ கெடும்.
அ) இடிப்பார் இல்லாததால் ஆ) கெடுப்பார் இல்லாததால்
இ) நல்லார் இல்லாதததால் ஈ) முறை செய்யாததால்
**விடை : அ) இடிப்பார் இல்லாததால்**

10. பத்து மடங்கு தீமை தருவது ______.
அ) பல்லார் பகை கொளல் ஆ) நல்லார் தொடர் கைவிடல்
இ) கண்ணோட்டம் இன்மை ஈ) நாகரிகம் இன்மை
**விடை : ஆ) நல்லார் தொடர்பு கைவிடல்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. கொடுங்கோலனைக் குறிக்கும் தொடர் ______.
அ) வேலொடு நின்றான் ஆ) கண்ணோட வல்லான்
இ) முறை செய்யா மன்னன் ஈ) கோலொடு நின்றான்
**விடை : ஈ) கோலொடு நின்றான்**

12. நாள்தொறும் ______ மன்னவன் நாடு கெடும்.
அ) வேலொடு நில்லா ஆ) கோலொடு நின்ற
இ) கண்ணோட்டம் இல்லாத ஈ) நாடி முறை செய்யாத
**விடை : ஈ) நாடி முறை செய்யாத**

13. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண் – இதில் அமைந்துள்ள எதுகை மோனைகள் ______.
அ) அடிமோனை, அடிஎதுகை, சீர்மோனை ஆ) அடிஎதுகை, அடிமோனை, சீர்எதுகை
இ) அடிஎதுகை, சீர்மோனை, சீர்எதுகை ஈ) அடிஎதுகை, அடிமோனை, சீர்எதுகை
**விடை : இ) அடிஎதுகை, சீர்மோனை, சீர்எதுகை**

14. “கூவிளங்காய் தேமா மலர்” என்னும் வாய்பாட்டுக்குப் பொருத்தமான ஈற்றடி ______.
அ) கண்ணோட்டம் இல்லாத கண் ஆ) நாடி முறை செய்வர்
இ) வேளாண்மை என்னும் செருக்கு ஈ) நாகரிகம் வேண்டு பவர்
**விடை : ஈ) நாகரிகம் வேண்டு பவர்**

15. நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் ______
அ) கருமம் சிதையாது கண்ணோருவர் ஆ) நாடி முறை செய்வர்
இ) நஞ்சுண்டு அமைவர் ஈ) நல்லார் தொடர் கை விடார்
**விடை : இ) நஞ்சுண்டு அமைவர்**

16. முயற்சி தருவது ______.
அ) அருமையை ஆ) சிறுமையை இ) வறுமையை ஈ) பெருமையை
**விடை : ஈ) பெருமையை**

17. “வேளாண்மை என்னும் செருக்கு” இத்தொடரிலுள்ள ‘வேளாண்மை’ என்பது ______ குறிக்கும்.
அ) விடாமுயற்சியை ஆ) முயற்சி செய்யாமையை
இ) பிறருக்கு உதவுதலை ஈ) பெருமுயற்சியை
**விடை : இ) பிறருக்கு உதவுதலை**

18. “தேமாங்காய் தேமா பிறப்பு” என்னும் வாய்பாட்டுக்குப் பொருத்தமான ஈற்றடி ______”
அ) நச்சு மரம்பழுத் தற்று ஆ) கண்ணோட்டம் இல்லாத கண்
இ) மெய்ப்பொருள் காண்ப தறிவு ஈ) வேளாண்மை என்னும் செருக்கு
**விடை : ஈ) வேளாண்மை என்னும் செருக்கு**

19. “கெடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்” – இக்குறளில் இடம் பெற்றுள்ள அளபெடைகள் ______, ______.
அ) செய்யுளிசை, சொல்லிசை ஆ) சொல்லிசை, இன்னிசை
இ) இசைநிறை, இன்னிசை ஈ) இன்னிசை, இன்னிசை
**விடை : ஈ) இன்னிசை, இன்னிசை**

20. “நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று” என்னும் உவமை ______ குறிக்கிறது.
அ) முயற்சி இல்லாதவரை ஆ) பிறருக்கு உதவி செய்யாதவனை
இ) உலகத்தோடு ஒட்ட ஒழுகாதவனை ஈ) நச்சப்படாதவன் செல்வத்தை
**விடை : ஈ) நச்சப்படாதவன் செல்வத்தை**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



21. "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்" – இக்குறளில் எந்தச் சீருக்கு "புளிமாங்காய்" என்னும் வாய்பாடு பொருந்தும்?
அ) ஊழையும் ஆ) உப்பக்கம் இ) உலைவின்றி ஈ) துஞற்று பவர்
**விடை : இ) உலைவின்றி**

## குறுவினாக்கள்

**1. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் எவர் என, வள்ளுவர் வாய்மொழி கூறும் செய்தி யாது? (Sep.-20)**

➤ பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் விரும்பத்தக்க நாகரிகமுடைய பண்பாளர், அதனை உண்பார் என, வள்ளுவர் வாய்மொழி கூறுகிறது.

**2. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**

➤ உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்; ஒழுக்கமே ஒருவருக்கு உயர்வினைத் தரக்கூடியது.

**3. ஒழுக்கத்தினால் எய்துவது எது? இழுக்கத்தினால் அடைவது யாது?**

➤ ஒழுக்கத்தினால் எய்துவது மேன்மை; இழுக்கத்தினால் அடைவது அடையக்கூடாத பழி.

**4. பலகற்றும் கல்லாதவராகக் கருப்படுபவர் யார்?**

➤ உலக நடைமுறைகளோடு ஒத்து வாழக் கல்லாதவர், பல நூல்களைக் கற்றவராயினும், கல்லாத வராகவே கருப்படுவார்.

**5. மெய்யறிவின் இலக்கணமாக வள்ளுவர் கூறுவது யாது?**

➤ எப்பொருளாயினும், அஃது எப்படிப்பட்டதாயினும், அப்பொருளின் உண்மைத்தன்மையைக் காண்பதே, மெய் அறிவின் இலக்கணமாகும்.

**6. மூவகைக் குற்றங்கள் யாவை?**

➤ காமம் (ஆசை), வெகுளி (சினம்), மயக்கம் (அறியாமை) ஆகிய மூன்றும், மூவகைக் குற்றங்கள் ஆகும்.

**7. எவை கெட்டால் நோய் கெடும்?**

➤ ஆசை, சினம், அறியாமை என்னும் மூன்றும் கெட்டால், அவற்றால் ஏற்படும் நோய் கெடும்.

**8. அரியவற்றுள் அரிதாகக் கருதப்படுவது யாது?**

➤ பெரியோரைப் போற்றித் தன் சுற்றத்தவருள் ஒருவராகக் கொள்ளுதலே, அரியவற்றுள் அரிதாகக் கருதப்படுவது.

**9. கெடுக்கும் பகைவர் இல்லாமலே மன்னவன் கெடுவது எதனால்?**

➤ குற்றம் கண்டபோது இடித்துக் கூறித் திருத்தும் பெரியோரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாத மன்னவன், பகைவர் இல்லாமல் தானே கெடுவான்.

**10. நல்லார் தொடர்பை விடலால் விளைவது யாது?**

➤ நற்பண்புடைய பெரியோரின் நட்பை விட்டுவிடுவது, பலரோடு பகைகொள்வதைவிடப் பலமடங்குத் தீமை தருவதாகும்.

**11. வேலொடு நின்றவன் செயலுக்கு ஒப்பானது எது?**

➤ அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு மக்களிடம் வரி வசூலிப்பதானது, வேல்போன்ற ஆயுதத்தைக் காட்டி, வழிப்பறி செய்பவன் பொருளைப் பறிப்பதற்குச் சமமானதாகும்.

**12. கொடுங்கோலன், தன் நாட்டை இழக்கக் காரணம் என்ன?**

➤ நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத கொடுங்கோல் மன்னவன், தன் நாட்டை இழக்க நேரிடும்.

**13. பண்ணும் கண்ணும் எப்போது பயனற்றுப் போகும்?**

➤ பாடலோடு பொருந்தவில்லை என்றால் பண்ணும் (இசையும்), இரக்கம் இல்லாவிட்டால் கண்களும் பயனற்றுப் போகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



14. **இவ்வுலகம் யாருக்கு உரிமை உடையதாகும்?**
   - கடமையைச் செய்யும்போது நடுவுநிலைமை தவறாமல், இரக்கம் காட்டுபவருக்கே, இவ்வுலகம் உரிமை உடையதாகும்.

15. **பலரும் பாராட்டத்தக்க பண்பாளர் யார்?**
   - தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும், பிறர் நன்மை கருதி அதை உண்ணுபவரே, பலரும் விரும்பிப் பாராட்டத்தக்க (நாகரிகர்) பண்பாளர் ஆவார்.

16. **அருமையைப் பெருமையாக்கும் வழி யாது?**
   - முடிப்பதற்கு அரியது என்று எண்ணி ஒரு செயலைச் செய்தலில் சோர்வு அடையக்கூடாது; அரிய செயலையும் முயற்சியால் முடிப்பதே பெருமைபெற வழியாகும்.

17. **வேளாண்மை என்னும் பெருமிதத்தை எய்தும் வழி யாது?**
   - பிறருக்கு உதவுதல் என்னும் செருக்கை, விடாமுயற்சி என்னும் உயர்பண்பு கொண்டவர் களால் மட்டுமே எய்த முடியும். அதாவது, விடாமுயற்சியே வேளாண்மை என்னும் பெருமிதத்தை எய்தும் வழியாகும்.

18. **முயற்சியின் அருமையைக் கூறுக.**
   - அருமுயற்சி செய்தாருக்குச் செல்வம் பெருகும்;
   - செய்யாதவருக்கு வறுமை வந்து சேரும் என்பதனால், முயற்சியின் அருமை புலப்படும்.

19. **ஒருவருக்குப் பழியாவது யாது?**
   - ஐம்புலன்களில் ஏதேனும் குறையிருப்பினும், அது இழிவு ஆகாது.
   - அறிய வேண்டியதை அறிந்து முயற்சி செய்யாததே இழிபழியாகும்.

20. **ஊழையும் உப்பக்கம் காண்பவர் யார்?**
   - உள்ளத்தில் சோர்வு இல்லாமல் முயற்சி செய்பவர், தம் செயலுக்கு இடையூறாக (ஊழே) முன்வினைப் பயனே தோன்றினாலும், அதனைத் தோற்கடித்து வெற்றி பெறுவர்.

21. **பலகோடி செல்வம் இருந்தும் பயனில்லையாம் (அடுக்கிய கோடி உண்டாயினும் இல்) – ஏன்?**
   - பிறருக்குக் கொடுக்காமலும், தான் அனுபவிக்காமலும் இருப்பவர், பலகோடி செல்வம் பெற்றிருந்தாலும், அதனால் பெறும் பயன் ஏதும் இல்லையாம்.

22. **நச்சப்படாதவன் செல்வம் எத்தகையது?**
   - ஒருவராலும் விரும்பப்படாதவன் (நச்சப்படாதவன்) பெற்றுள்ள செல்வமானது, ஊருக்கு நடுவில் நச்சுமரம் ஒன்று பழுத்ததற்குச் சமமாகும்.

23. **ஒழுக்கத்தின் சிறப்பு குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?**
   - ஒழுக்கம் எல்லாருக்கும் சிறப்பைத் தருவதால், அந்த ஒழுக்கத்தை உயிரினும் மேலானதாகப் போற்றிக் காத்தல் வேண்டும். ஒழுக்கத்துடன் வாழ்பவனே, மேன்மை அடைவான். ஒழுக்கம் தவறுபவர், பழியை அடைவர். இவை வள்ளுவர் கூறும் ஒழுக்கச் சிறப்பாகும்.

## சிறுவினாக்கள்

1. **பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்**
   **கண்ணோட்டம் இல்லாத கண். – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.**

இக்குறட்பாவில், **எடுத்துக்காட்டு உவமை அணி** பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம்** : உவமானத்தொடர் தனியாகவும், உவமேயத்தொடர் தனியாகவும் அமைந்து, உவமவுருபு பெறாமல் வருவது, எடுத்துக்காட்டு உவமை அணியாகும்.

பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் – உவமானத் தொடர்

கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண் – உவமேயத் தொடர்

உவமஉருபு இடம்பெறவில்லை.

**விளக்கம்** : பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை; இரக்கம் இல்லாத கண்களால் பயனில்லையாம். இடையில் ‘அதுபோல்’ என்னும் உவமவுருபு இடம்பெறவில்லை. எனவே **எடுத்துக்காட்டு உவமையணி** அமைந்துள்ளது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று. – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

இக்குறட்பாவில், **உவமை அணி** பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம் :** ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது, உவமை அணி ஆகும்.

நடுஊருள் நச்சு மரம்பழுத்தது – உவமானத்தொடர் (உவமை)

நச்சப் படாதவன் செல்வம் – உவமேயத் தொடர் (பொருள்)

அற்று – உவம உருபு. எனவே, **உவமையணி** அமைந்துள்ளது.

**விளக்கம் :** ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்திருந்தாலும், எவரும் விரும்பார். அதுபோலக் கருமியின் செல்வமும், யாருக்கும் பயன்படாது.

3. பெரியாரைத் துணையாகக்கொள்வதன் சிறப்பு விளக்குக.

பெரியாரைத் துணையாகக் கொள்வதன் சிறப்பு :

➤ தம்மைவிட அறிவு முதலியவற்றில் சிறந்த பெரியாரைப் பேணித் தமக்குச் சுற்றமாக, துணையாக ஏற்றுக் கொள்ளுதலே, வலிமைகளுள் எல்லாம் சிறந்த வலிமையாகும். தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் பெரியாரை, தன்னைச் சூழ்ந்திருக்குமாறு துணையாக்கிக்கொள்ள வேண்டும்.

பெரியாரைத் துணைக்கொள்ளாவிட்டால் ஏற்படும் குற்றம் :

➤ குற்றம் கண்டபோது கடிந்து கூறும் பெரியாரைத் துணையாகப் பெறாத அரசன், தன்னால் கெடுக்கும் பகைவர் இல்லாமலும் தானே கெட்டு அழிவான். நற்பண்புடைய பெரியோரின் துணையைக் கைவிடுவது, பலரைப் பகைத்துக் கொள்வதைவிடப் பத்து மடங்குத் தீமை உடையதாகும்.

4. கண்ணோட்டம் குறித்து அறிவன யாவை?

➤ கடமை தவறாது பரிவு காட்டுதல் கண்ணோட்டம் ஆகும்.

கண்ணோட்டம் குற்றமாதல் :

➤ பாடலோடு பொருந்தாவிட்டால் இசையால் பயனில்லை. அதுபோல் இரக்கம் என்னும் கண்ணோட்டம் இல்லாவிட்டால் கண்களால் பயனில்லையாகும்.

கண்ணோடு நெறி :

➤ நடுவுநிலையோடு கடமை தவறாது இரக்கம் காட்டுபவருக்கே இவ்வுலகம் உரிமை உடையது ஆகும்.

கண்ணோட்டம் என்பது நாகரிகப் பண்பு :

➤ பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சு கொடுத்தாலும், விரும்பத்தக்க கண்ணோட்டம் உடைய நாகரிகப் பண்பாளர் அதனை உண்டு அமைவர்.

5. ‘நன்றி இல் செல்வம்’ குறித்த வள்ளுவர் விளக்கம் யாது?

➤ உழைத்துத் தேடியவருக்கும் பிறருக்கும் பயன் படுதல் இல்லாச் செல்வமே ‘நன்றி இல் செல்வ’மாகும்.

இம்மையிலும் மறுமையிலும் பயன்படாது:

➤ பிறருக்குக் கொடுத்தலோ தான் அனுபவித்தலோ இல்லாமல் அடுக்கடுக்காகப் பலகோடி செல்வத்தைப் பெற்றிருந்தாலும் அதனால் பயன் விளையாது.

நன்றி இல் செல்வத்தது குற்றம் :

➤ ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்றுள்ள செல்வமானது, பிறருக்கு உதவாததால் ஊரின் நடுவில் நச்சு மரம் பழுத்தற்குச் சமமாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. 'ஒழுக்கமுடைமை' குறித்து வள்ளுவர் கூறிய செய்திகளைத் தருக.

➤ ஒழுக்கம் என்பது உலக நடையறிந்து நடத்தலாகும்.

ஒழுக்கத்தின் சிறப்பு :

➤ 'ஒழுக்கம்' என்பது எல்லோருக்கும் சிறப்பைத் தருவதனால், அதனை உயிரினும் மேலானதாகப் பேணிக்காத்தல் வேண்டும்.

மேன்மையோ பழியோ ஒழுக்கமே காரணம் :

➤ சிறப்பைத் தரும் ஒழுக்க நெறியில் வாழ்பவர் மேன்மை அடைவர். ஒழுக்கநெறி தவறுபவர் அடையக்கூடாத பழியை அடைவர்.

அறிவிலார் :

➤ பல நூல்களைக் கற்றிருந்தாலும், உலகத்தோடு ஒத்து வாழக்கூடிய ஒழுக்க நெறியைக் கல்லாதவர், அறிவு இல்லாதவரே ஆவார்.

7. மெய்ப்பொருளை உணர்தல் குறித்த வள்ளுவர் அறிவுரை யாது?

**எது அறிவு** : எப்பொருளானாலும், அது எப்படிப்பட்டதானாலும், அந்தப் பொருளின் உண்மைத் தன்மையைக் காண்பதே மெய்யறிவாகும்.

**துன்பம் கெட வழி** : ஆசை (காமம்), சினம் (வெகுளி), அறியாமை (மயக்கம்) என்னும் மூன்றும் கெட்டால் அவற்றால் வரும் துன்பங்கள் அழியும்.

8. 'கொடுங்கோன்மை' குறித்துத் திருக்குறள் கூறும் செய்திகளை எழுதுக.

கொடுங்கோலாட்சி வழிப்பறிக்குச் சமம் :

➤ தன் அதிகாரத்தைக் காரணமாகக் கொண்ட அரசன், மக்களிடம் வரியை வசூலிப்பதானது, வேலை ஏந்தி வழிப்பறி செய்பவன் பொருளைப் பறிப்பதற்குச் சமமாகும்.

கொடுங்கோலன் ஆட்சி இழப்பான் :

➤ ஒவ்வொரு நாளும் தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை ஆராய்ந்து ஆட்சி செய்யாத கொடுங்கோல் மன்னன் தன் நாட்டை இழப்பான்.

## நெடுவினா

1. 'ஆள்வினை உடைமை' குறித்து வள்ளுவர் வழங்கிய கருத்துகளை வகைப்படுத்தித் தருக.

இடைவிடா முயற்சியே 'ஆள்வினை' என்பதாகும். அந்த முயற்சி உடைமையின் சிறப்பு இங்கு கூறப்பட்டுள்ளது.

முயற்சியது சிறப்பு :

முடிப்பதற்கு அரியது என்று எண்ணி, ஒரு செயலைச் செய்தலில் சோர்வு அடையக்கூடாது. அரிய செயலையும் இடைவிடா முயற்சியால் முடிப்பதே பெருமையை உண்டாக்கும். இடைவிடா முயற்சி என்னும் உயர்பண்பு கொண்டவர்களால் மட்டுமே, பிறருக்கு உதவுதல் என்னும் செருக்கை அடைய முடியும். அதாவது, விடாமுயற்சியே வேளாண்மை என்னும் பெருமிதத்தை அடைய வழியாகும்.

ஊழையும் வெல்லலாம் :

ஐம்புலன்களில் ஏதேனும் குறை இருப்பினும், அது இழிவு ஆகாது. அறிய வேண்டியவற்றைத் தெளிந்து முயற்சி செய்யாமையே இழிவைத் தரும் பழியாகும். உள்ளத்தில் சோர்வு இல்லாமல் முயற்சியை மேற்கொள்பவர், தம் செயலுக்கு முன்வினைப் பயனே (ஊழே) இடையூறாகத் தோன்றினாலும், அதனைத் தோல்வி காணச் செய்து வெற்றி பெறுவர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் - 6

# உரைநடை உலகம்

## 1. பன்முகக் கலைஞர்

### பலவுள் தெரிக

1. "செந்தமிழுக்கு ஒரு தீமை எனில் தம் உயிரும் தந்திடத் துணியும் தியாகத் திருவுருவம்" எனக் குறிப்பிடப்பட்டவர் ______.

அ) பேராசிரியர் அன்பழகன் ஆ) பட்டுக்கோட்டை அழகிரி

இ) அறிஞர் அண்ணாதுரை ஈ) கலைஞர் கருணாநிதி

**விடை : ஈ) கலைஞர் கருணாநிதி**

2. சரியான தொடரைத் தேர்ந்திடுக.

அ) துறைதோறும் தொட்டது துலங்கத் தம் முத்திரை பதிக்கும் திறமையாளர்!

ஆ) தொட்டது துலங்கத் தம் முத்திரை துறைதோறும் பதிக்கும் திறமையாளர்!

இ) தொட்டது துலங்கத் துறைதோறும் தம் முத்திரை பதிக்கும் திறமையாளர்!

ஈ) தொட்டது தம் முத்திரை துலங்கத் துறைதோறும் பதிக்கும் திறமையாளர்!

**விடை : இ) தொட்டது துலங்கத் துறைதோறும் தம் முத்திரை பதிக்கும் திறமையாளர்!**

3. சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சியின் முதலமைச்சராகப் பனகல் அரசர் இருந்த ஆண்டு ______.

அ) 1924 ஆ) 1947 இ) 1921 ஈ) 2011

**விடை : இ) 1921**

4. கூற்று 1 : இளமைப்பருவத்தில் கலைஞரை ஈர்த்தவை தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகள்!

கூற்று 2 : பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றல் கலைஞரைக் கவர்ந்தது.

அ) கூற்று 1, 2 தவறு ஆ) கூற்று 1 சரி, 2 தவறு

இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1, 2 சரி

**விடை : ஈ) கூற்று 1, 2 சரி**

5. கலைஞர் எழுதிய முதல் மேடை நாடகம் ______.

அ) தூக்குமேடை ஆ) சாம்ராட் அசோகன் இ) காகிதப்பூ ஈ) பழநியப்பன்

**விடை : ஈ) பழநியப்பன்**

6. 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கக் காரணமான நாடகம் ______.

அ) வெள்ளிக்கிழமை ஆ) தூக்குமேடை இ) காகிதப்பூ ஈ) மணிமகுடம்

**விடை : ஆ) தூக்குமேடை**

7. தமிழ்த்திரை உலகின் திருப்பு முனையாக அமைந்த திரைக்கதை வசனம் ______.

அ) மலைக்கள்ளன் ஆ) ராஜகுமாரி இ) ரங்கோன் ராதா ஈ) பராசக்தி

**விடை : ஈ) பராசக்தி**

8. தாம் ஏற்கெனவே ஏறிய புகழ் மாலையின் சிகரத்தைக் கலைஞர் தொட்ட படம் ______.

அ) பழநியப்பன் ஆ) ரங்கோன் ராதா இ) ராஜகுமாரி ஈ) பராசக்தி

**விடை : ஈ) பராசக்தி**

9. "சொல் புதிது! சுவை புதிது!" என்று கேட்போர் வியக்கும்படி அமைந்தவை கலைஞரின் ______.

அ) கதைகள் ஆ) புதினங்கள் இ) நாடகங்கள் ஈ) வசனங்கள்

**விடை : ஈ) வசனங்கள்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. மருதநாட்டு இளவரசி, பணம், நாம், திரும்பிப்பார் என்னும் படங்கள் ______ கருத்துகளைப் பேசின.
அ) பகுத்தறிவு ஆ) அரசியல் இ) சமூக ஈ) இலக்கிய
**விடை : இ) சமூக**

11. கலைஞரின் கதை வசனங்களில் ______ பேசிய படங்கள் புதுமைப்பித்தன், குறவஞ்சி, அரசிளங்குமரி, வண்டிக்காரன் மகன்.
அ) பகுத்தறிவு ஆ) அரசியல் இ) இலக்கியம் ஈ) சமூகம்
**விடை : ஆ) அரசியல்**

12. கலைஞரின் கதை வசனங்களில் பெண்கள் முன்னேற்றம் குறித்துப் பேசிய படங்கள் ______.
அ) மணமகள், ராஜாராணி, பாசப் பறவைகள், அரசிளங்குமரி
ஆ) மணமகள், ராஜாராணி, ராஜகுமாரி, குறவஞ்சி
இ) மணமகள், ராஜாராணி, இருவர் உள்ளம், பாசப் பறவைகள்
ஈ) மணமகள், இருவர் உள்ளம், பாசப் பறவைகள், இளவரசி
**விடை : இ) மணமகள், ராஜாராணி, இருவர் உள்ளம், பாசப் பறவைகள்**

13. இளம்வயதில் கலைஞர் நடத்திய கையெழுத்து ஏடு ______.
அ) திராவிட நாடு ஆ) முரசொலி இ) மாணவநேசன் ஈ) கடிதங்கள்
**விடை : இ) மாணவநேசன்**

14. கலைஞர் முரசொலியில் ______ என்னும் புனைபெயரில் பல கட்டுரைகள் எழுதினார்.
அ) மாணவநேசன் ஆ) பாண்டியன் இ) சேரன் ஈ) சோழன்
**விடை : இ) சேரன்**

15. தமிழ்நாட்டின் வரலாற்றை ஆய்வு செய்ய நினைப்போரின் கருவூலங்கள் கலைஞரின் ______.
அ) உரைகள் ஆ) கதைவசனங்கள் இ) கடிதங்கள் ஈ) நெஞ்சுக்கு நீதி
**விடை : இ) கடிதங்கள்**

16. ஆங்கிலேய எதிர்ப்பு உணர்வைக் காட்டும் கலைஞரின் நூல் ______.
அ) மாணவ நேசன் ஆ) சாம்ராட் அசோகன்
இ) மலைக்கள்ளன் ஈ) கயிற்றில் தொங்கிய கணபதி
**விடை : ஈ) கயிற்றில் தொங்கிய கணபதி**

17. ஆறு பாகங்களாகக் கலைஞர் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' என்பது ______.
அ) சிறுகதைகளாகும் ஆ) புதின வகையுள் அடங்கும்
இ) கடிதத் தொகுப்புகளாகும் ஈ) வாழ்க்கை வரலாறாகும்
**விடை : ஈ) வாழ்க்கை வரலாறாகும்**

18. கலைஞர் எழுதிய புதினங்கள் ______.
அ) நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக் கிண்ணம், தாய்மை
ஆ) நெஞ்சுக்கு நீதி, கடிதங்கள், கயிற்றில் தொங்கிய கணபதி
இ) சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா
ஈ) ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், ஒரே ரத்தம்
**விடை : ஈ) ரோமாபுரிப் பாண்டியன், பொன்னன் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், ஒரே ரத்தம்**

19. வசன கவிதைகளுள் ______ என்னும் தலைப்பில் அமைந்தது புகழ்பெற்ற ஒன்றாகும்.
அ) தொல்காப்பியப் பூங்கா ஆ) சங்கத்தமிழ்
இ) குறளோவியம் ஈ) புறநானூற்றுத்தாய்
**விடை : ஈ) புறநானூற்றுத்தாய்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



20. பொருத்தமான விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | கலைஞர் கையாண்ட உவமைகள் | – i. | ஆறு பாகங்கள் |
| 2. | கலைஞர் இயற்றிய கவிதைகள் | – ii. | கணக்கில் அடங்கா |
| 3. | கலைஞரின் கடிதங்கள் | – iii. | தொண்ணூற்று இரண்டு |
| 4. | கலைஞரின் நெஞ்சுக்கு நீதி | – iv. | நூற்றைம்பது |
| | | – v. | ஒன்பது தொகுதிகள் |

அ) 1 - iv, 2 - v, 3 - ii, 4 - iii
ஆ) 1 - iv, 2 - v, 3 - i, 4 - ii
இ) 1 - iv, 2 - v, 3 - ii, 4 - i
ஈ) 1 - v, 2 - iv, 3 - iii, 4 - ii

**விடை : இ) 1 - iv, 2 - v, 3 - ii, 4 - i**

21. வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அரங்கிற்கு ______ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

அ) வள்ளுவர் மகால்
ஆ) வள்ளுவர் மாளிகை
இ) குறள் மணிமாடம்
ஈ) வள்ளுவர் கலைக்கூடம்

**விடை : இ) குறள் மணிமாடம்**

22. கூற்று 1 : நூல்கள் வாசிப்பதில் தீராத ஆர்வம் கொண்ட அண்ணாவின் 102ஆவது பிறந்த நாளில் கலைஞர் 'அண்ணா நூற்றாண்டு நூலக'த்தைத் திறந்து வைத்தார்.

கூற்று 2 : இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் முத்திரை பதித்ததால் கலைஞர், 'முத்தமிழ் அறிஞர்' எனப் போற்றப்பட்டார்.

அ) இரு கூற்றுகளும் தவறு
ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி
ஈ) இரு கூற்றுகளும் சரி

**விடை : ஈ) இரு கூற்றுகளும் சரி**

23. கூத்துப் பட்டறை ந. முத்துசாமி அவர்கள் ______ எனக் குறிப்பிடப் பெற்றுள்ளார்.

அ) கலைமாமணி ஆ) கலைஞர் இ) கலைக்குறிசில் ஈ) கலைஞாயிறு

**விடை : ஈ) கலைஞாயிறு**

24. ந. முத்துசாமி அவர்கள், தமிழ்க் கலையில் ______ முக்கிய அடையாளமாக்கியவர்.

அ) கரகாட்டத்தை ஆ) ஒயிலாட்டத்தை இ) தெருக்கூத்தை ஈ) தேவராட்டத்தை

**விடை : இ) தெருக்கூத்தை**

25. கூற்று 1 : தமிழ் நாட்டுக் கூத்துக்கலையின் ஒப்பனைமுறை, கதை சொல்லும் முறை ஆகியவைகளை எடுத்துக்கொண்டு, புதுவித நாடகங்களை ந. முத்துசாமி உருவாக்கினார்.

கூற்று 2 : இந்தியாவில் மட்டுமே நடத்தப்பட்ட இவரது நாடகங்கள், பெரும்பாலும் சமூக அரசியல் மாற்றங்களைப் பேசின.

அ) இரு கூற்றும் சரி
ஆ) இரு கூற்றும் சரி தவறு
இ) கூற்று 1 சரி 2 தவறு
ஈ) கூற்று 1 தவறு 2 சரி

**விடை : இ) கூற்று 1 சரி 2 தவறு**

## குறுவினாக்கள்

**1. தன்னைக் கலை எவ்வாறு பெருமைப்படுத்திக் கொண்டது?**

➤ 'கலை' என்பது, இயற்பெயரை மறைத்து, இட்ட பெயர் நிலைக்கும் அளவுக்குக் கலைஞர் கருணாநிதி அவர்களை அடையாளப்படுத்தித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது.

**2. கலைஞரின் பள்ளிக் கல்வி குறித்து எழுதுக.**

➤ பிறந்த ஊரான திருக்குவளையில் தொடக்க கல்வியை நிறைவு செய்த கலைஞர், திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பள்ளிக் கல்வியை முடித்தார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. **கருணாநிதிக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்தது எது?**

- உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது, துணைப்பாடமாகப் படித்த நீதிக்கட்சியின் முதலமைச்சராக இருந்த பனகல் அரசரின் சாதனைகளைக் கூறிய நூலே கலைஞருக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்தது.

4. **கருணாநிதி பெற்ற சிறப்புப் பெயர் எவ்வாறு வழக்கத்திற்கு வந்தது?**

- கருணாநிதி தாம் எழுதிய 'தூக்குமேடை' நாடகத்தில், எம். ஆர். இராதாவின் வேண்டுகோளை ஏற்று, மாணவர் தலைவராக நடித்தார்.
- அந்த நாடகத்திற்கான பாராட்டு விழாவில், கருணாநிதிக்குக் 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்பெற்றது. பின்னாளில், 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயரே மக்களால் அன்போடு அழைக்கும் பெயராயிற்று.

5. **திரைக்கலை உலகில் இருபெரு நட்சத்திரங்கள் எப்போது, எவ்வாறு உதித்தன?**

- இயக்குநர் ஏ. எஸ். ஏ. சாமி, கலைஞரின் திறமையை உணர்ந்து, எம். ஜி. ஆர். முதன்முதலில் நடித்த 'ராஜகுமாரி' என்ற படத்திற்கு 1947–இல் முழுவசனத்தையும் எழுதச் செய்தார்.
- திரைப்படத்தின் தொடக்கத் தலைப்புகளில் 'வசன உதவி – மு. கருணாநிதி' எனப் போடப்பட்டது. அந்தப் படம் பெரும்வெற்றி பெற்றது. திரைக்கலை உலகில் இருபெரு நட்சத்திரங்கள் உதித்தன.

6. **திரைப்படப் பாடல்கள் எழுதுவதிலும் கலைஞர் சிறந்தவர் என்பதை விவரி.**

- 'மந்திரி குமாரி' தொடங்கிப் பல படங்களுக்குக் கலைஞர் எழுதிய திரைப்படப் பாடல்கள் புகழ் பெற்றன. 'ரங்கோன் ராதா' படத்திற்குக் கதைவசனத்துடன் டி. ஆர். பாப்பா இசை அமைத்த நான்கு பாடல்களை எழுதினார்.
- 'மறக்க முடியுமா?' திரைப்படத்தில் அமைந்த, 'காகித ஓடம்! கடல் அலை மேலே' என்னும் பாடல், காலத்தால் மறக்க முடியாத, மக்கள் மனத்தில் இடம்பெற்ற பாடல் எனலாம்.

7. **கலைஞர் எழுதிய திரைப்பட வசனங்கள் எவ்வெக் கருத்துகளைப் பேசின?**

- கலைஞர் எழுதிய திரைப்படக் கதை வசனங்கள், சமுதாயத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த, சில பகுத்தறிவு பேசின; சமூகக் கருத்துகளைப் பேசின சில; பெண்கள் முன்னேற்றம் குறித்துப் பேசின சில; அரசியல் பேசின சில; சில படங்களோ இலக்கியம் பேசின.

8. **கலைஞரின் ஆங்கிலேய எதிர்ப்பு உணர்வு எதனால் வெளிப்படுகிறது?**

- மலேசிய நாட்டில், சுபாஷ் சந்திரபோஸ் திரட்டிய 'இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய தமிழ்நாட்டு வீரரான 'மலேயா கணபதி'யை ஆங்கில அரசு தூக்கிலிட்டது.
- இதை அறிந்த இருபத்திரண்டே வயதான கலைஞர் 'கயிற்றில் தொங்கிய கணபதி' என்னும் சிறுகட்டுரை நூலை எழுதினார்.
- இந்த நூல், அனைத்து இந்தியருக்கும் இருந்த ஆங்கிலேய எதிர்ப்பு உணர்வு, கலைஞருக்கும் இருந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

9. **கலைஞர் உவமைகளைக் கையாள்வதில் வல்லவர் என்பதற்குச் சான்று தருக.**

- கலைஞர் தம் உரையில் 150க்கு மேற்பட்ட உவமைகளைக் கையாண்டுள்ளார். அவற்றுள், "நெல்லுக்கு உள்ளிருந்து அரிசி தலைக்காட்டுவதுபோல, வெள்ளை விழிகள் இமைகளின் இடுக்குகளில் ஒளி காட்டியவண்ணம் இருந்தன" என்பதைச் சிறப்பான உவமையாகக் கூறலாம்.

10. **கலைஞர் படைத்த கவியரங்கக் கவிதைகள் குறித்து நீ அறிவன யாவை?**

- கலைஞரின் கவியரங்கக் கவிதைகள், பாமரரும் புரிந்துகொள்ளும் எளிமையும், இதயம் தொடும் இனிய சந்தமும் வாய்ந்தவை! சிறுசிறு சொற்களில் அமைந்த கவிதைப் பூக்களைக் கண்ணால் காணும்போதே, நெஞ்சில் சந்தம் எழும்!
- 'புறநானூற்றுத் தாய்' என்னும் தலைப்பில் அமைந்த வசனகவிதை புகழ் பெற்றதாகும். கலைஞர் படைத்த கவிதைகள், ஒன்பது தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

11. **கலைஞர் எழுதிய சிறுகதை நூல்கள் எவை?**

- நளாயினி, சித்தார்த்தன் சிலை, சந்தனக் கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில் குஞ்சு உள்ளிட்ட பல சிறுகதை நூல்களைக் கலைஞர் எழுதினார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12. **தமிழார்வம் காரணமாகக் கலைஞர் எழுதியவை எவை?**

- தமிழார்வம் காரணமாகப் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் கலைஞர் உரை எழுதியுள்ளார். அவற்றுள் சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியன குறிப்பிடத் தக்கவையாகும்.

13. **சிலப்பதிகாரம் பற்றிக் கலைஞர் எழுதிய கவிதைப் பூ எது?**

- "இந்த – ஏட்டுச்சுவை, – பிட்டுத் தமிழ்! – கட்டித் தயிர்! – வட்டில் நிறை – கொட்டித்தரப் – பட்டுக்கொடி! – கொற்றக்குடை! முத்துச்சரச் – சோழனூர் வருவீரே!" என்பது சிலப்பதிகாரம் பற்றிக் கலைஞர் தீட்டிய கவிதைப் பூவாகும்! இதைக் கண்ணால் காணும்போதே, நெஞ்சில் சந்தம் எழும்! சிறுசிறு சொற்களால் அமைந்த கவிதைப்பூ தானே!

14. **திருவள்ளுவருக்குக் கலைஞர் செய்த சிறப்பு யாது?**

- திருவள்ளுவர்மீது தீராத பற்று கொண்டிருந்த கலைஞர், தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் 'வள்ளுவர் கோட்டம்' அமைத்தார்!
- தெற்கு எல்லையான கன்னியாகுமரியிலே சிலை நிறுவிச் சிறப்பும் செய்தார்.

15. **பூம்புகார் கலைக்கூடம் குறித்து எழுதுக.**

- கடல்கோளால் அழிந்துபோன 'பூம்புகாரை' அதே பொலிவுடன் காண விரும்பிக் கண்ணகி வாழ்ந்த ஊரில் கலைஞரால் உருவாக்கப்பட்டதே, 'பூம்புகார் கலைக்கூடம்'.
- இங்குச் சிலப்பதிகாரக் காட்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

16. **நூல்கள் வாசிப்பில் தீராத ஆர்வம் கொண்டவர் யார்? அவருக்குக் கலைஞர் செய்த சிறப்பு யாது?**

- நூல்கள் வாசிப்பதில் தீராத ஆர்வம் கொண்டவர் அண்ணாதுரை.
- அவரது 102வது பிறந்த நாளின்போது, 2010 செப்டம்பர் 15ஆம் நாளன்று, அன்றைய முதல்வராக இருந்த கலைஞர், 'அண்ணா நூற்றாண்டு நூலக'த்தைத் தலைநகர் சென்னையில் திறந்து வைத்தார்.

17. **தமிழ்நாட்டின் வரைபடம் முழுமையாகக் கிடைக்க என்ன செய்ய வேண்டும்?**

- கலைஞர் எழுப்பிய கட்டுமானங்களான, சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா நினைவிடம் முதல், கன்னியாகுமரி காமராஜர் நினைவு மண்டபம் ஈறாக அமைந்த கட்டுமானங்களை, ஒன்றன்பின் ஒன்றாகப் பரப்பி வைத்தால் தமிழ்நாட்டின் வரைபடம் முழுமையாகக் கிடைத்துவிடும் என்பர்.

## சிறுவினாக்கள்

1. **கலைஞரைப் பேராசிரியர் அன்பழகன் எவ்வெவ்வாறு பாராட்டியுள்ளார்?**

- "கலைஞர், பகுத்தறிவுக் கொள்கை பரப்பும் சிந்தனையாளர்!
- பழுமரக் கனிப்பயன் கொள்ளும் பேச்சாளர்!
- படிப்போரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்!
- கலைத்துறையில் வாகைசூடிய படைப்பாளர்!
- தொட்டது துலங்கத் துறைதோறும் தம் முத்திரை பதிக்கும் திறமையாளர்!
- முத்தமிழிலும் வல்ல வித்தகர்!
- செந்தமிழுக்கு ஒரு தீமை எனில், தம் உயிரையும் தந்திடத் துணியும் தியாகத் திருவுருவம்" என்றெல்லாம் கலைஞரைப் பேராசிரியர் பாராட்டியுள்ளார்.

2. **'புதையல்' புதினத்தில் கலைஞர் பதிவு செய்த செய்தி யாது?**

- 'புதையல்' புதினத்தில், தாம் தம் தங்கையோடு மழைத் துளிகளிடையே நின்று மயில்போலக் குதித்தாடியதில் ஆனந்தம் அடைந்ததையும், பாட்டி கண்டித்தபின் வீட்டுக்குள் வந்து திண்ணையில் அமர்ந்து மழையை இரசித்ததையும், தெருவில் சிறுசிறு வாய்க்கால்போல் நெளிந்தோடிய மழைநீரில் காகிதப் படகுகளை மிதக்க விட்டதையும், குழந்தை உள்ளத்துடன் பதிவு செய்திருக்கிறார்.
- அந்தச் செய்தியைப் படிக்கும் வாசகர் மனம் (இன்றும்) மழையில் நனையும்!

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. **பள்ளிப் பருவத்திலேயே கலைஞரிடம் போராட்டப் பண்பு வளர்ந்ததும், வளர்த்ததும் குறித்துக் கூறுக.**

- பள்ளியில் துணைப்பாட நூலாகப் படித்த 'பனகல் அரசரின் சாதனைகள்', கலைஞரின் அரசியல் அறிவுக்கு அரிச்சுவடியாக அமைந்தது.
- பள்ளி முடிந்த மாலைவேளைகளில், பதினான்கு வயதிலேயே, "வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்" எனத் தொடங்கும் பாடலை எழுதி முழங்கியபடி மாணவர்களைத் திரட்டிக்கொண்டு, இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடத் திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் சென்றார். இத்தகைய போராட்டப் பண்பே கலைஞருக்குள் இருந்த கலைத்தன்மையை வளர்த்தது எனலாம்.

4. **கருணாநிதியின் நாடகப் பணி குறித்து நீ அறிந்தன யாவை?**

- தமக்கே உரிய தனிநடையால் மக்களைக் கருணாநிதி மேடை நாடகத்தின் பக்கம் ஈர்த்தார்! 'பழநியப்பன்' என்னும் முதல் நாடகத்தை, 1944ஆம் ஆண்டு அரங்கேற்றினார். சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப்பூ, தூக்குமேடை முதலான நாடகங்களை எழுதி அரங்கேற்றினார்.
- நடிகர் எம். ஆர். இராதாவின் வேண்டுகோளை ஏற்றுத் 'தூக்குமேடை' நாடகத்தில் மாணவர் தலைவராக நடித்தார். அந்நாடகத்தின் பாராட்டு விழாவில் வழங்கப்பெற்ற 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயரே, பிற்காலத்தில் மக்கள் அவரை அன்போடு அழைக்கும் இயற்பெயராயிற்று.

5. **கலைஞரின் வசனங்கள் குறித்து நீ அறிவன யாவை?**

- தமிழ் மக்களைக் கலைஞர், தமக்கே உரிய தனி வசன நடையால் மேடை நாடகத்தின் பக்கம் ஈர்த்தார். கலைஞரின் திறமையை உணர்ந்து, 'ராஜகுமாரி' படம் முழுமைக்கும் இயக்குநர் ஏ. எஸ். ஏ. சாமி வசனம் எழுதச் சொன்னார். மிகப் பெருவெற்றி பெற்றதால், பல படங்களுக்கு கலைஞர் தொடர்ந்து வசனம் எழுதினார்.
- 'சொல் புதிது! சுவை புதிது!' எனக் கேட்போர் வியக்கும் வண்ணம் கலைஞரின் வசனங்கள் அமைந்தன. பராசக்திக்குத் திரைக்கதை வசனம் எழுதி, ஏற்கெனவே ஏறிய புகழ்மலையில் சிகரத்தைத் தொட்டார். தொடர்ந்து வந்த பல படங்கள், வெற்றிப் படங்களாக அமையக் கலைஞரின் வசனமே காரணமாயிற்று.
- கலைஞரின் வசனங்கள் வெறும் அடுக்குமொழி வசனங்களாகமட்டும் அமையவில்லை; கேட்போருக்கு மொழி இன்பத்தைக் கூட்டுவனவாகவும் அமைந்தன. முற்போக்குச் சிந்தனையைத் தூண்டிய கலைஞரின் வசனங்கள், இளைஞர்களை வசீகரிக்கும் வகையிலும் அமைந்திருந்தன.

6. **கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' குறித்து எழுதுக.**

- தமிழ்மீது தீராக் காதல்கொண்ட கலைஞர், ஆர்வம் காரணமாகப் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் உரை எழுதியுள்ளார். சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா ஆகியவற்றை அவ்வகைக்குச் சான்று எனலாம்.
- இலக்கண நூலுக்குள் அமைந்த இலக்கியச்சுவை வெளித்தோன்றுமாறு, கலைஞரால் உருவாக்கப்பட்ட புதுமை நூலே 'தொல்காப்பியப் பூங்கா'. பெயருக்கு ஏற்ப, 142 தொல்காப்பிய நூற்பாக்களைத் தேர்ந்தெடுத்து நூறு தலைப்புகளில், நூறு மலர்களாக உரை எழுதியுள்ளார்.
- தமக்கே உரிய இனிய எளிய நடையில் படைத்தளித்துள்ளதோடு, படிப்போருக்குக் கற்பனையாகத் தோன்றும் காட்சி இன்பம் வெளிப்படுமாறு, பூங்காவிற்குள் நம்மைக் கைப்பிடித்தும் அழைத்துச் செல்கிறார் கலைஞர் எனலாம்.

7. **கலைஞர் வடித்த கவிதைகளின் சிறப்புகளை விவரி.**

- மக்களை மகிழச் செய்யும் கற்பனை வளத்தோடு, அகராதி புரட்டத் தேவையற்ற சொற்களைப் பெய்து, எதுகை மோனை என்னும் தொடை நயம் அமைத்து, ஒலிநயம் காட்டும் உணர்ச்சிகளைச் செறிந்த, கவின் கவிதைகளைக் கலைஞர் வடித்தார்.
- பாமரரும் புரிந்துகொள்ளும் எளிமையும், இதயம் தொடும் இனிய சந்தமும் வாய்ந்தனவாக அவை விளங்கின. அவர் படைத்த கவிதைப்பூக்கள், கண்ணால் காணும்போதே நெஞ்சில் சந்தம் எழும் சிறுசிறு சொற்களால் அமைந்திருக்கும்.
- 'புறநானூற்றுத் தாய்' என்னும் தலைப்பில் அமைந்த கலைஞரின் வசன கவிதை புகழ்பெற்ற ஒன்றாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**8. இதழியலில் கலைஞர் படைத்த சாதனை யாது?**

- திராவிட இயக்கத் தலைவர்கள் பெரும்பான்மையினர் இதழாசிரியர்களாக இருந்தனர். அவ்வகையில் கலைஞர் இளம்வயதிலேயே 'மாணவநேசன்' என்னும் கையெழுத்து ஏட்டைத் தொடங்கி நடத்தினார். அதில் பெற்ற பயிற்சிதந்த ஊக்கத்தில், பதினெட்டு வயதில் அண்ணாவின் 'திராவிட நாடு' இதழில் முதல் கட்டுரையை எழுதினார்.
- அதே ஆண்டில் 'முரசொலி வெளியீட்டுக் கழகம்' என்னும் நிறுவனத்தைத் தொடங்கி, 'முரசொலி' ஏட்டைக் கையெழுத்து இதழாகத் தொடங்கி, வார இதழாக்கி, நாளேடாக்கினார்.
- 'சேரன்' என்ற புனைபெயரில் பல கட்டுரைகளை எழுதியவர், தம் எண்ணங்களையும் விருப்பங்களையும் கடைக்கோடித் தமிழனுக்கும் தெரிவிக்கும் கடிதங்களாக எழுதினார். இன்றளவும் 'முரசொலி' தொடர்ந்து நடைபெறுவதே கலைஞரின் இதழியல் சாதனைக்குச் சான்று எனலாம்.

**9. கலைஞர் அமைத்த வள்ளுவர் கோட்டம் குறித்து நீ அறிவன யாவை?**

- தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை மாநகரில், ஐயன் திருவள்ளுவருக்குக் கலைஞர் கோட்டம் அமைத்துள்ளார். அக்கோட்டம் திருவாரூர்க் கோவில் தேரின் வடிவ மாதிரியில் கட்டப்பட்டு, பலரையும் கவரும் சிற்பத் தேராக அமைந்துள்ளது.
- இத்தேரில் திருவள்ளுவர் சிலை வைக்கப்பட்டுள்ளது. கருவறை வாயிலில் திராவிடக் கட்டடக்கலைப் பாணியில் அழகாக தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'குறள் மணிமாடம்' எனப் பெயரிடப்பட்ட அரங்கில் 1330 குறட்பாக்களும் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

**10. கலைஞர் நடத்திய செம்மொழி மாநாடு குறித்து நீ அறிவன யாவை?**

- தமிழ்நாடு அரசின் சார்பில் 2010ஆம் ஆண்டு, கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைக் கலைஞர் நடத்தினார். தமிழ்மொழியின் பெருமிதங்களை விளக்கும் 'செம்மொழியான தமிழ்மொழியாம்' எனத் தொடங்கும் பாடலையும் இயற்றினார்.
- இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மானைக் கொண்டு, பலவேறு இசை வடிவங்களை ஒன்றிணைத்து இசையமைத்து, மூன்று தலைமுறை சார்ந்த இசைக் கலைஞர்களைப் பாடச் செய்தார். இம்மாநாட்டிற்காக உருவாக்கிய இலச்சினையில், திருவள்ளுவர் சிலை கீழ் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் தமிழரின் முதன்மை விழுமியத்தைப் பொறிக்கச் செய்தார்.

**11. கலைஞர் எக்கூற்றுக்குச் சான்றாக வாழ்ந்தார்?**

- தமிழ்மொழியின் பெருமிதங்களையும் விழுமியங்களையும் மீட்டெடுக்க, அதற்கான பணிகளைக் கலைஞர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார்.
- இலட்சக் கணக்கான பக்கங்கள் எழுதினார்; ஆயிரக்கணக்கான மேடைகளில் பேசினார்.
- 'உடல் மண்ணுக்கு! உயிர் தமிழுக்கு!' என்னும் கூற்றுக்குச் சான்றாக வாழ்ந்து, 94ஆம் வயதில் தமிழர் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும் காவியமானார்.

## நெடுவினா

**1. வானொலியில் கலைஞர் பாடிய இரங்கற்பா செய்தி யாது?**

- அறிஞர் அண்ணா மறைந்தபின், கலைஞர் வானொலியில் இரங்கற்பா ஒன்றைப் படித்தார். அதன் உள்ளடக்கம், அனைவர் உள்ளத்தையும் உருக்கியது. அண்ணாவிடம் கலைஞர் கொண்டிருந்த பற்றைப் பறை சாற்றியது. "கண்மூடிக்கொண்டு, நீ சிந்திக்கும் பேரழகைப் பார்த்துள்ளேன்! இன்று, மண்மூடிக்கொண்டு, உன்னைப் பார்க்காமல் தடுப்பது, என்ன கொடுமை?" என்னும் இத்தொடர்கள், கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன!
- "கொடுமைக்கு முடிவு கண்டாய்! எமைக் கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?" என்னும் வரிகள் பிரிவுத் துன்பத்தைப் புலப்படுத்துகின்றன. "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்பது அண்ணா அடிக்கடி தம் தொண்டர்களுக்கு கூறும் அறிவுரை. இக்கவிதையில் வரும் அந்த அடியை நோக்கும்போது, நிரந்தரப் பிரிவுத் துன்பத்தை எவராலும் தாங்க முடியாது என்பது புலப்படுகிறது! "இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா!" என்னும் அடியில் பொதிந்துள்ள செய்தி விவரிப்பதற்கு அரியதாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



- "இரவலாக உன் இதயத்தைத் தந்திடு அண்ணா....! நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை உன் கால் மலரில் வைப்பேன்" என்னும் அடிகள் உணர்வின் உச்சம் தொடுகிறது. அண்ணாவின் வழி நடந்த கலைஞரின் இக்கவிதை அடிகள், கலைஞரது அன்பு உள்ளத்து உணர்வை வெளிப்படுத்துகிறது. 'இயற்கையின் நியதி' என்பது பிரிவு ஆற்றாமையில் சதியாகத் தெரிகிறதோ?

# கவிதைப்பேழை

# 2. பூத்தொடுத்தல்

## பலவுள் தெரிக

1. வாசலில் மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரிப்பவை,

அ) பறவைகள் ஆ) மரங்கள் இ) மலர்கள் ஈ) வண்டுகள்

**விடை : இ) மலர்கள்**

2. 'இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?' என்ற கவிதையை எழுதியவர்,

அ) உமா மகேஸ்வரி ஆ) இரா. மீனாட்சி
இ) தாமரை ஈ) இந்திரா பார்த்தசாரதி

**விடை : அ) உமா மகேஸ்வரி**

3. 'பிரபஞ்சம்' என்பதன் பொருள்,

அ) அன்பு ஆ) ஆற்றல் இ) பெருவளி ஈ) மலர்

**விடை : இ) பெருவளி**

4. 'பிணைத்தல்' என்பதன் பொருள்,

அ) நுட்பம் ஆ) இணைத்தல் இ) கட்டுதல் ஈ) அமைதி

**விடை : இ) கட்டுதல்**

5. 'நுண்மை' என்பதன் பொருள்,

அ) இணைத்தல் ஆ) நுட்பம் இ) உலகம் ஈ) கட்டுதல்

**விடை : ஆ) நுட்பம்**

## குறுவினாக்கள்

**1. இறுக்கி முடிச்சிட்டால்**
**காம்புகளின் கழுத்து முறியும்**
**தளரப் பிணைத்தால்**
**மலர்கள் தரையில் நழுவும்**
**வாசலில் மரணம் நிற்பதறிந்தும்**
**வருந்தாமல் சிரிக்கும் – இப்பாடலில் அமைந்துள்ள இயைபு நயத்தை எடுத்தெழுதுக. (PTA -3)**

- கழுத்து முறியும், தரையில் நழுவும் வருந்தாமல் சிரிக்கும் என இயைபு நயம் சிறப்பாக அமைந்துள்ளது.

**2. பூ எப்படிச் சிரித்து நிற்கும்?**

- வாசலில் மரணம் நிற்பதறிந்தும், தன்னைப் பறிக்க வந்துள்ளதை அறிந்தும், வருந்தாமல் வாழ்வியல் சூழலை அறிந்து பூ சிரித்து நிற்கும்.

**3. மலர்களை மென்மையாகத் தொடுக்க வேண்டும். – ஏன்?**

- மாலை தொடுப்பவர், மலர்களை இறுக்கிப் பிடித்தால், காம்பின் கழுத்து முறியும். தளரப் பிணித்தால், மலர்கள் தரையில் வீழும். ஆதலால், மலர்களை மென்மையாகத் தொடுக்கவேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. ‘என்மனமே நூலாகும்
நுண்மையுற் றாலொழிய’ – இத்தொடரின் பொருள் யாது?

➤ “தொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் நூலானது மென்மையானதாகவோ, கடினமானதாகவோ இருந்தாலும், தொடுப்பவர் மனம் நூலினும் மென்மையாக, நுண்மையாக இருந்தால்தான், கட்டிய பூக்கள் வீணாகா” என்பதாகும்.

5. கவிஞர் உமா மகேஸ்வரி படைத்துள்ள கவிதைத் தொகுதிகளைக் கூறுக.

★ நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை ஆகிய கவிதைத் தொகுதிகளைக் கவிஞர் உமா மகேஸ்வரி படைத்துள்ளார்.

6. ‘பூத்தொடுத்தல்’ கவிதையில் கவிஞர் காணும் சுவை யாது?

➤ ‘பூத்தொடுத்தல்’ கவிதை வாயிலாகக் கவிஞர், மண்ணுயிர்கள் அனைத்தையும் வாழ்வியல் சூழலுடன் அழகியல் பிணைத்துள்ளதைச் சுட்டுகிறார். நார் எடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவிலும் அழகு சிரிப்பதை அடையாளம் காண்கிறார் கவிஞர்.

## இலக்கணக்குறிப்பு

**இறுக்கி** – வினையெச்சம்

**தளர, தொடுக்க** – பெயரெச்சங்கள்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. தொடுக்க – தொடு + க் + க் + அ

**தொடு** – பகுதி

**த்** – சந்தி

**த்** – எதிர்கால இடைநிலை

**அ** – பெயரெச்ச விகுதி.

2. இறுக்கி – இறுக்கு + இ

**இறுக்கு** – பகுதி

**இ** – வினையெச்ச விகுதி.

3. சிரிக்கும் – சிரி + க் + க் + உம்

**சிரி** – பகுதி

**க்** – சந்தி

**க்** – எதிர்கால இடைநிலை

**உம்** – ‘செய்யும்’ என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி.

4. தொடுப்பது – தொடு + ப் + ப் + அ + து

**தொடு** – பகுதி

**ப்** – சந்தி

**ப்** – எதிர்கால இடைநிலை

**அ** – சாரியை

**து** – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

5. பிணைத்தல் – பிணை + த் + தல்

**பிணை** – பகுதி

**த்** – சந்தி

**தல்** – தொழிற்பெயர் விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# கவிதைப்பேழை

# 3. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

## பலவுள் தெரிக

1. பிள்ளைத்தமிழ் எவ்வகை இலக்கிய வகைச் சார்ந்தது? (Sep.-20)

அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம்
இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

**விடை : ஆ) சிற்றிலக்கியம்**

2. இயைபுத்தொடைச் சொற்களைக் குறிப்பிடுக: (Sep.-20)

அ) கலந்தாட, வடமாட ஆ) செம்பொன், பைம்பொன்
இ) சரிந்தாட, செங்கீரை ஈ) பண்டி, குண்டலம்

**விடை : அ) கலந்தாட, வடமாட**

3. பிள்ளைத்தமிழில் உள்ள பருவங்கள் ______.

அ) ஐந்து ஆ) ஏழு இ) எட்டு ஈ) பத்து

**விடை : ஈ) பத்து**

4. "பைம்பொன் அசும்பிய தொந்தி" – இத்தொடரில் 'அசும்பிய' என்பதற்கு, ______ என்று பொருள்.

அ) நறுமணம் வீசுகிற ஆ) ஒளிவீசுகிற இ) தென்றல் வீசுகிற ஈ) ஒலி எழுப்புகிற

**விடை : ஆ) ஒளிவீசுகிற**

5. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழை இயற்றியவர் ______.

அ) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் ஆ) ஒட்டக்கூத்தர்
இ) குமரகுருபரர் ஈ) தாயுமானவர்

**விடை : இ) குமரகுருபரர்**

6. 'அரைஞாண்மணியும் ஒளிவீசும் அரைவடமும் ______ அணியாகும்.

அ) திருவடி ஆ) மார்பு இ) வயிறு ஈ) இடை

**விடை : ஈ) இடை**

7. பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்திருந்தது ______.

அ) இடை ஆ) மார்பு இ) கழுத்து ஈ) நெற்றி

**விடை : ஈ) நெற்றி**

8. குண்டலங்களும் குழைகளும் அசைந்தாடியது ______.

அ) உச்சியில் ஆ) நெற்றியில் இ) காதில் ஈ) மார்பில்

**விடை : இ) காதில்**

9. சொற்களைச் சரியான வரிசைப்படுத்திச் சொற்றொடராக்குக.

பருவங்கள், பத்து, அமைத்து, பாடல்களால், நூறு, பாடப்பெறுவது, பத்துப்பாடல் என, பருவத்திற்கு

அ) பருவத்திற்கு பத்துப் பாடல் என அமைத்து பத்துப் பருவங்களில் பாடப்பெறுவது
ஆ) பருவங்கள் பத்து அமைத்து நூறு பாடல்களால் பருவத்திற்குப் பத்துப்பாடல் பாடப்பெறுவது
இ) பத்துப் பருவங்கள் அமைத்து பருவத்திற்குப் பத்துப் பாடல் என நூறு பாடல்களால் பாடப்பெறுவது
ஈ) பாடப் பெறுவது பத்துப் பருவங்கள் அமைத்து பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்கள்

**விடை : இ) பத்துப் பருவங்கள் அமைத்து பருவத்திற்குப் பத்துப் பாடல் என நூறு பாடல்களால் பாடப்பெறுவது**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (PTA - 2)

"செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழுரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாட"

i. இப்பாடலின் ஆசிரியர்

அ) கீரந்தையார் ஆ) குமரகுருபரர்
இ) நம்பூதனார் ஈ) செய்குதம்பிப் பாவலர்

விடை : ஆ) குமரகுருபரர்

ii. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பிள்ளைத்தமிழ்ப் பருவம்

அ) அம்மானை ஆ) சப்பாணி இ) சிறுதேர் ஈ) செங்கீரை

விடை : ஈ) செங்கீரை

iii. 'குண்டலமும் குழைகாதும்' – இலக்கணக்குறிப்பு தருக. (Sep.-20)

அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) அடுக்குத்தொடர்

விடை : அ) எண்ணும்மை

iv. கிங்கிணி, அரைஞாண், சுட்டி என்பன முறையே – (Sep.-20)

அ) காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
ஆ) நெற்றியில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது
ஈ) இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

விடை : இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது

## குறுவினாக்கள்

1. பிள்ளைத் தமிழாவது யாது?

➤ இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ குழந்தையாகப் பாவித்து பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு, பத்துப் பருவங்களை அமைத்து அருஞ்செயல்களை எடுத்துரைப்பது பிள்ளைத் தமிழாகும். இது தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும்.

2. செங்கீரைப்பருவம் – குறிப்பு வரைக.

➤ செங்கீரைப்பருவம் என்பது, பிள்ளைத்தமிழின் இரண்டாவது பருவம்.
➤ குழந்தை பிறந்த ஐந்து, ஆறாம் மாதங்களில், குழந்தை தன் இருகை ஊன்றி ஒரு காலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டித் தலைநிமிர்ந்து முகம் அசைத்து ஆடும்.
➤ இப்பருவமே செங்கீரைப் பருவம் ஆகும்.

3. ஆண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதிப் பருவங்கள் மூன்றைக் கூறுக.

• சிற்றில் • சிறுபறை • சிறுதேர்.

4. பெண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதிப் பருவங்கள் மூன்றைக் கூறுக.

• கழங்கு • அம்மானை • ஊசல்.

5. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் – குறிப்புத் தருக.

➤ முத்துக்குமாரசாமியைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு, குமரகுருபரரால் பாடப்பட்டதே முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ். இது, 101 பாடல்களைக் கொண்டுள்ளது.

6. குமரகுருபரர் – குறிப்பு வரைக.

➤ குமரகுருபரர், 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவராகத் திகழ்ந்தவர்.
➤ கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. **பிள்ளைத்தமிழில் இருபாலாருக்கும் உரிய பருவங்கள் எவை?**

➤ காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என்னும் ஏழு பருவங்களும் பிள்ளைத்தமிழில் இருபாலாருக்கும் உரிய பருவங்களாகும்.

### இலக்கணக்குறிப்பு

**செம்பொன், பைம்பொன், சிறுபண்டி, செங்கீரை, சிறுகிங்கிணி** – பண்புத்தொகைகள்

**திகழ் அரைவடம், பொலி பொட்டு** – வினைத்தொகைகள்

**பவழத்திருமேனி** – உவமைத்தொகை

**பதிந்து** – வினையெச்சம்

**கட்டிய** – பெயரெச்சம்

**வட்டச்சுட்டி** – பண்புத்தொகை

### பகுபத உறுப்பிலக்கணம்

1. **ஆடுக – ஆடு + க**

**ஆடு** – பகுதி

**க** – வியங்கோள் வினைமுற்று விகுதி.

2. **கட்டிய – கட்டு + இ(ன்) + ய் + அ**

**கட்டு** – பகுதி

**இன்** – இறந்தகால இடைநிலை, (ன்) புணர்ந்து கெட்டது

**ய்** – உடம்படுமெய் சந்தி

**அ** – பெயரெச்ச விகுதி

# கவிதைப்பேழை

# 4. கம்பராமாயணம்

### பலவுள் தெரிக

1. 'ஒதிய உடம்பு தோறும் உயிரென உலாயது' ______.

அ) கங்கை ஆறு ஆ) காவிரி ஆறு இ) யமுனை ஆறு ஈ) சரயு ஆறு

**விடை : ஈ) சரயு ஆறு**

2. 'திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்' இதில் 'திண்மை' என்பதன் பொருள் ______.

அ) வலிமை ஆ) உண்மை இ) அறியாமை ஈ) உடல் வலிமை

**விடை : ஈ) உடல் வலிமை**

3. ஆழ நெடுந்திரை ஆறு' எனக் குறிப்பிடப்பட்டது ______.

அ) சரயு ஆறு ஆ) கங்கை ஆறு இ) காவிரி ஆறு ஈ) நர்மதை ஆறு

**விடை : ஆ) கங்கை ஆறு**

4. 'வேழ நெடும்படை' கொண்டு வந்தவன் ______.

அ) இலக்குவன் ஆ) கும்பகருணன் இ) இராமன் ஈ) பரதன்

**விடை : ஈ) பரதன்**

5. "சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ" – 'சொல்லிய ஒருசொல்' எது?

அ) தோழமை ஆ) ஏழமை இ) உண்மை ஈ) வெண்மை

**விடை : அ) தோழமை**

6. "கண்டுநெடுங்கிடும் வில்லாளோ" – 'வில்லான்' யார்?

அ) இராமன் ஆ) இலக்குவன் இ) குகன் ஈ) கும்பகருணன்

**விடை : இ) குகன்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. "கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்" என்று பெருமைப்பட்டவர் ______.

அ) ஒட்டக்கூத்தர் ஆ) கபிலர் இ) பாரதிதாசன் ஈ) பாரதியார்

**விடை : ஈ) பாரதியார்**

8. 'எழுந்திராய் எழுந்திராய்' என்று எழுப்பப்பட்டவன் ______.

அ) இலக்குவன் ஆ) கும்பகர்ணன் இ) குகன் ஈ) பரதன்

**விடை : ஆ) கும்பகர்ணன்**

9. "ஏழைமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ?" எனக் கூறியவன் ______.

அ) இலக்குவன் ஆ) இராமன் இ) குகன் ஈ) பரதன்

**விடை : இ) குகன்**

10. 'வண்மை' என்பதன் பொருள் ______.

அ) தோழமை ஆ) வலிமை இ) வளமை ஈ) பகைமை

**விடை : இ) வளமை**

11. "கறங்குபோல் வில்பிடித்த காலதூதர் கையிலே" – இதில் காலதூதர் எனக் குறிப்பிடப்பட்டவர் ______.

அ) பரதன், குகன் ஆ) குகன், இலக்குவன்

இ) இராமன், இலக்குவன் ஈ) இராமன், பரதன்

**விடை : இ) இராமன், இலக்குவன்**

## குறுவினாக்கள்

**1. இராமாயணம் – பொருள்கூறுக. கம்பர் அதற்கு இட்ட பெயர் யாது?**

➤ 'இராமாயணம்' என்பதற்கு, 'இராமனது வரலாற்றைக் கூறுவது' என்பது பொருள். கம்பர், தாம் இயற்றிய நூலுக்கு, 'இராமாவதாரம்' என்றே பெயரிட்டார்.

**2. கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?**

➤ கம்பராமாயணம், ஆறு காண்டங்களை உடையது. அவை : பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பனவாகும்.

**3. கம்பர் – சிறுகுறிப்பு வரைக.**

➤ கம்பர், சோழநாட்டுத் திருவழுந்தூரைச் சேர்ந்தவர். காலம் 12ஆம் நூற்றாண்டு. திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்.

➤ "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என்று புகழப் பெற்றவர். "கல்வியில் பெரியவர் கம்பர்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்னும் பாராட்டுரைகளுக்கு உரியவர்.

**4. கம்பர் இயற்றிய நூல்களைக் கூறுக.**

➤ இராமாயணம் நீங்கலாகச் சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கைவழக்கம் முதலிய நூல்களையும் கம்பர் இயற்றிள்ளார்.

**5. சரயுநதி எங்கெங்கெல்லாம் பரவிப் பாய்கிறது?**

➤ சோலைகள், காடுகள், பொய்கைகள், தடாகங்கள், கமுகந் தோட்டங்கள், வயல்கள் ஆகிய அனைத்து இடங்களிலும் சரயுநதி பரவிப் பாய்கிறது.

**6. கோசல நாட்டின் பெருமையினைக் கம்பர் அடையாளப்படுத்துவது எவ்வாறு?**

➤ ஒன்றின் இருப்பால் இன்னொன்றை அடையாளப்படுத்துதல் என்னும் மெய்யியலைக் கொண்டு, கோசல நாட்டின் பெருமையைக் கம்பர் அடையாளப்படுத்துகிறார்.

**7. கம்பர், 'ஐயோ' எனக் கூறி விளக்குவது யாது?**

➤ இராமனின் மேனி அழகுக்கு மை, மரகதம், கடல், மழை முகில் என்பவற்றை உவமைகளாகக் கூறி, அவற்றில் நிறைவடையாத கம்பர், 'அழியா அழகுடையான்' என நிறைவு செய்வதற்குமுன் 'ஐயோ' என்ற சொல்லை வைத்து வியப்புறுகிறார்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

8. **அழியா அழகுடையான் யார்? அவன் எவரொடு போனான்?**

➤ அழியா அழகுடையான் தன் நீலமேனி அழகால் பகலவனின் பட்டொளியை மறைத்த இராமனாவான். அவன் பொய்யோ, இல்லையோ என்னும்படியான நுண்ணிய இடையை உடைய சீதையொடும் இளையவனாகிய இலக்குவனோடும் போனான்.

9. **பாடமாக அமைந்த சரயு நதி பாயும் காட்சி எவ்வாறு விரிந்து நிறைகிறது?**

➤ கம்பர் வருணித்துள்ள சரயு நதி பாயும் காட்சியானது, ஓர் ஆறு என்பது இயற்கையின் தோற்றமாக இல்லாமல், ஓவியமாக விரிகிறது. அந்த அழகுணர்ச்சி கவிதையாகி ஒடி நெஞ்சில் நிறைகிறது.

## சிறுவினாக்கள்

1. **கம்பராமாயணம் – நூற்குறிப்பு வரைக.** (May - 22)

➤ கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி "இராமாவதாரம்" என்று பெயரிட்டார். எனவே, இது கம்பராமாயணம் என வழங்கப்பெறுகிறது.

➤ இது பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை உடையது.

➤ இந்நூல் விருத்தம் என்னும் செய்யுள் வகையால் பாடப்பட்டது. சந்த நயம் மிக்க கவிதைகளால் ஆனது. அழகுணர்ச்சியும் சந்தநயமும் மிக்க சில கவிதைகள் பாடப் பகுதியாக அமைந்துள்ளன.

2. **சரயுநதி பரவிப் பாய்ந்ததைக் கம்பர் எவ்வாறெல்லாம் சித்திரிக்கிறார்?**

➤ மகரந்தப் பொடிகளைச் சிந்தும் சோலைகள், சண்பகமரம் செறிந்த காடுகள், அரும்புகள் இதழ்வி ரித்து மலரும் பொய்கைகள், புதுமணல் மிக்க தடாகங்கள், கமுகந் தோட்டங்கள், நெல்வயல்கள் என, இவை அனைத்திலும் பரவிப் பாய்ந்து செழிக்கச் செய்யும் சரயுநதி, பல உடல்களில் ஓர் உயிர் புகுந்து பரவுவதுபோல் இருந்தது எனக் கம்பர் சித்திரிக்கிறார்.

3. **ஏழமை வேடன் கூறிய வீர உரைவழிப் புலப்படும் உணர்வை விளக்குக.**

➤ இராமனைக் காணவந்த பரதன் கங்கைக் கரையை நெருங்கியபோது, உண்மை நிலை அறியாது சினம் கொண்ட குகன், "ஆழமான அலைகளை உடைய இந்தக் கங்கையைக் கடந்து இவர்கள் செல்வார்களோ? நெடிய யானைப்படைகளைக் கண்டு பாய்ந்து ஓடும் வில்வீரனோ நான்! 'தோழமை' என்று இராமர் சொல்லிய சொல், ஓர் ஒப்பற்ற சொல் அல்லவா?

➤ அந்தத் தோழமையை நினையாமல், இவர்களைக் கடந்துபோக விட்டால், 'அற்பனாகிய இவ்வேடன் இறந்திருக்கலாமே' என, உலகத்தார் எனை ஏசமாட்டார்களா?" எனக் கூறினான். இராமன்பால் குகன் கொண்ட அன்பும், அவனைக் காக்க உறுதிபூண்டு நிற்கும் வீர உணர்வும் இக்கூற்றில் புலப்படுகிறது.

4. **இயற்கைக் கொலு வீற்றிருக்கும் காட்சியைக் கம்பன் கவி கொண்டு விளக்குக.**

➤ மருத நிலத்தின் குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற நடனமாடின; இதழ் விரித்த தாமரைகள் ஏந்திய விளக்குகளாகத் தோன்றின; வானில் சூழ்ந்த மேகக்கூட்டம் மத்தளம்போல் முழங்கின; மலர்ந்த குவளை மலர்களோ கண்விழித்துப் பார்த்தன; நீர்நிலைகளில் விரிந்தெழுந்த சிற்றலைகளோ திரைச் சீலையாகத் திகழ்ந்தன; வண்டுகளோ மகரயாழின் தேனிசைபோல் முழங்கின என வருணிக்கும் கம்பர், இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலை நிகழ்வாகவே காட்டுகிறார்.

5. **கோசல நாட்டின் பெருமையைக் கூறிக் கம்பர் கையாளும் உத்தியையும் சுட்டுக.**

➤ கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு இடமில்லை; எதிர்த்துப் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமை காட்ட வாய்ப்பில்லை; பொய்மொழி இல்லாததால் உண்மை தனித்து விளங்கவில்லை; கேள்விச் செல்வம் பலவகையிலும் மிகுந்து விளங்குவதனால் அறியாமை என்பது சிறிதும் இல்லை எனக் கம்பர் அந்நாட்டின் பெருமையைப் பேசுகிறார். அதாவது, 'ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுத்தப்படுகிறது" என்னும் மெய்யியல் உத்தியைக் கொண்டு கம்பர் கோசல நாட்டின் பெருமையைச் சுட்டுவது இதனால் புலப்படுகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இலக்கணக்குறிப்பு

இடையாளோ**டும்** இளையாளொ**டும்** – எண்ணும்மை
**நெடுந்திரை, நெடும்படை, தண்டலை, தெண்டிலை, புதுமணல், பொய்யுரை** – பண்புத்தொகைகள்
**வில் பிடித்த** – இரண்டாம் வேற்றுமைத்தொகை
**கால தூதர்** – நான்காம் வேற்றுமைத்தொகை
**விரிசோதி, மறிகடல்** – வினைத்தொகை
**பூகவனம், சண்பகக்காடு, வெய்யோனொளி** – இருபெயரொட்டுப் பண்புத்தொகை
**கிடந்து, கடந்து, விழித்து** – வினையெச்சங்கள்
**எழுந்திராய்! எழுந்திராய்!, உறங்குவாய்! உறங்குவாய்!** – அடுக்குத்தொடர்கள்
**ஓதிய, சொல்லிய** – பெயரெச்சங்கள்
**அழியா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
**எலாம்** – 'எல்லாம்' என்பதன் இடைக்குறை

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **ஓதிய – ஓது + இ (ன்) + ய் + அ**
**ஓது** – பகுதி
**இ (ன்)** – இறந்தகால இடைநிலை, 'ன்' புணர்ந்து கெட்டது
**ய்** – உடம்படுமெய் சந்தி
**அ** – பெயரெச்ச விகுதி.

2. **விழித்து – விழி + த் + த் + உ**
**விழி** – பகுதி
**த்** – சந்தி
**த்** – இறந்தகால இடைநிலை
**உ** – வினையெச்ச விகுதி.

3. **சொல்லிய – சொல் + இ (ன்) + ய் + அ**
**சொல்** – பகுதி
**இ (ன்)** – இறந்தகால இடைநிலை, 'ன்' புணர்ந்து கெட்டது
**ய்** – உடம்படுமெய், சந்தி
**அ** – பெயரெச்ச விகுதி.

4. **கடந்து – கட + த் (ந்) + த் + உ**
**கட** – பகுதி
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை
**உ** – வினையெச்ச விகுதி.

5. **கிடந்து – கிட + த் (ந்) + த் + உ**
**கிட** – பகுதி;
**த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்
**த்** – இறந்தகால இடைநிலை
**உ** – வினையெச்ச விகுதி.

6. **உறங்குவாய் – உறங்கு + வ் + ஆய்**
**உறங்கு** – பகுதி
**வ்** – எதிர்கால இடைநிலை
**ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. **உறங்குகின்ற – உறங்கு + கின்று + அ**
   **உறங்கு** – பகுதி
   **கின்று** – நிகழ்கால இடைநிலை
   **அ** – பெயரெச்ச விகுதி.
8. **பிடித்த – பிடி + த் + த் + அ**
   **பிடி** – பகுதி
   **த்** – சந்தி
   **த்** – இறந்தகால இடைநிலை
   **அ** – பெயரெச்ச விகுதி.

# விரிவானம்

# 5. பாய்ச்சல்

## பலவுள் தெரிக

1. சா. கந்தசாமிக்கு எழுத்துலகில் புகழைப் பெற்றுத் தந்த புதினம்,
   அ) சாயாவனம் ஆ) சூர்ய வம்சம்
   இ) சாந்தகுமாரி ஈ) தொலைந்து போனவர்கள்
   **விடை : அ) சாயாவனம்**
2. 'பாய்ச்சல்' என்னும் சிறுதையின் ஆசிரியர்,
   அ) ஜெயகாந்தன் ஆ) சா. கந்தசாமி இ) ஜெயமோகன் ஈ) அகிலன்
   **விடை : ஆ) சா. கந்தசாமி**
3. 'பாய்ச்சல்' என்னும் சிறுகதை எந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது?
   அ) சா. கந்தசாமியின் கதைகள் ஆ) தக்கையின்மீது நான்கு கண்கள்
   இ) சுடுமண் சிலைகள் ஈ) தொலைந்து போனவர்கள்
   **விடை : ஆ) தக்கையின்மீது நான்கு கண்கள்**
4. சா. கந்தசாமியின் சாகித்திய விருது பெற்ற நூல்,
   அ) சூர்ய வம்சம் ஆ) சாந்தகுமாரி
   இ) சாயாவனம் ஈ) விசாரணைக் கமிஷன்
   **விடை : ஈ) விசாரணைக் கமிஷன்**
5. சா. கந்தசாமி எந்தக் குறும்படத்திற்கு அனைத்துலக விருதைப் பெற்றுள்ளார்?
   அ) தொலைந்து போனவர்கள் ஆ) சூர்ய வம்சம்
   இ) சாந்தகுமாரி ஈ) சுடுமண் சிலைகள்
   **விடை : ஈ) சுடுமண் சிலைகள்**

## நெடுவினாக்கள்

1. **கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்தும் விரிவாக எழுதுக.** (PTA - 1)

தெருவில் 'டும்டும்' என்று மேளம் அடிக்கும் ஒலிகேட்டு, வீட்டிலிருந்து தெருவுக்கு ஓடினேன். அங்கே ஒரு சிறுவன் மத்தளம்போன்ற கருவியைக் கொம்பினால் தட்டிக் கூட்டம் சேர்த்துக் கொண்டிருந்தான். என்னைப்போலச் சிறுவர்களும், வேலையற்ற பெரியவர்களும் அங்கே வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்தனர். வேடிக்கை பார்க்க வந்த அனைத்து மக்களும் வட்டமாகத் திரண்டு நின்றனர்.

சிறிது நேரத்தில் பாசிமணி, ஊசி விற்கும் ஆண், பெண் வேடம் அணிந்த இருவர் வந்தனர். அவ்வாறு வேடம் அணிந்த இருவர், தோளில் டப்பா ஒன்றை மாட்டித் தட்டிக்கொண்டு 'ஐயாலோ...ஆயாலோ...' என்பது தொடங்கி என்னென்னமோ பாடி ஆடினார்கள். திரண்டிருந்த மக்கள், சில வேளைகளில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். நானும் அவர்களில் ஒருவனாகத்தான் இருந்தேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

சென்ற வாரம் இதே கும்பல் பக்கத்துத் தெருவில் இராமன், இலக்குவன் வேடம் அணிந்து, காட்டில் சீதையைத் தேடி அலைவதுபோல் நடித்தார்கள். அதையும் நான் முந்தையநாள் பார்த்ததையும் நினைத்துக் கொண்டேன். இவர்கள்தானே அவர்கள் என்று எண்ணினேன். சிறிது நேரத்தில் காட்சி முடிந்தது. அந்த வேடதாரிகளை நெருங்கிச் சென்று, என் ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ள முயன்றேன். அவர்களில் சிறுவர்களும் இருந்தார்கள். அவர்களில் பெரியவராக இருந்த ஒருவரை அணுகி, "ஏன் நீங்கள் இந்த வேலை செய்கிறீர்கள்?" என்றேன். "தம்பீ, நீ சொல்வது உண்மைதான். இந்தக் காலத்தில் எங்கே வேலை கிடைக்கிறது? வேலை கிடைத்தாலும் கூலி கிடைப்பதில்லை. இது எங்கள் பரம்பரைத் தொழில். சொல்வதானால் இது ஒருவகைக் கலைப்பணி. இந்த வேடமணிந்து ஆடுவதால், மக்களை மகிழ்ச்சி அடையச் செய்ய முடிகிறது. வசதி படைத்தவர்கள்போல் பொழுதுபோக்கை அனுபவிக்க முடியாதவர்களுக்கு, நாங்கள் மகிழ்ச்சி அளிக்கிறோம்" என்றார்.

"ஏன் உங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கக் கூடாது" என்றேன். "முடியாது. நாங்கள் ஓர் இடத்தில் தங்கி இருக்க முடியாது. ஊர் ஊராகச் சென்றால்தான் பிழைப்பு நடத்த முடியும். பள்ளிப் படிப்பை முடித்துத் தொடர்ந்து படிக்க முடியாது. அந்தப் படிப்புக்குக் கூலிவேலைதான் செய்யமுடியும். அதற்கு இதுவே மேல். "பரம்பரையாக நாங்கள் செய்துவரும் கலைப்பணியால் ஏழை மக்களை மகிழ்ச்சி அடையச் செய்ய முடிகிறது. எங்கள் வயிற்றுப் பிழைப்பும் நடைபெறுகிறது. வருகிறோம் தம்பி" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள்.

நான், அவர்களின் எதார்த்தமான பதிலை எண்ணிச் சிந்தித்தபடி, மக்களாட்சி நடைபெறும் நாட்டில் இது குறையா, நிறையா என எண்ணியபடி நடந்தேன்.

**2. 'பாய்ச்சல்' கதையில் அழகு தன்னை மறந்து ஆடியதைப் போன்று உங்கள் தெருக்களில் நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞரைக் குறித்து அழகுற விளக்கி எழுதுக.** **(Sep - 20)**

நாங்கள் வசிக்கும் பகுதி புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ளது. அது நகரின் சிறு வளர்ச்சிகளையும், பழைய கிராமத்தின் சாயலையும் கொண்ட பகுதி. அதனால் பட்டின நாகரிகத்தையும் கிராமத்தின் மணத்தையும் அனுபவிக்க முடியும். அந்தப் பகுதியில், பழைய கிராமப் பகுதியை ஒட்டி ஒரு பகல் வேடக் கலைஞர் வாழ்ந்து வந்தார். அவர் அதிகம் படிக்காதவர். ஆனால் கேள்வி அறிவால் பலவேறு செய்திகளை விரிவாகப் பேசக்கூடியவர். அவர்தம் குடும்ப வாழ்க்கையை நடத்த, அன்றன்று கிடைக்கும் சிறு கூலி வேலைகளைச் செய்வார். எல்லா நாள்களிலும் வேலை கிடைக்காததால், சிலநாள்களில் தாம் பரம்பரையாகச் செய்து வந்த பகல் வேடக் காட்சி அணிந்து மக்களை மகிழ்ச்சியூட்டி, அதனால் கிடைக்கும் சிறுதொகை கொண்டு வாழ்வு நடத்துவதைச் சிறப்பாகச் செய்து வந்தார். தம் வறுமையைக் கூறி, யாரிடத்திலும் பிச்சை கேட்பதில்லை. அதைத் தம் மரியாதைக் குறைவாகக் கருதினார். இவற்றை எல்லாம் நான் அவரிடம் உரையாடியதன்மூலம் அறிந்து கொண்டேன்.

அவர், ஒருநாள் அனுமான் வேடமணிந்து, ஒரு கதாயுதத்துடன் தெருவில் நாடகத்தைத் தொடங்கினார். இராமன் பெருமைகளைத் திரண்டிருந்த மக்களுக்கு எடுத்துக் கூறினார். இராமனைப் பற்றி முழுமையாக அறியாத மக்கள், அவர் கூறியதை ஆவலுடன் கேட்டனர். எனக்கே அவர் கூறிய புதிய பல செய்திகள் திகைப்பைத் தந்தன. அனுமன் இராமனைச் சந்தித்ததுமுதல் அயோத்திக்கு வந்ததுவரை அனைத்துச் செய்திகளையும் கேட்போர் ஆவலைத் தூண்டுவதுபோலக் கூறினார். நிகழ்ச்சி முடிந்ததும் மக்கள் கொடுத்த தொகையை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டார். இதுபோல் பல நாள்கள் பல நிகழ்ச்சிகளைக் கண்டு நான் மகிழ்ந்ததுண்டு!

இன்னொரு நாள் கண்ணனின் நண்பர் குசேலன்போல் வேடமணிந்துவந்து, கிருஷ்ணனின் வரலாற்றைக் கூறி, திரண்டிருந்த மக்களை மகிழச் செய்து கொண்டிருந்தார். நிகழ்ச்சியை நடத்தியபோது அவர் எழுப்பிய சில வினாக்கள் என்னை வியப்புக்கு உள்ளாக்கின. கண்ணனிடம் குசேலன் கேட்கிறான். "ஏ கண்ணா, நீ வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனா? நந்தகோபனுக்கும் யசோதைக்கும் மைந்தனா? அந்த இரு தம்பதியரும் உன்னை உரிமை கொண்டாடுகின்றனர். நீ எல்லாரையும் ஏமாற்றுகிறாய்; என்னையும் அதுபோல் ஏமாற்றாதே! ஏ, கண்ணா! நீ, குருகுலவாசத்தில் என்னோடு விரும்பி உண்ணும் அவல் கொண்டு வந்திருக்கிறேன் வேண்டுமா? வேண்டாமா?" எனக் கேட்டதெல்லாம் மகிழ்ச்சி அளித்தது. மக்களும் வியப்போடு பேசிக்கொண்டார்கள்.

இதுபோல் மட்டுமில்லை! திடீரென்று ஒருவர் பகல் வேடமணிந்து வந்தவர், விசித்திரமாக, "நான் கோவிட் வந்திருக்கிறேன். உங்கள் கண்ணுக்குத் தெரிகிறேனா? தெரியமாட்டேன். கடவுளைத் தேடுகிறீர்கள். அவனை உங்களால் காண முடிகிறதா? முடியாது. ஏதோ சிலர் கண்டதாகக் கூறுவர். அது

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அவர்களின் பக்தியின் உன்னதமான முயற்சி. நானும் உங்கள் கண்ணுக்கும் தெரியமாட்டேன்! ஆனால், விரும்பினால் யாருக்கு வேண்டுமானாலும் மோட்சம் கொடுப்பேன். என்னிடமிருந்து தப்பிக்க விரும்பினால் வாய், மூக்குப் பகுதிகளைப் பாதுகாப்பாக மூடிக் கொண்டால் தப்பிக்கலாம். இல்லையானால் என்மீது குறை சொல்லாதீர்கள். உயிர் பிழைக்க விரும்பினால், என்னிடமிருந்து தப்பிக்க விரும்பினால் முகக்கவசம் போட்டுக் கொள்ளுங்கள்" என்று பேசினார். இந்த நிகழ்ச்சியை மக்கள் எல்லாரும் பாராட்டினார்கள். இப்படிச் சமுதாய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளையும் அந்தக் கலைஞர் நடத்துவார்.

படித்துவிட்டுத் தகுதியான வேலை கிடைக்கவில்லை என்று சுற்றித் திரியும் இளைஞர்களைவிடத் தமக்குத் தெரிந்த கலைநிகழ்ச்சியை நடத்தி, மக்களுக்கு மகிழ்ச்சி தருவதோடு, சுயதொழில் செய்வதை எண்ணி நான் மகிழ்ந்தேன். அதை எப்போது கண்டாலும் நான் பாராட்டிப் பேசி மகிழ்பவன்! "வெறுங்கை என்பது மூடத்தனம்" என்பதை நிரூபிப்பவர் அவர்.

**3. 'ஒரு வாரிசு உருவாகியது' – பாய்ச்சல் கதை நமக்குக் காட்டியுள்ளதை விவரி.**

**அழகை அழைத்த மேளதாளம் :**

அந்தச் சிறுவன் அழகு, ஊருக்குப் புதியவன். ஊர்த்தெருவின் முனையில் கூடிய பெரிய கூட்டத்தில் இருந்து, மேளச்சத்தம் இரைந்து கொண்டிருந்தது. நாகசுரமும் மேளமும் சேர்ந்து ஒலித்ததால், அழகு போன்ற சிறுவர்கள், புழுதி பறக்க ஓடிக் கொண்டிருந்தனர். மேள இசை வரும் திசை நோக்கி, அழகும் நடைபோட்டான்.

**வட்டமான கூட்டத்தில் வால் நீண்ட அனுமார் :**

அந்தக் கூட்டத்தில் பச்சையா நீலமா என்று தீர்மானிக்க முடியாத நிறம் கொண்ட கால்கள்மட்டுமே அழகுக்குத் தெரிந்தன. அதையும் குனிந்துதான் பார்க்க முடிந்தது. கூட்டம், ஓரிடத்தில் வட்டமாகக் கூடியது. சற்றுப் பின்னால் சிறிது நகர்ந்து, மேளக்காரன் பக்கத்தில் அழகு நின்று கொண்டான். சதங்கையும் மேளமும் நாதசுரமும் ஒன்றாக ஒலி எழுப்ப, அனுமார் தாவிக் குதித்துக் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து சென்றார். நீண்டவால், மேலே சுழன்று, சரேலென்று தரையில் படர்ந்து புழுதி கிளப்பியது.

**அனுமாரைத் தொடர்ந்த அழகு :**

அழகு, கால்களைத் தரையில் அழுத்தி ஊன்றி, அனுமாரைப் பார்த்தான். வாலில் பெரிய தீப்பந்தத்துடன் அனுமார், கால்களைத் தரையில் பதித்து, உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கினார். தீயின் ஒளி மடிந்து அலை பாய்ந்தது. கைகளைத் தரையில் ஊன்றி, அனுமார் கரணமடித்தார். சிறிது நேரம் ஆட்டம் நடந்தது. வாலில் உள்ள தீயின் ஒளி, மெல்ல மெல்லத் தணிந்தது.

**அனுமாரின் ஓய்வும் அழகின் ஆட்டமும் :**

ஆட்டம்போட்ட அனுமாரின் வேகம் குறையத் தொடங்கியது. அனுமார் ஆட்டத்தை நிறுத்தினார். ஆலமரத்தில் சாய்ந்துகொண்ட அனுமார், நிமிர்ந்து உட்கார்ந்து, வாலைப் பிடுங்கிப் போட்டார். அப்புறம் வாய், இடுப்புவேட்டி, மார்புக்கச்சை, இராமர் படம், கால்சதங்கை, கைச்சதங்கை என, ஒவ்வொன்றையும் எரிச்சலோடு வீசியெறிவதுபோல் அழகுக்குத் தோன்றியது. அனுமாரைப் பார்த்து அழகு சிரித்தான்; அருகில் சென்றான். 'ஆட்டமெல்லாம் பாத்தியா?' என்று, அழகைப் பார்த்து அனுமார் கேட்டார். 'எனக்குக்கூட ஒங்கள மாதிரி ஆடனும்னு ரொம்ப ஆசைங்க' என்றான். 'உம், அப்படியா.... எங்க, ஒரு சின்ன ஆட்டம் ஆடிக்காட்டு. ஒனக்கு வருமான்னு பாக்கறேன்' என்று, சிரித்துக்கொண்டே சொன்னார். அவ்வளவுதான்; அழகு, வாலை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, சதங்கையைச் சுற்றிக்கொண்டு, அனுமார் மூஞ்சியை எடுத்து மாட்டிக்கொண்டு, பெரிய ஆட்டத்தையே போட்டான்.

**குருவை மிஞ்சிய சீடன் :**

அனுமார் ஆடிய ஆட்டத்தை மனத்தில் இருத்திக்கொண்ட சிறுவன் அழகு, ஆட ஆரம்பித்தான். அனுமார் கேட்டுக் கொண்டதன் பேரில், வாலில் துணியைச் சுற்றி நுனியில் நெருப்பு வைத்தான். வாயால் ஊதி நெருப்பைக் கனிய வைத்துப் பெரிதாகக் கத்திக்கொண்டு அனுமாரை நோக்கிப் பாய்ந்தான். முன்னே பாய்ந்தவன், சிறிது நேரத்தில் பின்னால் காற்றில் மிதப்பதுபோலச் சென்றான். அனுமார் அவனைப் பிடித்துக் கட்டுப்படுத்த முயன்றார். அவன் குனிந்து பிடியில் சிக்காமல் நழுவ – அனுமார், கால்கள் பின்னிக்கொள்ளத் தரையில் விழுந்தார். களிப்பும் உற்சாகமும் பொங்க அழகு, வேகமாக ஆடிக் கொண்டிருந்தான். அனுமாருக்கு ஒரு வாரிசு உருவாகி விட்டதுபோல் அமைந்தது அழகின் ஆட்டம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# கற்கண்டு

# 6. அகப்பொருள் இலக்கணம்

**பொருள் இலக்கணம் :**

தமிழரின் பழமையான வாழ்வியல் பண்பாட்டு நெறிகளை விளக்கிக் காட்டுவது பொருள் இலக்கணம். உலக மொழிகளில் எழுத்துக்கும் சொல்லுக்கும் யாப்புக்கும் அணிக்கும் மட்டுமே இலக்கணம் அமைந்திருக்க, தமிழ்மொழியில்மட்டுமே வாழ்வியலை விளக்கும் பொருள் இலக்கணம் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும்.

**திணை – ஒழுக்கம்; உயர்திணை – உயர்வாகிய ஒழுக்கம்.**

தமிழர், பொதுவான வாழ்வியல் நிலைகளை விளக்கும் இலக்கியத்தை **அகம், புறம்** என இரு பிரிவுகளாகப் பகுத்தனர். தலைமகனும் தலைமகளும் உள்ளம் கலந்து ஒன்றுகூடி வாழும் வாழ்க்கையைப் பற்றிக் கூறுவதை **அகம்** என்றனர். அகவாழ்வை, **அகத்திணை** என்றனர். காதல் பற்றிய கற்பனைப் பாடல்களே, அகப்பாடல்கள் எனப்பட்டன.

அகத்திணை, ஐந்து வகைப்படும். அவை குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல்திணை, பாலைத்திணை.

**அன்பின் ஐந்திணை :**

அகத்திணைகள் ஐந்தும் அன்பின் ஐந்திணைகளாகும்.

**பலவுள் தெரிக**

1. கருப்பொருளுக்கேற்ற உரிப்பொருளைப் பொருத்துக. **(PTA - 4)**

அ) குறிஞ்சி – 1. உப்பு விளைவித்தல்
ஆ) முல்லை – 2. நெல்லரிதல்
இ) மருதம் – 3. நிரைமேய்த்தல்
ஈ) நெய்தல் – 4. தேனெடுத்தல்

அ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1 ஆ) அ – 3, ஆ – 2, இ – 4, ஈ – 1
இ) அ – 1, ஆ – 3, இ – 2, ஈ – 4 ஈ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3

**விடை : அ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1**

2. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி, ______ ஆகும்.

அ) காடும் காடுசார்ந்த இடமும் ஆ) சுரமும் சுரம்சார்ந்த இடமும்
இ) வயலும் வயல்சார்ந்த இடமும் ஈ) கடலும் கடல்சார்ந்த இடமும்

**விடை : ஈ) கடலும் கடல்சார்ந்த இடமும்**

3. மருத நிலத்திற்குத் தெய்வம் ______.

அ) முருகன் ஆ) திருமால் இ) இந்திரன் ஈ) வருணன்

**விடை : இ) இந்திரன்**

4. முல்லை நிலத்திற்குரிய மக்கள் ______.

அ) ஆயர், ஆய்ச்சியர் ஆ) உழவர், உழத்தியர்
இ) குறவர், குறத்தியர் ஈ) எயினர், எயித்தியர்

**விடை : அ) ஆயர், ஆய்ச்சியர்**

5. பாலை நிலத்திற்குரிய பறவைகள் ______.

அ) கிளி, மயில் ஆ) நாரை, அன்னம் இ) கோழி, மயில் ஈ) புறா, பருந்து

**விடை : ஈ) புறா, பருந்து**

6. குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்குகள் ______.

அ) புலி, கரடி ஆ) முயல், மான் இ) எருமை, நீர்நாய் ஈ) முதலை, சுறா

**விடை : அ) புலி, கரடி**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. பொருளிலக்கணம், ________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு

**விடை : அ) இரண்டு**

8. சித்திரை, வைகாசி இரண்டும், _____ காலத்திற்குரியன.

அ) முன்பனி ஆ) பின்பனி இ) இளவேனில் ஈ) கார்காலம்

**விடை : இ. இளவேனில்**

9. குறிஞ்சி நிலத்திற்குரிய பறவைகள் ______.

அ) கிளி, மயில் ஆ) நாரை, அன்னம் இ) புறா, பருந்து ஈ) பருந்து, நாரை

**விடை : அ) கிளி, மயில்**

## குறுவினாக்கள்

**1. பொருள் இலக்கணம் என்பது யாது?**

- பொருள் இலக்கணம் என்பது ஒழுக்கமுறை, வாழ்வியல் நெறிமுறைகள் எனப்படும்.
- வாழ்வியலை அகம், புறம் எனப் பிரித்தனர் தமிழர்.

**2. அகப்பொருள் என்பது யாது?**

- அன்புடைய தலைவன், தலைவியர் இடையே நிகழும் உறவே, அகப்பொருள் அல்லது அகத்திணை எனப்படும்.

**3. அகத்திணைகள் யாவை?**

- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஏழும் அகத் திணைகளாகும்.

**4. அன்பின் ஐந்திணைகளைக் கூறுக.**

- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன, அன்பின் ஐந்திணைகளாகும்.

**5. ஐந்திணைகளுக்குரிய பொருள்களைக் கூறுக.**

- முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன, ஐந்திணைகளுக்கு உரிய பொருள்கள் ஆகும்.

**6. முதற்பொருள் என்பது யாது?**

- அகவொழுக்கம் நிகழ்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்.

**7. கருப்பொருள் என்பது யாது?**

- நிலத்தில் காணப்பெறும் தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, பூ, மரம், பறவை, ஊர், நீர், பறை, யாழ், பண், தொழில் என்பன, கருப்பொருள்களாகும்.

**8. ஐந்திணைகளுக்குரிய நிலங்களைக் கூறுக.**

- மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சித்திணை.
- காடும் காடுசார்ந்த இடமும் முல்லைத்திணை.
- வயலும் வயல்சார்ந்த இடமும் மருதத்திணைலம்.
- கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல்திணை.
- சுரமும் சுரம்சார்ந்த இடமும் பாலைத்திணை.

**9. பொழுது எத்தனை வகைப்படும்? அவையாவை?**

- பொழுது, இரண்டு வகைப்படும்.
- அவை : பெரும்பொழுது, சிறுபொழுது.

**10. பெரும்பொழுது, சிறுபொழுது – வேறுபாடு கூறுக.**

- ஓர் ஆண்டின் ஆறு பிரிவுகள் பெரும்பொழுது.
- ஒரு நாளின் ஆறு பிரிவுகள் சிறுபொழுது.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**11. பெரும்பொழுதின் பிரிவுகளைக் கூறுக.**

i) ஆவணி, புரட்டாசி கார்காலம்.

ii) ஐப்பசி, கார்த்திகை குளிர்காலம்.

iii) மார்கழி, தை முன்பனிக்காலம்.

iv) மாசி, பங்குனி பின்பனிக்காலம்.

v) சித்திரை, வைகாசி இளவேனிற் காலம்.

vi) ஆனி, ஆடி முதுவேனிற் காலம்.

**12. சிறுபொழுதின் கூறுகளைக் கூறுக.**

| | | |
|---|---|---|
| i) | வைகறை | இரவு 2 மணிமுதல் 6 மணிவரை |
| ii) | காலை | காலை 6 மணிமுதல் 10 மணிவரை |
| iii) | நண்பகல் | காலை 10 மணிமுதல் 2 மணிவரை |
| iv) | எற்பாடு | பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை |
| v) | மாலை | மாலை 6 மணிமுதல் 10 மணிவரை |
| vi) | யாமம் | இரவு 10 மணிமுதல் 2 மணிவரை |

**13. குறிஞ்சித் திணைக்குரிய சிறுபொழுதையும் பெரும்பொழுதையும் கூறுக.**

➤ குறிஞ்சித்திணைக்குரிய சிறுபொழுது – யாமம்; பெரும்பொழுது – குளிர்காலம், முன்பனிக்காலம்.

**14. முல்லைத்திணைக்குரிய சிறுபொழுது, பெரும்பொழுதினைக் கூறுக.**

➤ முல்லைத்திணைக்குரிய சிறுபொழுது – மாலை; பெரும்பொழுது – கார்காலம்.

**15. மருதம், நெய்தலுக்குரிய சிறுபொழுதுகள் யாவை?**

➤ மருதத்திணைக்கு வைகறையும், நெய்தல் திணைக்கு எற்பாடும் சிறுபொழுதுகளாகும்.

➤ மருதம், நெய்தல் திணைகளும், ஆறு பெரும் பொழுதுகளும் உரியனவாகும்.

**16. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனைக் கூறுக.**

➤ தெய்வம் – திருமால்; மக்கள் – ஆயர், ஆய்ச்சியர்; உணவு – வரகு, சாமை; தொழில் – நிரை மேய்த்தல், ஏறுதழுவுதல் ஆகியன, முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கு ஆகும்.

**17. வயலும் வயல்சார்ந்த இடமும் எத்திணைக்குரியது?**

➤ வயலும் வயல்சார்ந்த இடமும், மருதத்திணைக்கு உரியது.

**18. வைகறையின் கால அளவு யாது?**

➤ வைகறையின் கால அளவு, இரவு 2மணிமுதல் காலை 6மணிவரை.

**19. நெய்தல் திணைக்குரிய தொழில்களைக் கூறுக.**

➤ மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் ஆகியவை, நெய்தல் திணைக்குரிய தொழில்களாகும்.

**20. பொருளாவது யாது?**

➤ பொருள் என்பது, அறவழியில் பொருளீட்டிப் பலரோடு பகுத்துண்டு வாழும் வாழ்வியல் ஒழுக்க முறையாகும். வாழ்வியல் நெறிமுறைகளை, அகம், புறம் எனப் பிரித்தனர் தமிழர்.

**21. ஐப்பசி, கார்த்திகை ஆகிய இருதிங்களும் எக்காலத்திற் குரியன?**

➤ ஐப்பசி, கார்த்திகை ஆகிய இருதிங்களும், குளிர்காலப் பெரும்பொழுதிற்கு உரியன.

**22. முருகன் எந்நிலத்திற்குரிய தெய்வம்?**

➤ முருகன், குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வம்.

**23. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.**

**தெய்வம்** – திருமால். **பூ** – முல்லை, தோன்றி.

**பறவை** – காட்டுக்கோழி, மயில். **தொழில்** – ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**24. நெய்தல் திணைக்குரிய தொழில்களை எழுதுக.**

➤ மீன் பிடித்தல், உப்பு விளைத்தல்.

**நினைவில் கொள்க**

| ஐவகை நிலங்கள் | |
|---|---|
| 1. குறிஞ்சி | மலையும் மலைசார்ந்த இடமும் |
| 2. முல்லை | காடும் காடுசார்ந்த இடமும் |
| 3. மருதம் | வயலும் வயல்சார்ந்த இடமும் |
| 4. நெய்தல் | கடலும் கடல்சார்ந்த இடமும் |
| 5. பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் அல்லது சுரமும் சுரம் சார்ந்த இடமும் |

| பெரும்பொழுதுகள் (ஓராண்டின் ஆறுகூறுகள்) | |
|---|---|
| 1. கார்காலம் | ஆவணி, புரட்டாசி |
| 2. குளிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை |
| 3. முன்பனிக்காலம் | மார்கழி, தை |
| 4. பின்பனிக்காலம் | மாசி, பங்குனி |
| 5. இளவேனிற்காலம் | சித்திரை, வைகாசி |
| 6. முதுவேனிற்காலம் | ஆனி, ஆடி |

| சிறுபொழுது (ஒரு நாளின் ஆறுகூறுகள்) | | |
|---|---|---|
| 1. | வைகறை | பின் இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை |
| 2. | காலை | காலை 6 மணிமுதல் காலை 10 மணிவரை |
| 3. | நண்பகல் | காலை 10 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை |
| 4. | எற்பாடு | பிற்பகல் 2 மணிமுதல் மாலை 6 மணிவரை |
| 5. | மாலை | மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை |
| 6. | யாமம் | இரவு 10 மணிமுதல் பின் இரவு 2 மணிவரை |

| திணையும் (பெரு, சிறு) பொழுதுகளும் | | |
|---|---|---|
| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகளும் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகளும் | எற்பாடு (எல் + பாடு) |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

**பலவுள் தெரிக**

பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க. (Sep.-20)

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்.

அ) தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக ஆ) தங்கக் கட்டிகளை ஈக்வலாக

இ) தங்கக் கட்டிகளை ஈடாக ஈ) தங்கக் கட்டிகளைச் சமமாக

**விடை : ஈ) தங்கக் கட்டிகளைச் சமமாக**

# காலாண்டுத்தேர்வு வினாத்தாள்

## தமிழ்

கால அளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

(மதிப்பெண்கள் : 15)

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்துங்ப குறியீட்டுடன் எழுதுக. 15 × 1 = 15

1. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீரியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்' என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை ______.

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

2. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ______.

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

3. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

4. எழுகதிர் – இச்சொல்லின் தொகையைத் தேர்க.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

5. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு. – இத்திருக்குறளில் அடியெதுகைச் சொற்களைத் தேர்க.

அ) அஞ்சும் – ஈகலான் ஆ) அறியான் – எளியன்

இ) தஞ்சம் – பகைக்கு ஈ) அஞ்சும் – தஞ்சம்

6. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி" – இச்செய்யுள் அடியில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயரின் தமிழ் எண்ணைத் தேர்க.

அ) க 000 ஆ) ௩ 00 இ) அ 00 ஈ) எ 000

7. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

8. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

9. "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் ______
மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது ______
கல் சிலை ஆகுமெனில், நெல் ______ ஆகும்,
விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை ______
– தொடர்களைப் படித்துப் பொருத்தமான விடை வரிசைகளை விடுபட்ட இடங்களுக்கு ஏற்பத் தேர்க.
அ) பூவில், சோறு, கரு, கற்றல் ஆ) கற்றல், சோறு, கரு, பூவில்
இ) கற்றல், பூவில், சோறு, கரு ஈ) கரு, சோறு, கற்றல், பூவில்

11. 'ஒடு என்றான்' என்பதை அடுக்குத் தொடர் இடம் பெறுமாறு அமைந்துள்ளதைத் தேர்க.
அ) ஒடி வா என்றான் ஆ) ஒடு ஒடு என்றான்
இ) ஒடி விரைந்து வா என்றான் ஈ) ஒடிச் செல் என்றான்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12, 13, 14, 15)**

"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு"

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் ______.
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு இ) குறுந்தொகை ஈ) தனிப்பாடல் திரட்டு

13. பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி ______.
அ) இரட்டுற மொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப் புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி

14. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது ______.
அ) சங்கப்பலகை ஆ) கடல் இ) அணிகலன் ஈ) புலவர்கள்

15. பாடலின் ஆசிரியர் ______.
அ) பாலவரேறு பெருஞ்சித்திரனார் ஆ) நப்பூதனார்
இ) சந்தக்கவிமணி தமிழழகனார் ஈ) பெருங்கௌசிகனார்

## பகுதி – II

### (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** $4 \times 2 = 8$

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த் திரு. இரா. இளங்குமரனார்.

17. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

18. "கலைஞர், பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" – பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

19. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' – கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்.

20. 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' – இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

21. 'குன்றேறி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 × 2 =10**

22. பதிந்து – உறுப்பிலக்கணம் எழுதுக.

23. கலைச்சொல் தருக.

அ) Epic literature ஆ) Folk literature

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**

**பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

**கவிழும், அவிழும், தயங்கும், தங்கும்**

காலை ஒளியினில் மலரிதழ் ______

சோலைப் பூவினில் வண்டினம் ______

மலைமுகட்டில் மேகம் ______

அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் ______

24. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர, கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் – இதில் உள்ள திணை, மரபு வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

25. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி எழுதுக.

26. எதிர்மறையான சொற்களை எழுதுக.

அ) மீளாத் துயர் ஆ) பார்த்த படம்

27. நீ விளையாடவில்லையா? என்ற வினாவிற்கு ஏற்ற "உற்றது உரைத்தல்" விடையினை எழுதுக.

28. பத்தியிலுள்ள பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.

உங்களிடம் செவன் கோல்டு பிஸ்கட் உள்ளது. தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டை வைத்தால் தராசு ஈக்வலாக இருக்கும். பேலன்ஸாக ஒரு கோல்ட் பிஸ்கட் உங்கள் கையில் இருக்கும்.

## பகுதி – III

## (மதிப்பெண்கள் : 18)

## பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 × 3 = 6**

29. உரைப்பத்தியைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும் அவைபோன்ற புதிய படைப்புகள் உருவாகவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது. இலக்கியம் என்பது தன் அனுபவத்தை எழுதுவது என்றாலும் அது கலைச்சிறப்புடையதாக இருக்கிறபோது அனைவரது அனுபவமாகவும் பொதுநிலை பெறுகிறது. அத்தகைய பொதுநிலை பெற்ற இலக்கியத்தை மொழிவேலி சிறையிடுகிறது. மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது. ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள். தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால் தான்.

அ) இலக்கியம் எப்போது பொதுநிலை பெறுகிறது?

ஆ) மொழிபெயர்ப்பின் பணி என்ன?

இ) ஒரு நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் எதனைக்கொண்டு மதிப்பிடுவார்கள்?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



30. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக, நான்.... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. அவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்..... உங்களுடைய கற்பனையில் ஆறு தலைப்புகளை எழுதுக.

31. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். (வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** $2 \times 3 = 6$

32. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை எழுதுக.

33. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் முல்லைப் பாட்டுப் பாடல்.

(அல்லது)

ஆ) 'புண்ணியப் புலவீர்' எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல்

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

35. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் – திருக்குறளுக்கு அலகிட்டு வாய்பாடு தருக.

36. தீவக அணியை விளக்குக.

37. "கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீ யெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!" – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

## பகுதி – IV

## (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** $5 \times 5 = 25$

38. அ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறி யிருப்பதை விளக்குக

(அல்லது)

ஆ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி.... தண்டலை மயில்கள் ஆட..... இவ்வுரையை தொடர்க

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)


ஆ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தங்கைக்கு அதனைப் பயன்படுத்தும் சரியான முறைகளைப் பற்றி அறிவுரைகளைக் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. விழுப்புரம் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெரு, 32ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் வளவனின் மகன் குமரன் மாவட்ட மைய நூலகத்தில் நூலக உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னைக் குமரனாக எண்ணி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) வானொலி அறிவிப்பு :

ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கொண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

ஆ) மொழிபெயர்க்க.

**Malar** : Devi, switch off the lights when you leave the room.

**Devi** : Yeah. We have to save electricity.

**Malar** : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

**Devi** : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

**Malar** : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

**Devi** : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா, உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், பல மக்களாலும் அமையப் பெறும். தமிழ்ப்பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என்னும் ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது. தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

1. ஒரு மொழியும், அதன் இலக்கியமும் எவ்வாறு அமையும்?
2. தமிழ் மக்கள் இலைகளை எவ்வாறு பாகுபாடு செய்தனர்?
3. தமிழ் மக்கள் எப்படிப்பட்டவர்கள்?
4. மொழி ஆராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – V

## (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3 × 8 =24

43\. அ) வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல், பகிர்ந்துண்ணல் – இவை போன்ற அன்றைய தமிழரின் செயல்பாடுகள் இக்காலத்தில் தொடரும் நிலை குறித்து விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் குறித்து விவரித்து எழுதுக.

44\. அ) 'பாய்ச்சல்' சிறுகதையில் அழகுவின் கதாப்பாத்திரம்போல், நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்தும் விரிவாக எழுதுக.

(அல்லது)

ஆ) வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ்மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ்மொழியின் சிறப்பு மற்றும் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி நிகழ்த்தும் உரையாடல் ஒன்றை எழுதுக.

45\. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.

குறிப்புகள் : முன்னுரை – சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – வேளாண்தொழில் தமிழர் வாழ்வின் ஒரு கூறு – பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் – உழவே உயர்வுக்கும் வழி – முடிவுரை

(அல்லது)

ஆ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை என்ற ஏதேனும் ஒரு நூலுக்கான மதிப்புரையினை குறிப்புகளைக் கொண்டு எழுதுக.

குறிப்புகள் : நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# அரையாண்டுத்தேர்வு வினாத்தாள்

## தமிழ்

கால அளவு :3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள்:100

அறிவுரைகள் : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும். குறித்த அளவின தாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

(மதிப்பெண்கள் : 15)

குறிப்புகள் : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக் கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதவும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.** 15 × 1 = 15

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ______.
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் _____.
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
3. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ______.
அ) நாட்டைக் கைப்பற்றுதல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
4. கோயம்புத்தூர் என்ற ஊர்ப்பெயரின் மரூஉவைத் தேர்க.
அ) தஞ்சை ஆ) கோவை இ) சைதை ஈ) மயிலை
5. “மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்” என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
6. “தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்” என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் ______.
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்
7. மனக்கோட்டை என்ற மரபுத் தொடருக்கான சரியான பொருளைத் தேர்க.
அ) பெரிய கோட்டை கட்டுதல் ஆ) இல்லாததைக் கற்பனை செய்தல்
இ) வேலையைத் தள்ளிப் போடுதல் ஈ) அதிகமாகச் செலவு செய்தல்
8. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ______.
அ) உதியன்; சேரலாதன் ஆ) ஆதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி
9. சிரித்துப் பேசினார் – இத்தொடருக்குரிய அடுக்குத் தொடரைத் தேர்க.
அ) சிரித்துக்கொண்டே பேசினார் ஆ) சிரிப்பதால் பேசினார்
இ) சிரித்துச் சிரித்துப் பேசினார் ஈ) சிரிப்புடன் பேசினார்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும். இப்புதிருக்கான சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
அ) நவீனம் ஆ) புரட்சி இ) போராட்டம் ஈ) புதுமை

11. உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் – பொருளுக்கேற்ற திருக்குறள் அடியைத் தேர்க.
அ) நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று ஆ) ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
இ) உயிரினும் ஓம்பப் படும் ஈ) எய்துவர் எய்தாப் பழி.

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்து கடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்,
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்"

12. எதுகைச் சொற்களைத் தேர்க.
அ) ஆரமும் அகிலும் ஆ) தூசும் மாசுஅறு
இ) மணியும் பொன்னும் ஈ) அருங்கல வெறுக்கை

13. பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்
அ) தேம்பாவணி ஆ) கம்பராமாயணம் இ) நீதிவெண்பா ஈ) சிலப்பதிகாரம்

14. துகிர் என்னும் சொல்லுக்கான பொருளைத் தேர்க.
அ) பட்டு ஆ) சிற்பி இ) பவளம் ஈ) துணி

15. பாடலின் ஆசிரியர் ______.
அ) இளங்கோவடிகள் ஆ) வீரமாமுனிவர் இ) பாரதியார் ஈ) கம்பர்

## பகுதி – II

### (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** $4 \times 2 = 8$

16. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.

17. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது?

18. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

19. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

20. திருக்குறள் பொருள்களுக்கேற்ற வினாக்கள் எழுதுக.
அ) ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருக்க வேண்டும்.
ஆ) உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

21. 'செயல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** $5 \times 2 = 10$

22. தீதின்றி வந்த பொருள் – இத்திருக்குறள் அடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

23. வருந்தாமரை – சொல்லைப் பிரித்துப் பொருள் தருக.

24. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



25. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த நிலைமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் – ம.பொ.சி.

26. கலைச்சொற்கள் தருக.

அ) Belief ஆ) Philosopher

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

அ) வரப்போகிறேன் ஆ) கொஞ்சம் அதிகம்

இத்தொடர்கள் இடம்பெறும் வகையில் பொருத்தமான தொடர்கள் அமைக்க.

27. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

அ) உழவர்கள் மலையில் உழுதனர்.

ஆ) முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

28. மயங்கிய – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

## பகுதி – III

### (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

29. ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

30. சோலைக்காற்றும் மின்விசிறிக்காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார். வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.

வினாக்கள் :

1. யாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?
2. போர் அறம் என்பது எதைக் குறிக்கிறது?
3. உண்மையான மகிழ்ச்சி என்பது எது?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். (வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** $2 \times 3 = 6$

32. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

33. நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'நவமணி' எனத் தொடங்கி 'அழுவ போன்றே' என முடியும் தேம்பாவணிப் பாடல் (அல்லது)

ஆ) 'விருந்தினனாக ஒருவன்' எனத் தொடங்கி 'ஒழுக்கமும் வழிபடும் பண்பே' என முடியும் காசிக்காண்டப் பாடல்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** $2 \times 3 = 6$

35. பின்வரும் திருக்குறளை அலகிட்டு வாய்பாடு காண்க.
நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்

36. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணத்தை விளக்குக.

37. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள், வீட்டினுள் வந்தவன் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

## பகுதி – IV

## (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** $5 \times 5 = 25$

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

(அல்லது)

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்குத் திறன்பேசியின் பயன்பாடு குறித்த அறிவுரைகளைக் கூறிக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) மழை வெள்ளத்தால் வீழ்ந்த மரங்களை அகற்றவும், பழுதடைந்த மின்விளக்குகளைச் சரிசெய்யவும் வேண்டி, மாநகராட்சி அலுவலருக்குக் கடிதம் எழுது.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. திருவண்ணாமலை மாவட்டம், நன்மணம் நகர், பாரதியார் தெரு, 28–ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் இளமாறன் என்பவரின் மகன் இனியன் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். அவர் அதே பகுதியில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை இனியனாகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) இன்சொல் வழி நடப்பதால் உண்டாகும் நன்மைகள் எவையேனும் ஐந்தினையும் தீயசொல் பேசுவதால் ஏற்படும் விளைவுகள் ஐந்தினையும் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamil.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

அன்னையார் இளமையிலே எனக்குப் பயிற்றுவித்த பாக்கள் எனது இலக்கியப் பயிற்சிக்கான பாலபாடங்களாக அமைந்தன. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை ஆகிய அம்மானைப் பாடல்களைப் பாடுவார். அந்த நேரத்தில் என்னையும் சிறிது நேரம் அந்த நூல்களைப் படிக்க வைப்பார். அதனால், சந்தநயத்தோடு எதுகை மோனையோடும் உள்ள அம்மானைப் பாடல்களை அடிக்கடிப் பாடிப்பாடிப் பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்து வந்தேன். சித்தர் பாடல்களை நானாகவே விரும்பிப் படித்து மனனம் செய்வேன். சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக் கொள்வேன். ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி. யான் முறையாக ஏட்டுக் கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே மிகுந்த ஆர்வம் காட்டினேன். – ம.பொ.சி.

**வினாக்கள் :**

1. ம.பொ.சி. அவர்களின் பாலபாடங்களாக அமைந்தவை எவை?
2. இலக்கிய அறிவை ம.பொ.சி. வளர்த்துக் கொண்டது எவ்வாறு?
3. ஒருவரின் அறிவு விளக்கம் பெறுவதற்கான இரண்டு வழிகள் யாவை?
4. ம.பொ.சி. அவர்களின் கேள்வி ஞானத்தைப் பெருக்குவதில் பெரும் பங்காற்றியவர் யார்?
5. ம.பொ.சி. தானாகவே விரும்பி மனனம் செய்த பாடல்கள் யாவை?

## பகுதி – V

## (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** $3 \times 8 = 24$

43. அ) சங்க இலக்கியப் பாடலடிகள் நான்கினை எழுதி, அவை கூறும் அறச்செயல்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை, மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்கள் கருத்துகளை விவரித்து எழுதுக.

45. அ) முன்னுரை – உழவே முதன்மைத் தொழில் – தமிழ்ச் சமூகத்தின் மகுடம் – உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் – உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – முடிவுரை. குறிப்புகளைக் கொண்டு உழவுத் தொழிலின் மேன்மை என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) முன்னுரை – சாலைப் பாதுகாப்பு, உயிர்ப் பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளைத் தவிர்ப்போம், விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை. குறிப்புகளைக் கொண்டு 'சாலைப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# பொதுத்தேர்வு வினாத்தாள்
# மொழிப்பாடம் – பகுதி I – தமிழ்
# மார்ச் – 2024

காலஅளவு : 3 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளனவா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன் படுத்த வேண்டும்.

**குறிப்பு :** i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும். குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

## (மதிப்பெண்கள் : 15)

**குறிப்பு** : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **15 × 1 = 15**

1. ‘கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது’ – இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே :

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய

இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

2. ‘மலர்க்கை’ – தொகையின் வகையைத் தேர்க.

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத்தொகை

3. பரிபாடல் அடியில் ‘விசும்பும் இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?

அ) வானத்தையும், பாட்டையும் ஆ) வானத்தையும், புகழையும்

இ) வானத்தையும், பூமியையும் ஈ) வானத்தையும், பேரொலியையும்

4. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. – இக்குறட்பாவில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களைத் தேர்க.

அ) தாளாண்மை – தகைமைக்கண் ஆ) தாளாண்மை – வேளாண்மை

இ) தகைமைக்கண் – தங்கிற்றே ஈ) வேளாண்மை – செருக்கு

5. “இங்கு நகரப் பேருந்து நிற்குமா?” என்று வழிப்போக்கர் கேட்டது ______ வினா.
“அதோ, அங்கே நிற்கும்” என்று மற்றொருவர் கூறியது ______ விடை.

அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. 'குழந்தை வந்தது' என்ற எழுவாய்த் தொடரின் விளித் தொடரைத் தேர்க.

அ) குழந்தையுடன் வா ஆ) வந்த குழந்தை

இ) குழந்தையே வா! ஈ) குழந்தை வந்தது

7. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்களைத் தேர்க.

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8. மேன்மை தரும் அறம் என்பது :

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ்கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

9. காசிக் காண்டம் என்பது :

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

10. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

11. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு :

அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) இந்தியா ஈ) இலங்கை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"

12. பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.

அ) சிலப்பதிகாரம் ஆ) காசிக்காண்டம் இ) நற்றிணை ஈ) முல்லைப்பாட்டு

13. 'நனந்தலை உலகம்' என்பதன் சரியான பொருளைத் தேர்க.

அ) சிறிய உலகம் ஆ) குளிர்ந்த உலகம்

இ) அகன்ற உலகம் ஈ) வெப்பமான உலகம்

14. 'தடக்கை' – இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.

அ) உரிச்சொல் தொடர் ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத்தொடர்

15. பாடலின் ஆசிரியரைத் தேர்க :

அ) தமிழழகனார் ஆ) நப்பூதனார் இ) கீரந்தையார் ஈ) இளங்கோவடிகள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – II

### (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** $4 \times 2 = 8$

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.

    அ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.

    ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.

18. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம. பொ. சி. என்பதற்குச் சான்று தருக.

19. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ? ஏன் என்பதை எழுதுக.

    பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

20. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக.

21. ‘முயற்சி’ – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** $5 \times 2 = 10$

22. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

    ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

    ஒரு சீப்பில் பல வழைப்பழங்கள் உள்ளன.

    மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

23. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.

    அ) கொடு – கோடு

    ஆ) இயற்கை – செயற்கை

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. – மயங்கிய

25. கலைச்சொற்கள் தருக.

    அ) Biotechnology ஆ) Myth

    **குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

    குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.

    குறிப்பு : எதிர்மறையாக மாற்றுக.

    அ) பார்த்த படம்

    ஆ) எழுதாக்கவிதை

26. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பதைப் போன்று வினாத் தொடர்கள் அமைக்கவும்.

    குறிப்புகள் : (1) சுவைக்காத இளநீர் (2) விடுமுறை நாள்

27. “சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்” என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். – இதில் உள்ள வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

28. ‘வேங்கை’ என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – III

**(மதிப்பெண்கள் : 18)**

### பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 × 3 = 6**

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக் காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி, வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?

ஆ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

இ) பெய்த மழை – வினைத்தொகையாக மாற்றுக.

31. நீங்கள் அறிந்த நிகழ்கலைக் கலைஞர் ஒருவரைப் பற்றியும் அவரது கலைத்திறன் பற்றியும் எழுதுக.

### பிரிவு – 2

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 2 × 3 = 6**

32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?

33. நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வந்தால் அவரை விருந்தோம்பல் செய்வதைக் குறித்து எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

"தென்னன் மகளே" – எனத் தொடங்கி "முடிதாழ வாழ்த்துவமே" – என முடியும் அன்னை மொழியே பாடல்.

(அல்லது)

"வாளால் அறுத்துச் சுடினும்" – எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்

### பிரிவு – 3

**குறிப்பு:எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 × 3 = 6**

35. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது புரியாதது, தெரிந்தது தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்கும் தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும்'. – இக்கூற்றில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். – இத்திருக்குறளில் பயின்றுவரும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

37. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – IV

**(மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு:அனைத்து வினாக்களுக்கும் விடை யளிக்கவும்.** 5 × 5 = 25

38. அ) தமிழர் மருத்துவ முறைக்கும், நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து விவரித்து எழுதுக.

(அல்லது)


ஆ) 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற வள்ளுவரின் கூற்றினை விளக்கி, உங்கள் கருத்தை எழுதுக.

39. அ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தம்பிக்கு, அதனை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளை விளக்கி, அறிவுரைகள் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. தமிழ்வேந்தன் என்பவரின் மகள் வான்மலர் அரசு உயர்நிலைப் பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10–ஆம் வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 11–ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை வான்மலராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக.

(அல்லது)

ஆ) மொழி பெயர்க்கவும்.

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்களை வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

i) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு ?

ii) யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது ?

iii) நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர் ?

iv) உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர் ?

v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.

## பகுதி – V

## (மதிப்பெண்கள் : 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். $3 \times 8 = 24$

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா ? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா ? இக்கருத்துகளை ஒட்டிச் ‘செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்’ என்ற தலைப்பில் விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) எவரேனும் ஓர் அறிஞர் / சான்றோர் / புகழ்பெற்ற சாதனையாளர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன்வரலாறாக மாற்றி எழுதுக.

44. அ) அழகிரி சாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) இராமானுசர் நாடகம் வெளிப்படுத்தும் மனிதநேயத்தைச் சுவைபட விளக்கி எழுதுக.

45. அ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு : நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.

(அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி, ‘சாலைப் பாதுகாப்பு’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் :

முன்னுரை – சாலை விதிகளை அறிவோம் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளுக்கான காரணங்கள் – தேவையான விழிப்புணர்வு – நம் கடமை – முடிவுரை.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# மனப்பாடப்பகுதி

## இயல் – 1

### அன்னை மொழியே

1. அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே! (PTA - 2,4, 6, Sep.-21, May - 22)
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

2. தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே! (PTA - 1, Mar.-24)
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

## இயல் – 2

### முல்லைப்பாட்டு

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் (PTA - 3)
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

– நப்பூதனார்

## இயல் – 3

### காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின் (PTA - 2,5)
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

– அதிவீரராம பாண்டியன்

## இயல் – 3

### திருக்குறள்

#### மெய் உணர்தல்

1. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

#### பெரியாரைத் துணைக்கோடல்

2. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே (PTA - 4, 5,Sep.-21, 22)
நல்லார் தொடர்கை விடல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### கண்ணோட்டம்

3. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

4. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

5. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை (May - 22, Mar.-24)
இன்மை புகுத்தி விடும்.

– திருவள்ளுவர்

## இயல் – 4

### பெருமாள் திருமொழி

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் (Sep.-22, Mar.-24)
மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

– குலசேகராழ்வார்

## இயல் – 5

### நீதிவெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி (Mar.-23)
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

– கா. ப. செய்குதம்பிப் பாவலர்

### திருவிளையாடற்புராணம்

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப் (PTA - 5, Sep.-20)
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

– பரஞ்சோதி முனிவர்

## இயல் – 6

### முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத் (PTA - 4)
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை.

– குமரகுருபரர்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



### கம்பராமாயணம்

1. தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்க, (Sep.-21)
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.

2. வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;
மையோ? மரகதமோ? மறிகடலோ? மழை முகிலோ?
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.

– கம்பர்

## இயல் – 6

### திருக்குறள்

#### அமைச்சு

1. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத் (PTA - 1, Mar.-23)
தியற்கை அறிந்து செயல்.

#### பொருள்செயல் வகை

2. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

3. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

#### குடிசெயல் வகை

4. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் (PTA - 6)
சுற்றமாச் சுற்றும் உலகு.

5. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

– திருவள்ளுவர்

## இயல் – 7

### சிலப்பதிகாரம்

தூசும் துகிரும் ஆரமும் அகிலும் (PTA - 1, 6,Sep.-22)
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;

– இளங்கோவடிகள்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இயல் – 8

### காலக்கணிதம்

(PTA -3, Mar.-23)

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

– கண்ணதாசன்

## இயல் – 9

### தேம்பாவணி

(PTA - 2,Sep.-20, May - 22)

நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே.

– வீரமாமுனிவர்

ஃ ஃ ஃ ஃ ஃ

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com